# முதல் மொட்டு

ரா. கி. ரங்கராஜன்

கங்கை புத்தக நிலையம்

13, தீனதயாளு தெரு,
தி. நகர், சென்னை-600 017.

கங்கை முதற்பதிப்பு ஆகஸ்ட் : 1995

சென்னை ... கொளத்தூர், சென்னை-99.

விலை ரூ. 37-00

21069
3742581

அச்சிட்டோர் :
குருகுலம் ஆப்செட் பிரிண்டர்ஸ்,
(மகளிர் தொண்டு நிறுவனம்) வேதாரண்யம்.

# முன்னுரை

இந்தக் கதையின் முதல் அத்தியாயத்தை எழுதி முடித்து, கம்போஸ் ஆனதும், எடிட்டர் எஸ்.ஏ.பி. அவர்களின் பார்வைக்கும் புரூப் அனுப்பினேன். புரூப்பின் கீழ்ப்பகுதியில், R.K.R. ஆரம்பம் ஜிலுஜிலுவென்று அமைந்திருக்கிறது. Keep it up என்று அவருக்கே உரிய அழகிய கையெழுத்தில் எழுதி என்னிடம் அனுப்பி வைத்தது இன்றும் பசுமையாக நினைவு இருக்கிறது. கதை நன்றாக வளர்ந்ததென்றால் அவருடைய ஆசியே காரணம்.

அடுத்து நினைவில் நிற்பது இந்தக் கதைக்கான படங்களைப் புகைப்படமாகப் போட வேண்டுமென்று முடிவுசெய்து, அதற்காக நாங்கள் பட்ட பாடு! பத்மினி பிரியதர்சினி என்ற நடிகை கதாநாயகியாகவும், பிரேம் நவாஸ் கதாநாயகனாகவும், அசோகன் வில்லனாகவும் இரண்டு துணை நடிகைகள் சகோதரிகளாகவும், 'நடிப்பதற்கு' ஒப்புக்கொண்டார்கள். பிலிம் நியூஸ் ஆனந்தனும், காலம் சென்ற பிரபல சினிமா நிருபர் ஜாம்பவான் என்ற ஜி. சதாசிவமும் இதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்கள். பிரஸ் மானேஜராக இருந்த பெரியகருப்பன் செட்டியார் என்ற பெரியண்ணனும் நானும் இவர்களை வாராவாரம் தேடிப் பிடித்துப் போட்டோ பிடிப்பதற்குள் உயிர் போய் உயிர் வந்தது. எங்களுக்கே இப்படியென்றால் அசல் திரைப்படம் தயாரிப்பவர்கள் என்ன பாடுபடுவார்கள் என்று நினைத்துக் கொண்டோம். ஒவ்வொரு நடிகரும் செய்து

கொண்ட பிகு அலாதிக் கதை. இதனால் தங்களுக்கு பப்ளிஸிடி கிடைக்கிறதென்று அசோகன் ஒருவரைத் தவிர யாருமே நினைக்கவில்லை.

கங்கை புத்தக நிலையத்தார் இப்புத்தகத்தை வெளியிடும் இச்சமயம் அந்த வேடிக்கையான நிகழ்ச்சிகளை நினைத்துச் சிரிப்பதற்குக் காரணமாக இருக்கும் கங்கை புத்தக நிலையத்திற்கு என் நன்றி.

ரா.கி. ரங்கராஜன்

35, ராமானுஜ நகர்
சென்னை – 23

21069
3742481
கொளத்தூர், சென்னை-99.

# முதல் மொட்டு

## 1

“விட்டது இன்றோடு!” என்றார் சக்கரவர்த்தி. அவரது நீட்டிய உள்ளங்கையில் மூன்று ரயில்வே டிக்கெட்டுகள் இருந்தன.

மேகலை தடுமாற்றத்துடன் நின்றாள்.

“பிடி. பெங்களூர் ஸிடிக்கு இரண்டு டிக்கெட் – உன் அம்மாவுக்கும், ஆனந்திக்கும். பிளாட்பாரம் டிக்கெட் உனக்கு. மாற்றிக் கொடுத்துவிடாதே. ஜாக்கிரதை.”

துயரம் கப்பிய இதயத்துடன் மேகலை தயங்கினாள்.

உள்ளே டிபன் தூக்கில் ஸ்பூன் செருக்கப்படும் ஓசை; கூஜா மூடி சுற்றப்படும் ஓசை; ஹோல்டால் உதறப்படும் ஓசை! பெட்டி மூடப்படும் ஓசை.

வெளியே கார்களின் ஹாரன் ஓசை; பெண்கள் சிரிக்கும் ஓசை; சிறுவர்கள் ஓடும் ஓசை; வண்டிகள் உருளும் ஓசை.

கும்மாளமும் குதூகலமும் நிறைந்த மைலாப்பூர் மாட வீதி, தன் மடியில் தவழும் இல்லமொன்று இரண்டாகிக் கொண்டிருப்பதை அறியவில்லை.

மூகில் கொழுந்தின் கீழே சிவந்து கொண்டிருந்த சூரியன் இங்கே ஒரு குறிப்பிட்ட வீடு இருள் காடாகிக் கொண்டிருப்பதை உணரவில்லை.

சக்கரவர்த்தித் தொடர்ந்தார்: "எபிடி ஸ்டேஷனில் இறங்கியதும் ஒரு டாக்ஸி பிடித்துக் கொண்டு பசவங்குடிக்குப் போகச் சொல்லு. வீட்டு விலாசம் உன் அம்மாவுக்குத் தெரியும். சொன்னபடி மாதா மாதம் முதல் தேதி டாணென்று இருநூற்றைம்பது ரூபாய் அவளுக்கு அனுப்பிவிடுவேன், கவலைப்பட வேண்டாம் என்று சொல்லு."

மேகலையால் பொறுக்க முடியவில்லை. "அப்பா!" என்று கரகரத்த குரலில் கூறி முடிக்கு முன் கண்ணில் நீர் சுரந்து விட்டது.

"மேகலை!" என்று அதட்டினார் சக்கரவர்த்தி. "ஆனந்தியைப் பார்த்துப் பார்த்து உனக்கும் ஒன்றுமில்லாததற்கெல்லாம் மூக்கை உறிஞ்சும் பழக்கம் வந்து விட்டாற் போலிருக்கிறது. காலையில் உன்னைக் கேட்டுக்கொண்டு தானே ஏற்பாடு செய்தேன்?"

"வந்து அப்பா..."

"இரு. இப்போதும் ஒன்றும் கெட்டு விடவில்லை. அம்மாவுடன் இருக்க வேண்டுமென்றால் தாராளமாய் இரு. எனக்கு ஆட்சேபணையில்லை. காலையில் கேட்டபோது என்னுடனேயே இருக்கிறேன் என்று நீ தானே சொன்னாய்?"

மேகலையால் மறுக்க முடியவில்லை. ஆனால் ஒப்புக்கொள்ளவும் முடியவில்லை. 'அம்மாவுடன் போகிறாயா?' என்று கேட்டபோது பதில் சொல்லாமல் நின்றாள். 'என்னுடன் இருக்கிறாயா?' என்றதற்குத் தலையை ஆட்டினாள் — லேசாகத்தான். என்றாலும் அதில் சம்மதமிருந்தது.



"சொல்லு, உனக்கும் டிக்கெட் வாங்கி வர ஆள் அனுப்பவா?"

"வேண்டாமப்பா!" என்று விம்மினாள் மேகலை. வேண்டாம், வேண்டாம். தாயிற் சிறந்ததொரு கோயிலில்லை என்பார்களே, அதெல்லாம் மற்றவர்களுக்கு; எனக்கில்லை. பெற்றோர் என்று நினைக்கும் போது என் மனத்தில் தந்தை உருவம்தான் சிலை போலத் தெரிந்திருக்கிறது.

அம்மா, நிழல் — உருவமில்லாத, தெளிவில்லாத, வலுவும் வனப்புமில்லாத, வெறும் நிழல்தான் என் அம்மா. இருந்தாலும் —

வேலைக்காரன் காளி, வாசல் விளக்கைத் தட்டிவிட்டான். நீலக் குழாயின் ஒளி பளீரென்று அறைக்குள் புகுந்தது.

"அப்பா! இன்று ஒரு ராத்திரி போகட்டும். கொஞ்சம் பொறுத்து யோசனை பண்ணுங்கள். நாளைக் காலையில் பார்க்கும் போது எல்லாம் வேறு விதமாகத் தெரியும்," என்று பயந்த குரலில் பேசினாள் மேகலை.

"நிறுத்து! எனக்குத் தெரியும்!" என்று உறுமினார் சக்கரவர்த்தி. "டிக்கெட்டைக் கொண்டு போய் அவளிடம் கொடுக்கப் போகிறாயா இல்லையா?"

ரயில்வே டிக்கெட்டுகளுடன் மேகலை பக்கத் தறையில் நுழைந்தாள்.

காலடியரவம் கேட்டதும், ஹோல்டாலைச் சுருட்டிக் கொண்டிருந்த ஆனந்தி தலை நிமிர்ந்தாள்.

எப்போதுமே அதிக ஆடையணிகள் அணிபவளல்ல அவள். இன்று இன்னும் குறைவாக இருந்தது. அநேகமாக, காதும் கழுத்தும் மூளி என்றே சொல்ல வேண்டும். அம்மா சொல்லியிருப்பாள், 'என்னோடு வருவதாயிருந்தால் இத்தனையையும் கழட்டி வைத்து விட்டு வா,' என்று. தாய் சொல் தட்டாதவள் ஆனந்தி.

"அக்கா!" என்று உதடுகள் துடிக்கத் தாழ்ந்த குரலில் உச்சரித்தாள் ஆனந்தி. "நான் அம்மாவோடு போகிறேன் என்று கோபிக்காதே அக்கா."

"கோபமில்லை. ஆனால் ரொம்ப வருத்தமாய் இருக்கிறது. அம்மாவுக்கும் அப்பாவுக்கும் சண்டையானால் நீயும் நானும் எதற்காக ஒவ்வொரு கட்சியில் சேர வேண்டும்? அம்மா இன்றைக்குச் சண்டை பிடித்துக் கொள்வாள். நாளைக்குச் சரியாகிவிடுவாள்."

"இந்தத் தடவை மாட்டாள். பிரிந்து தனியாகப் போகிறேனென்று சொன்னதே அவள்தானாம். ரொம்பப் பிடிவாதமாயிருக்கிறாள்."

மேகலை கீழுதட்டைக் கடித்துக் கொண்டு குழப்பத்துடன் நின்றாள். அறையில் பிரயாணத்துக்கான சகல ஆயத்தங்களும் தயாராயிருந்தன.

"என்னை மன்னித்துக் கொள் அக்கா," என்றாள் ஆனந்தி.

"பரவாயில்லை. அடிக்கடி கடிதம் எழுது எனக்கு. அப்பா கோபிக்க மாட்டார். நான் சொல்லிக் கொள்கிறேன்."

"நான்... நான்..." என்று மீண்டும் திணறினாள் ஆனந்தி. "அம்மாவிடம்தான் எனக்கு... எனக்கு... அதிக ஒட்டுதலாயிருக்கிறது... குளிருக்குப் போர்வையைப் போர்த்துக் கொண்ட மாதிரி. அப்பாவிடம் என்னவோ ஒரு பயம். உன்னைப் போல எனக்கு மனசில் உறுதி கிடையாது. தப்பாக நினைக்காதே அக்கா."

"சீ, சீ! பைத்தியக்காரி. எல்லாம் கொஞ்ச நாளில் சரியாகிவிடும். ஹோல்டாலைக் கட்டு. இதோ வருகிறேன்," என்று வெளியேறினாள் மேகலை.

தங்கைமீது அனுதாபமல்ல — கோபம் வந்தது, அவளுக்கு. எனக்கு மன உறுதியாம்! யாருக்கு ஆனந்தி, உனக்கா எனக்கா? நல்லதோ கெட்டதோ நீ ஒருவரைப்



பற்றிக் கொண்டு விட்டாய். என்னைப் போல இரண்டும் கெட்டானல்ல நீ. அம்மாதான் உனக்கு அறம்; அம்மாதான் பொருள்; அம்மாதான் இன்பம்; அம்மாதான் வீடு. நீ கெட்டிக்காரியடி ஆனந்தி, கெட்டிக்காரி.

"நான் வீட்டுக்குப் போகலாமுங்களா அம்மா? ஸ்டேஷனுக்கு நீங்க போறீங்கன்னு ஐயா சொன்னாரு," என்றான் டிரைவர் தணிகாசலம்.

"ஆமாம்... ஆனால் எதற்கும் கொஞ்ச நேரம் இரு," என்று அவனை அனுப்பினாள் மேகலை. குரலில் பதட்டத்தைக் காட்டிக் கொண்டோமோ என்று ஒரு வினாடி கவலை ஏற்பட்டது. முகத்தை வழக்கம் போல் வைத்துக் கொள்ள வேண்டும். குரலை வழக்கம் போல் வெளிப்படுத்த வேண்டும். என்ன வந்தாலும், குடும்பத்தின் ஊழல்கள் வேலைக்காரர்களுக்கு எட்டக் கூடாது. அம்மாவும் அப்பாவும் தினசரி இரவு பதினொரு மணிக்குமேல், தங்கள் அறையில், தாழ்ந்த குரலில் தகராறு செய்து கொள்ளுவது போல, எல்லாம் அமுக்கமாக, கமுக்கமாக இருக்க வேண்டும்.

அம்மா ஓசைப்படாமல் டிரங்குப் பெட்டியை மூடிக்கொண்டிருந்தாள். அவளுடைய மெலிந்து உயர்ந்த முதுகு மட்டுமே மேகலையின் கண்ணில் பட்டது. பெட்டியை மூடியதும், பையைத் திறந்து வட்டமான தகர டப்பாக்களை எடுத்து வைத்துக் கொண்டாள். உல்லன் நூல், ஊசி, கத்திரிக்கோல் எல்லாம் கொண்ட டப்பாக்கள் அவை.

தயங்கினாள் மேகலை. உள்ளே போகலாமா? 'என்னம்மா இதெல்லாம் பைத்தியக்காரத்தனம்?' என்று கேட்கலாமா? துணிச்சல் ஏற்படவில்லை. வேங்கையும் வெள்ளாடும் சண்டையிட்டால் தலையிடலாம். வேங்கையும் வேங்கையுமே பொருதினால் எப்படித் தலையிட முடியும்? யாரால் தலையிட முடியும்?

அறையைக் கடந்திருப்பாள். அதற்குள் அம்மா எழுந்து கொண்டு விட்டாள். சட்டென்று சுவர் ஓரமாக ஒட்டிக் கொண்டாள் மேகலை.

அறைச் சுவரில் ஜன்னலுக்குப் பக்கமாய் மாட்டப்பட்டிருந்த மேகலையின் புகைப்படத்தைக் கழட்டித் தன் பெட்டியில் வைத்துக் கொண்டாள் அம்மா.

மேகலையின் கண்ணில் நீர் தளும்பி நின்றது. தாய்ச் செடிக்குத் தன் முதல் மொட்டின் மீது உள்ள பரிவையும் பாசத்தையும் நேருக்கு நேராகக் கண்ட போது அவள் உள்ளம் வெடித்தது.

ஓடிச் சென்று 'அம்மா!' என்று அவளை இறுகக் கட்டிக் கொள்ள வேண்டும் போல் ஆவேசம் எழுந்தது. இருந்தும் எதுவோ தடுத்தது. எது? இதயத்துடன் பதிந்து விட்ட தந்தையின் இரும்பு வார்ப்பா?

சந்தடியின்றி அவள் ஹாலுக்கு வரவும் மாடியிலிருந்து சக்கரவர்த்தியின் குரல் இறங்கவும் சரியாயிருந்தது.

"மேகலை! நீ இன்னும் புறப்படவில்லை?"

"இதோ அப்பா!" என்று பதில் கொடுத்தாள். ஆனால் மனம் ஓர் அமைதியான முடிவுக்கு வந்திருந்தது.

நான் ஸ்டேஷனுக்குப் போகமாட்டேன். கழுத்தைப் பிடித்துத் தள்ளி என்னைக் காரில் ஏற்றினாலும், அன்னைக்கும் உடன் பிறந்த சகோதரிக்கும் சென்டிரல் ஸ்டேஷன் பிளாட்பாரத்தில் முழுக்குப் போடமாட்டேன். ஒரு காகிதத்தைக் கிழித்துப் பரபரவென்று எழுதினாள்.

அப்பாவுக்கு,

கோபிக்காதீர்கள். மனம் என்னவோ போலிருக்கிறது. காலாரக் கொஞ்சம் வெளியே உலாவி விட்டு வருகிறேன்.

மேகலை.



பளிச்சென்று பார்வையில் படுகிறாற் போல் காகிதத்தையும் அதன்மீது பேப்பர் வெயிட்டையும் வைத்தாள். வெகு நேரமாகக் கையில் மூடி வைத்துக் கொண்டிருந்ததால் டிக்கெட்டுகளில் கசகசவென்று வியர்வை ஈரம் படிந்திருந்தது. அவற்றையும் பக்கத்திலேயே வைத்தபின் வாசலுக்கு விரைந்தாள்.

"கொஞ்ச நேரத்தில் ஐயா கூப்பிடுவார். தயாராயிரு. அம்மாவையும் ஆனந்தியையும் நீதான் ஸ்டேஷனில் கொண்டுவிட வேண்டும்," என்று டிரைவரிடம் கூறிவிட்டுத் தெருவில் இறங்கினாள்.

மாட வீதியில் இரவு கொலு வீற்றிருந்தது.

வெல்லக் கட்டியை எடுத்தெறிந்த பின்னும் வட்டமிடும் கட்டெறும்புகள் போல், மாலையின் மோகனம் மறைந்த பிறகும் சாலையின் நடமாட்டம் குறையவில்லை.

"மேகலை! மேகலை!"

திரும்பி நின்றாள் மேகலை. வக்கீல் சம்சாரம் பெரியநாயகிதான் கூப்பிட்டது.

"என்ன அத்தை?"

"ஒரு உபகாரம் செய்யடி, குழந்தை! அரை மணியாய் அவருக்குத் திடீரென்று வயிற்று வலியாம். துடிக்கிறார். ஓமத்திராவகம் கொடுத்தேன். நிற்கவில்லை. சமயம் பார்த்து, மூத்தவன், சின்னவன், சமையல்காரன் அத்தனை பேரும்..."

"என்ன செய்யணும், அதைச் சொல்லுங்கள் அத்தை!" என்று சினந்து கொண்டாள் மேகலை. பெரியநாயகி பேச ஆரம்பித்தால் நிறுத்த முடியாது என்பது மைலாப்பூர் முழுதும் பிரசித்தம்.

"டாக்டர் ராமேசுவரம் வீட்டுப் பக்கம் போனால் கொஞ்சம் வாரச் சொல்லேன்."

"சரி, சொல்லுகிறேன் அத்தை," என்று விடை பெற்றுக்கொண்டாள் மேகலை.

ஒற்றுமையான குடும்பம். தெருப்பக்கமுள்ள ஹாலில் ஊஞ்சலில் வக்கீல் ஆடிக்கொண்டிருப்பதும், பெரியநாயகி நாற்காலியில் இரண்டு காலையும் தூக்கி வைத்துக் கொண்டு எவர்சில்வர் வெற்றிலைச் செல்லத்தைச் சூறையாடுவதும் தினசரி தெருவில் போவோர் வருவோர்க்குக் கண் கொள்ளாக் காட்சி தருவது வழக்கம். சில சமயம் பிள்ளைகளும் பெண்களும் பேரன் பேத்திகளும் சேர்ந்து கொண்டு தெருவை அதிர அடிப்பதும் உண்டு.

மேகலையின் வீட்டில் எல்லாம் உம் — உம் — உம் தான். அம்மா ஒரு உம். அப்பா ஒரு உம். வீடே உம்.

முன்னால் போகிற அந்நியரைக் கணக்கெடுப்பது போல் மேகலை உடலை முன்னால் போகவிட்டு மனத்தைப் பின்னே நிறுத்திப் பார்த்தாள்.

இதோ போகிறாளே இவள்தான் மேகலை! உல்லாசக் கல்லூரி மாணவி! பேரழகி! அதிர்ஷ்டக்காரி!

ஐயோ கல்லூரி உலகமே! உனக்குத் தெரியுமா இந்த மேகலை உள்ளூரச் செல்லரித்தவள் என்பது!

கண்ணைக் கூசும் கார் வெளிச்சம் அவள் மேனியில் பாய்ந்தது. கார் நம்பரைக் கவனித்ததும் —

"டாக்டர்!" என்று கூப்பிட்டு, கையையும் தட்டினாள் மேகலை.

கார் நின்றது. வக்கீல் வீட்டுச் செய்தியைக் கேட்டதும், "ரவுண்டு முடிந்ததென்று ஸ்டெதஸ்கோப்பைக் கழட்டி எறிய டிஸ்பென்சரிக்குப் போய்க்கொண்டிருந்தேன். ஹூம்! போகிறேன்," என்று வண்டியைத் திருப்பிக் கொண்டார் டாக்டர் ராமேசுவரம்.

பக்கிங்ஹாம் கால்வாய், கூவத்துடன் போட்டி யிட்டது வீச்சத்தில். நகருகிறதா நின்றிருக்கிறதா என்று



சொல்வதற்கியலாதபடி இரண்டொரு படகுகள் உப்பு மூட்டையும் தேங்காய்க் குவியலும் நிறைத்துக் கொண்டு நீரோடு சல்லாபித்தன.

மேகலை நின்றாள். என்ன இது!

டாக்டர் ராமேசுவரத்தின் டிஸ்பென்சரியில் விளக்கு எரிந்துகொண்டிருந்தது.

கைக்கடிகாரத்தைப் பார்த்தாள் மேகலை. மணி எட்டே கால். ஏழடித்ததுமே, தலை போனாலும், சிப்பந்திகளை வீட்டுக்கு அனுப்பிவிட்டுத்தான் மறு வேலை பார்ப்பார் டாக்டர். பின்னே...?

வியப்பை அடக்கமாட்டாதவளாய் உள்ளே நுழைந்தாள் மேகலை. நெஞ்சில் லேசான பதட்டம் கண்டது. சந்தடியின்றி நடந்து, திரைச் சீலையை விலக்கிக் கொண்டு மெதுவாய் எட்டிப் பார்த்தாள். ஒரு புன்னகை பிறந்தது அவள் இதழில். அச்சமும் பதட்டமும் நீங்கியவளாக இன்னும் நன்றாக நின்று கொண்டு கவனித்தாள். உதட்டில் பிறந்த புன்னகை வளர்ந்து முகத்திலெல்லாம் தவழ்ந்தது.

ஆண்மையின் வலிவும் பெண்மையின் பொலிவும் ஒருங்கே குடியிருந்தன அந்த இளைஞனின் உடம்பில். என்ன காயமோ, எப்படி ஏற்பட்டதோ தெரியவில்லை. கட்டை விரலில் 'பாண்டேஜ்' கட்டிக் கொண்டிருந்தான். மோவாயில் இன்னொரு காயம். அதற்கும் மருந்தும் பஞ்சும் வைத்துக்கொண்டு, துணியையும் சுற்றிக் கொண்டாகி விட்டது. ஆனால் காயம் பட்ட கட்டை விரலால் அதற்கு முடிச்சுப் போட வரவில்லை. தாறுமாறாகச் செருகிக் கொண்டான்.

எரிச்சலுடன் அவன் நிமிர்ந்தபோது, மேகலை வாய் விட்டே சிரித்துக் கொண்டிருந்தாள், வெண்பற்கள் தெரிய.

"ஓ! ஆள் இருக்கிறதா இங்கே?" என்று தனக்குத் தானே சொல்லிக்கொண்டவன் போல் கேட்டான் அவன். "ஒரு உதவி செய்வீர்களா?"

மேகலை முன்னே வந்தாள் "என்ன உதவி என்று தெரியும். பார்த்துக் கொண்டுதான் இருந்தேன்," என்றவள் தலையின் முடிச்சை இறுக்கிப் போட்டாள்.

"ரொம்ப நன்றி," என்றான் அவன்.

"கொஞ்சம் இருந்து டாக்டரிடமே நேரில் நன்றியையும் தெரிவித்து, மன்னிப்பும் கேட்டுக்கொண்டு போங்கள்!"

ஸ்லாக் ஷர்ட்டை இழுத்து விட்டுக் கொண்டு அவன் எழுந்தான். "மன்னிப்புக் கேட்க வேண்டிய அவசியமே இல்லை. 'மாலி மனம் போனபடி இங்கே வரலாம், போகலாம்' என்பது டாக்டர் பிறப்பித்துள்ள நிரந்தரக் கட்டளை!"

புறப்பட்டுவிட்ட அந்நியனைப் பின்தொடர்ந்து பேசுவது சரியல்லதான். ஆனாலும் மேகலையால் சும்மா இருக்க முடியவில்லை. "எங்காவது விழுந்ததில் ஏற்பட்டதோ?" என்று கேட்டாள்.

கேசச் சுருளை விரலால் சுருட்டி விட்டுக் கொண்டவாறு மாலி பதிலவித்தான்:

"ஆமாம். குறுக்கே போய் விழுந்தேன் — ஒரு புருஷன் பெண்சாதி சண்டையில்!"

"எங்கே?" என்று திடுக்கிட்டாள் மேகலை.

"எங்கள் சந்தில், என் வீட்டுக்கு அடுத்த குடிசையில். புருஷன்காரன் தண்ணி போட்டுவிட்டு வந்து பெண்டாட்டியை விளாசிக் கொண்டிருந்தான். 'ஐயோ பாவம்' என்று இரங்கியதற்காக நான் பெற்ற பரிசு இது!"

மேகலை விரக்தியுடன் உள்ளுக்குள் நகைத்துக் கொண்டாள். படிக்காத தம்பதிகள் ஊரறியச் சண்டையடித்துக் கொள்ளுகிறார்கள். படித்த தம்பதிகள் யாருக்கும் தெரியாமல், வெகு நாசுக்காகத் தலை மயிரைப் பிய்த்துக் கொள்கிறார்கள். அவ்வளவுதான் வித்தியாசம்.



திடுதிப்பென்று மாலி கேட்டான்:

"பெங்களூர் மெயில் எத்தனை மணிக்குப் புறப்படுகிறது?"

பிடரியில் அடி பெற்றாற்போல் திகைத்து நின்றாள் மேகலை.

அதை மாலி கவனிக்கவில்லை. "மெயிலா, ரெயிலா என்றுகூடத் தெரியவில்லை," என்றவாறு இடது கையால் வலப்புறப் பாண்ட் பையில் துழாவி, சிறிது சிரமத்துடனேயே ஒரு சிறு காகிதத் துண்டை வெளியே எடுத்தான். "ஏதோ ஈரம்பட்டு எழுத்து கலங்கிவிட்டது. இந்த இடத்தில் என்ன எழுதியிருக்கிறது பாருங்கள்; மெயிலா, ரெயிலா?"

"இன்று இரவு பெங்களூர் ...யிலில் போகிறோம்."

மேகலை பதில் சொல்லவில்லை. அவளது இருதயம் ஒரு முறை நின்று, மறுமுறை பன்மடங்கு வேகத்துடன் அடித்துக்கொண்டது.

குறிப்பின் அடியில் எழுதியவரின் பெயர் இல்லை. ஆனால், அதை எழுதிய கையெழுத்து யாருடையது என்பது அவளுக்குத் தெரியும். ஒரு பெண்ணின் எழுத்து அது! கையெழுத்து அழிந்ததற்குக் காரணமும் வெறும் ஈரமல்ல; எழுதியவளின் கண்ணீர் ஈரம்.

"மெயிலாய்த்தான் இருக்க வேண்டும்." கைக் கடியாரத்தை நோக்கினாள் மேகலை.

"ஒன்பதுக்கு வண்டி. இன்னும் கால்மணிதான் இருக்கிறது. வழியனுப்பப் போகவேண்டுமா?"

"இல்லை. தடுத்து நிறுத்தப் போகவேண்டும்" என்றான் மாலி.

## 2

"இன்னும் கால் மணிதான் இருக்கிறதா டிங்ச்சர் நெடி பிடிக்காமல் முகத்தைச் சுளுக்கி கொண்டிருந்த மாலி விருட்டென்று எழுந்தான். "நா உடனே போகிறேன்... உங்கள் உதவிக்கு ரொம்ப நன்றி."

"கொஞ்சம் இருங்கள்" என்றாள் மேகலை உறுதியான குரலில். "என் தங்கையை உங்களுக்கு எப்படி தெரியும்!"

"உங்கள் தங்கை!"

"இந்தக் கடிதத்தை எழுதியவளைச் சொல் கிறேன் — ஆனந்தியை." குமுறிக்கொண்டிருந்த சின வெளிப்பட்டுவிட்டது.

"ஓ— ஆனந்தி... ஆனந்தி உங்கள் தங்கையா?.. எழுந்தவன் உட்கார்ந்தான். மறு வினாடியே மீண்டும் எழுந்துகொண்டுவிட்டான். "இன்னொரு முறை உங்களை சந்திக்கும்போது சாவகாசமாக அதையெல்லாம் செ கிறேன். இப்போது ரயிலுக்கு நேரமாகிவிட்டது."

"ஆமாம். நேரமாகிவிட்டது. டாக்சி பிடித்துக் கொண்டு நாம் போய்விடலாம்" என்ற மேகலை, இடைச் கட்டில் எரிந்துகொண்டிருந்த விளக்கை அமர்த்திவிட்டு வாசலுக்கு விரைந்தாள்.

பின்னாலேயே வேகமாக வந்த மாலி, "ஸ்டேஷ னுக்குத்தான் நீங்களும் புறப்பட்டீர்களா?" என்றான்.

"முதலில் அப்படிப் புறப்படவில்லை. ஆனால் இப்போது உங்களிடமிருந்து சில விஷயங்கள் கேட்பதற்காக வாவது ஸ்டேஷன் வரை வரலாமென்று பார்க்கிறேன்."

தெருவில் அலைபாய்ந்த மேகலையின் விழிகள் தொலைவில் வந்துகொண்டிருந்த பேபி டாக்ஸியை இனம் கண்டுகொண்டன. "பேபி!" என்று கை தட்டினாள்.



"சென்டிரல்!" என்று ஒரே வார்த்தை கூறிவிட்டு டிரைவருக்குப் பக்கத்தில் அமர்ந்தான் மாலி. மேகலை பின்புறத்தில் ஏறிக் கதவைச் சாத்திக்கொண்டதும், பச்சை நிறப் பேபி ஓர் அடி பின்னால் தள்ளிக்கொண்டு முன்னே பாய்ந்தது.

டாக்ஸி எலியட்ஸ் ரோடு திருப்பத்தைத் தாண்டி விட்டது.

"நான் கேட்டதற்குப் பதிலே கிடைக்க வில்லையே?" என்றாள் மேகலை சற்று முன்புறமாகக் குனிந்து கொண்டு.

அவளைப் பார்த்தாற்போல் ஒருக்களித்து உட் கார்ந்து கொண்டான் மாலி. ராயப்பேட்டை ஹைரோடின் விளக்குகள் மேகலையின் மீது வெவ்வேறு ஒளி வண்ணங் களைப் பாய்ச்ச, தேர்ந்த நாட்டியக்காரியின் முகத்தில் வேகமாக மாறும் பாவங்களைப்போல் கணத்துக்குக் கணம் அங்கே நிழலும் ஒளியும் இருட்டும் மாறி மாறி நர்த்தன மிட்டன.

மாலி ஒரு புன்னகை பூத்தான்.

"உங்களை ஒருமுறைகூட உங்கள் தங்கை — ஆனந்தி — தன்னோடு அழைத்து வந்ததில்லை" என்றான்.

"அவள் வெளியே போவாள் என்பதே எனக்கு இப்போதுதான் தெரியும்."

மாலியின் புருவங்கள் ஏறின.

"நீங்கள் வீட்டில் இல்லாத வேளையில்தான் ஆனந்தி வெளியே புறப்படுவாளோ? ஆனால்... அப்படி மறைக்கும்படியாக என்ன வந்தது?"

'என்ன வராமல்?' என்று எண்ணிக்கொண்டாள் மேகலை.

"பார்க்கப் போனால், எங்களுக்குள் லேசான பழக்கம்தான். மந்தைவெளி மார்க்கெட்டுக்கு ஒரு தடவை வந்தபோது...!" என்று தொடங்கினான் மாலி.

ஓகோ! தினம் தவறாமல் அம்மாவுடன் காலையில் கிளம்பியது இதற்குத்தானா?

டாக்ஸி டிரைவரை ஒருமுறை பார்த்துக் கொண்டான் மாலி. அவர் சாலையிலே கண்ணாயிருந்தார்.

"நான் சைக்கிளில் அவசரமாகக் காலேஜுக்குப் போய்க் கொண்டிருந்தேன். அப்போது — இடிக்கக் கிடிக்க இல்லை — சும்மா மணி அடித்ததுமே மிரண்டு போய், கறிகாய்ப் பையைக் கொட்டிவிட்டாள். பொறுக்கி எடுத்துத் தந்து, மன்னிப்புக் கேட்டுக் கொண்டேன். பாவம், ஆனந்திக்கு ரொம்பப் பயந்த சுபாவம்..."

அடாடா! பயந்த சுபாவக்காரி எத்தனை பெரிய வேலையெல்லாம் செய்கிறாள்! 'காலேஜுக்குப் போவதென்றால் எனக்குக் கூச்சமாயிருக்கிறது' என்று சொல்லி எஸ்.எஸ்.எல்.ஸி.யோடு படிப்பை நிறுத்திக் கொண்டவளின் பயந்த சுபாவம் இப்போது பல்லைக் காட்டிவிட்டதே!

'வீல்!' என்று அரற்றியது ஓர் என்ஜின். 'பெங்களூர் மெயிலோ?' என்று பரபரப்படைந்தாள் மேகலை.

"அதுக்கு இன்னும் பத்து நிமிஷம் இருக்குதம்மா. அஞ்சே நிமிஷத்தில் வண்டியைக் கொணாந்திட்டேனே!" என்றபடி டாக்ஸியை ஓடித்துத் திருப்பினான் டிரைவர்.

மேகலை தன் ஜாக்கெட்டுக்குள் கையை விடுமுன் மாலி தன் பாண்ட் பாக்கெட்டிலிருந்து பர்சை உருவி, இரண்டு ரூபாய் நோட்டொன்றை வீசினான். பிளாட்பாரம் டிக்கெட் விற்கும் ஆங்கிலோ இந்தியப் பெண், தன் கையிலிருந்து டிக்கெட்டைப் பறித்துப் பிடுங்கிக் கொண்டு ஓடும் வாலிபனையும், மேஜையில் விழுந்த இரண்டணாக் காசையும் பார்த்துத் திகைத்தாள். பெட்டி படுக்கை இல்லாமலே தலைதெறிக்கப் பறக்கும் அந்த இளம் ஜோடியைக் கண்டு போர்ட்டர்கள் கேலியாய்ச் சிரித்தார்கள்.



"ஆகா! நினைத்தேன்!" என்றான் மாலி பிளாட்பாரத்தில் புகுந்ததுமே.

"என்ன?"

"மெயில் போய்விட்டது! பிளாட்பாரத்தைப் பார்த்தாலே தெரியவில்லை? ஈ காக்கையைக்கூடக் காணோமே?"

மேகலைக்கு ஏமாற்றமாகி விட்டது. எப்படியும் ஆனந்தியும் இந்த வாலிபனும் சந்திப்பதைத் தான் பார்க்க வேண்டும் — தான் பார்ப்பதோடு அல்லாமல் அம்மாவுக்கும் காட்ட வேண்டும் — என்று ஓடோடி வந்ததெல்லாம் வீணுக்குத்தானா?

"டாக்ஸி டிரைவர் டயம் இருக்கிறது எனறு உளறினானே? இருங்கள். நான் டயம் டேபிளையும் பார்த்து விட்டு வருகிறேன்" என்று மாலி வெளியேறினான்.

பாண்ட் பையில் ஒரு கையைப் புகுத்திய வண்ணம் செருப்பு 'டக் டக்'கென்று ஓசையிட அவன் ஓடுவதைப் பார்த்தவாறு நின்றாள் மேகலை. 'ஆனந்தி! நீ மக்கு அல்ல — அது மட்டும் நிச்சயம்,' என்று உள்மனம் கூவிற்று.

'ஹாட்'டை அக்குளில் நசுக்கிக்கொண்டு ஒரு டிக்கெட் பரிசோதகர் வந்துகொண்டிருந்தார். சுமக்க முடியாத பெரும் பாரமாகத் தனது பதவியை கருதுகிறவர் அவர் என்று முகம் கூறிற்று.

"ஏன் சார், பெங்களூர் மெயில்..." என்று மேகலை தொடங்கினாள்.

"நம்பர் த்ரீ, நம்பர் த்ரீ" என்று தலையை வலப்புறம் ஆட்டிக் காட்டிவிட்டுப் போனார்.

யோசனையுடன் நின்றிருந்த மாலி, "தலைகால் புரியவில்லையே இதில்? பெங்களூர் மெயில் ஆறே காலுக்கேயா போய்விடுகிறது?" என்றான் மேகலை அருகில் வந்ததும்.

போர்டைப் பார்த்த மேகலைக்கும் ஒன்றும் புரியவில்லை. ஆனால் அடுத்த வினாடியே சிரித்தவளாக, "மெயில் நிற்காத பிளாட்பாரத்தை முதலில் பார்த்தீர்கள். இப்போது ரயில் வருகிற நேரத்தைப் பார்த்து, ரயில் கிளம்புகிற நேரத்தைக் கணக்கிடுகிறீர்கள்!" என்றாள்.

தான் தப்பான போர்டைப் பார்த்துக் கொண்டிருப்பதை மாலி அப்புறம்தான் உணர்ந்தான். "மடையன் நான்! மெயில் எங்கே நிற்கிறதாம்?" என்றான்.

'மூன்றாம் பிளாட்பாரத்தில். வாருங்கள் சீக்கிரம்."

யாரோ பெரிய மனிதருக்குப் பிளாட்பாரத்தில் பிரிவு உபசாரம் நடந்து கொண்டிருந்தது. முதல் வகுப்புக் கருகில் மாலையிடலும் கைதட்டலும் புகைப்பட ஒளி வீச்சும் வழக்கமான சந்தடியை அதிகப்படுத்தின. மூன்றாம் வகுப்புப் பெட்டியிலிருந்து "ஏ உடுகா!" என்று ஒரு கன்னடப் பெண்மணி கூப்பிட்டுக் கொண்டிருந்தாள் எவரையோ.

"நேரம் அதிகமில்லை. நீங்கள் அந்தக் கடைசி வரையில் பாருங்கள். நான் இந்தக் கடைசிவரை பார்த்து விட்டு வருகிறேன்," என்று ஓடினான் மாலி.

மேகலை இரண்டு பெட்டி தாண்டியதும் திரும்பிப் பார்த்தாள். மாலி, ஒவ்வொரு பெட்டியாகத் தலையை நீட்டி ஆராய்வது தெரிந்தது. "ஆனந்தி!" என்று அவன் குரல் கொடுப்பது கேட்டபோது, மேகலைக்குச் சினமும் ஆத்திரமும் பொங்கி வந்தன. 'எத்தனை உரிமையுடன் கூப்பிடுகிறான்! அம்மாவுக்குத் தெரிந்தால்...?'

தெரிந்துதான் இத்தனையும் நடக்கிறதோ?

விபரீதமானதோர் ஐயம் மேகலையின் மனத்தில் உதித்தது.

அம்மா அப்பா சண்டைகூட ஆனந்தியைப் பற்றித்தானோ? ஆனந்தி, அம்மா பெண். தன் விருப்பத்தைத் தாயிடம் சொல்ல, அவள் அப்பா காதில் போட ரகளையாகியிருக்குமோ?...



ஆரேழு பெட்டிகளில் தலையை நுழைத்துப் பார்த்தும் அம்மாவையோ ஆனந்தியையோ காணோம். கடைசிப் பெட்டியில் ஒரு தாய் தன் பெண் குழந்தையை மடியில் வைத்துக்கொண்டு ஆரஞ்சுப் பழச் சுளைகளை ஒவ்வொன்றாய் வாயில் ஊட்டிக் கொண்டிருந்தாள். அதற்கு முன் பெட்டி இரண்டாம் வகுப்பு. வெயிஸ்ட்கட் அணிந்த ஒரு வடக்கத்தி இளைஞன் நத்து அணிந்து கொண்டிருந்த தன் மனைவியிடம், ஒரு நகைப் பெட்டியைத் திறந்து காட்டிக் கொண்டிருந்தான். அந்தப் பெண்ணின் கண்கள் அகல அகலமாய் விரிந்து கொண்டே போயின...

ஆனந்தியைத்தான் காணோம், விசில் ஊதிற்று. ஜனங்களும் கூலிகளும் குறுக்கும் நெடுக்கும் ஓடினார்கள். 'வழி வழி' என்ற கட்டியத்துடன் இரும்புச் சக்கர கைவண்டி பிளாட்பாரத் தரையில் தட தடத்தது.

மேகலை பரபரத்தாள். ஆனந்தி நிச்சயம் மறு முனையில்தான் இருப்பாள். மாலி அவளைச் சந்தித்திருப்பான். வண்டி கிளம்பு முன்னால் இருவரையும் சேர்த்துப் பார்த்துவிட வேண்டும்...

"காணேமே, நான் பார்த்தவரையில்," என்று மாலி திரும்பி வந்தான்.

காணோமா? ரயிலுக்கு வராமல் அம்மா இன்னும் என்ன பண்ணுகிறாள் வீட்டில்? ஒருவேளை, ஆனந்தியைத் தான் பார்த்ததாகத் தெரியவேண்டாம் என்பதற்காக மாலி சொல்லும் பொய்யோ?

"நீங்கள் அந்தப் பக்கம் பார்த்துவிட்டு வாருங்கள். நான் இப்படிப் பார்க்கிறேன்," என்று மீண்டும் ஓடினாள் மேகலை.

ஊஹூம். இந்தப் பக்கத்திலும் இல்லை. எஞ்ஜினின் பிளிறல் காதைத் துளைத்தது. 'குபுக்' கென்று புறப்பட்ட புகையும் கரியணுக்களும் முகத்தில் படிந்தன.

பச்சை விளக்கு ஆடிற்று. கடைசி நிமிடப் பிரயாணிகள் முண்டினர். வழியனுப்ப வந்தோர்கள் வண்டியிலிருந்து இறங்கிக் கதவைச் சாத்தினார்கள்.

மாலி கவலையுடன் உதட்டைப் பிதுக்கிக் கொண்டு மேகலையிடம் வந்து சேர்ந்தான். ஸ்டேஷன் பிடிப்பிலிருந்து விடுபடத் தன்னைத்தானே உதறி விட்டுக் கொண்டாற்போலப் பெங்களூர் மெயில், ஒரு திமிறு திமிறிக்கொண்டு புறப்பட்டது.

சலிப்புடன் செருப்புக் காலைத் தரையில் தேய்த்தான் மாலி. "ஆச்சரியமாயிருக்கிறது. எங்காவது நிச்சயமாய் வருவதாயிருந்தால்தான் கடிதம் எழுதுவாள். கடிதம் எழுதி விட்டால் வராமலிருக்க மாட்டாள். இன்றைக்கு ஆனந்தி செய்தது வழக்கத்துக்கே விரோதம்," என்றான்.

"ஆமாம்," என்றாள் மேகலை ஒப்புக்கு. வழக்கத்துக்கு விரோதம்! கூடப் பிறந்தவளுக்கு — பதினேழு வருடங்கள் ஒன்றாய் வாழ்ந்தவளுக்கு — இன்றுவரை தெரியாத வழக்கம், நேற்று முளைத்த ஓர் ஆடவனுக்குத் தெரிந்திருக்கிறது. அப்பாவி ஆனந்தி, நிமிராத தலையும், உயராத பார்வையும் கொண்ட ஆனந்தி, அம்மா பெண் ஆனந்தி, அதிர்ந்து பேசத் தெரியாத ஆனந்தி, மேகலை அறிந்த ஆனந்தி — அவளல்ல உண்மையான ஆனந்தி. வேறோர் ஆனந்தி இருக்கிறாள். பிஞ்சிலே பழுத்த ஆனந்தி!

ரத்தினக் கம்பளத்தில் சித்திரமும் சிங்காரப் பூவண்ணமும் நிறைந்த பக்கத்தைத்தான் நான் பார்த்தேன். முசு முசுவென்று ரோமம் உறுத்தும் மறுபுறம் இப்போது தான் தெரிகிறது, ஆனந்தி!

"ஒரு மணி லேட், அரை மணி லேட் என்றால் அர்த்தம் உண்டு. ஏழு மணி லேட்டாமே கல்கத்தா மெயில்?



என்ன சார் விளையாட்டு?" என்று ஒரு குல்லாக்காரக் கனவான் அதட்டிக் கொண்டிருந்தார்.

"ரயில் விளையாட்டு சார்!" என்று பதிலளித்தார் ஒரு நகைச்சுவைமிக்க ரயில் சிப்பந்தி. மற்றப்படி ஸ்டேஷனில் இரைச்சல்கள் பெருமளவு குறைந்து விட்டன.

"போகலாமா?" என்று கேட்டாள் மேகலை.

"நான் மந்தைவெளி போகவேண்டும். பஸ்ஸி லேயே போய்க் கொள்ளலாமென்று பார்க்கிறேன்" என்றான் மாலி.

ஆனந்தியைப் பற்றி இன்னும் குடைந்து குடைந்து கேட்பேனென்று பயமா? கேட்க மாட்டேன். தெரிந்த வரையில் போதும்.

"எனக்கு நேரமாகிறது. நான் டாக்ஸியிலேயே போய்க் கொள்கிறேன்," என்றாள் மேகலை.

"அப்படியானால் ஒரு டாக்ஸி பிடித்துக்கொண்டு வருகிறேன்," என்று சொல்லிவிட்டுப் போனான் அவன்.

கெல்லீஸ் பஸ் கூட்டத்தருகில், ஆனால் அதோடு சேர்ந்து விடாமல், தனித்து நின்றாள் மேகலை. மாலையி லிருந்து ஏற்பட்ட புதிய புதிய அனுபவங்கள், அனுபவித்த விந்தை விந்தையான உணர்ச்சிகள், அறிந்து கொண்ட திகைப்புத் திகைப்பான உண்மைகள் — எல்லாம் அவள் மன அரங்கில் கூத்தாடின. எல்லாவற்றுக்கும் மேலான புதிராக, அவள் தங்கை புதுவேடம் தரித்துத் தோன்றினாள்.

டாக்ஸி வந்து விட்டது. கதவைத் திறந்து விட்டான் மாலி. மேகலை ஏறி அமர்ந்துகொண்டு, "மயிலாப்பூர், வடக்கு மாட வீதிக்கு விடப்பா," என்றாள்.

மாலி போய்விடவில்லை. "ஆனந்தி வீட்டிலே தான் இருப்பாளென்று தோன்றுகிறது. அந்த வரையில் சந்தோஷம். திடீரென்று பெங்களூருக்குப் புறப்படும்படி என்ன நேர்ந்ததென்று அவளையே கேட்டுத் தெரிந்து கொள்கிறேன்," என்றான்.

"ஊம்", என்றாள் மேகலை. ஆனந்தி அழுமூஞ்சி யல்ல, அதிர்ஷ்டக்காரி. அவள் ஊருக்குப் புறப்படுகிறா னென்றால் பதறித் துடித்துக்கொண்டு ஓடி வரவும், ஊருக்குப் போகவில்லையென்றால் ஆறுதல்கொண்டு ஆனந்தப்படவும் ஓர் ஆடவன் இருக்கிறான் அவளுக்கு. இளமையும் அழகும் கொண்ட ஆடவன்...

டாக்ஸி கிளம்பும்போது மாலி கேட்டான், "உன் பெயரைச் சொல்லவேயில்லையே?" என்று.

"மேகலை" என்றாள் அவள்.

வண்டி புறப்பட்டுக் கொஞ்ச தூரம் போன பிறகுதான் நினைவு வந்தது — 'உன் பெயர்' என்று மாலி சொன்னது. 'உங்கள்' என்று சொல்லவில்லை.

பின் ஸீட்டின் இருளில் அமுங்கியிருந்த மேகலை, இதழ்களை விரித்துப் புன்னகை பூத்தாள். அவள் இதயம் கிறுகிறுப்பானதோர் இன்பத்தை அனுபவித்தது.

முன்ஹாலில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. மாடியறையில், விடி விளக்கின் மினுமினுப்பில், கட்டில் கொழும்பும் கொசுவலையின் உச்சியும் கண்ணில் பட்டன. அப்பா படுக்கப் போய் விட்டார்.

அம்மா பிரயாணத்தை நிறுத்திவிட்டாள். அந்த மட்டில் சந்தோஷம். ஆயிரத்தெட்டாம் தடவையாக ராஜி ஏற்பட்டுவிட்டது அம்மாவுக்கும் அப்பாவுக்கும். இனி ஆயிரத்தொன்பதாவது சண்டை முளைக்கும் வரையில் வீட்டில் நிம்மதி நிலவும்.

அம்மாவின் அறைக் கதவைத் திறந்தாள் — பார்த்தாள் — திகைத்தாள்.

அம்மா எங்கே? ஆனந்தியுடன் படுத்துக் கொண்டிருக்கிறாளோ?

அடுத்த அறையிலும் விளக்கைப் போட்டாள்.



ஒரே ஒரு கருநீல ரிப்பன் நடுத்தரையில் சுருண்டு கிடந்தது. வேறு யாரும் இல்லை.

விளக்குகளின் பிரகாசத்தைக் கண்டு சமையற் காரர் வந்தார், "இலை போடலாமா அம்மா?" என்ற வண்ணம்.

"ஆனந்தியும் அம்மாவும் எங்கே?" என்று கேட்டாள் மேகலை.

"அவர்கள் ஊருக்குப் போனதுதான் உங்களுக்குத் தெரியுமே அம்மா?... எட்டு மணிக்கே புறப்பட்டு விட்டார்களே?" என்று திகைத்தார் சமையற்காரர்.

"தணிகாசலம் இருக்கிறானா. வீட்டுக்குப் புறப் பட்டு விட்டானா?"

"புறப்பட்டுக் கொண்டே இருக்கிறான்."

"கூப்பிடுங்கள் அவனை."

தணிகாசலம் வந்தான். விசாரித்தாள். "சென்டிர லிலே இறக்கிவிட்டுவிட்டுத் தானே நான் திரும்பினேன்" என்றான் அவன்.

ரயிலிலும் போகாமல், வீட்டுக்கும் திரும்பாமல் எங்கே போனார்கள் இரண்டு பேரும்?

மேகலை மாடியை ஏறிட்டுப் பார்த்தாள்.

"விட்டது இன்றோடு," என்று சொன்னவர் நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருக்கிறார் மேலே. அவரை இப்போது எழுப்பிச் சொல்லுவதால் என்ன பயன் ஏற்படப் போகிறது?

அம்மா! மகளுக்குமேல் பெரிய புதிராக நீ இருக்கிறாயே!

"இலையைப் போடுங்கள்," என்றாள் மேகலை.

ஜன்னல் கதவுகளை விசாலமாகத் திறந்து கொண்டு வெளியே நோக்கினாள் மேகலை. நீராழி மண்டபத்தின் உச்சிகளில் காலைச் சூரியனின் கரங்கள்

விளையாடிக்கொண்டிருந்தன. தெப்பக் குளத்தைத் தழுவி விட்டுத் தவழ்ந்து வந்த இளங்காற்று லேசான சிலு சிலுப்பைக் கொண்டு வந்தது. இரண்டொரு அங்காடிக் காரிகளைத் தவிர, மாட வீதியின் அமைதியைக் குலைக்க நடமாட்டம் ஏதுமில்லை.

கார் வெளியே நின்று கொண்டிருந்தது — பார்க்கச் சகிக்காமல். ஒரு வாரமாகப் போகிறது அதைத் தண்ணீர் விட்டுத் துடைத்து. அப்பா காரை மட்டும் அவர் வாய்க்குப் பயந்து கொண்டு சுத்தமாக வைத்திருக்கிறார்கள். மேகலையின் கார் அனாதையாகக் காட்சியளித்தது. கண்ணாடியில் தூசி, டயர்களிலும் மட்கார்டிலும் ஒரே மண்.

ஆனந்தி இருந்தால் இப்படி இருக்குமா வண்டி? தன் காரிடம் மேகலைக்கு உயிர்தான். ஆனால் அதைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்து வந்தவள் ஆனந்தி.

"என்ன தணிகாசலம். வேலுப் பையன் சரியாகவே க்ளீன் பண்ணவில்லையே வண்டியை?" என்பாள்.

"வேலு இல்லையம்மா. நான்தான் கழுவினேன்" என்று தணிகாசலம் தலையைச் சொறிந்துகொண்டு ஒப்புக் கொள்வான். ஆனந்தியின் முன்னால் யாராலும் பொய் சொல்ல முடியாது — எவ்வளவு கைதேர்ந்த புளுகனானாலும் சரி.

"நீங்களா கழுவினீர்கள்? நான் நம்பமாட்டேன் நீங்கள் கழுவியிருந்தால் இப்படி இருக்கவே இருக்காது," என்பாள் ஆனந்தி. டிரைவரை 'நீ' என்று அழைக்கத் தோன்றியதேயில்லை அவளுக்கு.

"இல்லையம்மா, நான்தான்."

"அதெல்லாம் சும்மா. பையனை நான் திட்டப் போகிறேனே என்று பரிந்து கொண்டு வருகிறீர்கள்," என்று கூறிவிட்டுப் போய்விடுவாள் ஆனந்தி. அவ்வளவுதான். ஒருமணி நேரம் கழித்து வந்து பார்த்தால் கார் முழுதுமே கண்ணாடியில் செய்த மாதிரி இருக்கும். எப்படியோ ஒரு



வழி. எல்லோரிடமும் வேலை வாங்குகிற வழி, அவளுக்குத் தெரியும்... எல்லோரையும் கவரத் தெரியும்... இல்லா விட்டால் எப்படி அவரைக் கவர்ந்தாள் — மாலியை?...

"காலையில் ஸ்பெஷல் கிளாசுக்குப் போகணும்னு சொன்னீர்களே அம்மா. பலகாரம் சூடாய் இருக்கிறது," என்று அழைத்தார் சமையற்காரர்.

மிஸ் 'மதர் இந்தியா'வின் பிரத்தியேக வகுப்பு இன்றைக்கு. போகாவிட்டால் ஏற்கெனவே சோகமாக, நீளமாக இருக்கிற திருமுகம் இன்னும் சோகமாக, இன்னும் நீளமாக ஆகிவிடும்.

மணி ஏழரை. வண்டியைக் கழுவும்படி சொல்லி யனுப்பிவிட்டுக் கிடுகிடுவென்று குளித்து, உடை மாற்றிக் கொண்டு, சூடாக உப்புமாவும் காப்பியும் அருந்தினாள். இன்னொரு முறை நிலைக் கண்ணாடியின் முன் அலங் காரத்தைச் சரிபார்த்துக் கொண்டபின் வெளியே வந்தாள்.

இளவெய்யிலில் இதமாகக் குளித்துக் கொண் டிருந்தது கார். ஏறி அமர்ந்து, சாவியைத் துவாரத்தில் செருகியவாறு கதவைச் சாத்தப்போன சமயம் —

"கொஞ்சம் இறங்கிக்கொண்டு காரை விடுகிறாயா மேகலை?"

குரலுடன் கூடவே, கண்ணாடி இறக்கியிருந்த ஜன்னல் வழியாக ஓர் ஆண் கரம் உள்ளே நுழைந்தது. இன்னொரு கை, கதவைச் சாத்தாதபடி இழுத்துத் தடுத்துக் கொண்டிருந்தது.

திகைத்தவள் நிமிர்ந்து நோக்கினாள். முன்பின் பார்த்திராத முகம். அந்த முகத்தில் திமிர்ச் சிரிப்பு விளையாடிற்று.

"யார் நீங்கள்?" என்று சீற்றத்துடன் கேட்டாள் மேகலை.

"என்னைத் தெரியவில்லையா? நான்தான் தாண்டவம்," என்றான் அவன்.

பைத்தியமோ ஒருகால்? இவ்வளவு 'டிப்டாப்'பாக உடையணிந்த பைத்தியத்தைப் பார்த்ததே இல்லையே?

"நீங்கள் ஆண்டவனானாலும் சரி. கையை எடுங்கள் முதலில். நான் அவசரமாகப் போக வேண்டும்..."

"ரொம்பப் பதறாதே, மேகலை!" என்று கொஞ்சினாற் போலப் பேசினான் அவன்.

மேகலையின் கண்கள் நெருப்பைக் கக்கின.

"நான்சென்ஸ்! என் பெயரைச் சொல்லிப் பேச உனக்கு எத்தனை தைரியம்!"

"தைரியமில்லை, அன்பு; ஆசை. மேகலை, பாம்பு சீறுகிறபோது பார்க்க அழகாய் இருக்கும் என்பார்கள். நிஜம்தான்."

"அப்பா!" என்று இரைந்து கூப்பிட்டாள் மேகலை. அதற்குள் அவரே வெளியே வந்தார்.

"மேகலை! தாண்டவத்தோடு என்ன தகராறு உனக்கு" காரைக் கேட்டால் கொடேன். நீ டாக்ஸியில் போய்க்கொள்? இனிமேல் காரே அவனுடையதுதான்!"

"அப்பா!" என்று விழியை உருட்டிப் பல்லைக் கடித்தாள் மேகலை. அவர் திரும்பிப் போய்விட்டார். காரிலிருந்து சாவியை உருவித் தரையில் எறிந்துவிட்டு இறங்கி வீட்டுக்குள் நுழைந்தாள் விடுவிடுவென்று.

## 3

ஓசைப்படாமல் நெளிந்து வரும் பாம்பைப்போல, ஹாலிலிருந்து சுருண்டு சுழன்று அறைக்குள் நுழைந்தது சிகரெட்டின் மெல்லிய புகை.



கணிதப் புத்தகத்தை மேஜைமீது கவிழ்த்து வைத்து விட்டு, அருவருப்புடன் கைக்குட்டையால் நாசியைப் பொத்திக் கொண்டாள் மேகலை. வந்தது வெறும் புகைச் சுருளாகத் தோன்றவில்லை அவளுக்கு. தன் தனிமையைக் கெடுக்க ஒரு ஆளே உள்ளே நுழைந்தாற்போல இருந்தது.

"ஹாஹ்ஹாஹ்ஹா!"

தாண்டவம் கை தட்டுகிறான். சக்கரவர்த்தி சிரிக்கிறார்.

அமரிக்கையும் அமைதியும் மிடுக்கும் நிறைந்த அப்பா சிரிக்கிறார் — சினிமாத் தியேட்டர்களில் கும்மாள மிடும் கல்லூரி மாணவனைப் போல! நடை உடை பாவனை எல்லாவற்றிலும் தரையிலிருந்து குண்டூசியைப் பொறுக்குவது போல் அதிராமல் செய்யும் வழக்கமுள்ள அப்பா என்ன அட்டகாசமாய்க் கொட்டமடிக்கிறார்?

மேகலையின் பெருமூச்சுக்கு எதிரொலி போலத் தாண்டவத்தின் பெருஞ்சிரிப்புக் கேட்டது ஹாலிலிருந்து.

ஆமை புகுந்த மாதிரி இவன் எப்படி இங்கே வந்தான்? எப்படி அப்பாவிடம் ஒட்டிக் கொண்டான்?

தொழில்முறை உறவா?

மேகலை காது கொடுத்துக் கேட்டாள்.

இல்லை. தோல் பிஸினஸைப் பற்றி ஒரு வார்த்தை கூடக் காதில் விழவில்லை. பச்சைத்தோல், பதனிட்ட தோல், கப்பல் ஏற்றுமதி, டிரேடிங் பில், மார்க்கெட் நிலைமை, ஆர்டர் தேவை — எதுவும் இடம் பெறவில்லை அவர்கள் பேச்சில். வெறும் அரட்டை.

காரையே தாண்டவத்துக்குத் தாரை வார்த்து விட்டதாக அப்பா அறிவித்த நிகழ்ச்சிக்குப் பின், இங்கே அவனுடைய போக்குவரத்து அதிகரித்து விட்டது. ஒவ்வொருமுறை அவனைக் காணும் போதும் முந்திய சந்திப்பைவிடப் பத்து மடங்கு அதிக எரிச்சல் ஏற்பட்டது மேகலைக்கு.

அன்றைக்குக் கார் சாவியை விட்டெறிந்துவிட்டு மேகலை உள்ளே சென்றதும் தாண்டவம் காரை எடுத்துக் கொண்டு போய்விடவில்லை. "சே, சே, சே!" என்று பதறிக் கொண்டே பின்னால் ஓடி வந்தான்.

மார்போடு தலையணையை இறுக்கிக் கொண்டு கட்டிலில் குப்புறப் படுத்து விட்டாள் மேகலை. சாத்தியிருந்த கதவைத் திறந்து கொண்டு தாண்டவம் உள்ளே வந்தான்.

"மேகலை, அப்பா சொன்னதை வைத்துக் கொண்டு என்மீது கோபப்படாதே. காரும் வேண்டாம் கத்தரிக்காயும் வேண்டாம் எனக்கு. அப்படி எங்கேயாவது போக வேண்டுமானால் உன்னைக் கூப்பிடுகிறேன். எனக்காக ஓட்டிக்கொண்டு வரமாட்டாயா கொஞ்சம்?"

குபுக்கென்று தலையை நிமிர்த்தினாள் மேகலை. "வெளியே போங்கள் இங்கிருந்து முதலில்! இந்த அறைக்குள் என் அப்பா, அம்மா, தங்கை மூன்று பேரைத் தவிர யாரும் நுழைந்ததும் கிடையாது. இவ்வளவு நெருங்கிப் பேசியதும் கிடையாது. கெட் அவுட்!" என்று சீறினாள்.

இதற்குப் பிறகு மேகலையுடன் அவன் எந்த வம்புக்கும் வரவில்லை. ஆனால் அவன் வேலைக்காரர்களை விரட்டும் குரல் மட்டும் அடிக்கடி வீட்டில் கேட்கத் தொடங்கியது. அது காதில் விழாததுபோல் இருக்கப் பல்லைக் கடித்துப் பழகிக்கொண்டாள் மேகலை.

பண்டாபீசில் எழுந்த மணியொலி, தெப்பக் குளத்தைத் தாண்டிக் கொண்டு இக்கரைக்கு வருவதற்குள் தேய்ந்து விட்டது. இருந்தும் மேகலை உன்னிப்பாகக் கவனித்து எண்ணினாள்.

நான்கு.

மூடிவைத்த புத்தகத்தைக் கையில் எடுத்தவள், "மேகலை!" என்று அப்பாவின் அழைப்புக் கேட்டு மீண்டும் மூடி வைத்துவிட்டு எழுந்தாள்.



சோபாவின் குறுக்காக, ஒரு கைப்புறத்தில் காலையும் இன்னொரு கைப்புறத்தில் கழுத்தையும் வைத்துக்கொண்டு பாதிப் படுக்கை நிலையில் கிடந்தான் தாண்டவம். அப்பாவின் எதிரே ஒருவர் இப்படி மரியாதையில்லாமல் இருப்பதைப் பார்ப்பது இதுதான் முதல் தடவை.

சக்கரவர்த்தி தன் நீண்ட ஷெர்வாணியின் பையிலிருந்து எடுத்துத் தந்தார். "போனவாரமே கொடுத்து விட்டுப் போனான். உன்னிடம் தர மறந்து விட்டது."

சபா டிக்கெட்.

அலங்கோலமான அந்தச் சூழ்நிலையில் நின்று பேசத் தனக்கு விருப்பமில்லை என்பதைக் காட்டிக் கொள்ள வேண்டுமென்று, மேகலை விருட்டென்று தன் அறைக்குத் திரும்பினாள்.

டிக்கெட்டைப் புத்தகத்துக்குள் செருகும்போது, நிகழ்ச்சி என்னவென்று தெரிந்தது. ஏதோ நாடகம் — ராஜா ராணி நாடகம்.

சரோஜினி வீட்டிலும், லோகாம்பாள் வீட்டிலும் இந்நேரம் அமளி துமளிப் பட்டுக் கொண்டிருக்கும் — டிக்கெட்டை யார் எடுத்துக் கொள்வது என்பதில். சபாவில் அங்கத்தினர்கள் தொகை நிரம்பி வழிகிறது என்று, மேற்கொண்டு சேர்ப்பதை நிறுத்தியிருக்கிறார்கள். விளைவு, ஒரு டிக்கெட் உள்ள பெரிய குடும்பங்களில் — ஞாயிற்றுக் கிழமைகளில் தகராறுதான்.

சரோஜினி — சீதாவைப் போல, லோகாம்பாள் — சுலோசனாபோல, மேகலையும் ஆனந்தியும் என்றுமே தகராறு செய்துகொண்டவர்களல்ல. ஆனந்தி இந்த வம்புக்கே வர மாட்டாள். நாடகங்கள் அவளுக்கு அவ்வளவாகப் பிடிக்காது. சங்கீதக் கச்சேரிகளுக்கு — அதிலும் பொறுக்கியெடுத்த இரண்டொருவரின் பாட்டுக்கு மட்டுமே — அவள் போவாள்.

என்ன நாடகம் வேண்டியிருக்கிறது இப்போது? 'நேரமாகிறதே அக்கா?' என்று தணிந்த குரலில் சாந்தமாகத் துரிதப்படுத்த ஆனந்தி இல்லை. 'மிஸஸ் சுந்தரராமனைப் பார்த்தால் ஏன் இந்தப் பக்கம் தலைகாட்டுவதில்லை என்று நான் கேட்டதாகச் சொல்லு' என்று கூற அம்மாவும் இல்லை. டிக்கெட்டைக் கையிலெடுத்துப் புரட்டினாள் மேகலை.

டாக்டர் ராமேசுவரத்தின் நாடகம். அறுமாதமாக வீட்டிலும் டிஸ்பென்சரியிலும் மனைவி, பெண், மாப்பிள்ளை சகிதமாக ஒத்திகை செய்திருப்பார் இதற்காக. அடுத்தாற்போல் எங்கே சந்தித்தாலும் 'டிராமாவுக்கு வந்திருந்தாயா? எப்படி இருந்தது?' என்று கேட்பார். 'ஊரிலேயே இல்லை' என்று பொய் சொல்ல வேண்டியது தான்.

"தணிகாசலம்!" என்று தோட்டத்துப் பக்கம் பார்த்து குரல் கொடுத்தாள் மேகலை.

"இங்கே இருக்கிறேம்மா," என்று சமையற் கட்டிலிருந்து வெளிப்பட்டான் டிரைவர்.

"சபாவிலே ஒரு நாடகம். இந்தா, போய்ப் பார்," என்று டிக்கெட்டைக் கொடுத்தாள். டிரைவரின் முகமெல்லாம் பல்லாகி விட்டது. 'தாங்க்ஸ்' என்றோ 'நன்றி' என்றோ சொல்லத் தெரியாமல் ஓர் அசட்டுச் சிரிப்புடன் வெளியேறினான்.

"நாடகம் பிடிக்காதா?"

மேகலை குரலை நோக்கித் திரும்பினாள்.

கையில் சிகரெட்டும் வாயில் சிரிப்புமாக அறை வாசலில் நின்றிருந்தான் தாண்டவம்.

"பிடிக்காது."

"ஏனோ?"

மேகலையின் விழிகள் வெறுப்பை உமிழ்ந்தன. "இந்த வீட்டுக்குள்ளேயே ஒரு பெரிய நாடகம் தினசரி



நடந்து கொண்டிருக்கிறது. அது முடிந்து, யார் யார் என்னென்ன வேஷம் போட்டார்கள் என்பதைப் பார்ப்பதற்காக நான் காத்துக் கொண்டிருக்கிறேன். வெளியே போய் வேறொரு நாடகத்தைப் பார்க்க எனக்கு ஆசையில்லை."

"பேஷ், பேஷ்!" அவள் பேச்சை ரசித்தான் தாண்டவம். "இருந்தாலும், இந்தக் குறிப்பிட்ட நாடகத்தைப் பற்றி உனக்கு விவரம் தெரியாதென்று நினைக்கிறேன். தெரிந்திருந்தால் போகாமலிருக்க மாட்டாய். கொஞ்சம் இரு."

ஹாலுக்குப் போனவன் இரண்டு நிமிடத்தில் திரும்பி வந்து ஒரு தடித்த புத்தகத்தை அவள் முன்னே பிரித்து வைத்துவிட்டு அகன்று விட்டான்.

சபா ஆண்டு விழாவையொட்டி வெளியிடப் பட்ட விசேட மலர் அது. ஏராளமான விளம்பரங்களுக்கு இடையிடையே, வரப்போகும் வருடத்தில் என்னென்ன நிகழ்ச்சிகள் உண்டு. அதில் யார் யார் பங்கு பெறுகிறார் கள் என்ற தகவல்களும் காணப்பட்டன.

தாண்டவம் பிரித்து வைத்த பக்கத்தில் டாக்டர் ராமேசுவரத்தின் நாடகத்தைப் பற்றிய விவரம் இருந்தது. நடிகர்களின் பட்டியலில் அசிரத்தையாகக் கண்ணோட்டம் விட்ட மேகலை, சடக்கென்று நிமிர்ந்து உட்கார்ந்தாள். கண்ணில் ஒரு புதிய ஜொலிப்பு ஏற்பட்டது. மறுவினாடி எழுந்து, வாசலை அடைந்தவள் —

"தணிகாசலம்! தணிகாசலம்!" என்று அவசர அவசரமாய் அழைத்தாள்.

எண்ணெய் வழிய வழியக் கிராப் வாரிக்கொண்டு, ஷர்ட்டை உதறிவிட்டுக் கொண்டிருந்த டிரைவர் ஓடி வந்து, "என்னம்மா?" என்று கேட்டான்.

"அந்த டிக்கெட்டைக் கொடு. நானே போகிறேன் சபாவுக்கு."

தணிகாசலத்தின் முகம் கூம்பி விட்டது. "பாருங்கம்மா..." என்று இழுத்தான்.

"பரவாயில்லை, கொடு. சினிமா எதற்காவது போயேன். இந்தா," என்று ஒரு ரூபாய் நோட்டை அவனிடம் தந்துவிட்டு டிக்கெட்டைத் திரும்பப் பெற்றுக் கொண்டாள். ஜாக்கிரதையாக டம்பப் பையின் உள் அறையில் மடித்து வைத்துக்கொண்ட பின், பரபரவென்று குளியலறைக்குள் புகுந்து கதவைச் சாத்திக் கொண்டாள்.

'ஷவர்' ஊற்றின் மெல்லிய நீர்த் திவலைகள் அவளது மேனியின் அணுக்களையெல்லாம் தொட்டபோது மேகலையின் உடல் மட்டுமல்ல, உள்ளமும் குளிர்ந்து, சிலிர்த்து, புளகாங்கிதம் பெற்றது.

'மாலி: அரசகுமாரன் விக்கிரமன்.'

அவருக்கு நடிக்கக் கூடத் தெரியுமா? ராஜ வேஷத்தில் அந்த இளமையின் கம்பீரம் இன்னும் எத்தனை அற்புதமாயிருக்குமோ?

பார்த்துப் பார்த்து, யோசித்து யோசித்து மேகலை அலங்காரங்களை முடித்துக் கொண்டபோது வெகு நேரமாகி விட்டது. 'ஆயிரம் பேர்களில் என் ஒருத்தியையும், என் அலங்காரத்தையுமா அவர் கவனிக்கப் போகிறார்,' என்றெண்ணித் தன் பேதமையைத் தானே பரிகசித்துக் கொண்டாள் மேகலை.

தாண்டவம் வெளியே போயிருந்தான். ஆனால் காரை எடுத்துக்கொண்டு போகவில்லை நல்ல வேளையாய்.

இடைவெளி கொடுக்காமல் தெருவை அடைத்துக் கொண்டிருந்த கார் வரிசைகளின் இடுக்கில் தன் வண்டியையும் திணித்து விட்டு, சபாவுக்குள் நுழைந்தாள். கருங்கூந்தல் நடுவே ஒற்றை வெள்ளை ரோஜாவைச் செருகினாற்போல், காலியாயிருந்த வாசற்படியில் அவள் கால் வைத்ததுமே ஒரு பிரகாசம் ஏற்பட்டது. சபா



குமாஸ்தா அருணாசலம் அவள் அழகைக் கண் குளிர ரசித்தவனாக, சிரிப்போடு ஒரு கும்பிடையும் சேர்த்து "டிராமா ஆரம்பமாகப் போகிறது. முன்னால் போங்கள்," என்று நாலடி தூரம் அவளுடனேயே நடந்து பெருமைப் பட்டுக் கொண்டான்.

திரை தூக்கவில்லையே தவிர, கடவுள் வணக்கம் ஆரம்பமாகிவிட்டது. பெண்கள் பக்கத்தில் ஒரே நெருக்கடியும் இரைச்சலுமாய் இருந்ததால், இந்தண்டைக் கோடியிலேயே அமர்ந்து கொண்டாள் மேகலை. திரையிலே அவள் விழி பதிந்திருந்தது.

முதல் இரண்டு மூன்று காட்சிகளில் மாலியைக் காணோம். அரச குமாரர்கள் போல யார் வந்தாலும் துருவிப் பார்த்தாள். இல்லை. டாக்டர் ராமேசுவரம் சந்நியாசியாக வந்தார். காவி அங்கி, ருத்திராட்ச மாலை, தாடி மீசைக்குள்ளே ஒளிந்திருந்த அவர் தோற்றத்தைக் கண்டு கொள்ள முடிந்தது. மார்பைத் தட்டிக் கொண்டு, வார்த்தைகளைப் பாதி கடித்தாற் போல் வசனம் பேசுவது அவருக்கே உரிய 'டிரேட் மார்க்!'

"ஹாஹ்ஹா! வந்தாரே துரை!"

தூக்கிவாரிப் போட்டவளாகத் தன் பக்கத்தில் பார்த்தாள் மேகலை, இந்தக் குரலைக் கேட்டதும்.

தாண்டவம்தான் உரக்கச் சிரித்துக் கொண் டிருந்தான். அவனுக்குப் பக்கத்தில் அமர்ந்திருப்பது —

சபையினர் அனைவருமே சிரித்தார்கள் உரக்க. மேகலை மேடையை நோக்கினாள்.

அரசகுமாரன் வேடத்தில் மாலி வந்திருந்தான், இரண்டு போர் வீரர்களுடன். அவனுடைய 'டோபா' சற்றுச் சரிந்து, கிராப்பைக் காட்டிக் கொடுத்துக் கொண் டிருந்ததுதான் கூட்டத்தினரின் சிரிப்புக்குக் காரணம்.

"மங்களபுரி நாட்டுக்கு வழி... வழி..."

மாலி வசனம் தெரியாதவனாகத் தடுமாறினான் மேடையில்.

"... இதுதான் என்று எப்படித் தெரியும்?..." மாலி சொல்லவில்லை. நோட்டும் கையுமாக வசனகர்த்தா, முன் வரிசையில் உட்கார்ந்திருப்பவர்களின் கண்ணிலே படும் அளவுக்கு வெளிப்பட்டு, மாலிக்குச் சொல்லிக் கொடுத்தார்.

"பிராம்ப்டர் சார்! உள்ளே நகருங்கள்!" என்று தாண்டவம் கத்தினான். கட்டிடமே நகைத்தது.

அந்தக் காட்சி எப்படியோ முடிந்தது. அடுத்த காட்சியில், ஒரு சண்டை. எதிரிகளுடன் வாளெடுத்துப் போர் புரியும் கட்டம்.

"மாலி, கத்தியை நேராய்ப் பிடிடா?" என்று இன்னொரு புறத்திலிருந்து குரல் எழுந்தது.

"மனோரமா! வெண்ணெய் வெட்டி சிப்பாயைப் பார்!" — தாண்டவம் கேலி செய்தான்.

மேகலை கடுகடுப்புடன் இன்னொரு முறை திரும்பினாள். 'மனோரமா' என்று அழைக்கப்பட்டவள், தாண்டவத்தின் பக்கத்திலமர்ந்திருந்தவள், கைக்குட்டை யால் வாயைப் பொத்திக்கொண்டு சிரித்தாள். வயது இருபத்திரண்டு இருக்கும். அவளுடைய மெல்லிய ஆடையலங்காரம், கல்லூரி மாணவியான மேகலைக்கே என்னவோ போலிருந்தது. 'தாண்டவத்துக்கு இப்படிப்பட்ட தொடர்பும் உண்டா?' என்று அவள் நினைத்த அதே சமயம்—

"நல்ல நாடகத்துக்கு என்னை அழைத்து வந்தாய் அண்ணா!" என்றாள் மனோரமா.

அண்ணன்! தாண்டவத்துக்கு ஒரு தங்கை வேறு இருக்கிறாளா? என்ன பண்ணுகிறாள்? எங்கே இருக்கிறாள்?



சபையில் மீண்டும் மீண்டும் சலசலப்பும் அமளியும் எழுந்துகொண்டிருந்தன. அப்படி எழும் போதெல்லாம் மேடையிலே, மாலி இருந்தான் — வசனத்தை மறந்தவனாக அல்லது நடிப்பில் தோற்றவனாக அல்லது வேடத்தில் சரியில்லாதவனாக.

மேகலை குமுறினாள்; துடித்தாள்; பொங்கினாள்.

'இந்தக் கட்டிடத்தை எரித்து, இங்கே உள்ள அத்தனை பேரையும் சாம்பலாக்கும் சக்தி மட்டும் எனக்கிருந்தால்!'

"ஓ! மேகலை! நீயே வந்துவிட்டாயா கடைசியில்!" என்று தாண்டவம் நடுவில் விசாரித்தான். "அந்த மாலி என்பவனைக் கவனித்தாயா? பெயரில் மாலி! நடிப்பில் காலி!"

மேகலை பதில் கூறவில்லை. சினத்துடன் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்; அதே கணம் அவள் உள்ளம் ஓர் உண்மையைப் புரிந்து கொண்டது.

மாலியின் நடிப்பு மட்டமாயிருந்திருக்கலாம். ஆனால், தாண்டவம் செய்கிற அமளி, மேகலைக்காகத் தான். சபா மலரைக் கொண்டு வந்து காட்டினானே, அப்போதே ஏன் உணராமல் போனோம் இதை?

மாலியும் தானும் இதற்கு முன் சந்தித்ததையும், அவனுடன் சென்டிரல் ஸ்டேஷன் வரையில் போனதையும் கூட இவன் பார்த்திருக்கிறான். அதைக் காட்டிக் கொள்ளத் தான் இத்தனை ஆர்ப்பாட்டமும்...

அரசகுமாரனின் காதல் காட்சி. கூட்டத்தினருக்கு உப்புச் சப்பற்றுத் தோன்றிய அந்தக் கட்டம், மேகலையைக் கூர்ந்து கவனிக்க வைத்தது. அரசகுமாரியிடம் மாலி நெருங்கி உட்கார்ந்து, அவள் தோளைத் தொட்டு, மோவாயை நிமிர்த்தியபோது மேகலையின் நெஞ்சில் சுருக்கென்றிருந்தது. ஆனால் உடனேயே சிரித்துக் கொண்டாள் மனத்துக்குள். டாக்டர் ராமேசுவரத்தின்

நாடகக் கோஷ்டியில் மருந்துக்கும் பெண் கிடையாது. எல்லாமே ஆண் வேடதாரிகள்தான்.

"அடாடா! என்ன காதல்! என்ன ஜோர்!" என்று தாண்டவம் விமரிசனம் செய்து கொண்டிருந்தான்.

கூட்டம் அமைதியுடனிருந்தது. உருக்கமான கட்டம். சந்நியாசியிடம் அரசகுமாரன் ஏதோ மன்றாடுகிறான்.

காட்சி முடிந்தது. ஒன்றும் நிகழவில்லை. ஒரு வினாடி, இரண்டு வினாடி...

மேகலைக்கு ஆத்திரம் தாளமுடியவில்லை! முட்டாள் ஜனங்கள்! ரசிக்கத் தெரியாத மரங்கள்! மாலி நன்றாய் நடிக்காதபோது கலாட்டா செய்தார்களே, அற்புதமாய் நடித்தபோது ஏன் கைதட்டவில்லை? ஏன் பாராட்டவில்லை?

திரை விழுமுன், ஆத்திரம் தீர, படபடவென்று கை தட்டினாள் மேகலை.

இரண்டொருவர் வியப்புடன் அவளை நோக்கினார்கள். மிக மிக ஈனமாக இன்னும் இரண்டொரு கரகோஷங்கள் கேட்டன. அத்தோடு சரி. அவ்வளவு பெரிய கூட்டத்தின் மத்தியில் தான் பைத்தியக்காரியாக நிற்பது போலிருந்தது அவளுக்கு.

நாடகம் முடிந்தது. 'என்னால் ஒரு நிமிஷம்கூட இனிமேல் இருக்க முடியாது!' என்று வாய்விட்டுக் கூறி, அரை மணி முன்பே தாண்டவத்துடன் கூட வந்த பெண் எழுந்து போய்விட்டாள். தாண்டவமும் அவளைப் பின் தொடர்ந்து போய்விட்டான்.

கூட்டம் கலையட்டும் என்று காத்திருந்தாள் மேகலை. திடுதிப்பென்று இன்னோர் எண்ணம் ஏற்பட்டது. மாலியைப் பார்த்துப் பாராட்டுத் தெரிவித்தால் என்ன? இன்றைக்கு அவனுக்கு ஒரே வெறுப்பும் சலிப்பும்தான்



ஏற்பட்டிருக்கும். தான் ஒருத்தியாவது ஆறுதலாக நாலு வார்த்தை சொல்லலாமே!

'மேக்கப்' நடைபெறும் 'க்ரீன் ரூம்' வாசலில் கூட்டமாயிருந்தது. அறைக்குள்ளிருந்து அவசரமாக வெளிப்பட்ட ஒருவரை, 'மாலி எங்கே இருக்கிறார்?' என்று விசாரித்தாள். மார்க் கச்சும் கைவளையலுமாகக் காட்சியளித்த அவர் அவளுக்குப் பதில் சொல்லிக்கொண்டு நிற்கவில்லை. "சோமு! டாக்டருடைய காரில் பை இருக்கிறதாம். எடுத்து வா! சீக்கிரம்!" என்று யாரிடமோ கத்திக்கொண்டே போய் விட்டார். இரண்டாவது நிமிடம் இன்னொருவர் டாக்டரின் தோல் பையைத் தூக்கிக் கொண்டு உள்ளே போனார்.

கும்பல் சற்றுக் கலைந்து, முண்டி நெருக்கி மேகலை உள்ளே நுழைந்தபோது —

கண்ணை மூடியபடி நாற்காலியில் சாய்ந்து கிடந்தான் மாலி, பாதி களைந்த வேடத்துடன். அவன் வாயில் தர்மா மீட்டர் இருந்தது. முகத்தில் முத்து முத்தாக வியர்வையும், காய்ச்சலின் பளபளப்பும் தெரிந்தன. தாடி மீசையை மட்டுமே கழற்றி எறிந்திருந்த டாக்டர் ராமேசுவரம், அவனுடைய மார்பில் ஸ்டெதஸ்கோப்பை வைத்துப் பார்த்துக் கொண்டிருந்தார்.

"மாலி! என்ன உங்களுக்கு?" என்று கலவரத்துடன், வினவினாள் மேகலை.

"உஸ்!" என்று அதட்டினார் டாக்டர்.

மாலி கண்ணைத் திறந்தான். தர்மா மீட்டரை எடுத்துப் பார்த்து, "நூற்றிரண்டு டாக்டர்" என்று சொன்ன பின், மேகலையை நோக்கிப் புன்னகை புரிந்தான். "ஒன்றுமில்லை. லேசாய் ஜுரம். அதுவும் உன்னைப் பார்த்ததில் பாதி இறங்கி விட்டது" என்றான்.

"ஒன்றுமில்லையா! நூற்றிரண்டு டிகிரி உனக்கு ஒன்றுமில்லை. அப்படித்தானே!" ராமேசுவரம் உரிமை

யுடன் சினந்தார். "இந்த மாதிரி முட்டாள்தனம் இன்னொருதரம் பண்ணினாயோ, குரூப்பிலிருந்தே உன்னை விரட்டிவிடுவேன். ஜாக்கிரதை. நாடகத்துக்குக் கெட்ட பெயர் ஏற்படுத்தத் திட்டமா? பேஷ், பேஷ்! ஜுரமாயிருந்தால், வரமுடியவில்லையென்று சொல்லியனுப்புவது. நான் என்னவோ பண்ணிக் கொள்கிறேன். நீ என்ன பெரிய தியாகி வேஷம் போடுவது?"

"டாக்டர் சார்! கோபிக்காதீர்கள் சார்!" என்று கேலியாகக் குரலை இழுத்தான் மாலி. "என்னவோவை எப்படி டாக்டர் பண்ணிக் கொள்வீர்கள்? ஐந்து மணிக்குத் தான் உடம்பில் லேசாய்க் கடுப்பும் வலியுமாய்த் தெரிந்தது. அதற்கு மேல் சொல்லியனுப்பினால் உங்களுக்குத்தானே சிரமம்? அடுத்த தடவை பிய்த்து விடுகிறேன் பாருங்கள்..."

"போதும், போதும்! அடுத்த தடவை நீ ஒன்றும் கிழிக்க வேண்டாம். எழுந்திரு மெதுவாய். காரில் கொண்டு போய் விடுகிறேன். போகிற வழியில் டிஸ்பென்சரியில் மருந்தையும் எடுத்துக்கொள்ளலாம்" என்று எழுந்து விட்டார் டாக்டர்.

மேகலைக்குப் பேசவே தோன்றவில்லை. "உடம்பைப் பார்த்துக் கொள்ளுங்கள்... பின் பகுதியில் நன்றாகயிருந்தது உங்கள் நடிப்பு... இருந்தாலும் நீங்கள் இப்படி..."

"நான் பிரமாதமாய் நடிப்பேன் மேகலை. டாக்டரையே கேட்டுப் பார். கோபமில்லாத வேளையில்!" என்று கண் சிமிட்டினான் மாலி.

"கிளம்பப் போகிறாயா இல்லையா?" என்று டாக்டர் அதட்டினார்.

"இதோ!" அவன் கை ஊன்றி எழுந்திருக்கத் திணறியதும், தன்னையறியாமலே சடக்கென்று அவன் தோளைத் தாங்கிக் கொண்டாள் மேகலை.



மாலியின் கண்கள் குறும்புடன் சிரித்தன. "உன் தங்கை... ஆனந்தி... நாடகத்துக்கு அவள் வரவில்லையா?"

"இல்லை. அன்றைக்கு அவள் வீட்டுக்கே வரவில்லை. இதுவரை எங்கேயிருக்கிறாளென்றும் தெரியவில்லை. அதையெல்லாம் சாவகாசமாய்ச் சொல்லுகிறேன். டாக்டர் காத்திருக்கிறார், போங்கள்" என்று வழியனுப்பினாள் மேகலை.

மாலி போய்விட்டான். வெளியே கதவுகள் மூடப்படும் ஓசைகள் கேட்டன.

சிலுசிலுவென்று தூறிக்கொண்டிருந்தது தெருவில். மேகலை காரைக் கிளப்புமுன் கண்ணாடியை நாலு புறமும் தூக்கி அடைத்துக் கொண்டாள். கதகதப்பான சூழ்நிலை அவள் உடலை அணைத்துக் கொண்டது. மாடவீதி வீடுகளின் மாடிகளில் மட்டும் வெளிச்சங்கள் தெரிந்தன.

என்ன சொன்னார்? 'உன்னைப் பார்த்ததில் பாதி குணம்... பாதி ஜுரம் போய்விட்டது' என்றா?

இத்தனை வருடங்களில் அனுபவித்திராத ஓர் இன்பப் படபடப்பு தனக்குள்ளே கேட்பதை உணர்ந்தாள் அவள். மொட்டாகக் குவிந்திருந்த இதயத்தாமரை திடுமென இதழ் விரிந்து மலர்ந்து, தேகம் பூராவிலும் மணம் பரப்புவது போன்ற ஓர் அதிசய உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறதே, இது எதனால்?

மேகலை உதட்டை மடித்துச் சுவைத்தாள். மாலியின் தோளைத் தொட்ட கையில் தண்ணென்றிருந்தது.

'ஆனந்தி வரவில்லையா?' என்று கேட்டாரே? இன்னும் அவளை மறக்கவில்லை. மறந்துவிடுவார் — கொஞ்ச நாளில்.

ஷெட்டில் காரை நிறுத்திவிட்டு உள்ளே நடந்தாள். 'சோ'வென்று மழை கொட்டிக் கொண்டிருந்தது.

தாவணியின் நுனியைத் தலைக்குமேல் முக்காடிட்டுக் கொண்டு ஓட்ட நடையில் விரைந்தாள்.

மறந்துவிடுவார் ஆனந்தியை, இல்லை, மறக்க மாட்டார் — அவள் வந்து விட்டால்.

'ஆனந்தி! என் அன்புக்குரிய தங்கையென்று உன்னைத் தேடுவதா? இல்லை, என் காதலிலே முளைத்த போட்டி என்று தேடாமலிருப்பதா?' மேகலையின் உள்ளம் குழம்பிற்று.

"மேகலை!"

வெடுக்கென்று திரும்பினாள்.

போர்ட்டிகோ அருகே, தூணின் ஓரமாக, இருட்டில் புதைந்தபடி — சரம் சொட்டச் சொட்ட நின்றிருந்தாள் ஆனந்தி.

## 4

"அம்மாவைக் காணோம்!" என்றாள் ஆனந்தி. இரைக்க இரைக்க மூச்சு வாங்கிற்று அவளுக்கு.

மேகலை திகைத்தாள். சபாவில் ஏற்பட்ட அதிர்ச்சிகளிலிருந்து மீளுமுன்னே இது வேறா!

தங்கையின் தோளை இறுக்கிப் பிடித்து முகத்தை வெளிச்சத்தின் பக்கமாக வெடுக்கென்று திருப்பினாள் அவள். அந்த முகத்தில் கவிந்திருந்த எல்லையற்ற பீதி, விளக்கொளியில் அதிகரித்துத் தெரிந்ததே தவிர மட்டுப்பட வில்லை.

"அம்மாவை"...?

"காணோம்." ஆனந்தி விம்மினாள். "உன்னை திருவல்லிக்கேணிக்கு அழைத்துப் போகத்தான் வந்தேன்



அக்கா. மாட்டேன் என்று சொல்லாதே. எனக்கு ஒரே திகிலாயிருக்கிறது. என்ன பண்ணுவதென்று தெரியவில்லை. எந்த நிமிஷத்திலும் ஏதோ நேரப்போவது போல் படபட வென்று இருக்கிறது."

"இரு. ஒரேயடியாய் நனைந்திருக்கிறாயே?" என்ற படி மேகலை உள்ளே விரைந்தாள். மாடியில் லேசான அரவம் கேட்டது. அப்பா இன்னும் விழித்துக் கொண்டிருக்கிறாற் போலிருக்கிறது.

ஓசைப்படாமல் அடிமேலடி வைத்து நடந்தாள் மேகலை.

வீட்டின் உறுப்புக்களை எல்லாம் கறுப்புக் கம்பளிக்குள் சுருட்டி வைத்து விட்டாற்போல ஹோவென்று அந்தகாரம் சூழ்ந்திருந்தது. வீட்டின் வாயையும் கட்டிவிட்ட மாதிரி கும்மென்ற நிசப்தம் நிலவியது.

தங்கைக்காக உடைகளைத் தேடும்போது, தன் உடைகளும் நனைந்திருப்பதை உணர்ந்தாள் மேகலை. அவற்றைக் களைந்தெறிந்து, வேறு மாற்றிக்கொள்ளச் சில நிமிடங்களே பிடித்தன. ஆனந்திக்காகத் தேடிக் கொண்டிராமல் கையில் அகப்பட்ட தாவணியை எடுத்துக் கொண்டு வாசலுக்குப் பாய்ந்தாள்.

குரோட்டன்ஸ் செடி ஓரமாக ஆனந்தி நடுங்கியவாறு நின்றிருந்தாள். "துணிக்கு என்ன அவசரம் அக்கா? நீ போய்க் காரை எடு முதலில்," என்றாள்.

"சரி, சீக்கிரம் வா," என்று முன்னே நடந்தாள் மேகலை.

திருவல்லிக்கேணி — அம்மாவைக் காணோம்... காணோம்! நிஜம்தானா எல்லாம்? இல்லை, சாயந்தர முதல் ஒரே சொப்பனமா?

பண்டாபீசில் பதினொரு மணி அடிப்பது தெள்ளத் தெளிவாகக் கேட்டது. குளத்தங்கரை மதில்

சுவரில் சாய்ந்தாற்போல் நின்றபடி இரண்டொரு சோம்பேறி பைராகிகள் சுருட்டுப் பிடித்துக் கொண்டிருந்தார்கள்.

காரை வெளிக்கொணர்ந்து ஷெட்டைப் பூட்டவும், ஆனந்தி தன் ஈர உடைகளைப் பின் வீட்டின் கீழே போட்டு விட்டு வண்டியில் ஏறவும் சரியாயிருந்தது.

'திருவல்லிக்கேணிக்கா?'

"ஆமாம் அக்கா."

"எந்தப் பக்கம்?"

"ஐஸ்ஹவுஸ் போலீஸ் ஸ்டேஷனுக்கு இந்தண்டையில்."

பயந்த புறாவைப்போல ஆனந்தி மேகலையுடன் ஒட்டி உட்கார்ந்தாள். ஆனால் மேகலையின் எண்ணமெல்லாம் வேறெங்கோ இருந்தது.

பிள்ளையார் கோவிலைத் தாண்டி, கச்சேரி ரோடைக் கடந்து, மாதவப் பெருமாள் கோவில் வழியாக நீந்திற்று கார். டீக் கடைகளின் வாசலில் கிளாஸ்களை உறிஞ்சியபடியே இரண்டொருவர் நிமிர்ந்து பார்த்து வியந்தனர் — அந்த நேரத்தில் இரண்டு இளம் பெண்கள் காரில் தனியாகச் செல்வதைக் கண்டு.

"அம்மாவும் நீயும் பெங்களூருக்குப் போகவேயில்லையா?" என்று கேட்டாள் மேகலை.

"இல்லை, போகவில்லை. டிரைவர் ஸ்டேஷன் வாசலில் விட்டு விட்டுத் திரும்பி விட்டான். பிளாட்பாரத்தில் நுழைவதற்குள் அம்மா திடீரென்று உடம்பு குளிருகிறது என்று முனக ஆரம்பித்து விட்டாள்..."

"ஐயோ! ஏன்?"

"திடீர் திடீரென்று மலேரியா வருவதுதான் அவளுக்கு வழக்கமாயிற்றே?..."



சுடுகாட்டையும் வாராவதியையும் தாண்டிற்று கார்.

ஆனந்தி கண்ணைத் துடைத்துக் கொண்டாள். "மறு நாளைக்குப் பெங்களூர் போய்க் கொள்ளலாம் என்று அம்மா சொல்லி விட்டாள். 'நம் வீட்டுக்கே திரும்பலாமே' என்றேன். சம்மதிக்கவில்லை. திருவல்லிக்கேணியில் யாரோ சிநேகிதி இருப்பதாகச் சொல்லி, அங்கே அழைத்துப் போனாள். அங்கேயேதான் இருக்கிறோம். இந்தச் சீசனில் பெங்களூர் தனக்கு ஒத்துக்கொள்ளாது என்கிறாள் அம்மா."

"அவளை யாராலும் புரிந்துகொள்ள முடியாது... வலது பக்கமா திரும்ப வேண்டும்?"

"ஆமாம். கொஞ்சம் காரை நிறுத்து. எனக்கு இன்னொரு சந்தேகம்... அம்மா சொன்னது நிஜமல்ல. குளிர், மலேரியா என்றதெல்லாம் பொய்!"

"ஆனந்தி!" என்று அவள் முகத்தை ஊடுருவி நோக்கினாள் மேகலை. ஈரம் உலர்ந்த இடம் இன்னும் பளபளத்தும், வெளுத்தும் காணப்பட்டது. காரை நிறுத்தி, என்ஜினையும் அமர்த்தினாள். "எதனால் அப்படிச் சொல்கிறாய்?"

"திருவல்லிக்கேணியில் சிநேகிதி மாதிரி யாரும் இருப்பதாய்த் தெரியவில்லை. வீட்டின் முன் கட்டில் இரண்டு ரூம்* தயாராய் ஒழித்து வைத்திருந்தது. முன்பே அந்த இடத்தைப் பேசி வைத்திருந்தாலொழிய, அவ்வளவு கச்சிதமாய், சுலபமாய் இடம் கிடைத்திருக்க முடியுமா?"

விரல் நுனியின் நகப்பூச்சைச் சுரண்டியவாறு மேகலை தலைகுனிந்து அமர்ந்திருந்தாள். அம்மாவின் நடத்தை அவளை வெகுவாகக் குழப்பி விட்டது.

நடுங்கிய குரலில் ஆனந்தி தொடர்ந்தாள்: "ராத்திரி எட்டு மணிக்கே சாப்பாடு முடிந்து விட்டது. படுத்து விட்டோம். திடீரென்று கொஞ்சம் முந்தி எழுந்து கொண்டேன். பக்கத்தில் பார்த்தேன். அம்மாவைக் காண

வில்லை. தூக்கி வாரிப்போட்டது. எழுந்து அந்தண்டை இந்தண்டை தேடினேன். ஒரே பயமாகி விட்டது. கடைசிப் பஸ்ஸைப் பிடித்துக் கொண்டு உன்னிடம் ஓடி வந்தேன்."

"பயப்படாதே. அம்மாவை நம்பிக்கொண்டு நீ அப்பாவை விட்டுப் புறப்பட்டுப் போனபோதே நினைத்தேன், இப்படி ஏதாவது ஆகுமென்று. சரி, மெதுவாய் விடுகிறேன். வீட்டைக் காட்டு," என்று காரைக் கிளப்பினாள் மேகலை.

"அதோ, அந்த மாடி வீட்டுக்குப் பக்கத்து வீடு. காரை இப்படியே நிறுத்திவிடு. வாசல் பக்கம் படுத்திருப்பவர்கள் என்ன ஏதென்று எழுந்து பார்ப்பார்கள்" என்றாள் ஆனந்தி.

விளக்குக் கம்பத்தினடியில் வண்டியை நிறுத்தி விட்டு இறங்கி நடந்தாள் மேகலை. நீர் வாங்கிய தெரு மெத்தென்றிருந்தது. ஆனந்தி சொன்னது வாஸ்தவம்தான். வீட்டின் வாசலில் பல ஆண் பிள்ளைகள் தூங்கிக் கொண்டிருந்தார்கள்.

முன்னே நுழைந்த ஆனந்தி, வாசல் புறத்து அறைக் கதவைத் திறந்ததுமே "அம்மா!" என்றாள் வியப்புக் குரலில்.

மேகலை நின்று பார்த்தாள். ஆமாம். அம்மா தான்! இடுப்புவரை போர்வையைப் போர்த்துக்கொண்டு படுத்திருந்தாள். ஆனால், காலடிச் சத்தம் கேட்டதுமே சட்டென எழுந்து கொண்டாள். மேகலையைக் கண்டதும் அவள் முகம் வெளுத்தது. மேகலைக்கோ, நீண்டநாள் கழித்துத் தாயுடன் நேர்ந்த இந்தச் சந்திப்பு சங்கடத்தைத் தந்தது.

கதவைச் சாத்திவிட்டு, விடிவிளக்கைப் பெரிதாக்கினாள் ஆனந்தி. "அம்மா! சற்று முன்னால் எங்கே போயிருந்தாய்?"

"சரிதான்! உன்னையல்லவா காணோம்!" என்று கடிந்தாள் தாய்.



ஆனந்தி தடுமாறிப் போனாள். "உன்னைக் காணோமென்று... மயிலாப்பூர் போய்..."

"சட்! உளறாதே ஏதாவது! உன்னோடு படுத்திருந்தவள் எங்கே போவேன் நடுராத்திரியில்? ஏதாவது கனவு கண்டாயா என்ன?" என்று மகளை அடக்கியவள் "உட்கார், மேகலை. இந்த அசட்டுப் பெண் உன்னை வேறே பயப்படுத்தி விட்டாளா?" என்றாள்.

"அதெல்லாமில்லை," என்றபடி அமர்ந்தாள் மேகலை, அம்மாவின் படுக்கையோரமாக. 'ஆனந்தியை ஏய்க்கலாம்! அம்மா, என்னை ஏமாற்ற முடியாது!' என்று அவள் உள்ளம் எண்ணிக் கொண்டது. 'எங்கேயும் போகவில்லையாம்! அப்படியானால் அம்மா தலையில் ஈரம் இருப்பானேன்? இந்த அறைக்குள் மழை பெய்ததா?'

"ஆனந்தி அங்கே வந்தது யாருக்காவது தெரியுமா?" என்று அம்மா கேட்டாள்.

"யாருக்கும் தெரியாது."

"உன் அப்பாவுக்கு?"

"தெரியவே தெரியாது. கவலைப்படாதே" கடைசிச் சொல் காரமாகவே வந்தது.

"நல்லது. தெரியாமலே வைத்திரு. நான் உள்ளூரிலேயே இருக்கிறேன் என்று அவருக்குத் தெரிய வேண்டாம். புரிகிறதா?"

"புரிகிறது. நான் வருகிறேன்," என்று எழுந்து கொண்டாள் மேகலை. ஒளிவும் மறைவும் நிறைந்த அந்த இடத்தில் நிற்கக்கூடப் பிடிக்கவில்லை அவளுக்கு.

"இரு மேகலை. ஒரு வார்த்தை. அப்பா உன்னிடம் எப்படி இருக்கிறார் இப்போதெல்லாம்?"

"எப்போதும் போல்தான் இருக்கிறார் — பிரியமாக." மேகலை முகத்தைத் திருப்பிக் கொண்டாள். பாத்திரங்கள், அடுப்பு, பெட்டிகள்... தற்காலிக

வாசமில்லை. நிரந்தரமான இடம்தான் பிடித்திருக்கிறாள் அம்மா.

"அந்த வரையில் சந்தோஷம்," என்றாள் அம்மா, ஒரு தலையணையை மடியில் எடுத்து வைத்துக் கொண்டு. "எதற்கும் நீ ஜாக்கிரதையாக இரு."

"எதைப்பற்றி?" என்றாள் மேகலை.

"உனக்கே பின்னால் தெரியும். நீ நினைத்திருப்பது போல் உன் அப்பா அவ்வளவு மகாத்மா இல்லை. எந்த நிமிஷத்தில் எப்படி மாறுவார் என்று சொல்ல முடியாது."

மேகலையின் சினம் உச்சத்தை அடைந்தது. சொந்தப் பெண்களிடமே மூடி மறைக்கும் அம்மா, அப்பாவைப் பற்றி என்ன அவதூறாய்ப் பேசுகிறாள்?

"நிறுத்து அம்மா! போதும் உபதேசம்!" என்று திடீரெனச் சீறினாள் மேகலை. சடசடவென்று ஆங்கார வார்த்தைகள் பறந்தன அவள் வாயிலிருந்து. "அப்பாவைப் பற்றி எனக்குத் தெரியும். உன்னைவிட மிக நன்றாகத் தெரியும். யாரிடமாவது நான் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்றால் அது உன்னிடம்தான்! எனக்குத் தெரிந்த வரையில் உன்னைவிட மோசக்காரரல்ல அவர்!"

"மேகலை! என்னைப் பார்த்தா இப்படிப் பேசுகிறாய்?" என்றபோது அம்மாவின் விழிமுனையில் ரோஷம் கண்ணீராய்த் துளித்தது.

"வேண்டாம் அக்கா, வேண்டாம்!" என்று அவள் கைகளைப் பிடித்துக்கொண்டாள் ஆனந்தி.

திண்ணையில் படுத்திருந்த இரண்டொருவர் "உஸ்! சூ!" என்று முணுமுணுத்தார்கள்.

"நீ பேசாமலிரு ஆனந்தி! எனக்குத் தெரியும்!" என்று மேகலை பல்லைக் கடித்தாள். "காலோடு தலை பொய்யாய் உருவெடுத்திருப்பவளுக்கு இன்னொருவரைப் பற்றிச் சொல்ல என்ன யோக்கியதை இருக்கிறது? புருஷனோடு பொறுமையாய் வாழத் தெரியாதவள்



பிறருக்கு என்ன புத்தி சொல்லுவது? கொண்டவனுக்குத் தெரியாமல் ஒண்டிக் குடித்தனம் செய்பவள் ஊருக்கு என்ன உபதேசம் கிழிப்பது? ஆனந்தி! இன்னொரு நிமிஷம் நீ இங்கே இருந்தால் உன் தலை விதியும் அவ்வளவுதான்! புறப்படு மரியாதையாய் என்னோடு!"

அம்மா பேசவேயில்லை. தன் இளைய மகளை ஏறிட்டுப் பார்த்தாள். அந்தப் பார்வையொன்றாலே இழுக்கப்பட்டவள்போல் ஆனந்தி அடி அடியாய் நகர்ந்து மேகலையிடமிருந்து விலகி, தாயிடம் சென்று ஒண்டிக் கொண்டாள்.

"யாரம்மா இப்படி நடுராத்திரியில் சத்தம் போடுவது? நாங்கள் தூங்குவதா, வேண்டாமா?" என்ற வண்ணம் யாரோ கதவைத் திறந்தார்கள். அவரைத் தள்ளிக்கொண்டு மேகலை வெறியேறினாள்.

காரின் கதவு படீரென்று சாத்திக் கொண்டது.

நிசப்தமான ஆஸ்பத்திரியில் ஒரே ஒரு நோயாளியின் ஒற்றை இருமலைப் போல எங்கிருந்தோ ஒரு மணியோசை ஒருமுறை கேட்டது. பன்னிரண்டரையா, ஒன்றா, ஒன்றரையா?

முன் வராந்தா விளக்குகள் அணைந்திருந்தன. அடங்காத படபடப்புடன் விடு விடுவென்று மேகலை படியேறிய போது —

பளிச்சென்று ஒரு விளக்கு ஏற்றிக் கொண்டது.

தாண்டவம் நின்றிருந்தான் அங்கே, பாதையை மறித்தாற்போல. "நாடகம் ஒன்பதரைக்கே முடிந்து விட்டதே, மேகலை!"

"வழியை விடு!" என்று உறுமினாள் மேகலை.

அவள் முகத்துக்கு நேராக நெருங்கி வந்து நின்றான் தாண்டவம். "கேட்டதற்குப் பதில் சொல்லு. வழி தன்னாலே கிடைக்கும். யாரைப் பார்க்கப் போயிருந்தாய் இத்தனை நேரம் வரை?"

"சீ! அதைக் கேட்க உனக்கு உரிமையும் இல்லை. அதற்குப் பதில் சொல்ல எனக்கு விருப்பமுமில்லை. நகர்!"

"உனக்கு விருப்பமில்லாவிட்டாலும் எனக்கு உரிமை இருக்கிறதம்மா! சந்தேகமானால் உன் அப்பாவையே கேட்டுத் தெரிந்துகொள் சாவகாசமாய். வயதுப் பெண் இப்படிக் கண்ட நேரத்தில் வெளியே சுற்றுவதைக் கண்டிக்க இங்கே ஆளில்லாமல் போகவில்லை!"

"கல்லூரியில் படிக்கிறவள் நான். என்னைப் பாது காத்துக்கொள்ள எனக்குத் தெரியும். விலகப் போகிறாயா இல்லையா?"

தன்னைத் தாண்டிக்கொண்டு இரண்டடி எடுத்து வைத்த மேகலையைச் சடக்கென வலக்கரம் பற்றி வளைத்தான் தாண்டவம். அவன் பற்கள் விகாரமாய் வெளிப்பட, விழிகள் அக்கினிச் சட்டியாகின. "கல்லூரியில் படிப்பதாலேயே ஆண்பிள்ளையாகிவிட மாட்டாய், மேகலை! இன்னும் நீ பெண்தான்! மறவாதே!" என்று நகைத்தான்.

அந்நியனொருவன் தன் மெய்யைத் தீண்டியதுமே, உடம்பிலிருந்து ரத்தமெல்லாம் உச்சந்தலைக்கு ஏறினாற் போலாயிற்று மேகலைக்கு.

"ஆமாம். நான் ஆண்பிள்ளையென்று காட்ட என்னுடைய கல்லூரிப் படிப்பு போதாதுதான். ஆனால் இது போதுமா பார்!"

பளாரென்று தாண்டவத்தின் கன்னத்தில் பாய்ந்தது மேகலையின் இடது புறங் கை.

அடுத்த வினாடி அவள் ஹாலில் நுழைந்து விட்டாள்.

கன்னத்தைத் தடவிக்கொண்டு நின்ற தாண்டவம் "மேகலை! இந்தச் சம்பவம் இத்தோடு போகாது! உஷார்!" என்று உறுமினான்.



"அதே வார்த்தைதான் உனக்கும்! எச்சரிக்கையா யிரு!"

மேகலையின் அறைக் கதவு தாளிட்டுக் கொண்டது உட்புறத்தில்.

**வெ**ள்ளிக் கிழமையின் பரபரப்பை நாலு மாட வீதிகளும் காட்டின. பூக்காரச் சிறுமிகள், கார்களைப் பின் தொடர்ந்து ஓடினார்கள். பனியன்கூடப் போடாத திறந்த மார்பில் தங்கச் செயின்கள் மின்னப் பெரிய மனிதர்கள் இடுப்பில் கட்டிய சரிகை அங்கவஸ்திரத்துடன் சென்றார்கள். குங்குமம் துலங்கும் முகத்துடன் பட்டுப் புடவைகள் சரசரக்க, அடக்கவொடுக்கமாகப் பெண்கள் நடந்தார்கள். பல்லாங்குழிச் சோழிபோலத் திருவோட்டுச் சில்லறையைக் குலுக்கிக் கொண்டு பரதேசிகள் கெஞ்சினார்கள். வாலிபமும் வயோதிகமும், பக்தியும் படாடோபமும், காரும் கால்நடையும், வைரமும் வறுமையும் அருகருகே நடைபோட்டன.

நிலைக்கண்ணாடி எதிரே நின்றுகொண்டு, நெக்லஸின் வைரங்களை நெருடிக் கொண்டிருந்தாள் மேகலை.

மூக்கைத் துளைப்பதுபோல் சென்டின் நெடி அடித்தது. வியப்புடன் திரும்பிப் பார்த்தவள் திடுக்கிட்டாள்.

சிறு சிவப்புப் புட்டியை மூடி ஷெல்பில் வைத்து விட்டு, ஷெர்வானியில் படிந்திருந்த துளிகளைக் கைக்குட்டையால் படரத் தடவிக் கொண்டிருந்தார் சக்கரவர்த்தி. போன வருடம் கண்காட்சியில் தான் சென்ட் புட்டி வாங்கியதை நாளெல்லாம் பரிகசித்த அதே அப்பா தானா இவர்?

"எங்காவது வெளியில் போகிறீர்களா அப்பா?" என்று மேகலை கேட்டாள்.

21069
3742581

''ஆமாம்,'' என்றார் சக்கரவர்த்தி கைக் கடிகாரத்தை எடுத்துக் கட்டியபடி

"ஏதாவது படத்துக்கா?"

"அ– ஆமாம்."

"ஒரு நிமிஷம் இருங்கள் அப்பா. நானும் டிரஸ் பண்ணிக்கொண்டு வருகிறேன்," என்று துள்ளி எழுந்தாள் மேகலை. அம்மாடி! வீட்டிலிருந்து கொஞ்ச நேரமாவது விடுபடலாம்.

குளியலறையில் நுழையப்போனவளை அப்பாவின் குரல் தடுத்தது. "ம்... மேகலை... வந்து... நான் ஏதோ தமிழ்ப் படத்துக்குப் போகலாமென்றிருக்கிறேன். உனக்குப் பிடிக்காதே. நீ ஏதாவது இங்கிலீஷ் படத்துக்குப் போயேன்..."

"பரவாயில்லை அப்பா. ஏதாவது ஒன்று. இதோ வருகிறேன்."

"உனக்காகக் காத்திருக்க முடியாது என்னால். குளிக்கப்போனால் ஒருமணி நேரமாகும் உனக்கு. நான் போகிறேன்."

"அப்பா!"

சோளியைப் பாதி கழற்றியவள் அப்படியே திகைத்துப் பிரமித்து நின்றாள். வெளியே கார் புறப்படும் ஓசை கேட்டது. அவளைத் தன்னுடன் அழைத்துச் செல்ல அப்பா இஷ்டப்படவில்லை! ஏன்? ஏன்? அவர் போலியாகச் சொன்ன சாக்குப் போக்குகள் அவள் கோபத்தை அதிகரித்தன.

கழற்றவிருந்த சோளியைத் திரும்பப் பொத்தானிட்டுக் கொண்டாள். இதயம் காலில் இறங்கினாற் போன்று கனத்தது. விடுவிடுவென்று நடந்து அறைக்குத் திரும்பினாள் மேகலை. குமுறிக்கொண்டு வந்தது ஆத்திரம். அம்மா சொன்னதில் கொஞ்சம் உண்மையும் இருக்குமோ? எதனால் அப்பா இப்படி மாறி வருகிறார்?



பழுப்பதற்கு அவசரப்பட்ட பிஞ்சுபோல, மாலை பரபரவென்று இரவாக வெம்பியது. வேலைக்காரி சக்கு இரண்டு மூன்று தடவை வந்து எட்டிப் பார்த்தாள். சின்ன எஜமானியின் நிலைகுலைந்த தோற்றத்தைக் கண்டதும் வாயை மூடிக்கொண்டு அகன்று விட்டாள்.

மெல்லத் திறந்து கொண்டது கதவு.

தலையை உயர்த்தாமலே நோக்கினாள் மேகலை. சிவந்த பாதத்தின் கருநிறச் செருப்பு — காப்பி நிறப் பாண்ட்—

"மாலி!" என்று கூவிக்கொண்டே இருக்கையை விட்டு எழுந்தாள். தன் கம்மிய குரலைக் கேட்டபோது அவளுக்கே வியப்பேற்பட்டது.

மாலி உள்ளே வரவில்லை. கதவருகே நின்றபடியே மேகலையின் தோற்றத்தை ஆராய்ந்தான்.

"அழுது கொண்டிருந்தாயா மேகலை?"

மீண்டும் தன் குரலைக் காட்ட அஞ்சியவளாய் மேகலை தலையை மட்டும் அசைத்துவிட்டு நாற்காலியைக் காட்டினாள்.

"பொய்!" நாற்காலியை அவளருகே இழுத்து நகர்த்திக் கொண்டு அமர்ந்தான் மாலி. "இங்கே மட்டும் ஒரு தபாலாபீஸ் இருந்தால், உன் இமைக்குக் கீழே இருக்கிற ஈரத்தைக் கொண்டு ஆயிரம் ஸ்டாம்பு, இரண்டாயிரம் கவர் ஒட்டலாம்! இந்தா துடைத்துக்கொள்."

இதழ்களில் மெல்லிய முறுவல் அரும்பக் கைக் குட்டையை வாங்கி, கண்ணை மட்டுமின்றி முகத்தையும் துடைத்து விட்டுக் கொண்டாள். அதிசயமான ஊசி மருந்தொன்று நரம்போடு கலந்தாற்போல் ஆயிரம் யானைப் பலம் வந்தது.

"அப்பா எதற்காவது திட்டினாரா மேகலை?"

''ஒன்றுமில்லை. என்னவோ மனத்துக்குள் சங்கடமாயிருந்தது. அதுவும் உங்களைக் கண்டதில் பாதி

சரியாகிவிட்டது." அன்று மேக்கப் அறையில் அவன் சொன்ன அதே சொற்களைத் திருப்பியதில் அலாதி திருப்தி ஏற்பட்டது. மெதுவாகத் தன் ஆடையணிகளைக் கண்ணோட்டம் விட்டுக் கொண்டாள், மனத்தில் மகிழ்ச்சி நிறைந்தது.

"இதோ பார் மேகலை," என்று அவள் மோவாயை நிமிர்த்தினான் மாலி, மேகலையின் உடம்பு ஒருமுறை விர்ரென்று சிலிர்த்தது. "படிக்காத பட்டிகாட்டுப் பெண்ணைப் போல நீயும் அழுது குமைந்தால் என்ன அர்த்தம்? சந்திரமதியாக இராதே. கண்ணகியாக இரு."

தெளிந்த சிந்தனையுடன் அவனை நிமிர்ந்து நோக்கினாள் மேகலை.

"உன் குடும்பத்தில் நடந்த ரகளையெல்லாம் எனக்குத் தெரியும், மேகலை!" என்றான் மாலி.

மேகலை திடுக்கிட்டாள். "ஆனந்தியைப் பார்த் தீர்களா?"

"இல்லை. ஆனால் வேறிடங்களில் விசாரித்துத் தெரிந்து கொண்டேன். கேள். என்ன நேர்ந்தாலும் சரி. நான் ஒருவன் உன்னைக் கண்காணித்துக் கொண்டு, உனக்குப் பாதுகாப்பாக இருப்பேன்."

அவன் பேச்சு, புதிராக இருந்தது மேகலைக்கு. "உங்கள் உதவிக்கு நன்றி. ஆனால் எனக்கு எதுவும் வரவில்லை. வரவும் வராது," என்றாள் சிரித்துக்கொண்டே.

"எனக்குத் தெரியும் மேகலை. நானும் ஒரு பக்கம் உன் அப்பாவைக் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறேன்!"

மேகலைக்குத் தூக்கி வாரிப் போட்டது. மீண்டும் அப்பாவைப் பற்றி எச்சரிக்கை!

மாலி எழுந்து கொண்டான். "என்னை அவசரமாகப் பார்க்கிறாற்போல் நேர்ந்தால், மந்தைவெளி



மாவு மில்லில் விசாரி. என் வீட்டைக் காட்டுவார்கள். வரட்டுமா?"

"இருங்கள். டிபன் சாப்பிட்டுவிட்டுப் போகலாம்" என்றாள் மேகலை. மாலியின் அண்மை அளித்த தெம்பை அதற்குள்ளாக இழக்க மனம் சம்மதிக்கவில்லை.

"டிபன் உன் கை வழியாக வருவதானால் இருக்கிறேன்," என்றான் மாலி.

ரத்தப் பொட்டுப்போல இருட்டின் அந்தரத்தில் சிவந்து மினுமினுத்தது ஊதுவத்தியின் நெருப்பு முனை.

தலையின் கீழே கையும் மார்பின் மேலே தலையணையுமாக, மேகலை கட்டிலில் மல்லாந்து படுத்திருந்தாள். காரிருளில் கைநழுவிய பொருள் போலத் தூக்கமும் எங்கோ விழுந்து விட்டது.

மாலியின் வருகை, தேறுதலாக அவன் சொன்ன பேச்சு, அதிலே முளைத்த தைரியம் — இவை நினைவுக்கு வந்தன. அன்றைக்கு ஆத்திரத்தில் ஆனந்தியை அழைத்தோமே? அவள் வந்திருந்தால்? அப்புறம் மாலியை மறக்க வேண்டியதுதான்...

சீ! சீ! என்ன எண்ணம்! மேகலை தன்னுள் நாணினாள் தங்கைக்கு நினைத்த துரோகத்தை நினைத்து. என்னை மன்னித்துவிடு ஆனந்தி! உன் காதலனை நான் பறித்துக் கொள்ள மாட்டேன். மாலியிடம் நான் கொண்டிருப்பது மதிப்பு, மரியாதைதான். காதலல்ல —

'நிச்சயம் தானா மேகலை?' என்று இதயத்துக் குள்ளிருந்து ஒரு வினா புறப்பட்டது.

மேகலை புரண்டாள். உடம்பெங்கும் கசகச வென்று வியர்த்துப் படபடத்தது.

எழுந்து விளக்கைப் போட்டு, ஒரு டம்ளர் தண்ணீர் குடித்தாள். உடலில் நடுக்கம் நின்றதாகத் தெரியவில்லை.

ஏதாவது நாவல் படிப்போம் என்று எழுந்து கொண்டாள். மாடியில் அப்பாவின் புத்தக அறை இருந்தது. வழியிலிருந்த விளக்குகளையெல்லாம் ஏற்றிக்கொண்டே மெதுவாய்ப் படியேறினாள்.

கடைசிப் படியேறியபோது மேகலைக்குத் திக்கென்றது.

உற்றுக் கேட்டாள், மார்பை கையால் பிடித்துக் கொண்டு.

பேச்சுக் குரல்! சிறிய கிசுகிசுப்பொலி!

குரல் நின்றுவிட்டாற் போலிருந்தது. மறுபடி கேட்டாற் போலிருந்தது.

துணிச்சலை வரவழைத்துக்கொண்டு மெல்ல நடந்தாள். "அப்பா! அப்பா!" என்று உரக்கக் கூப்பிட்டபடி கதவைத் தட்டினாள்.

வெகுநேரம் வரை உலகமே நிசப்தமாகி விட்டது.

சக்கரவர்த்தி கதவைத் திறந்தார் கடைசியில். முழுக்க அல்ல. ஒரு சிறிது மட்டுமே.

"யாரோடு பேசிக் கொண்டிருந்தீர்கள்" என்று வினவினாள் மேகலை.

"பேசிக்கொண்டிருந்தேனா? நானா?" என்று திகைத்தார் சக்கரவர்த்தி.

மேகலையின் ஐயம் தெளியவில்லை. "புத்தகம் எடுத்துப் போக வந்தேன், ஏதோ குரல் கேட்டமாதிரி இருந்தது," என்றாள்.

"வெறும் பிரமை! பேசாமல் போய்ப் படுத்துக் கொள். இத்தனை நேரத்துக்கு மேல் படிப்பென்ன? உடம்பு கெடும். போ, போ!"

சக்கரவர்த்தி அவசரமாகக் கதவைச் சாத்தினார்.



## 5

'யாரிடமாவது சொல்லு, யாரிடமாவது! யாரிடமாவது!' என்று மேகலையின் உள்ளம் கூவிற்று.

திகிலினால் அல்ல, ஆனந்தத்தால்.

உற்சாகத் துள்ளலுடன் விசுக்கென்று கட்டிலில் எழுந்து உட்கார்ந்து கொண்டாள். காலைச் சூரியனின் கதகதப்பான கிரணங்கள் சாளரத்தின் வழியே கீற்றுக் கீற்றாகப் புகுந்து அவள் உடலை வருடின. தொலைவி லிருந்து வரும் மெல்லிசை போல உருவமற்று வந்தது இளம் காற்று.

போர்வையை விலக்கிக்கொண்டு எழுந்தவள் தெருவையும் தெப்பக் குளத்தையும் பார்த்தாள். இதுவரை இல்லாத புதுமையும் அதிசயமும் இப்போது தெரிவது போலிருந்தது. இரவுக் காற்றில் பாசி ஓரமாக விலக, நீரும் வெய்யிலும் கலந்து, வெள்ளிச் சரிகைகளை இழை இழையாக அங்கே புரட்டுவது போன்ற காட்சி தென்பட்டது.

மேகலை தலைக்குமேல் கையை உயர்த்தி விரல் களை நெட்டி முறித்துக் கொண்டாள். ஒரு கையை ஊன்றி, கட்டிலை நாசூக்காகத் தாண்டி அறைக்கு வெளியே வந்தாள்.

இரவு அவள் கண்ட இனிமையான கனவுகளின் விளைவு அந்த உற்சாகம்.

அப்பாவால் அவசரமாக விரட்டுப்பட்டுப் படுக் கையில் வந்து விழுந்தபோது, நிச்சயம் தூக்கமே வரப் போவதில்லை என்று எண்ணியிருந்தாள் அவள். மாறாக, ஆழ்ந்த துயில் அவளை ஆட்கொண்டது.

அந்தத் துயிலின் நடுவே, அவளை ஆட்கொண்ட ஆண்மகன் தோன்றினான். பூப்போன்ற அந்தப் பெண் மனத்தைப் பைத்தியமாக அடித்து விளையாடினான்.

மணமிகுந்த மலர்களை அவன் கூந்தலில் சூட்டி, 'மலருக்கு இப்போது மணம் அதிகரித்திருக்கிறது' என்றான். பொழுது விடிந்து, பிரத்தியட்ச உலகத்துக்கு வந்தபோது மேகலையின் உடல் காலோடு தலை குறு குறுத்ததில் வியப்பென்ன?

குளியலறையில் வாஷ் பேசின் வசதி இருந்தும் பின்புறத் தோட்டத்து முகப்பில் அமர்ந்து பல் விளக்குவது தான் மேகலைக்கு எப்போதும் பிடிக்கும். பசை தடவிய பிரஷைப் பல்லிடுக்கில் கடித்துக்கொண்டு அவள் புறப் பட்டபோது, வீட்டுக்குள் முழு வெளிச்சம் பரவவில்லை. மாடியில் அப்பாவின் அறை விளக்கு எரிவது கண்ணில் பட்டது. அவர் அங்குமிங்கும் நடமாடிக் கொண் டிருப்பதைச் சுவர் நிழல்கள் காட்டின.

மேகலை நின்றாள்.

முந்திய இரவு அப்பாவின் மர்மமான நடவடிக்கை களைப் பற்றித் தான் பயந்ததெல்லாம், இப்போது மீண்டும் அவள் மனத்தைப் பற்றிக் கொண்டன.

சக்கரவர்த்தி எங்கோ புறப்படத் தயாராகிக் கொண்டிருந்தார். இவ்வளவு காலை நேரத்தில் எங்கே போகிறார்? அவரை நெருங்கிக் கேட்கவும் அச்சமா யிருந்தது.

பல் விளக்கி, முகம் கழுவி, சிற்றுண்டி அருந்தி விட்டுத் திரும்பியபோது தாண்டவம் உட்கார்ந்திருந்தான் சோபாவில், காலைத் தினசரியைப் புரட்டியவாறு.

"ஹலோ மேகலை! குட்மார்னிங்!" என்று சிகரெட்டைக் கடித்துக்கொண்டே, அவன் பேசியதை மேகலை லட்சியம் செய்யவில்லை. அப்பா பக்கம் திரும்பினாள். ஆனால் சக்கரவர்த்தி மகளை விசாரிப்பதைக் காட்டிலும் தன் தலைக்கு வாசனைத் தைலமிடுவதில் அதிக கவனமாயிருந்தார்.

"மகாபலிபுரம் போகிறோம். பகலுக்கு மேல்தான் திரும்புகிறாற்போலிருக்கும்," என்றான் தாண்டவம்.



அப்போதும் சக்கரவர்த்தி மேகலையை ஏறிட்டு நோக்கவில்லை. "போகலாமா?" என்றார் தாண்டவத்திடம். புறப்பட்டு விட்டார்.

தொழிலுக்காகத் தவிரப் பொழுதுபோக்குக்காக எந்த ஊருக்கும் போகாதவர்; அப்படியே எங்காவது போனாலும் மேகலையைக் கூப்பிடத் தவறாதவர். ஏன் இப்போது இப்படி மாறிவிட்டார்?

வீடு வெறிச்சென்று ஆகிவிட்ட நிலையில் அவள் சிந்தனைகள் மாலியைப் பற்றித் திரும்பின. இன்று கல்லூரியும் இல்லை; வீட்டிலும் யாருமில்லை.

மாலி வருவானா?

வருவான் என்றுதான் உள்மனம் உறுதி கூறிற்று.

பறக்கப் பறக்க உடைகளை மாற்றிக் கொண்டாள். கண்ணாடிமுன் நின்றபடி தன் உருவத்தைக் கவனித்த போது, கர்வம் ஏறியது. தலையை வாரி முடித்துக் கொண்டாள். உதட்டில் புன்னகையோடு மெலிய பாட்டு புறப்பட்டதும் எதிரிலிருந்த வீணை கண்ணில் பட்டது. உறையைக் கழற்றி எத்தனை நாட்களாகிவிட்டது!

மெல்ல எடுத்துக் கீழே வைத்து, தூசியைத் தட்டியபின் உறையைப் பிரித்தாள். பிரகடைக் கட்டைகள் தொள தொளத்து, சுருதி அடியோடு இறங்கிப் போயிருந்தது. இழுத்து முடுக்கி டங்கென்று மீட்டி நாதத்தை எழுப்பியபோது அவள் நெஞ்சம் கிர்ரென்று மேலே ஏறிற்று. இசையின் எட்டாத பிராந்தியங்களையெல்லாம் அவள் விரல்கள் பிடிக்க முனைந்தபோது, அவள் உள்ளம் காதலுணர்ச்சியின் தெரியாத அனுபவங்களையெல்லாம் துழாவத் தொடங்கிற்று.

நேற்று மாலியுடன் நேர்ந்த சந்திப்பை முழுமை யாக மனக் கண்ணெதிரே கொண்டுவர முயன்றாள். புகையில் தீட்டிய சித்திரம் போல, அந்தக் காட்சி வளைந்து நழுவிற்று. இருந்தும் அந்த முயற்சியில் அளப்பரிய

ஆனந்தம் கண்டாள் மேகலை. கல்லூரியில் ஆயிரம் காவியங்களில் அறிய முடியாத கிளர்ச்சியை, பதினாயிரம் பேராசிரியர்களிடம் கற்க முடியாத நுகர்ச்சியை, அவளுடைய சொந்த அனுபவம் அவளுக்குத் தெரிவித்தது. கோபம் வந்து உடம்பு கொதிப்பதை அவள் அறிந்திருக்கிறாள். வருத்தம் வந்து உடம்பு தளர்ந்ததை அவள் கண்டிருக்கிறாள். சலிப்பு வந்து உடம்பு மரத்ததை அவள் உணர்ந்திருக்கிறாள்.

ஆனால் இது — இந்த ஆனந்த பரவசம்? சொல்லித் தெரிவதில்லை என்று சொல்வது இதைத் தானோ?

'மாலி, மாலி!' என்று திரும்பத் திரும்ப மனத்துக்குள் உச்சரித்தபடி வீணையின் ஒலியோடு ஒன்றலானாள்.

"பிரமாதம்! பிரமாதம்!" என்ற பாராட்டும் 'பட்பட்'டென்ற கைதட்டலும் கேட்டன வாசலருகே.

"மாலி!" என்று தேக்கி வைத்திருந்த ஆர்வ மனைத்தும் குரலில் பீரிடக் கூவினாள் மேகலை.

"கமகம் கொட்டுகிறதே உன் வாசிப்பில்!" என்று கூறியபடி பக்கத்தில் வந்தமர்ந்தான் அவன்.

ஆசை ஆசையாய் அவனைக் கண்ணால் விழுங்கிய மேகலை, "ஓ, வீணை அகராதியில் இரண்டு மூன்று வார்த்தைகள் கூடத் தெரிந்து வைத்துக் கொண் டிருக்கிறீர்களே?" என்று சிரித்தாள்.

"சரிதான்! எனக்கு வாசிக்கவே தெரியுமாக்கும்! இப்படிக் கொடு அதை," என்று மாலி அவள் மடியிலிருந்து தன் மடிக்கு மாற்றிக் கொண்டான் வீணையை.

டிங் டிங்கென்று அவன் நாலு மீட்டு மீட்டியது தான் தாமதம் —

"போச்சு! போச்சு! கொலை!" என்று காதைப் பொத்திக் கொண்டாள் மேகலை. ஆனால், இதைவிட



ஹாஸ்யமான சம்பவத்தைத் தான் எப்போதுமே அனுபவித்ததில்லை போலப் பூரிப்பு ஏற்பட்டது. கல கலவென்று சிரித்துக்கொண்டே, "கையும் காலும் இருந்தால் இந்த வீணை தானாகவே ஓடி ஒளிந்து கொண்டிருக்கும்!" என்று கூறிவிட்டு, வாத்தியத்தைப் பறித்து அப்புறம் வைத்தாள்.

"அவ்வளவு மோசமாகவா இருக்கிறது என் கச்சேரி!" என்று மாலி நகைத்தான். "நான் இருக்கிற வீட்டின் முன் பக்கத்தில் ஒரு வாத்திய ரிப்பேர்க்காரன் இருக்கிறான். அவனைப் பார்த்துப் பார்த்து, எந்த வாத்தி யத்தையும் இரண்டு தட்டுத் தட்டக் கற்றுக் கொண்டேன். மற்றப்படி எனக்கும் கர்னாடக சங்கீதத்துக்கும் நாலைந்து மைல்!"

அவனுடைய ஒவ்வொரு சொல்லிலும் ஒரு விசேடக் கவர்ச்சியைக் கண்டாள் மேகலை. உரிமையுடன், "இட்டிலி இரண்டு கொண்டுவரச் சொல்லவா? மல்லிகைப் பூ மாதிரி இருக்கும் எங்கள் வீட்டில்!" என்று உபசரித்தாள்.

"சரிதான்! நான் டிபனுக்காகவே அடிக்கடி இங்கே வருவதாகச் சமையல்காரர் நினைத்து விடுவார்!"

கண்களில் ஆர்வம் மின்ன மேகலை கேட்டாள்: "வேறு எதற்காக வருகிறீர்கள் என்றுதான் சொல்லுங்களேன்?"

"ஏன், உனக்காக வரக்கூடாதா?"

மேகலையின் பரவசம் உச்சத்தை எட்டி விட்டது. திடுப்பென்று மின்னல் பாய்ந்தாற்போன்ற ஒளியுடன் பிரகாசித்த விழிகளை அவன்பால் திருப்பியபோது, ஆயுள் முழுதும் பேசக் கூடியதெல்லாம் பேசிவிட்டாற் போன்ற நிறைவு எழுந்தது. போதும். இதற்குமேல் என்ன வேண்டும்? 'நான் உன்னைக் காதலிக்கிறேன்' என்று சொல்வதும், 'நீ என்னைக் காதலிக்கிறாயா?' என்று கேட்பதும் கதையிலும் கற்பனையிலும்தான் போலும்.

இன்பமயமான அந்த ஒரு நிமிட மௌனத்தை மாலி கலைத்தான். "இன்று சாயந்திரம் உனக்கு ஏதாவது வேலை இருக்கிறதா?"

"இல்லை. எங்கே போகலாம்?"

"சாந்தோமிலிருந்து மெரீனா வரை நடந்து போகலாமே?" என்றான் மாலி. "நாலு மணிக்குத் தயாரா யிருக்கிறாயா? வந்து கூப்பிடலாமா? உன் அப்பா..."

"அவர் மகாபலிபுரம் போயிருக்கிறார். இங்கேயே இருந்தாலும், நான், நாலு பேருடன் பழகுவது பற்றி எதுவும் சொல்ல மாட்டார்."

"ரைட்டோ! ரெடியாயிரு!" என்று கூறிவிட்டு மாலி அவனுக்கே உரிய ஓட்ட நடையில் வெளியேறினான்.

உட்கார்ந்தாள், எழுந்தாள், நடந்தாள். மீண்டும் உட்கார்ந்தாள். புத்தகங்களைப் புரட்டினாள். கடியாரத்தை நோக்கினாள். ஆறாம் தடவையாகக் கேசத்தைச் சரிப்படுத்திக்கொண்டு சோளியை இழுத்து விட்டுக் கொண்டாள். வாசலைப் பார்த்தாள். நிழலாடும் போதெல்லாம் நிமிர்ந்து நோக்கினாள். சப்தம் கேட்கும் போதெல்லாம் செவியைக் கூர்மைப் படுத்தினாள்.

நேரம் நத்தை போல் நகர்ந்தது.

விடுமுறை நாட்களில், பகல் சாப்பாட்டுக்குப் பின் சிறிது நேரம் துயிலுவது அவளுக்கு வழக்கம். இன்று அது கூட இல்லை. ஒரு மணிக்கு ஆரம்பமான அலங்காரம் மூன்று மணிக்கு முடிந்தது. ஆனால் நாலுக்குத்தானே மாலி வருவதாகச் சொன்னான்?

பத்திரிகைகளில் கேலியுடன் விட்டெறிந்த காதல் சித்திரங்களையும், புத்தகங்களில் சலிப்புடன் தூக்கியெறிந்த காதலர் வர்ணனைகளையும் தேடியெடுத்துத் திருட்டுத் தனமாகப் பார்த்து மகிழ்ந்தது அவள் உள்ளம். ஆனால் எதுவும் அவளுடைய சொந்த மகிழ்ச்சிக்கு ஈடானதென்று தோன்றவில்லை.



அப்பாடா! மலைச் சிகரம் ஏறும் வீரனைப்போல் முக்கி முனகி முன்னேறிய நிமிடமுள் பன்னிரண்டாவது எண்ணை எட்டிப் பிடித்து, மணி நாலு ஆகிறது என்பதை அறிவித்தது.

"தயாரா மேகலை?" என்று வினவியபடி உற்சாகமாக உள்ளே நுழைந்தான் மாலி. சலவை மடிப்பு சற்றுக் கசங்கியிருந்தாலும் ஷர்ட்டும் பாண்ட்டும் அவனது ஆண்மையின் கம்பீரத்தைத் தூக்கிக் காட்டுவதாக அமைந் திருந்தன. வந்தவன் மேகலையைக் கண்டதுமே அயர்ந்து போய் நின்று விட்டான்.

"ஓ. ஓ. ஓ! மேக்கப் அமர்க்களமாயிருக்கிறதே!" என்று அவன் சொன்னது தேனாய்ப் பாய்ந்தது அவள் செவியில். இதேபோல் எத்தனை தடவை அம்மா சொல்லி யிருப்பாள். ஆனந்தி சொல்லியிருப்பாள். தோழிகள் சொல்லியிருப்பார்கள்! வெறும் அகங்காரமும் கர்வமும் உண்டாகுமேயொழிய இப்படிப் பெருமிதம் ஏற்பட்டது கிடையாது!

சில்க் எம்போரியத்தின் வாசலிலிருந்தும் வக்கீல் வீட்டின் முன்னாலிருந்தும் பாங்க் மாடியிலிருந்தும் எண்ணற்ற நயனங்கள் இந்த இளம் ஜோடியை மொய்த்தன. அந்தப் பார்வைகளைக் கவனித்தும் கவனியாதவள்போல நடப்பதில் மேகலை அலாதிப் பெருமையடைந்தாள்.

பழுக்கக் காய்ச்சிய இரும்பு ஆறியது போல, வெய்யில் இறங்கியிருந்தாலும் அதன் வெப்பம் கும்மென்று வந்து கொண்டிருந்தது. லஸ்முனை இளைப்பாறிக் கொண் டிருந்தது. பத்திரிகைக் கடையில், அன்று வெளியாகியிருந்த ஒரு சஞ்சிகையின் பிரதிகளைக் கொண்டே கட்டியிருந்த தோரணம் சூலவர்ணங்களைக் காட்டிச் சிரித்தது.

"எங்கே நீ காரை எடுத்துக்கொண்டு வருவாயோ என்று பயந்திருந்தேன்," என்றான் மாலி.

"மகாபலிபுரம் போயிராவிட்டால் எடுத்து வந்திருப்பேன். ஏன், அதிலே பயம் என்ன? நான் ஓட்டுவே னென்றா?"

"அதுகூடப் பரவாயில்லை. காரில் நான் போவதைப் பார்த்ததும், நேற்றுவரை என்னை மதிக்காத பயல்களெல்லாம் ஈயென்று இளித்து, சலாம் போடுவார் கள். அதை மட்டும் என்னால் பொறுக்க முடியாது."

பாண்ட் பையில் ஒரு கையை நுழைத்துக் கொண்டபடி தலையை நிமிர்த்தி நடக்கும் தன் காதலனைக் கவனித்தாள் மேகலை. எளிய குடும்பத்தைச் சேர்ந்தவ னாகத் தோன்றினாலும், பரம்பரைச் செல்வந்தனின் மிடுக்குடன் காணப்படும் அவனுடைய தன்மையை அவளால் புரிந்து கொள்ள முடியவில்லை.

எத்தனை முறை இந்தச் சாலை வழியே அவள் வந்திருக்கிறாள்! இருந்தும் இப்போது எவ்வளவு புதிதாகக் காட்சியளிக்கிறது! மாவுமில்களின் இரைச்சலும் கடைத் தெருவின் சந்தடியும் அவளுடைய உற்சாகத்தைப் பிரதி பலிப்பது போலவே இருந்தன.

சாந்தோம் மாதா கோவிலின் கூரிய உச்சி நீல வானத்தின் பின்னணியில் செதுக்கிவிட்ட தனிச் சிற்பம் போல் பளிச்சென்று நின்றது. கல்யாணமோ கல்யாண வரவேற்போ தெரியவில்லை — மகிழ்ச்சியே வடிவான இளம் தம்பதிகள், வர்ண ரிப்பன்கள் சுற்றிய காரில் ஏறிக் கொண்டிருந்தார்கள். உறவினரும் நண்பர்களும் கூட்டம் கூட்டமாக நின்று உரையாடினார்கள்.

மாலி பார்த்த பார்வையில் விஷமம் விளையாடிற்று. "இந்தச் சர்ச்சுக்குள் நீ போயிருக்கிறாயா மேகலை?" என்று கேட்டான்.

"ரொம்ப நாளாக ஆசை உண்டு. ஆனால் போன தில்லை. நீங்கள்?"



"மண்டியிட்டுப் பிரார்த்தனையே செய்திருக் கிறேன்," என்று அவன் தெரிவித்ததும் மேகலை வியப்புடன் தடக்கென்று நின்றே விட்டாள் நடை பாதையில்.

"இப்போதில்லை, சின்னப் பையனாயிருந்தபோது. மூன்றாம் பாரம் படித்துக் கொண்டிருந்தேன் என்று ஞாபகம். வேடிக்கை பார்க்கிற ஆசையில் உள்ளே நுழைந்தேன். எல்லோரும் மண்டியிட்டுப் பிரார்த்தனை செய்வதையும், தூரத்தில் ஜக ஜோதியாய் விளக்குகள் எரிவதையும் கண்டதும், ஒரே திகைப்பாகி விட்டது. என்ன செய்வதென்று தெரியாமல் நானும் ஐந்து நிமிஷம் கண்ணை மூடிக்கொண்டு உட்கார்ந்திருந்துவிட்டு ஓட்டமாய் ஓடிவிட்டேன்!"

"வேடிக்கைதான்!" என்று முத்துப் பற்கள் தெரியச் சிரித்தாள் மேகலை.

"அதுவல்ல வேடிக்கை. நான் மண்டியிட்டு அமர்ந்ததும் பக்கத்தில் நாலைந்து பேர் என்னையே முறைக்க ஆரம்பித்து விட்டார்கள்!"

"ஏன்?"

"நான் அப்போது வெகு அழகாகக் குடுமி வைத்துத் தலை பின்னிக் கொண்டிருந்தேனாக்கும்!"

"குடுமி!" குபீரென்று சிரித்துவிட்டாள் மேகலை. என்ன கற்பனை செய்தும் அவளால் மாலியையும் குடுமிப் பின்னலையும் சேர்த்துக் காண இயலவில்லை.

"நிஜமாகவா?" என்றாள் சிரிப்பை நிறுத்தாமலே.

"சத்தியமாக!" என்று செல்லமாய் அவள் தலையில் அடித்தான் மாலி. "ஐந்தாம் பாரத்துக்கு வந்த போதுதான் என்னை வளர்த்து வந்த பெரியம்மாவுக்குத் தெரியாமல் ஒருநாள் சலூனுக்குப் போய்க் கிராப் வைத்துக் கொண்டு விட்டேன். என் தலைமயிருக்கு ஏழு ரூபாய் பணம் கொடுத்தானாக்கும் சலூன்காரன். அவ்வளவு அடர்த்தியும் நீளமுமாயிருந்தது. பெரியம்மா என்னை

வீட்டுக்குள்ளே நுழையவே கூடாதென்று சொல்லி விட்டான். கெஞ்சிக் கூத்தாடி மன்னிப்பு வாங்கினேன்."

கட்டிடங்கள் முடிந்து, கடலின் தூய விளிம்பு தெரிந்தது.

"இப்போதும் அந்தப் பெரியம்மாவுடன்தான் இருக்கிறீர்களா?" என்று மேகலை விசாரித்தாள்.

"இல்லை. அவள் ஊரிலிருந்து படிப்புக்கும் சாப்பாட்டுக்கும் பணம் அனுப்புகிறாள். நல்ல வேளை, கூட இருந்து, நான் மீசை வைத்துக் கொண்டிருப்பதையும் கண்டாளோ கண்டதுண்டமாய் வெட்டியே போட்டு விடுவாள் என்னை!"

மெல்லிய அந்த அரும்பு மீசையைக் கண்டு புன்முறுவலுடன், "அப்படி உங்கள் பெரியம்மா செய்தால் நான் அவரைக் குற்றம் சொல்ல மாட்டேன். உங்கள் முகத்துக்கு இது அவ்வளவு எடுப்பாயிருப்பதாய்த் தெரிய வில்லை," என்றாள் மேகலை.

"என்ன செய்வது? பணக்காரனாயிருந்தால் நாயோ பூனையோ பாம்போ மீனோ ஆமையோ வளர்க்கலாம். ஏழை நான் வளர்க்கக்கூடியது இது ஒன்று தான்!" என்று மீசையைச் செல்லமாகத் தடவிக் கொடுத்தான் மாலி.

பாதையைக் கடந்து, மணற் பரப்புக்குப் போகாமல் சற்று முன்புறமாகவே அமர்ந்து கொண்டார்கள் இருவரும். இறங்கும் சூரியன், அலைக் காதலிக்கு வர்ண நவரத்தினங்களை வாரியிறைத்துக் கொடுத்தவண்ணம் விடை பெற்றுக் கொண்டிருந்தான்.

"இன்றைக்கு ஒரு நாளாவது என் கல்லூரிப் பக்கம் போகாமலிருக்கிறோமே என்று சந்தோஷப் பட்டேன். தப்பாகி விட்டது," என்றாள் மேகலை எதிரிலிருந்த கட்டிடத்தைப் பார்த்தபடி.



அதைத் தொடர்ந்து அவரவர்கள் படிக்கும் கல்லூரி, வகுப்பு, பாடம், பேராசிரியர்களின் 'பட்டங்கள்' ஆகியவை பேச்சில் இடம் பெற்றன. நிமிடத்துக்கு நிமிடம் தானும் அவனும் நெருங்கி நெருங்கிக் கலப்பதை உணர்ந்தாள் மேகலை.

அவன் கையால் வாங்கித் தந்த பட்டாணியை அமிர்தமாகச் சுவைத்தபோது —

திடீரென நிலைகுத்திய பார்வையுடன் திடுக் கிட்டாள் மேகலை. மறு வினாடி மாலியைக் கவனித்தாள். அவளுடைய திகைப்பைப் பாராதவன் போல் அவன் பேசிக் கொண்டேயிருந்தான்.

'தெய்வமே! என் நேர்மைக்குச் சோதனையா, காதலுக்குச் சோதனையா?' என்று அவள் உள்ளம் இறைஞ்சியது.

மார்பு துடிக்க, மீண்டும் நோக்கினாள்.

சந்தேகமில்லை. ஆனந்திதான். மெரினா சாலைக்கு நேர் எதிரே திருவல்லிக்கேணியிலிருந்து வரும் தெருவொன்றில், பஸ் ஸ்டாப்பில் நின்று கொண்டிருந்தாள் அவள். ஆனால் அவளுடன்கூட —

மேகலை முன்பின் பார்த்திராத ஒரு நடுத்தர வயதுப் பெண்மணி. ஆனந்தியை ஏதோ தப்பவிடாமல் பிடித்திருப்பவள்போல் நெருங்கி நின்று கொண்டிருந்தாள்.

தங்கையின் முகத்தைக் கூர்ந்து கவனித்தாள் மேகலை. அதில் அவசரமும் அச்சமும் கலந்து தெரிந்தன. அம்மாவை விட்டுவிட்டு யாரோ ஓர் அந்நிய மாதுடன் இப்படிப் புறப்பட வேண்டிய அவசியம் என்ன வந்தது அவளுக்கு?

கடைக் கண்ணால் மாலியை கவனித்தாள். இன்னும் அவன் அவர்களைக் கவனிக்கவில்லை. தன் பாட்டுக்குப் பேசிக் கொண்டிருந்தான்.

ஆனந்தி ஏதோ இக்கட்டில் சிக்கியிருக்கிறாள் என்று உள்ளுணர்வு எச்சரித்தது. உதவிக்கு விரையலாமா?

அத்துடன் இந்தக் காதலை மறக்க வேண்டியது தான்; தன்னைப் புதுப் பிறவியாக்கியிருக்கும் இந்த இன்ப அனுபவங்களுக்கு விடை கொடுத்தனுப்ப வேண்டியது தான். ஆனந்தியின் பிரிவினால் முளைத்திருக்கும் இந்தக் காதல், அவளைச் சந்தித்த கணத்திலே மரித்துவிடுவது நிச்சயம்.

மேகலையின் நெஞ்சை அடைத்துக்கொண்டு வந்தது துக்கம். 'ஐயோ! நான் எத்தனை சுயநலமியாகி விட்டேன்!' என்று தன்னைத்தானே வெறுத்தாள் அவள்.

ஸ்டாப்பில் ஒரு பஸ் வந்து நின்றது. ஆனந்தி உடனே ஏறவில்லை. தயங்குவதுபோல் தெரிகிறது. அந்தப் பெண்மணி அவள் முகத்தில் கைவைத்து, மெதுவாக, ஆனால் அழுத்தமாக அவளை ஏற்றுகிறாள். ஆனந்தியின் கால் இடறுகிறது. ஆகாயத்தை ஒரு முறை பார்த்துவிட்டு உள்ளே ஏறி மறைகிறாள்.

வெறி பிடித்தாற் போலத் திடீரென எழுந்து கொண்டாள் மேகலை.

சட்டென்று அவள் கைகளைப் பற்றி உட்கார்த்தி வைத்தான் மாலி. "அடேயப்பா! உனக்கு இவ்வளவு கோபம் வருமென்று தெரிந்திருந்தால் கேட்டேயிருக்க மாட்டேனே?"

திகைப்புடன் அவனைப் பார்த்தாள் மேகலை. "என்ன கேட்டீர்கள்?" "கல்யாணம் செய்து கொள்வது பற்றி உன் அபிப்பிராயம் என்னவென்று கேட்டேன்," என்றான் மாலி.

தங்கையைப் பற்றிய சங்கடத்திலிருந்து நினைவை திருப்புவது பெரும் பிரயத்தனமாகவே இருந்தது மேகலைக்கு. ஆயினும் அவனது கேள்வியால் ஏற்பட்ட புல்லரிப்பு அவளை முறுவலிக்கச் செய்தது. "அபிப்பிராயம்



எதுவும் இன்னும் ஏற்படுத்திக் கொள்ளவில்லை," என்றவள், வேண்டுமென்றே, "உங்கள் கருத்து?" என்று கேட்டாள்.

மாலி தயங்கவில்லை. அந்தக் கேள்விக்காகவே காத்திருந்தவன்போல, "உன்னைப் போல ஒரு பெண் கிடைப்பதாயிருந்தால் நான் இப்போதே தயார் திருமணத்துக்கு!" என்றான்.

அந்த வினாடியில் மேகலை தன் பிரசினைகள் யாவற்றையும் மறந்தாள். சோதனை மயமான வாழ்க்கை சொர்க்க பூமியாக மாறிற்று. எவ்வளவு பெரிய பூகம்பத்தை யும் இனி எதிர்நோக்க முடியும் என்ற உரம் பிறந்தது அவள் நெஞ்சில். முன்னைப்போதையும்விட இப்போதுதான் அதிக இளமையுடனிருப்பதாகத் தோன்றிற்று.

காலம் எல்லையற்று ஓடியது.

"எழுந்திரு போகலாம். மெரினா காண்டீனுக்கு உன்னை அழைத்துக்கொண்டு போகத்தான் கூப்பிட்டேன். அதற்குள் இங்கே உட்கார்ந்துவிட்டோம்," என்று மணலை உதறிக்கொண்டு எழுந்தான் மாலி.

உலகம் மேலும் மேலும் பேரின்பவெளியாகப் பரந்தது மேகலையின் கண்களில். மாலியின் கைகளைக் கோத்துக் கொண்டு குதி போட்டு நடக்க வேண்டும் என்ற ஆசையைக் கட்டுப்படுத்திக் கொண்டு நடந்தாள். அவன் பக்கத்தில், சதையும் எலும்பும் அற்று வெறும் பஞ்சா லானதைப்போல லேசாயிற்று தேகம். உஷ்ணமான ரத்தத் துக்குப் பதில் ஜிலுஜிலுக்கும் தென்றலே தன் நரம்பு களுக்குள் பாய்வதைப் போலிருந்தது.

புதிதாகத் திறந்துகொண்ட கதவு வழியே வேறு வேறு ஆனந்த மாளிகைகளுக்குள் நுழையத் துடித்தாள் அவள். தன் தந்தையின் மாறுதலைப் பற்றி, தன் தங்கையின் இக்கட்டைப்பற்றி, தனக்கு நேர்ந்த பீதிகளைப் பற்றி — எதையுமே இப்போது பேச வேண்டாம் என்று தீர்மானித்துக் கொண்டாள்.

திறந்த மாடியில், வெள்ளையுடுப்புப் பணியாள் பலகாரங்களைக் கொண்டு வந்து வைத்தான்.

ஏதோ யோசனையிலாழ்ந்த வண்ணம் வறுவலைக் கொறித்துக் கொண்டிருந்த மாலி, " 'ஓ'வென்று கத்தாம லிருப்பதானால் சொல்லுகிறேன். மெதுவாகத் திரும்பிப் பார். அந்தண்டைக் கோடியில். சொல்லிவிட்டேன். ரகளை பண்ணிவிடாதே!" என்றான் தாழ்ந்த குரலில்.

புரியாத கலக்கத்துடன் மேகலை அவன் விரல் சுட்டிய திசையைப் பார்த்தாள்.

ஹோஹோவென்ற உரத்த சிரிப்பின் நடுவே, பலகாரத் தட்டுகளின் பின்னே — சக்கரவர்த்தி, தாண்டவம், மனோரமா மூன்று பேரும் அமர்ந்திருந்தார் கள் உல்லாசமாக.

"அந்தப் பெண் யார் தெரியுமா?" என்று மாலி வினவினான்.

"தாண்டவத்தின் தங்கை."

"அதற்குமேல் ஊகிக்க முடியவில்லையா?"

"இல்லையே?"

"மனோரமா என்று பெயர். உன் அப்பாவின் ஆசைக் காதலி அவள்," என்று தெரிவித்தான் மாலி.

6

சிவந்த கழுத்து அணைத்து கொடுக்க, உயர்ந்த மார்பு தூக்கிக் கொடுக்க, வைர நெக்லேஸ் டாலடித்தது!



கொக்கியை மாட்டிய கைகளை மனோரமாவின கழுத்திலிருந்து எடுக்கச் சக்கரவர்த்திக்கு மனமே வரவில்லை.

"நீங்கள் நம்முடைய பரஸ்பர அன்பை இப்படி கேவலமாக்கக் கூடாது," என்று செல்லமாகக் கடிந்து கொண்டாள் மனோரமா.

தங்கையின் முன்னாலிருந்த தாண்டவம் இடது கண்ணைச் சிமிட்டி அவளுக்கு ஜாடை காட்டிக் கொண்டே, "அசடு! பெரியவர்கள் கொடுக்கும்போது மறுக்காமல் வாங்கிக்கொள். அவருக்குத் தெரியாதா? பூ வைக்க வேண்டிய இடத்தில் பொன் வைக்கிறாரே என்று தான் ஆட்சேபணை செய்யலாம்," என்றான்.

"இருக்கட்டும். வைத்துக்கொள்," என்றார் சக்கர வர்த்தி. குரலில் பெருமை பொங்கி வழிந்தது. "கடையில் வாங்கி வந்து நாலு நாளாயிற்று. உன்னிடம் கொடுக்கத்தான் மறந்துகொண்டேயிருக்கிறது. சட்! என்ன பிஸினஸோ!"

"பதினெட்டாயிரமாவது இருக்குமே?" என்று தாண்டவம் விலையை வேண்டுமென்றே அதிகமாகச் சொல்லி அவருடைய சிந்தனையைக் குளிர்வித்தான்.

"உஸ்!" என்ற சிறு சீறலுடன் கண்ணை மூடிக் கையை அசைத்து அவனை அடக்கினார் சக்கரவர்த்தி. "பத்திரம்! எந்த மூலையில் எந்தத் திருட்டுப் பயல் இருப்பானோ!" என்று அவர் கூறியது யாரை மனத்தி லெண்ணி என்று இருவருக்கும் புரியவில்லை. ஷெர்வானி கையை விலக்கிக் கொண்டு மணி பார்த்தார். பத்தேகாலை எட்டிக்கொண்டிருந்தது நேரம். "ஜாக்கிரதை!" என்று மறுபடி எச்சரித்தபின் வாசலுக்கு வந்து காரை முடுக்கினார்.

"ஒண்டியாகத் திரும்புகிறீர்களே?" என்று குரலில் கவலை தொனிக்கக் கேட்டாள் மனோரமா. அவள் விழிகளின் அழைப்பு எந்த ஆணாலும் தாங்கக் கூடாததா யிருந்தது

"பரவாயில்லை."

கார் புறப்பட்டு விட்டது.

"இன்று முழுதும் உங்களுக்குச் சிரமம்," என்றான் தாண்டவம்.

மௌபரீஸ் ரோடின் ஒரு கோடியில் தன்னந் தனியாய் நின்றிருந்த அந்தச் சிறு பங்களாவின் வாசலை விட்டுச் சக்கரவர்த்தியின் கார் வெளிப்பட்டு மறைந்தது.

வராந்தா விளக்கை அமர்த்திவிட்டு அண்ணனும் தங்கையும் உள்ளே நுழைந்தார்கள். ஹாலின் மூலையில், ரேடியோ வைத்திருந்த பெரிய மேஜையின் நுனியில் தொத்தினாற்போல் அமர்ந்துகொண்டாள் மனோரமா. ரேடியோவின் மீது செக்கச் செவேலென்ற ஒரு ஜப்பான் பொம்மை கையை உயர்த்தி அழைப்பது போல் வீற்றிருந்தது.

கழுத்திலிருந்த நெக்லேஸைக் கழற்றி அதன் கழுத்தில் அணிவித்து அழகு பார்த்தாள் மனோரமா. வழ வழப்பான அந்தச் சிறிய தோளில் நெக்லேஸ் நழுவி நழுவி விழுந்தது. "ஹூம்! இந்த ஒரு நகைக்காக எத்தனை மாடு செத்திருக்குமோ?" என்றாள்.

"அந்த மனுஷனைப் பற்றி நீ என்னதான் திட்டம் வைத்திருக்கிறாய் என்பது எனக்குப் புரியவேயில்லை. ஏகப்பட்ட பேரின் விரோதத்தைச் சம்பாதித்துக் கொண் டிருக்கிறோம். நீ சட்டுப் புட்டென்று ஏதாவது முடித்தா லல்லவா தேவலை!" என்றான் தாண்டவம் சிகரெட்டைக் கொளுத்தியவாறு.

"நீ ஒரு தொடை நடுங்கி!" என்று சொன்னபடி நெக்லேஸைத் தன் கழுத்துக்கு மாற்றிக்கொண்டு, பொம்மையைச் செல்லமாக முத்தமிட்டுவிட்டு ரேடியோ மீது வைத்தாள் மனோரமா. "மெரினா காண்டீனில் அவர்களைப் பார்த்ததும் நடுக்கம் ஏற்பட்டு விட்டதாக்கும்!"



"பயப்பட வேண்டிய சமயத்தில் பயப்பட்டால் தான் எச்சரிக்கையாக ஏற்பாடு செய்துகொள்ள முடியும். அம்மாக்காரியும் சின்னப் பொண்ணும் ஒழிந்தார்களே என்று சந்தோஷப்பட்டால், மூத்தவளும் அவள் காதலனும் சுற்றிச் சுற்றி வந்து ரோந்து அடிக்கிறார்களே! சக்கர வர்த்தியேகூட ஒருநாள் இருப்பதுபோல் மறுநாள் இருப்ப தில்லை. அதற்காகத்தான் சொன்னேன், உன் திட்டம் எது வாயினும் அதைச் சீக்கிரமாக முடி என்று."

"என் திட்டம் சீக்கிரமாகவும் முடியாது. அதை யாராலும் குலைக்கவும் முடியாது."

புகை வளையங்களை விட்டத்துக்கு அனுப்பிய வண்ணம் மௌனமாக இருந்தான் தாண்டவம்.

"நெக்லேஸ் மேகலையின் கழுத்தைவிட உன கழுத்துக்கு இன்னும் பொருத்தமாய்த்தானிருக்கிறது," என்றான் சிறிது நேரம் கழித்து.

மனோரமா திகைத்தாள். "என்ன... இது கடையில்..."

"போன வாரம்கூடப் பார்த்தேன், இதே நெக்லேஸை மேகலையின் கழுத்தில். ஊம், ஜமாய்! ஒவ்வொன்றாய் எல்லாம் வரும் இனிமேல்!" என்றவன், திடுப்பென நினைவு வந்தவனாய், "முன்னே தனகோடி இந்த மாதிரி நெக்லேஸ் கொண்டு வந்து தந்தானே ஞாபகம் இருக்கிறதா?" என்று கேட்டான்.

"குளிர்ந்த வேளையில் அவனைப் பற்றி எதற்காக நினைக்கிறாய்?" என்ற மனோரமா வீட்டின் உள் பக்கம் பார்வையைச் செலுத்தினாள். "அம்மா ஏன் வெளியே வரவில்லை இன்றைக்கு? அதற்குள்ளா தூங்கி விட்டாள்? நெக்லேஸைக் காட்டவேண்டும் அவளிடம்!" என்றவள், "அம்மா! அம்மா!" என்று கூப்பிட்டுக் கொண்டே உள்ளே நுழைந்தாள்.

"ஆமாம், ஆமாம்! தூங்கிக் கொண்டிருந்தால்கூட எழுப்பிக்காட்டு. சக்கரவர்த்தி வெறும் மெழுகுவர்த்திதான், காலணாவுக்குப் புண்ணியமில்லை என்று புலம்பிக் கொண்டிருந்தாளே!" என்று சொன்னவண்ணம் அவளைப் பின் தொடர்ந்தான் தாண்டவம்.

சமையல்கட்டு ஆளரவமற்றுச் சுத்தமாயிருந்தது. காலையில் சக்கரவர்த்தி வழக்கமாக அமரும் இடத்தில் பலகை போட்டு, வெள்ளித் தட்டில் தோசையும் கிண்ணங்களில் எண்ணெய் மிளகாய்ப் பொடியும், வெள்ளி டம்ளரில் தண்ணீரும் வைக்கப்பட்டிருந்தன.

சக்கரவர்த்தி உட்கார்ந்து கொண்டார். ஆனால் புசிக்கத் தொடங்கவில்லை. எல்லோரும் வேண்டுமென்றே ஒளிந்து கொண்டிருப்பதுபோல் தோன்றவே, எரிச்சலுடன், "மேகலை!" என்று உரக்கக் குரல் கொடுத்தார்.

குரல் மேகலையின் காதில் விழாமலில்லை. இருந்தாலும் அவள் வெளியிலேயே நின்று கொண்டிருந்தாள்.

கடந்த பன்னிரண்டு மணி நேரமாக அவள் இதயத்தில் வீசிக் கொண்டிருக்கும் புயல் இன்னும் ஓயாததே காரணம்.

குழந்தைப் பிராய முதல் எந்த முகத்தைக் கண்டு தன்னம்பிக்கையும் உற்சாகமும் பெற்று வந்தாளோ, அதே முகத்தை இன்று ஏறிட்டு நோக்க அவள் கூச்சப்பட்டாள். காதல் என்ற கனவு உலகத்திலிருந்து, ஈவிரக்கமற்ற பிரத்தியட்ச உலகத்துக்கு அவளைத் தள்ளிவிட்டது முந்தின மாலை மெரினா கான்டீனில் அவள் கண்ட காட்சி.

சொப்பனத்திலும் கற்பனை செய்ததில்லையே அப்பா இப்படி அருவருக்கத்தக்க நிலையில் இருப்பார் என்று! படிப்பும், பதவியும், கௌரவமும், கண்ணியமும் நிறைந்தவராக வாழ்ந்தவருக்கு எப்படிப் புத்தி இப்படிப் போயிற்று?



நினைக்க நினைக்க மேகலையின் நெஞ்சு கொதித்தது. அன்று இரவு தந்தையின் அறையில் கேட்ட கிசுகிசுப்பொலி, அவர் தன்னைத் திருப்பியனுப்பிய அவசரம் — அவற்றின் பொருளும் இப்போது புரிந்தபோது, மேகலையின் மென்மையான உள்ளம் ஆயிரம் சுக்கலாக வெடித்தது.

எத்தனை ஈனத்தனமான காரியத்தை அப்பா எவ்வளவு அலட்சியமாகச் செய்திருக்கிறார்! அம்மா இல்லாத காலத்தில் — வளர்ந்த மகள் இருக்கும் வீட்டுக்குள்ளே — சீ! சீ!

அழுவதா? ஆத்திரப்படுவதா? அலறுவதா? யாரிடமும் சொல்லிக்கொள்ளாமல் தலைமறைவாக ஓடித் தற்கொலை செய்து கொள்ளுவதா?

பாம்பு சட்டை உரித்தாற்போலத் தன்னுடைய பாவாடைப் பருவம் விலகி விழ, தான் முழுப் பெண்ணாக மலர்ந்து வாழ்க்கையை நிமிர்ந்து எதிர்நோக்க வேண்டியவளாக நிற்பதை உணர்ந்தாள் மேகலை. அடுத்த அரை மணி நேரத்தில் தான் செய்யக்கூடிய காரியமும், சொல்லக்கூடிய பேச்சும், எடுக்கக்கூடிய நடவடிக்கையும் தன எதிர் காலத்தை அடியோடு மாற்றப் போகின்றன என்பது மட்டும் உறுதியாக அவளுக்குப் புலப்பட்டது.

"மேகலை! மேகலை!" என்று சக்கரவர்த்தியின் கூப்பாடு அடுத்தடுத்து வேகமாக வந்தது.

வேண்டா வெறுப்பாகச் சமையலறையில் நுழைந்தாள் அவள். "என்ன வேண்டும்?" என்று ஒட்டுதலில்லாத தொனியில் விசாரித்தபோது, அவள் பார்வை அடுப்புப் பக்கம் இருந்ததே தவிர, அப்பாவின் பக்கம் திரும்பவில்லை.

"பலகாரம் வாயில் வைக்கச் சகிக்கவில்லையே! சமையல்காரனைக் கேட்பதற்கு நாதியில்லையா இந்த வீட்டில்?" என்று சக்கரவர்த்தி உறுமினார்.

கேட்பதற்கு இருந்தவளைத் தொலைத்துத் தலை முழுகிவிட்டு என்ன வாயடியாய்ப் பேசுகிறார்! மேகலை ஓரக் கண்ணால் அவரது தட்டை நோக்கினாள். வியப்பு ஏற்பட்டது. தோசை ஒரு கிள்ளல்கூடப் பிரியாமல் முழுசாக இருந்தது.

"கேட்டது காதில் விழவில்லை?"

"சமையல்காரர் லீவு. ஓட்டலிலிருந்து வரவழைத்தது இது" என்றாள் மேகலை.

"உன் நாட்டாண்மையா?"

சமையல்காரரின் மகளுக்குக் கல்யாணம். முன் பணம் கேட்டார். ஐம்பது ரூபாய் கொடுத்தனுப்பினாள் மேகலை. ஆனால் இது எதையும் சொல்லத் தோன்றவில்லை அவளுக்கு.

சக்கரவர்த்தியின் முன்னிலையில் நிற்கும் ஒவ்வொரு நிமிடமும் தன் உணர்ச்சிகள் தீட்டப்பட்டுக் கூர்மையடைவதைக் கண்டாள் அவள்.

கூடாது. நின்று நிதானித்து, சரியான மார்க்கத்தைக் கடைப் பிடிக்க வேண்டும். தனக்காகக்கூட அல்ல, மாலி கேட்டுக் கொண்டதற்காக.

பலகாரத் தட்டைத் தூரத் தள்ளிவிட்டு, காப்பியை மட்டும் அருந்தினார் சக்கரவர்த்தி. மேகலை விடுவிடுவென்று தன் அறைக்குள் நுழைந்து கதவைத் தாளிட்டுக் கொண்டாள்.

சக்கரவர்த்தியின் புகைப்படம் சுவரில் சிரித்தது. அவமானமும் ஆத்திரமும் மேலிட அதைத் திருப்பி மாட்டி விட்டுச் சலிப்புடன் கட்டிலில் விழுந்தாள்.

மாலி! பொறுத்திரு என்று உபதேசித்தீர்களே! எப்படிப் பொறுப்பேன் இந்த அவக்கேட்டை? பொறுத்திருந்து என்ன செய்ய வேண்டும் என்பதை ஏன் நீங்கள் சொல்லித் தரவில்லை?

நேற்று —



தந்தையையும் 'அவளையும்' பார்த்த கணத்திலேயே வெறி பிடித்தவள் போல ஆத்திரத்துடன் தான் வெகுண்டெழுந்தது அவளுக்கு நினைவு வந்தது.

சட்டென்று அவள் கையை அழுத்தி அமர்த்தினான் மாலி. "பதறாதே மேகலை. இந்த விஷயம் எனக்கு எப்போதோ தெரியும். பக்குவமான சமயத்தில் உனக்குச் சொல்ல நினைத்திருந்தேன். அதற்குள் உன் அப்பாவே உன் முன்பு காட்சியளித்து விட்டார், கையும் களவுமாய்!" என்றான் அவன். வெகு நேரம் ஊமையாயிருந்தபின், "இந்த அக்கிரமத்தைக் கேட்காமலே விட்டு விட வேண்டும் என்கிறீர்களா?" என்று சீறினாள் மேகலை.

"நாலு பேருக்குத் தன் திருட்டுத்தனம் தெரியாது என்று நினைத்திருக்கிற வரையில்தான் எந்த மனிதனுக்கும் பயமும் கட்டுப்பாடும் இருக்கும். வெளியிலே தெரிந்து விட்டது என்று ஆகிவிட்டால் தலைக்குமேல் சாண் போனாலென்ன முழம் போனாலென்ன என்ற துணிச்சல் வந்துவிடும். அதுவேதான் உன் அப்பா விஷயத்திலும்" என்று எச்சரித்தான் மாலி.

நெஞ்சோடு தலையணையை இறுக்கிக்கொண்டு கட்டிலில் படுத்திருந்த இந்த வேளையில், மாலியின் எச்சரிக்கை, முள் கம்பியால் கட்டிப் போட்டதுபோல மேகலையை உறுத்தித் துன்புறுத்தியது. கட்டிலுக்கு நேர் எதிரே பீரோவின் நிலைக் கண்ணாடியில் தெரிந்த தன் பிரதி பிம்பத்தைக் கண்டபோது அவளுக்கே பயமேற்பட்டது. இன்னொரு விதத்தில் பரிதாபம் உண்டாயிற்று. வெறுப்புடன் காலை நீட்டி, கண்ணாடியின் ஓரமாய் விலகியிருந்த நீலத் திரையைக் கட்டை விரலால் இழுத்து மூடினாள்.

வெய்யில் ஏற ஏற வீட்டின் மற்றப் பகுதிகளைப் போல அவள் உடம்பிலும் உஷ்ணம் ஏறிக்கொண்டிருந்தது. அந்த மனக் கதகதப்பு அவளுக்கு இதம் தந்தது. வரப்போகும் சமருக்கு இந்த சின உணர்ச்சி கவசமாக

அமையட்டும் என்று அவள் ஆசையுடன் எதிர் பார்த்தாள். கட்டிப்போட்ட சண்டைக்கிடா போலத் தன் உள்ளம் திமிறிக்கொள்வதை எண்ண எண்ண அவளுக்கே ஆச்சரியம் உண்டாயிற்று.

"மேகலை! ஏ மேகலை!" என்ற அழைப்பு ஹாலி லிருந்து புறப்பட்டு வந்தது.

அப்பாதான். கடுகடுப்புடன் மேகலை எழுந்து சென்றாள்.

தபால்காரர் அப்போதுதான் ஹாலைத் தாண்டி வெளியே போய்க்கொண்டிருந்தார்.

சோபாவில் அமர்ந்திருந்த சக்கரவர்த்தியின் முகத்தில் சீற்றமும் திகைப்பும் கலந்து படர்ந்திருந்தன. ஒரு கையில் மணியார்டர் பாரம்; மறு கையில் கற்றை நோட்டுக்கள்...

மேகலை புரிந்து கொண்டாள். ஆனால் அதைக் காட்டிக்கொள்ளவில்லை.

"உன் அம்மாவுக்காகப் பெங்களூருக்கு அனுப்பிய பணம் திரும்பி வந்திருக்கிறது. அவள் அங்கே இல்லையாம். ஆனந்தியும் அவளும் எங்கே போனார்கள்?"

"என்னைக் கேட்டால்?" — மேகலை இப்போதும் அப்பாவின் முகத்தைப் பாராமலே பதிலளித்தாள்.

சரேலென்று பணத்தையும் மணியார்டர் பாரத்தையும் தரையில் விசிறியடித்துவிட்டு எழுந்து நின்றார் சக்கரவர்த்தி. குழப்பத்தை நீக்கிக்கொள்ள உதவிக்குக் கூப்பிட்டார் தன் செல்ல மகளை. அவளுடைய ஒத்துழையாமை அவரது ஆத்திரத்தைக் கிளப்பியது.

"காலையிலிருந்து நான் பொறுத்தாகிவிட்டது. இன்னொரு தரம் நீ இப்படித் தூக்கி எறிந்தாற்போல் பேசினாயோ, என்ன செய்வேனென்று எனக்கே தெரியாது. ஜாக்கிரதை!... கேட்டதற்குப் பதில் சொல்லு. உன்



அம்மாவும் தங்கையும் எங்கே இருக்கிறார்கள் என்று உனக்குத் தெரியுமா, தெரியாதா?"

பல்லைக் கடித்துக்கொண்டு மௌனமாயிருந்தாள் மேகலை. ஆனால் வினாடிக்கு வினாடி தன்னைக் கட்டுப் படுத்தியிருக்கும் பந்தங்கள் அறுந்து விழுவதை அவளால் உணர முடிந்தது.

"உனக்குத் தெரியும். ஆனால் என்னிடம் சொல்லத் தயாராயில்லை. அப்படித்தானே?"

மேகலையின் நாத் துடித்தது. ஆனால் புரள வில்லை.

"உன் அம்மா இங்கேயே, பட்டணத்திலேயேதான் இருக்கிறாள். உண்டா, இல்லையா?"

"இருக்கட்டுமே? அவள் பட்டணத்திலேயே இருப்பதைப்பற்றி உங்களுக்கு ஏன் இத்தனை பயம்? எதற்காக இத்தனை நடுக்கம்? எதைக் கண்டுபிடித்து விடுவாள் என்று பதறுகிறீர்கள்?" — சைத்தான் வென்று விட்டது மேகலையை. ஆனால் அந்தத் தோல்வியில் அவள் துயரப்படவில்லை. மகிழ்ந்தாள். சீற்றம் கொள்ளுவது ஆனந்தமாயிருந்தது.

நேர்மையின் பக்கம் நிற்கிறோம் என்ற களியாட்டம் உடலின் ஒவ்வொரு முனையிலும் குத்திட்டு நின்றது. மானங்கெட்ட மனிதரைச் சல்லடை சல்லடை யாகப் பிய்க்கலாம் இனி என்ற விடுதலையுணர்ச்சி அவளை மெய்மறக்கச் செய்தது.

சக்கரவர்த்தி சிலையாக நின்றார். மகள் விடுத்த வினாவுக்குள்ளே புதைந்துகிடந்த குத்தல் என்னவென்பது அவருக்கு விளங்கிவிட்டது. எழுந்திருக்கவே முடியாதபடி தன்னை அடித்துப் போட்டுவிட்டாற்போல இடிந்து போனார் அவர். ஒரே கணம்தான். மறுகணம் மாபெரும் நிம்மதி ஏற்பட்டது. தன் தலைகள் படீரென்று தெறித்து விட்டதை அறிந்து கொண்டார். தனக்குச் சங்கடமே

இல்லாமல் பண்ணிவிட்ட மகளிடத்தில் ஒரு விசித்திரமான நன்றிகூடச் சுரந்தது.

"மகா புத்திசாலித்தனமாய்ப் பேசுவதாக எண்ணம் உனக்கு, இல்லையா?" என்று சிரித்தார் வெற்றியுடன். "இந்தச் சக்கரவர்த்தி உலகத்தில் யாரைக் கண்டும் பயப்படத் தேவையில்லை என்பதைத் தெரிந்துகொள். நீயாகட்டும், உன் அம்மாவாகட்டும், அவளுக்கு அம்மாவே ஆகட்டும், எனக்குக் குறுக்கே நிற்க எவராலும் முடியாது. எனக்கு இஷ்டமானவர்களைச் சந்திப்பதோடு அல்ல, இந்த வீட்டுக்குள்ளேயே அவர்களைக் கொண்டு வந்து என்றென்றைக்கும் என்னோடேயே வைத்துக்கொள்ளவும் முடியும் என்னால். வெகு சீக்கிரத்தில் அதையும் செய்யத்தான் போகிறேன்.

மேகலையின் ரத்தம் கொதித்தது. அப்பா எதற்கும் துணிந்துவிடுவார் என்ற மாலியின் வார்த்தை எவ்வளவு உண்மையாகிவிட்டது! ஆனால் அதைப்பற்றி யோசிக்க இனி நேரமில்லை. நெருப்புக்கு இவ்வளவு நெருங்கி வந்து நின்றாயிற்று. இனி குதிக்க வேண்டியதுதான்.

விழிகள் சிவக்க அவள் இரைந்தாள். "இந்த வீட்டில் நான் இருக்கிறவரை அப்படி எதுவும் நடக்க விடமாட்டேன் அப்பா, விடவே மாட்டேன்!"

'ஹாஹ்ஹா!" என்று 'இடிநகை செய்தார் சக்கரவர்த்தி. "மேகலை! நீ இன்னும் எவ்வளவு சின்னக் குழந்தையாக, அசட்டுப் பெண்ணாக இருக்கிறாயே அம்மா! எனக்கு இஷ்டமானவர்கள் இந்த வீட்டில் நுழைவது உனக்குப் பிடிக்கவில்லையென்றால், உனக்குப் பிடித்தவர்களிடம் நீ போக வேண்டியது தானே?"

"அப்பா!"

"பதறாதே! அம்மாவிடம் நீ போகவேண்டுமென்று நான் சொல்லவில்லை. நேற்று மெரினா காண்டீனுக்கு அழைத்து வந்திருந்தாயே ஒரு அன்னக் காவடி, அவனுக்கே



உன்னைக் கலியாணம் செய்து வைக்கிறேன். போய்ப் பிச்சை எடுத்துப் பிழைத்துக்கொள் அவனோடு!"

மேகலை அதிர்ந்து அயர்ந்து போனாள். ஆக, இதுதான் காலை முதல் இவர் கனன்று கொண்டிருப்பதற்கு காரணமா? ஆனால் –

சக்கரவர்த்தி அவளை யோசிக்க விடவில்லை. "ஏன் தடுமாறுகிறாய் மேகலை? தகப்பனைக் கேவலமாக எண்ணி, நீ கொக்கரித்துக் கொண்டிருந்தபோது, மகளின் மானத்தை வாங்கி விட்டானே இந்தத் தகப்பன் என்றா?"

"வாயைக் கழுவுங்கள்!" என்று திடீரென்றுச் சீறினாள் மேகலை. "நான் எந்த மானங்கெட்ட வழியிலும் இறங்கி விடவில்லை. கண்ணியத்தையும் கௌரவத்தையும் காற்றிலே பறக்க விட்டு விட்ட நீங்கள், என்னை மடக்கி விட்டதாக நினைத்துத் திருப்திப்படத் துளியும் இடம் தரமாட்டேன்!"

பளீரென்று அவள் கன்னத்தில் இறங்கிற்று அறை.

"அதிகப் பிரசங்கி நாயே!" என்று கர்ஜித்தார் சக்கரவர்த்தி. "நட வெளியே இந்த நிமிஷமே. பெற்றவன் ஆயிரம் விதத்திலே அயோக்கியனாயிருந்தாலும் பிறந்தவள் கூறுகெட்ட கழுதையாகத் திரிய வேண்டுமென்று எந்தச் சாஸ்திரத்திலே சொல்லியிருக்கிறது? என் வயிற்றெரிச்சலை அடக்கிக்கொண்டு, செய்த தப்புக்கு நீ மன்னிப்புக் கேட்பாய் என்று எதிர்பார்த்தேன். அம்மாவைப் போலவே வளர்ந்திருக்கிறாய் நீயும்! நிற்காதே என் முன்னால்! கிழித்துப் போட்டுவிடுவேன் குடலை!"

வேலைக்காரி சக்கு எங்கிருந்தோ பாய்ந்து வந்து மேகலையைக் கைத்தாங்கலாகப் பிடித்துக்கொண்டு வெளியே அழைத்துச் சென்றாள். டிரைவர் தணிகாசலம் இன்னொரு புறத்திலிருந்து எட்டிப் பார்த்தான்.

வீடு கூடிவிட்டது ரகளையில் என்பது மாத்திரமே புரிந்தது மேகலைக்கு. ஏதோ ஒரு நாடகத்திலே, தான்

நடித்துக் கொண்டிருப்பது போலிருந்தது. இவ்வளவும் போலி. எனக்கு நேரவில்லை எதுவும்... இதோ திரை விழும்... நாடகம் முடியும்...

"சின்னம்மா! சின்னம்மா!" என்று கூப்பிட்டான் சக்கு.

"என்னாங்க..." என்று ஓடி வந்தான் தணிகாசலம்.

உலகத்தையே உதறினாற் போல அவர்களை மீறிக் கொண்டு நடந்தாள் மேகலை.

'அம்மா... அம்மா' என்று உதடு இடைவிடாமல் உச்சரித்தது. 'அம்மா, அம்மா' என்று அந்தத்தாயின் மடியிலே விழுந்து புரண்டு இதம் பெற அவள் அங்கங்க ளனைத்தும் துடித்தன.

"மேகலை! காலேஜுக்குத்தானே? ஏறிக்கொள்" என்று உராய்ந்தாற்போல் வந்த காரிலிருந்து யாரோ அழைத்தார்கள்.

மேகலை நடந்தாள்.

வளர்ந்த யுவதி கண்ணீர் விட்டு அழக்கூடாது என்று விதித்திருக்கும் உலகத்தைச் சபித்தாள். இமை மடிப்புக்குள்ளே உறுத்தும் உப்புநீரை வேதனையுடன் பொறுத்துக் கொண்டு நடந்தாள்.

சாலையில் உருகிய தார் அவளுடைய வெறும் காலில் ஒட்டிக்கொண்டு சதையைப் பிய்த்தது. அடர்ந்த கூந்தலைப் பிளந்து கொண்டு உச்சந்தலையைக் கொளுத்திற்று வெய்யில்.

'அம்மா, அம்மா' என்று கூவுவதை அவள் இதயம் நிறுத்தவில்லை.

எத்தனையோ வாகனங்கள் அவளை உரசின; இடறின; இடித்தன.

திருவல்லிக்கேணியை நோக்கி ஒரே குறியுடன் சென்று, அந்த வீட்டை அடைந்தாள் நுழைந்தாள்.



"வா, மேகலை. நீ வருவாயென்று எனக்குத் தெரியும்" என்று வரவேற்றாள் தாய்.

"அம்மா!" என்ற பெருத்த விசும்பலுடன் அவள் மடியிலே தலையைப் புதைத்துக் கொண்டாள் மேகலை.

கொட்டும் கண்ணீரின் ஈரத்திலே புடவையும் தொடையும் கன்னமும் கூந்தலும் கசகசத்து நனையும் வரையில் அவள் எழுந்திருக்கவில்லை.

## 7

"மேகலை, எழுந்திரு," என்று மெதுவான குரலில் சொன்னவாறு பெண்ணின் கேசத்தைக் கோதினாள் அம்மா. "எட்டு ஊருக்குத் தைரியம் சொல்லுகிற நீயா அசடு போல அழுகிறாய்? உட்கார்ந்து கணணைத் துடைத்துக்கொள்."

தாயின் மடியில் படுத்துக்கொண்டிருந்த மேகலை தலை நிமிர்ந்தாள்.

நீர்த் திரை பார்வையை மறைக்க, தாயை நோக்கிய போது, இதே அம்மாவிடம் எவ்வளவு முறை உதாசின மாயும் அலட்சியமாயும் நடந்து கொண்டிருக்கிறோம் என்பது நினைவுக்கு வந்தது.

சின்னஞ்சிறு பிராயத்தில், கான்வென்டில் அவளைப் படிக்கவைக்க வேண்டுமென்று அம்மா எவ்வளவோ ஆசைப் பட்டாள். ஆனால் பக்கத்து வீட்டுத் தோழி போகிற சாதாரணப் பள்ளிக் கூடத்துக்குத்தான் தானும் போவேனென்று அப்பாவிடம் பிடிவாதம் பிடித்து வென்றாள் மேகலை. பிற்பாடு, அந்தப் பள்ளிக்கூடத்தில் நன்றாய்ப் படிப்புச் சொல்லித் தருகிறார்களென்று அம்மா சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்த சமயத்தில், கான்

வென்ட்டில் படிப்பதே கௌரவம் என்று மேகலைக்குத் தோன்றி விட்டது. இப்படி அம்மாவின் ஆசைகளை மிதித்து, அவளை அவமானப்படுத்தியவாறு வளர்ந்தாள் பெரியவளாக.

ஏன்? மூன்றாம் வருஷம் தீபாவளியின் போது, அம்மா தனக்கும் இவளுக்கும் ஒரே விலையில் துணி எடுத்து வந்ததை எதிர்த்து ரகளை பண்ணவில்லையா அப்பாவிடம்? அவர் ராத்திரியோடு ராத்திரியாக ஓடி, கடை மூடுகிற நேரத்தில் அம்மாவைக் காட்டிலும் இருநூறு ரூபாய் அதிக விலையில் தாவணி எடுத்து வந்தாரே? இன்னொரு முறை, சிநேகிதிகளுடன் செஞ்சிக்குப் போக வேண்டுமென்று திடீரென்று காரை எடுத்துச் செல்ல, அம்மா, அவளுக்கு ரொம்ப வேண்டிய செங்கமலத்தின் பெண் கல்யாணத்துக்கு வேலூருக்குப் போக முடியாமல் ஆக, செங்கமலத்துக்கும் அம்மாவுக்கும் பேச்சு வார்த்தையே நின்றுவிட்டதே!

எதைப் பீரங்கிக் குண்டுகளால் இத்தனை காலமும் துளைத்துத் தகர்த்துக் கொண்டிருந்தாளோ, அதே கோட்டையில் இன்று தஞ்சம் புக வேண்டி நேர்ந்ததே! நாணத்துடன் கூடவே, இதுவரை அடைந்து கிடந்த பாசம் மூன்று மடங்கும் நான்கு மடங்குமாய்க் கொப்புளித்துக் கொண்டு வந்தது மேகலைக்கு.

அன்னையின் மெலிந்த தோளில் சாய்ந்து கொண்டு விம்மினாள்.

"நான் இங்கேயே இருந்து விடுகிறேன் அம்மா! என்னால் மயிலாப்பூரில், அப்பாவிடம் — ஒரு நிமிஷம் கூட இருக்க முடியாது! அந்த வீடு — அதை நினைத்தால் கூட எனக்குக் குலை நடுங்குகிறது..."

"எங்கேயும் போக வேண்டாம். என்னுடனேயே இருக்கலாம். அவ்வளவுதானே? பச்சைக் குழந்தை மாதிரி மூக்கைச் சிந்தக் கூடாது. என்ன?"



அவளுடைய பெருந்தன்மையைக் கவனித்ததும் மேகலையின் உள்ளம் விண்டு கொண்டது. 'நான் அன்றைக்கு அப்பாவைப் பற்றிச் சொன்னபோது, எரிந்து விழுந்து ஏசினாயே?' என்று ஒரு வார்த்தை கேட்டாளா அம்மா!

"அப்பா இப்போது — அடியோடு..."

"தெரியும்," என்று குறுக்கிட்டாள் அம்மா. "அதை எதற்கு மறுபடி கிளறுகிறாய்?"

"தெரியுமா அம்மா? எல்லாம் தெரியுமா உனக்கு?" என்று திகைத்தாள் மேகலை. "அப்பா தன்னுடைய குடும்பம், கௌரவம், அந்தஸ்து எல்லாவற்றையும் தெருவிலே தூக்கி எறிந்துவிட்டு எவளோ ஒரு தளுக்குக் காரியின் பின்னால் வெட்கம் கெட்டுச் சுற்றிக் கொண்டிருப்பது உனக்குத் தெரியுமா அம்மா?"

"பதட்டப் படாதே," என்றவாறு மகளின் கன்னத்தைத் தடவிக்கொடுத்தாள் தாய். அப்பாவின் முரட்டு அறை விழுந்த அதே இடத்தில் அன்னையின் அன்புக்கரம் தவழ்ந்தபோது மேகலை மெய் சிலிர்த்தாள். தந்தையை நினைத்துப் பொங்கியெழுந்த ஆத்திரத்துடன், "மோசக்காரர்! விவஸ்தை கெட்டவர். அவரைப் பற்றி எண்ணினாலே எனக்கு உடம்பெல்லாம் பதறுகிறதம்மா!" என்று இரைந்தாள்.

"நடந்தது நடந்து விட்டது. வெறுமே ஆத்திரப் பட்டு என்ன பிரயோசனம், மேகலை? என்ன செய்யலாம் என்பதை யோசிப்போம்."

"ஆயிரம் சண்டை இருந்தாலும் நீ அப்பாவை விட்டுப் பிரிந்திருக்கக்கூடாது அம்மா! நீ போன பிறகுதான் இவ்வளவு ஈனத்தனமாக அவர் இறங்கி விட்டார்!"

"பைத்தியக்காரி!" என்று அம்மா சிரித்தாள். "நான் வீட்டை விட்டு வந்ததால் அவர் கெட்டுவிடவில்லை. அவர்

கெட்டதால் நான் வீட்டை விட்டு வெளியேறினேன். தெரிந்து கொள்."

"என்ன! என்னம்மா சொன்னாய்?"

அம்மா பதிலளிக்கவில்லை உடனே. தன் அந்தரங்கத்தை வெளிப்படுத்த அவள் தயங்குவது அப்பட்டமாகத் தெரிந்தது. வெகு நேர யோசனைக்குப் பிறகு, "வேண்டாம் மேகலை. என் அவமானங்களை உன்னிடம்கூடச் சொல்லக் கூச்சமாயிருக்கிறது," என்றாள்.

"குடும்பமே குட்டிச்சுவராகிக் கொண்டிருக்கும் போது கூச்சப்பட்டு முடியாது அம்மா. சொல்லு. நான் என்ன பாப்பாவா? காலேஜில் படிக்கிறவள். எனக்கு கொஞ்சம் அனுபவம் உண்டு சில விஷயங்களில் —" மேகலை சட்டென்று நிறுத்திக் கொண்டாள். சொந்தத் தாயானாலும் சில அந்தரங்கங்களைச் சொல்ல முடியாது தான்.

அறையின் விட்டத்தை நோக்கியபடி அம்மா பேசினாள்: "அவருக்கு இந்தப் புதுப் பைத்தியம் பிடித்திருக்கிறதென்பதை ஒரு வருஷத்துக்கு முன்பே நான் ஊகித்து விட்டேன். ஐந்தடித்தால் ஆபீசை விட்டுக் கிளம்பி விடும் வழக்கமுள்ள உன் அப்பா, ஒரு வருஷமாய், வீட்டுக்குப் பத்து மணிக்கும் பதினொரு மணிக்கும் வர ஆரம்பித்தார்."

மேகலை எண்ணிக் கொண்டாள்: 'அம்மாவுக்கும் எனக்குமிடையே இதே நெருக்கம் ஒரு வருஷத்துக்கு முன்னே ஏற்பட்டிருந்தால், எவ்வளவு நன்றாயிருந்திருக்கும்! எத்தனை துன்பங்களைச் சுலபமாய்க் கடந்திருக்கலாம்!'

"ஆபீசில் வேலை ஜாஸ்தி என்று முதலில் நினைத்தேன்," என்று தொடர்ந்தாள் அம்மா. "அப்படியில்லை. அவர் உள்ளே நுழையும்போதே மூக்கைத் துளைக்கும் பலவித வாசனைகள் வந்தன. ஜாடைமாடையாகக் கேட்டேன். நேரிடையாய் விசாரித்தேன். சந்தேகக்காரி என்று என்னைத் திட்டினார். கோபித்தார்.



கடைசியில் ஒரு நாள்... ஒரு நாள்... மேகலை, நீ வளர்ந்த பெண். உன்னிடம் எப்படி நான் அந்த வேதனையைச் சொல்ல முடியும்?"

மேகலை கண்களில் நீர் தளும்பத் தலைகுனிந்து கொண்டாள்.

"ஒருநாள், அவர் சட்டையைக் கழற்றியபோது பனியனில் ஒரு சிவப்புக்கறை இருப்பதைக் கண்டேன்... லிப்ஸ்டிக் சாயம்..."

"போதும் அம்மா! வேண்டாம்!" மேகலை காதைப் பொத்திக் கொண்டாள்.

"கேள். அன்றைய தினம் அவரிடம் எனக்கிருந்த கடைசி நம்பிக்கையும் போய்விட்டது. வண்ண வண்ணமாய்க் கேட்டு விட்டேன். 'நம் குழந்தைகள் மீது ஆணையாக இல்லையென்று சொல்லுங்கள்,' என்று உலுக்கியெடுத்தேன். மேகலை! உன் அப்பா கொஞ்சம் கூடத் தயங்கவில்லை. கூசாமல் சத்தியமடித்தார்!"

மேகலை இப்போதும் தலை நிமிரவில்லை.

"ஆவேசமான ஆவேசம் வந்தது எனக்கு. கண்ணார நான் கண்டாயிற்று. பொய்ச் சத்தியமடிக்கிறார். அதற்கப்புறமும் அவரை மடக்காமல் விடலாமா? கையும் களவுமாக அவரைப் பிடித்து, 'உங்கள் யோக்கியதை இவ்வளவுதானா!' என்று மூஞ்சிக்கு நேரே கேட்டுவிடுவது என்று தீர்மானித்தேன். உனக்கு அப்பாவிடம் கோடி நம்பிக்கை. அதை நாம் தகர்ப்பானேன் என்றுதான் உன்னிடம் எதுவும் சொல்லவில்லை. ஆனந்தி அப்பாவி. என்னை விட்டால் அவளுக்குக் கதியில்லை."

'என்னாலேயே தாங்கிக்கொள்ள முடியாத இடி, ஆனந்தியின் தலையில் விழுந்திருந்தால் செத்தே போயிருப்பாள்,' என்று எண்ணிக்கொண்டாள் மேகலை. ஆமாம்... ஆனந்தி எங்கே?

"நான் தவறாமல் தினம் ராத்திரி இங்கிருந்து கிளம்பி, அப்பாவை உளவு பார்க்க ஆரம்பித்தேன். ஆனந்திக்குக்கூடத் தெரியாது. உன் அப்பா, புதுக் காதலியை வீட்டுக்கே ஒருநாள் அழைத்து வருவார், பிடித்து விடலாம் என்று நினைத்தேன்."

"அப்படியே நடந்து விட்டதம்மா ஒரு நாள்!"

"தெரியும், அன்றைக்கு நான்..."

அம்மா பேசு முன்னர், அறைக் கதவு திறந்து கொண்டது. தங்கைதான் வருகிறாள் என்று திரும்பிய மேகலை கச்சமும் மேல் துண்டுமாக, காலைச் சற்று விந்தியபடி உள்ளே நுழைந்த ஒரு முதியவரைக் கண்டு ஆச்சரியப்பட்டாள்.

வந்தவர் தன் இடுப்பில் எட்டாக மடித்துச் செருகியிருந்த நோட்டுக்களை எடுத்தார். அம்மாவிடம் நீட்டினார்.

"எண்ணிக் கொள்ளுங்கள். ஐம்பது ரூபாய். உங்கள் இரண்டு மாத அட்வான்ஸ். திருப்பிவிட்டேன். சரிதானே?"

பணத்தை எண்ணிவிட்டு "சரியாயிருக்கிறது," என்றாள் அம்மா.

"அப்போ நாளைக் காலையில்..."

"ஆமாம் நாளைக் காலை காலி செய்து விடுகிறேன்."

காலை விந்திய வண்ணம் வீட்டுக்காரர் போய் விட்டார்.

அடுப்பில் வைத்திருந்த பாத்திரம் சரிந்து, உலைநீர் சொய்யென்று ஓசையிட்டது. அம்மா எழுந்து சென்றாள்.

மேகலை மனம் குழம்பினாள். இந்த இடத்தைக் காலி செய்துகொண்டு எங்கே போகப் போகிறாள் அம்மா?

திரும்பி வந்த அம்மா, அவளுடைய குழப்பத்தைப் போக்கவில்லை. பழைய கதையையே கூறத் தொடங்கினாள்.



பதினோரு மணி இருக்கும். ராத்திரி உன் அறையில் விளக்கு இல்லை. நீ படுத்துக்கொண்டு விட்டாய் போலிருக்கிறது. சற்றைக்கெல்லாம் காரில் வந்திறங்கினார் உன் அப்பா. ஒரே நடுக்கம். நான் எதிர்ச்சாரியில், குளத்தங் கரை மதில் ஓரமாக இருட்டில் நின்றிருந்தேன். உன் அப்பா காரை திறந்து... அவளை... அந்தப் பெண்ணை... இறக்கி அழைத்துப் போனார் வீட்டுக்குள்!"

"உன் மனம் என்ன பாடுபட்டிருக்கும் என்று எனக்குப் புரிகிறதம்மா."

"அந்தக் காட்சியைக் கண்டதுமே புலிபோலப் பாய்ந்து, அவர்கள் இருவரையும் கிழித்தே போட்டு விட வேண்டும் என்று அந்த நிமிஷம் வரையில் நினைத் திருந்தேன். ஆனால் நடந்தது என்ன தெரியுமா மேகலை? அவமானத்தில் அழுகைதான் வந்தது. ஆயிரம் பாடு பட்டாலும் அவளுடைய இடத்தைத் திரும்பப் பறிக்க முடியாது என்று தோன்றி விட்டது. ஓடி வந்து விட்டேன்!"

மேகலை அம்மாவின் கண்களைப் பார்த்தாள். 'இவ்வளவு சண்டைக்கப்புறமும் அப்பாவிடம் உனக்குள்ள பிரியம் போகவில்லை. அவருடைய சுகத்தைக் கெடுக்கத் தோன்றவில்லை. நீ குறுக்கிடாமல் திரும்பியதற்கு அதுதான் காரணம்' என்று எண்ணிக்கொண்டாள். சொல்லவில்லை.

"சரி, அடுத்தபடி?" என்று கேட்டாள் மேகலை. இடையில் குறுக்கிட்ட நிகழ்ச்சி ஞாபகம் வந்தது.

"பெங்களூருக்கே போய்விடப் போகிறாயா? இந்த இடத்தை ஏன் காலி செய்கிறாய்?"

"நம் எல்லோருக்குமே வழி பிறந்து விட்டது எதிர் பாராத விதத்தில்," என்று புன்னகை செய்தாள் அம்மா. "நான் மைலாப்பூருக்கே திரும்பி வரப்போகிறேன் — நம் வீட்டுக்கே!"

"அம்மா! நிஜம்தானா?"

"அந்தப் பெண்ணுக்கு ஒரு அம்மா இருக்கிறாளே தெரியுமா?"

"மனோரமாவுக்கா?" — வாய் கசந்தது மேகலைக்கு - சொல்லக்கூடாத பெயரை உச்சரித்து விட்டது குறித்து.

அம்மா முகம் சுளிக்கவில்லை. "மனோரமாவின் அம்மாதான். உன் அப்பா காசிலே மட்டும் கொஞ்சம் கவனமாயிருக்கிறார் போலிருக்கிறது. அந்த அம்மாளுக்கு ஒரே குறை, வரும்படி இல்லையென்று; என்னிடமே வந்து ஒரு மூச்சு அழுது விட்டாள். என் விலாசத்தை எங்கே தெரிந்து கொண்டாளோ?..."

"இங்கே — இந்த இடத்துக்கே வந்தாளா? வந்து?"

"பெண்ணை பம்பாய்க்கு அழைத்துக்கொண்டு போய்விடுகிறாளாம். யாரோ ஹிந்திப் படக்காரர்கள் முன்னே கூப்பிட்டிருந்தார்களாம். பட்டணத்துக்குத் தலைமுழுகி விட்டுப்போய்விடத் தயாராம்."

"தொலையட்டும், தொலையட்டும்!" என்று அளவற்ற ஆறுதலுடன் படபடத்தாள் மேகலை.

"பொறு ஐயாயிரம் ரூபாய் என்னைக் கேட்டாள். கொடுத்தால் போய் விடுகிறாளாம்."

"நாக்குக் கூசவில்லை பார்த்தாயா அம்மா!"

"நான் பணம் தருவதாக ஒப்புக் கொண்டேன்," என்றாள் அம்மா. "தர்ம நியாயம் நம் பக்கத்தில் இருக்கிறது. சண்டை போடாமல் இப்படிப் பேரம் பண்ணுவதே கேவலம். ஆனால் காரியம் பெரிதா, வீரியம் பெரியதா?"

மேகலைக்கு வேறு கவலை. "ஐயாயிரம்! அவ்வளவு பணத்துக்கு நீ என்னம்மா பண்ணப் போகிறாய்?"

அம்மா புன்சிரிப்புடன் சொன்னாள்: என் நகைகள் இல்லையா? கல்யாணத்தின் போது என் அப்பா எத்தனையோ பிரியமாய்ப் பண்ணிப் போட்டார். அப்புறம்



உன் அப்பா வாங்கித் தந்தது வேறு. எல்லாம் நான் வரும் போது எடுத்து வந்து விட்டேன். நேற்று அந்த அம்மாள் வந்திருந்தாள். அவளிடம் கொடுத்து ஆனந்தியையும் கூட அனுப்பினேன். எல்லாம் மாம்பலம் ராம்லால் கடையில் வாங்கினது. ஆனந்திக்கு அங்கே மானேஜர் சிவராமனைத் தெரியும் சந்தடி இல்லாமல் வாங்கிக்கொண்டு தொகை கொடுப்பார். ஆனால் கடை மூடியிருந்ததாம். நகைகளோடு திரும்பி வந்து விட்டாள். இன்று காலை மறுபடி அந்த அம்மாளோடு அனுப்பியிருக்கிறேன்... இதோ!"

ஆனந்தியுடன் கூட வந்த பெண்மணியைக் கண்டதுமே மேகலை வியப்படைந்தாள். முந்தின தினம், பஸ் ஸ்டாப்பில் தங்கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருந்தது அவளேதான்! இவள்தான் மனோர மாவையும் தாண்டவத்தையும் பெற்றவளா?...

புயலென உள்ளே வந்த அந்த அம்மாள் பின்னால் தயங்கி நின்ற ஆனந்தியின் கையிலிருந்து பையைப் பிடுங்கி, அம்மாவின் காலடியில் வீசி எறிந்தாள்.

"இந்தாடியம்மா சௌந்தரம்! என் தாராள ராஜாத்தி! வைத்துக்கொள் உன் கண்ணாடி நகைகளை உன்னோடேயே!" என்ற சீறல் கிளம்பிற்று அவளிடமிருந்து.

"என்னது!"

"என்னது!" என்று கையை அகல விரித்து, அவளை 'நக்கல்' செய்தாள் மனோரமாவின் தாயார். ஆனந்தியை ஒரு முண்டு முண்டி, சொல்லேண்டி பெண்ணே! உன்னிடம்தானே சொன்னான் கடைக் காரன்?" என்றாள்.

ஆனந்திக்குக் குரலே எழும்பவில்லை. "ஆமாம் அம்மா, சிவராமனையே கேட்டேன். எல்லாம் இமிடேஷனாம். அவர்கள் விற்ற நகைகள் இல்லையாம். இதெல்லாம் கடை சீல் இல்லையே என்கிறார்"

"நம்பவே முடியவில்லையே? மயிலாப்பூரிலிருந்து புறப்படுவதற்கு ஒரு மாதம் முந்திகூட, எண்ணெய் எடுத்து மெருகு போடுவதற்காக ராம்லால் கடைக்கு இதை யெல்லாம் அனுப்பினேனே, அப்போது சரியாய்த்தானே இருந்தது?" அம்மா திகைத்துத் தடுமாறினாள்.

"நன்றாய் நாடகம் போடுகிறாயே தாயே!" என்று பரிகசித்தாள் மனோரமாவின் தாய். போகட்டும் போ! "இனிமேல் உன் தயவு வேண்டாம். உன் புருஷனுக்கே நல்ல புத்தி வந்து விட்டது. அவர் தாராளத்தையாவது கெடுக்காமல் இரு!" வந்த வேகத்திலேயே திரும்பிவிட்டாள் அவள்.

கடைசியாகக் கேட்ட வார்த்தைகளுக்கு அர்த்தம் புரிந்தபோது அம்மா இடிந்துபோய் நின்றாள்.

அன்னையையும், பையிலிருந்து நழுவித் தரையில் சிதறிக் கிடக்கும் போலி நகைகளையும், நடுங்கிக்கொண்டு நிற்கும் தங்கையையும் மாறிமாறிப் பார்த்தாள் மேகலை.

நேதாஜி போஸ் சாலையின் கீழ்க் கோடியில் ஹைகோர்ட்டுக்கு எதிரில் புதிதாக எழும்பியிருந்த ஆறு மாடிக் கட்டிடத்தின் வாசலில், ஒரு சாக்லேட் நிறக் கார் வந்து நின்றதுமே, மூன்றாம் மாடியிலிருந்த கிங்ஸ்லி கம்பெனி தன் சளசளப்பை நிறுத்திக்கொண்டு கப்சிப்பென்று வேலையில் ஈடுபடலாயிற்று.

லிப்டில் சக்கரவர்த்தி ஏறி வந்துகொண்டிருக் கிறார் என்று அர்த்தம்.

கிங்ஸ்லி கம்பெனியில் வேலைக்கிருக்கும் சில பழம் பெருச்சாளிகள் இன்றைக்கும்கூடப் பெருமூச்செறிவ துண்டு. "ஹூம்! நேற்றுவரை துரையிடம் குட்டு வாங்கிக் கொண்டிருந்தான். அதிர்ஷ்டம்! இன்று நம்மை ஓட ஓட விரட்டுகிறான்," என்று. ஓரளவு உண்மைதான் அது. பதினைந்து வருடங்களுக்கு முன்னால் வரை வெள்ளைக் காரர்களுக்குச் சொந்தமாயிருந்த கிங்ஸ்லி தோல்



கம்பெனியை, அங்கே மானேஜராகப் பணியாற்றிய சக்கர வர்த்தி வாங்கிக்கொண்டார், யுத்த காலத்தில். ராசியை முன்னிட்டு, இந்தியப் பெயராக மாற்றாமல் பழைய பெயரிலே இன்றும் நடத்தி வந்தார்.

லிப்டிலிருந்து வெளிபட்டு, வராந்தா வழியாக வந்து, முன்புறத்தில் பளபளவென்ற உறைபோட்ட சோபாக்களைக் கொண்ட வரவேற்பு ஹாலைத் தாண்டி, அடுத்தாற்போல் படபடவென்று டைப்போசை கேட்கும் நடு அறையையும் கடந்தார் சக்கரவர்த்தி. கண்ணின் ஒரு வீச்சிலேயே யார் யார் வேலைக்கு மட்டம் போட்டிருக் கிறார்கள், வந்திருப்பவர்களிலும் எவனெவன் வேலையைக் கவனிக்காமல் ஆட்டம் காட்டுகிறான் என்கிற கணக்குகளைப் போட்டுக் கொண்டே நடந்தார்.

மேற்கு மூலையிலிருந்த ஏர் கண்டிஷன் அறையைப் பணிவுடன் திறந்து வழி காட்டினான் வெள்ளையுடை தரித்த பியூன். அவனுடைய விறைப்பான சல்யூட்டுக்குத் தலையசைத்துவிட்டு, சுழல் நாற்காலியில் அமர்ந்தார் சக்கரவர்த்தி. மேஜை மீதிருந்த பைல்களில் அவருடைய பார்வை சுறுசுறுவென்று ஓடியது.

ஆறு மாதங்களுக்கு முன்னால் இந்த அறையைப் பார்த்தவர்கள் இப்போது அடையாளம் தெரியாமல் தவிப்பார்கள். முன்பு சுவரெங்கும் படங்களும், காலண்டர் களுமாய் ஒரே அடைசலாக இருக்கும். தொழில் சம்பந்தமாக வந்திருந்த ஓர் அமெரிக்கர் சொன்ன யோசனையின் பேரில் இந்த அறை திருத்தி அமைக்கப் பட்டது. சுவர்கள் தேக்கு மரத்தில், அதன் இயற்கை வர்ணத்தில், காட்சியளித்தன. ஒரே ஒரு 'கிராப்' படத்தைத் தவிர வேறெதுவும் இப்போது கிடையாது. மேஜை, அறையின் இரண்டு சுவர்களின் சந்திப்பை ஒட்டினாற் போல் முக்கோண வடிவில் போடப்பட்டு, ஒரே ஒரு டெலிபோன், ஒரு காலண்டர் ஸ்டாண்டு, ஒரு கடிதத் தட்டு ஆகியவற்றுடன் விளங்கியது. கவர்ச்சியே இல்லாமல்

கவர்ச்சி ஏற்படுத்த அமெரிக்கர் சொல்லிக் கொடுத்து விட்டுப் போயிருந்தார்.

'க்ளிக்' என்ற ஓசையுடன் கதவைத் திறந்து மூடிக் கொண்டு உள்ளே நுழைந்தார் ராமலிங்கம் — கம்பெனியின் 'ஊர்சுற்று' மானேஜர்.

ஒரு சிறு தலையசைப்பினால் அவர் வந் திருப்பதைக் கவனித்ததாகக் காட்டிக்கொண்ட பின்னர், மற்றக் காகிதங்களையும் பார்த்து முடித்தார் சக்கரவர்த்தி. கடைசிக் காகிதத்தைத் தள்ளும்போது, "காலைதான் வந்தீரா?" என்று விசாரித்தார்.

"நேற்று சாயந்தரமே வந்துவிட்டேன் சார்."

"ஊம்." பார்க்கர் பேனா ஷெர்வானிப் பையில் ஏறிக் கொண்டது. "பத்தாயிரம் ரூபாயில் ஆறாயிரம் திருப்பிக் கொண்டு வந்து விட்டதாகத் தெரிகிறதே? அட்வான்ஸ் கொடுக்கவில்லையா அதிகமாக?"

ராமலிங்கம் கொஞ்சம் தயங்கிவிட்டு, "நாம் அட்வான்ஸ் பண்ணுவதற்கு விட்டு வைக்கவில்லை சார்," என்றார்.

"யார்?"

"மவுண்ட் ரோட்டான்."

சுருக்கென்று சக்கரவர்த்தி தலை நிமிர்ந்தார். "தமிழ் நாடு லெதர்ஸா?"

"ஆமாம், சார்; மூலை முடுக்குக் கசாப்புக்கடை, ஸ்லாட்டர் ஹவுஸ்களுக்கெல்லாம் அவர்கள் பிரதிநிதி போன மாசம் வந்து, தோலுக்கு முன் பணம் கொடுத்து விடடுப் போயிருக்கிறான். இந்த வருஷம் மலபாரிலே ஒரு தோல்கூட வாங்க முடியவில்லை."

"மூக்கால் அழாதீர் ஐயா!" என்று எரிந்து விழுந்தார் சக்கரவர்த்தி. "நேற்று முளைத்த பயல. அவனுக்குத் தண்ணி காட்டுவதா ஒரு பிரமாதம்! நான் சொன்னபடி ஜனவரி மாதமே கிளம்பியிருந்தால் இப்படி



ஆகியிருக்குமா? பெண்டாட்டி படுத்த படுக்கையாய்க் கிடக்கிறாளென்று முனகினீர்!"

ராமலிங்கம் கையைப் பிசைந்துகொண்டு நின்றார்.

"தமிழ்நாடு லெதர்ஸில் வாங்கியிருக்கிற அட்வான்ஸுக்கு மேலே நாம் தருகிறோம் என்று எல்லோருக்கும் இன்றைக்கே எழுதிப்போடும். புரிகிறதா? என் ஸாங்ஷனுக்காக வரவேண்டுமா? நீரே முன் யோசனையுடன் நேரில் செய்திருக்கக் கூடாது? போம் சீக்கிரம்!"

ராமலிங்கம் மெல்ல நழுவினார்.

மேஜையின் பளபளப்பில் மங்கலாகப் பிரதி பலிக்கும் தன் முகத்தைப் பார்த்தபடி குமைந்தார் சக்கர வர்த்தி. மூக்குக் கண்ணாடியின் அழுக்கைத் துடைத்தவாறே எதையோ யோசித்தார்.

டெலிபோன் புஸ்ஸென அழைத்தது.

கண்ணாடியைக்கூட மாட்டிக்கொள்ளாமல் எழுந்தார்.

குமாஸ்தா, தன் கீச்சுக் குரலில், "மனோரமா அம்மா கூப்பிடுகிறார்கள். டெலிபோன் போடட்டுமா?" என்றார்.

சக்கரவர்த்தியின் முகம் மலர்ந்தது. "கேள்வி என்ன ஐயா? போடுமேன்!"

"ஹலோ!"

"மனோரமாவா? குரல் ஏன் என்னமோ போலிருக்கிறது? ஜலதோஷமா?"

"நான் மௌபரீஸ் ரோடு வீட்டுக்கே போகிறேன்."

"ஏன்? ஏன்?" டெலிபோனை மறு காதுக்கு மாற்றிக் கொண்டு பரபரத்தார் சக்கரவர்த்தி. "காலையிலே தானே வந்தாய்? என்ன அசௌக்கியம்? பாத்ரூமிலே ஷவர் போடுகிறேன் என்றுதான் சொன்னேனே? டெலிபோன் பண்ணிச் சொல்லிவிட்டேன். நாளைக்கு ஆள் வந்து..."

"இல்லை. நான் போகிறேன்."

"என்ன மனோரமா? என்ன திடீரென்று?"

"மயிலாப்பூர் வீட்டில் யாருமில்லை, வந்து இரு என்று சொன்னீர்கள், வந்தேன்."

"சரி."

"இப்போது உங்கள் வீட்டில் வந்து விட்டார்கள்."

"என்ன!" ரிஸீவரை மறுபடி மாற்றிக் கொண்டார்.

"உங்கள் வீட்டுக்காரர்கள் எல்லோரும் வந்து விட்டார்கள். பெரிய பெண், சின்னப் பெண்... அப்புறம்... உங்கள் சம்சாரம்..."

"யார்! சௌந்தரமா?"

"ஆமாம்."

வாயடைத்துவிட்டது சக்கரவர்த்திக்கு. முகத்தில் குழப்பம் கூத்தாடிற்று.

"என்ன பேசாமலிருக்கிறீர்கள்? இனிமேல் நான் இங்கே எப்படி இருப்பது?"

"உளறாதே! இப்போது அவர்கள் எங்கே இருக்கிறார்கள்?"

"இதோ வாசலில் நிற்கிறார்கள் மூன்று பேரும்."

"தாண்டவம் எங்கே?"

"பக்கத்தில்தான் இருக்கிறான்."

"டெலிபோனை அவனிடம் கொடுத்துவிட்டு நீ மாடிக்குப் போ. காதில் விழுந்ததா? மாடிக்குப் போ என்றேன். இறங்கி வராதே."

தாண்டவம் பேசினான். "ஹலோ சார்!"

அழுத்தம் திருத்தமாக உத்தரவு போட்டார் சக்கரவர்த்தி. "வாசலில் நிற்கிறவர்கள் அங்கேயே நிற்கட்டும். கதவைத் திறந்து யாரையும் வீட்டுக்குள் விடாதே."

"மேகலையைக் கூடவா சார்?"



"முக்கியமாக அவளைத்தான்."

டெலிபோனைத் திரும்ப வைத்தார் சக்கரவர்த்தி அவரது கையின் பலம் முழுதும் அதன் முதுகில் அழுத்திற்று.

## 8

நேதாஜி போஸ் சாலையில் சக்கரவர்த்தியின் அலுவலகத்தில் டெலிபோன் 'க்ளிங்க்' என்று ஓசையிட்ட மூன்றாம் வினாடி, மயிலாப்பூரில் அவரது வீட்டு வாசல் கதவு 'க்ளிக்' என்று சப்தமிட்டது.

இன்னொரு தாழ்ப்பாள்.

"டக்டக்'கென்ற பூட்ஸ் ஒலி தேய்ந்தது.

ஓங்கிய கையை மேகலை இறக்கவில்லை. கிளறி விட்ட நெருப்பைப் போலச் சீறி வரும் ஆத்திரத்துடன் திரும்பத் திரும்பத் தேக்குக் கதவைக் குத்தினாள்.

சிவந்துவிட்ட , கைகளைத் தடுத்துப் பிடித்துக் கொண்டு அம்மா கெஞ்சினாள். "வேண்டாம் மேகலை, வேண்டாம். எனக்கு மானம் போகிறது. வேண்டாம். போய்விடுவோம் வா."

ஆனால், மேகலை அவளுக்குக் கட்டுப்படும் நிலையில் இல்லை. மனோரமாவின் தாயுடன் செய்திருந்த பேரம் முறிந்ததும் அம்மாவும் முறிந்துவிட்டாள். ஒருநாள் முழுதும் அந்தச் சிறு குடும்பம் சாவி தரப்பட்ட பொம்மை போல இயங்கிற்று. தாய் அடங்கிவிட, மகள் பொருமினாள். உண்டு இல்லை என்று பார்த்துவிடும் உறுதியுடன் அன்னையையும் தங்கையையும் இந்த வீட்டுக்கு இழுத்து வந்தவள் மேகலை. இவ்வளவு தூரம் விஷயம் முற்றிய பிறகு,

பின்வாங்குவதை அவள் பெருத்த அவமானமாகக் கருதியதில் வியப்பில்லை.

"நீ சும்மா இரு அம்மா! தலையாப் போய்விடும்? அதையும் பார்த்து விடலாம்!" என்று அம்மாவை அதட்டியவள், ஆனந்தி படியின் ஓரமாக நடுக்கத்துடன் உட்கார்ந்து விட்டதைக் கவனித்தாள். கோபம் வந்தது. "எழுந்திரு ஆனந்தி! தெருவில் போகிறவர்கள் என்னவோ ஏதோ என்று நினைத்துவிடப் போகிறார்கள்!" என்று இரைந்ததும் அவள் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்து நின்றாள்.

மகளின் ஆவேசம் தாயை மேலும் கலங்க வைத்தது. "மேகலை! சொல்வதைக் கேள். இந்த வீட்டுக்கும் நமக்கும்..." என்று தொடங்கினாள்.

"இன்னொரு தரம் இந்த வீடு, இந்த வீடு என்று சொல்லாதே அம்மா! இது நம்முடைய வீடு! நம்முடைய வீடு!"

படீரென்று பக்கத்திலிருந்த சாளரம் திறந்து கொண்டது. வேலைக்காரன் போல் தோற்றமளித்த ஓர் ஆள் தலையை நீட்டி, "சூ! ஏம்மா சும்மா சத்தம் போடறே? ஐயாதான் உள்ளே விட முடியாதுன்னு கதவைப் பூட்டிட்டாரே! போவியா பேசாமே!" என்றான்.

"யாரப்பா நீ? புது வேலைக்காரனா?" என்று மேகலை வியப்புடன் விசாரித்தாள்.

"சம்பளம் என்ன வாங்குறேன்னு கேளேன்! சரிதான் போம்மே!"

வேகமாக அந்த ஆளை அப்பால் தள்ளிக் கொண்டு எட்டிப் பார்த்தது, இன்னொரு முகம். "அட பாவி மகனே! அவங்களை யாருன்னு நினைச்சிட்டுப் பேசறே? இந்த வீட்டுக்கு எசமானியம்மாடா அவங்க!" என்ற கோபமான பேச்சையடுத்து, கதவின் தாழ்ப்பாள்கள் நீக்கப்படும் ஒலி கேட்டது.



"சக்கு!" என்று மேகலை கூவினாள்.

வேலைக்காரி சக்கு ஒற்றைக் கதவைத் திறந்தாள். "உள்ளே வாங்க பெரியம்மா! யார் தடுக்கிறாங்க பார்த்திடறேன்! அழிஞ்சு போவாங்க உங்களை இப்படி —"

அவள் சொல்லி முடிக்கவில்லை.

வளையணிந்த சிவந்த கரமொன்று அவள் கூந்தலைப் பிடித்து இள்ளே இழுத்தது. அடுத்த நிமிடமே கதவுகள் மீண்டும் பெருத்த ஓசையுடன் சாத்திக் கொண்டன. "அற்ப நாயே! யாரடி கொடுத்தார்கள் உனக்கு அதிகாரம்! தோலை உரித்து விடுவேன்! ஜாக்கிரதை!" என்ற உறுமல் கேட்டது.

மரமாக நின்றாள் அம்மா. அடைந்து கிடந்த துயரமெல்லாம் நீராகி, கண்வழியே வழிந்தோடிற்று. தன் வீட்டுக்குள்ளே இருப்பவள், தனக்கு வழிவிடாமல் தடுப்பவள், யாரென்பதைக் கண்டதும் அவள் உடல் குலுங்கிற்று. "இந்த நரகத்தில் அரை நிமிஷம்கூட நிற்க மாட்டேன் மேகலை! நீ என்ன வேண்டுமானாலும் செய்து கொள். என்னால் இருக்க முடியாது! புறப்படு ஆனந்தி," என்று பதறும் குரலில் சொல்லிவிட்டு வாசலுக்கு ஓடினாள்.

ஆனந்தி அவளைப் பின்தொடர்ந்த அதே சமயம், ஒரு சிறு கார் சடாரெனப் பிரேக் போட்டு நின்றது.

"சௌந்தரம்! என்ன இதெல்லாம் அலங்கோலம்?" என்று அதை ஓட்டி வந்தவர் கேட்டார்.

டாக்டர் ராமேசுவரம்தான். சிறுவயது முதல் அம்மாவை அறிந்தவராகையால், அவளைப் பெயர் சொல்லி ஒருமையில் அழைக்கும் உரிமை பெற்றவர். 'அவரும் வரட்டும்! ஊரே கூடட்டும், அப்பாவின் மானம் சந்தி சிரிக்கட்டும்!' என்று மேகலை கறுவிக் கொண்டாள்.

காரின் பின்கதவை அவசரமாகத் திறந்து அம்மாவும் ஆனந்தியும் ஏறிக்கொண்டார்கள். அம்மா தலையைக்

குனிந்துகொண்டு. ஆனால் பதட்டத்துடன் அவரிடம் ஏதோ கூறினான்.

டாக்டர் காரிலிருந்து இறங்கி வந்தார் மேகலையிடம். "ஊர் சிரித்தால் யாருக்கு அவமானம் மேகலை? உள்ளே இருப்பவர்களுக்கா? பேசாமல் வா என்னோடு. நான் சக்கரவர்த்தியைத் தனியாகப் பார்த்துப் பேசுகிறேன்," என்றார்.

"அந்தக் காரியத்தை நானே செய்வேன். செய்யத்தான் போகிறேன். அவர் வரட்டும்," என்றாள் மேகலை பிடிவாதமாக.

சிறிது தயங்கினார் டாக்டர். பிறகு, "உன் இஷ்டம்," என்று சொல்லிவிட்டு அகன்றார்.

கார் புறப்பட்டது, அம்மாவையும் ஆனந்தியையும் சுமந்துகொண்டு.

பிறந்து வளர்ந்து தவழ்ந்து விளையாடிய அதே வீட்டின் வாசற்படியில் பைத்தியக்காரியைப் போல, பிச்சைக்காரியைப்போல, அந்நியப் பெண்ணைப்போல, தான் உட்கார்ந்திருப்பதை எண்ணி மருகினாள் மேகலை.

இதே கதவு சாத்தும் காரியத்தை அவள் விளையாட்டாக நடத்தியதுண்டு. குழந்தைப் பருவத்தில் அம்மாவும் அப்பாவும் இரண்டு நாளைக்கொரு முறை கடைக்கோ கண்ணிக்கோ காரில் புறப்பட்டு விடுவார்கள். மேகலை கூட வந்தால் கண்டதையெல்லாம் வாங்கிக் கொடுக்கும்படி நச்சரிக்கிறாளென்று வேலைக்காரி சக்குவிடம் விட்டு விட்டுப் போய்விடுவார்கள். அவள் மாடிக்குத் தூக்கிக்கொண்டு போய்ப் பராக்குக் காட்டும் சமயத்தில் கார் புறப்பட்டு விடும். இனிமேல் இந்தச் சக்குவிடம் ஏமாறக் கூடாது என்று ஒவ்வொரு முறையும் மேகலை உறுதி கொள்ளுவாள். ஆனால் ஒவ்வொரு முறையும் சக்கு ஒரு புதுத் தந்திரத்தைக் கையாண்டு அவளை மாடிக்குக் கொண்டுபோய் விடுவாள்.



கார் வந்து நிற்பதைப் பார்த்ததும் கோபமான கோபம் வரும் மேகலைக்கு.

ஓடிவந்து கதவைச் சாத்தித் தாளிட்டு விடுவாள், அவர்கள் உள்ளே நுழையுமுன், சக்கு அந்தச் சமயத்தில் மட்டும் அவளை நெருங்கவே நடுங்குவாள். மேகலையின் முப்பத்திரண்டு பல்லும் புறங்கையில் பதிந்து விடும் என்று அவளுக்குத் தெரியும்.

இதோ, இதே ஜன்னலின் முன்னால், இதே பூச் செடிக்குப் பின்னால், இதே நீர்த் தொட்டியருகே நின்று கொண்டு அப்பாவும் அம்மாவும் கொஞ்சுவார்கள். "சமர்த்தில்லையா? நாளைக்குக் கட்டாயம் அழைத்துப் போகிறேன்," என்பாள் அம்மா.

"எனக்கு என்ன வாங்கி வந்தாய்?" என்று மேகலை விரட்டுவாள்.

"இதோ," என்று அப்பா கை நிறையச் சாக்லேட்டை ஜன்னல் வழியே கொடுத்த பிறகுதான் வாசல் தாழ்ப்பாள் விலகும்.

பன்னிரண்டாண்டுகளுக்கப்புறம் விதி அதே விளையாட்டை அவளிடம் தலைகீழாக ஆடிக் காட்டுகிறது!

கள்ளென்று வெயில் ஏறிக் கொண்டிருந்தது. மேகலை எழுந்து, செடிகளின் ஓரமாய்க் குறுக்கும் நெடுக்கும் நடக்கலானாள்.

'எதைச் சாதிப்பதற்காக இங்கே காத்திருக்கிறேன்?' என எண்ணிப் பார்த்தாள். பதில் கிடைக்கவில்லை. மாலியைப் பற்றிச் சிந்தித்தாள். ஆயிரம் பதினாயிரம் வேதனைகளை மிதித்தொதுக்கும் பழைய இன்பமான நேரங்களை நினைவில் கொண்டு வந்தாள். புதிய கவலைகள் எழுந்தன. இனி ஆனந்தியும் மாலியும் சந்திப்பது நிச்சயம். சந்தித்தபின்?...

திடீரெனச் சளசளவென்ற நீர்த்தாரை மேகலையின் தலையிலும் தோளிலும் விழுந்தது.

முதல் ஒரு கணம் என்ன நடந்ததென்பதையே அவளால் ஊகிக்க முடியவில்லை. சில்லென்று தோள்கள் நனைந்தபோதுதான் தன் நினைவு வந்தவளாக, திகைப்புடனும் சினத்துடனும் தலையை நிமிர்த்தி உயர நோக்கினாள்.

காலோடு தலை தீப்பற்றிக் கொண்டாற்போல எரிந்தது.

"வெரி ஸாரி. உன்னைக் கவனிக்கவேயில்லை."

வாயையும் மோவாயையும் கழுவியவாறு, மாடி வராந்தாவில் கைப் பிடியில் சாய்ந்து நின்றிருந்தாள் மனோரமா. அலட்சியமானதொரு பாவத்தில் அவளுடைய தலை சாய்ந்திருந்தது; விழிகள் செருகியிருந்தன.

நரம்புகளை உடைத்துக்கொண்டு குருதி பீறிட்டாற்போன்ற ஆங்காரம் எழுந்தது மேகலையின் இதயத்தில். ஒரே எட்டில் வாசல் கதவையடைந்து படபடவென்று முட்டியால் அறையலானாள்.

மறுபுறத்திலிருந்து பலத்த வாக்குவாதம் கேட்டது.

"திறக்காதே மனோரமா."

"நகர், சொல்கிறேன். எனக்குத் தெரியும்."

"கூடாதென்றால் கூடாது. அவர் கட்டளையை மீறக்கூடாது."

"நான் சொல்லிக் கொள்கிறேன் அவரிடம். விலகு."

படக்கென்று தாழ்ப்பாள் நீக்கிக் கொண்டது. புன்னகையுடன் மனோரமா அழைத்தாள்: "உள்ளே வா மேகலை. பலகாரம் சாப்பிட்டுவிட்டு கை கழுவிக் கொண்டிருந்தேன். கீழே நீ இருப்பதைப் பார்க்கவில்லை. வெரி ஸாரி."



காதுக்கருகில் சொட்டிய நீரைப் புடவைத் தலைப்பால் துடைத்து விட்டுக்கொண்டு அவளை ஏறிட்டு நோக்கினாள் மேகலை. அந்தக் கூந்தல் சுருள்களின் திமிர், கழுத்தின் திரட்சி, தோளின் கடைசல், உதட்டின் சுழிப்பு — அத்தனை வசீகரங்களும் அவளுடைய ஆத்திரத்தைக் கிளப்புவதாகவே அமைந்தன. கேவலமான இந்தக் கருவிகளின் துணையைக் கொண்டல்லவா இந்த வீட்டுக்குள்ளே இவள் புகுந்து கொண்டாள்?

அந்த முகத்தைக் கதவோடு மோதி ஒரே அறையில் நசுக்கிவிட வேண்டும் போலக் கோபம் சுடர் விட்டெரிந்தது. ஆயினும் அவள் நிதானத்தை இழக்கவில்லை.

மனோரமா இன்னும் சிறிது விலகிக் கொண்டாள். "உள்ளே வா மேகலை. நான் கூப்பிடுகிறேன், உள்ளே வா."

"மனோரமா!" என்று தாண்டவம் பின்னாலிருந்து மீண்டும் எச்சரித்தான்.

குபீரென மேகலை முறுவலித்தாள். அநீதியாகப் பறித்துக்கொண்ட சுகங்களை இழப்பதில் இவர்களுக்குள்ள நடுக்கத்தை இப்போதுதான் அவளால் உணர முடிந்தது. அத்தகைய பீதி என்னிடத்தில் ஏற்படவில்லை. ஏன்? என் பக்கம் தர்மமும் நியாயமும் நீதியும் இருக்கின்றன. இனி நான் இவர்களைக் கண்டு பயப்பட மாட்டேன்' என்ற புதிய உணர்வு உள்ளத்தே பிறந்ததும் அவளுடைய பதட்டம் குறைந்தது.

"பயப்படாதே தாண்டவம்," என்றாள் புன்னகையை விடாமல். "உரிமையில்லாதவர்கள் கூப்பிட்டால் நான் உள்ளே வந்துவிட மாட்டேன். அழைப்பதற்கு அதிகாரம் உள்ளவர் வரட்டும். நுழைவதற்கு எனக்குள்ள உரிமையை நிரூபித்துக் கொள்கிறேன்."

"ரொம்ப நல்லது. வெளியிலேயே உட்கார்ந்திரு," என்று அவளுக்குக் கிண்டலாகப் பதிலளித்த தாண்டவம்.

21069
374258)

"மனோரமா! அப்புறம் இவளிடம் என்ன பேச்சு? கதவைச் சாத்து," என்றான் தங்கையிடம்.

"படா ரோஷக்காரியா இருக்கிறாயே!" என்றாள் மனோரமா அண்ணனைப் பொருட்படுத்தாமலே.

"பின்னே உன்னைப் போலிருக்கச் சொல்லு கிறாயா?"

"ஆக, நான் ரோஷமில்லாதவள், மானங்கெட்ட வள்! அப்படித்தானே?" ஓரமாக இருந்த நாற்காலியை நிலைப்படிக்கப்பால் இழுத்துப் போட்டுக்கொண்டு உட்கார்ந்தாள் மனோரமா. "எதைக்கொண்டு அப்படிச் சொல்லுகிறாய் மேகலை? அதையும் தெரிவித்து விடேன்."

"அதை என் வாயால் சொல்லக்கூட அருவருப்பா யிருக்கிறது."

"த்சு, த்சு" என்று மனோரமா கேலி சொட்டச் சூள் கூட்டினாள். "என்ன அண்ணா அப்படிப்பட்ட விஷயம்? எதைச் சொல்லுகிறாள் இவள்?"

தாண்டவத்துக்குத் தொடக்கத்திலிருந்த தயக்கம் மறைந்துவிட்டது. உடன்பிறந்தவளின் குதர்க்கப் பேச்சை ரசித்தவனாக "தெரியவில்லையா மனோ? அவள் அப்பாவை அநியாயமாய் அவள் அம்மாவிடமிருந்து பறித்துக் கொண்டாயே, அதைத்தான் சொல்லுகிறாள்."

"ஐயோ பாவம்" என்றாள் மனோரமா. "இவள் அப்பா ஒரு பிளாஸ்டிக் பொம்மை. அதை இவள் அம்மா இடுப்பில் வைத்துக் கொஞ்சிக் கொண்டிருந்தாள். அதை நான் பிடுங்கிக் கொண்டுவிட்டேன். அருவருப்பான விஷயம்தான்." திடுப்பென்று அவள் குரலில் உஷ்ணம் ஏறிறு. "என் அங்கேயெல்லாம் என்ன வாழுகிறதாம், ஒய்யாரக் கொண்டையும் தாழம்பூவுமாய்?"

'பொறு, பொறு! நிதானமிழக்காதே!' மேகலை பல்லைக் கடித்துக்கொண்டு தன்னைத்தானே எச்சரித்துக் கொண்டாள்.



"போட்டாயே ஒரு போடு!" என்று தாண்டவம் சோரமாக நகைத்தான். "எதைச் சொல்லுகிறாய் என்று சொல்லட்டுமா?"

"சொல்லேன்."

"தங்கையின் காதலனை மேகலை தட்டிப் பறித்தாளே அதை!"

குப்பென்று மேகலைக்கு வியர்த்தது.

மனோரமா தலையை அசைத்தாள். "அது இவள் விவகாரம். நமக்கென்ன? நான் சொல்ல வந்தது வேறே."

"என்ன?"

"கொஞ்சம் முன்னாடி எவனோ ஒரு டாக்டர் காரில் வந்தான். அவனோடு இவள் அம்மா சவாரி கிளம்பினாளே ஜோராய்..."

சுளீரென்று அவள் முகத்தில் பச்சைத் தண்ணீர் படு வேகமாக வந்து விழுந்தது வெளியிலிருந்து!

திடுக்கிட்டுத் திரும்பிய மேகலை, "மாலி!" என்று நெஞ்சை அடைக்கக் கூவிக் கொண்டு பாய்ந்தாள்.

தொட்டியிலிருந்து நீர் மொண்டெடுக்க உதவிய தகரக் குவளையைத் தாண்டவத்தின் காலடியில் விசிறி யெறிந்தான் மாலி. "வெரி ஸாரி! வெரி வெரி ஸாரி! நீங்கள் இருப்பதைப் பார்க்கவேயில்லை!" என்றான்.

கண்ணிமைக்கும் நேரத்துக்குள் நடந்துவிட்ட அந்த நிகழ்ச்சியின் வேகத்திலிருந்து முதலில் மீண்டவன் தாண்டவம்தான், "டேய்" என்று உறுமலுடன் தாவி யெழுந்து மாலியின் கையை வளைத்துப் பற்றி உள்ளே இழுத்துத் தள்ளினான்.

அவன் எழுந்திருக்க, "மாலி!" என்று மேகலை பதற, "அண்ணா!" என்று மனோரமா வீறிட —

தான் அமர்ந்திருந்த நாற்காலியைத் தூக்கி மாலியின் தலையை நோக்கி வீசினான் தாண்டவம்.

பீரிட்டுக்கொண்டு வந்தது ரத்தம். மாலி சமாளித்துக் கொண்டு தாண்டவத்தைத் தள்ளி அமுக்கி அடக்கப் பார்த்தான். முதலில் அவன் கையே ஓங்கி யிருந்தது. ஆனால் தாண்டவம் திமிறி எழுந்துவிட்டான். மாலியின் கரங்களை முதுகுக்குப் பின்னால் வளைத்து முறித்தவாறு "மேகலை! மரியாதையாக இந்த இடத்தை விட்டு ஓடிப்போ! ஒரு நிமிஷம் நிற்காதே!" என்று கர்ஜித்தான்.

"மாட்டேன்! முடியாது! மாலி! மாலி!" என்று கேவினாள் மேகலை.

தாண்டவத்தின் கண்கள் எரி கொள்ளிகளாகின. அவனுடைய தசைகள் புடைத்து நரம்புகள் முறுக்கேறுவது வெளிப்படையாகத் தெரிந்தது. "பத்து எண்ணுகிற வரையில் உனக்கு அவகாசம். ஓடிவிடு. வெளியே போய்ப் போலீசையோ வேறு யாரையோ அழைத்து வர முயன்றாய், தொலைந்தான் இவன். என் கையில் விலங்கு ஏறுமுன் இவன் கழுத்தில் என் விரல் ஏறிவிடும்! உஷார்! போ! போ!"

மனோரமாகூடப் பீதி வசப்பட்டுப் பேசாது நின்றாள்.

மாலிக்கு நினைவு தப்பிக்கொண்டே வந்தது. ஆயினும் உதட்டைச் சிரமத்துடன் பிரித்து, "போய்விடு மேகலை!" என்றான் ஒவ்வோர் எழுத்தாக.

பித்துப் பிடித்தவளாக மேகலை வெளியே ஓடினாள்.

மாலியின் உடம்பு தொய்ந்தது.

"ஆனாலும் உனக்கு இத்தனை கோபம் ஆகாது அண்ணா" என்றாள் மனோரமா. அவள் மடியில் நினைவிழந்து கிடந்தான் மாலி. பின் மண்டையில் கசகசத்துக் காணப்பட்ட இடத்தில் பஞ்சை மடித்து வைத்துக் கொண்டிருந்தாள் அவள்.



"கிடக்கிறான் நாய்!" வெறி யானை போல அறையில் உலாவிக்கொண்டிருந்த தாண்டவம் சீறினான். "ரொம்ப நாளாக இவனுக்குச் சூடு காட்ட நினைத் திருந்தேன். இன்றைக்கு வகையாக மாட்டிக் கொண்டான்."

"பெரியவர் வருகிற நேரம்," என்று வாசலைப் பார்த்தவாறு பேசினாள் மனோரமா. இந்த மாதிரி நாம் அவருடைய வீட்டுக்குள் கலாட்டா செய்ததை ஒரு நாளும் மன்னிக்க மாட்டார். அப்புறம் என் திட்டமே குட்டிச் சுவர்! வேலைக்காரர்களிடம் சொல்லி வைத்தாயா?"

"எவனாவது மூச்சுவிட்டால் இவனுக்குக் கிடைத்த கதிதான் என்று சொல்லிவிட்டேன். நடுங்காதே."

"யார் நடுங்குகிறார்கள் என்பது அப்புறம் தெரியும். காரை எடு" என்றாள் மனோரமா பதட்டமின்றி.

**மா**லி மெல்லப் புரண்டான்.

அந்தகாரத்தில் முழுகியிருந்தது அறை.

விண் விண்ணென்று தெறிக்கும் தலைக் காயத்தை மறந்து சிந்தனைகளை ஒழுங்குபடுத்த மாலி முயன்றான். சோப்புக் குமிழிகளைப் போல அவை பிடிக்கு அகப் படாமலும், பிடிப்பட்டாலும் உடைவதுமாக இருந்தன.

ஸ்பிரிங் சுருள்கள் அமைந்த கட்டிலில், உயரமான மெத்தை உடம்புக்கு இதமாக இருந்தது. மந்தைவெளி அறையில் உள்ள கயிற்றுக் கட்டிலில் ஒவ்வொரு கயிறும் ஒவ்வொரு காலும் மனக்கண்ணெதிரே நின்றன.

விடியற்காலை வேளையாக இருக்க வேண்டும். கனத்த கம்பளி போர்த்தப்பட்டிருந்தும், தேகத்தின் மேலே ஈரத்துணி சுற்றியிருப்பது போல உடம்பு வெட வெடத்தது. இடுப்புக்குப் பக்கத்திலிருந்த தலையணையை இறுக அணைத்துக் கொண்டான்.

எழுந்திருக்க முயன்றான். முடியவில்லை. ஆனால் மூச்சைப் பிடித்துக்கொண்டு பிரயாசைப் பட்டால் எழுந் திருக்க முடியும் என்ற நம்பிக்கை பிறந்தது. அலுப்புடன்

அசைவற்றுப் படுத்துக் கொண்டான். இப்போது எழுந்திருந்து என்ன ஆக வேண்டும்?

நினைவு... நடந்ததெல்லாம் நினைவு...

வேகமாகக் கடைத்தெருவை நோக்கி நடந்து கொண்டிருக்கிறான்... இல்லை, பஸ் ஸ்டாண்டை நோக்கி. ஆம். கையில் புத்தகங்கள் இருந்தன. கல்லூரிக்கு நேரமாகி விட்டது. டாக்டரின் சிறிய கார் குறுக்கே வருகிறது. 'ஹலோ!' என்று கையை ஆட்டுகிறான். டாக்டரும் கையை வீசி விட்டுப் போகிறார்... இல்லை போகவில்லை. சட்டென்று காரை நிறுத்தி அவனை அருகே கூப்பிடுகிறார். ஏதோ சொல்லுகிறார். என்ன? என்ன?

ஆமாமாம்... 'சக்கரவர்த்தியின் மூத்த பெண் மேகலை தன் வீட்டு வாசலில் அடம்பிடித்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிறாள். போய்க் கவனி. அவள் அம்மாவும் தங்கையும் டிஸ்பென்ஸரியில் இருக்கிறார்கள்' என்கிறார். ஒன்றும் புரியவில்லை. புத்தகங்களைக் காருக்குள் எறிந்து விட்டு மாடவீதிக்கு ஓடுகிறான். இதோ மேகலை நிற்கிறாள்... இதோ மனோரமா மாடியிலிருந்து தண்ணீரை இறைக்கிறாள். 'ஸாரி' என்கிறாள். மேகலையும் அவளும் வாசலில் வாக்குவாதம் செய்கிறார்கள். மாலி வந்ததை அவர்கள் கவனிக்கவில்லை.

'நான் ஆத்திரத்துடன் என்னவோ செய்தேன். எனக்கு எதுவோ நேர்ந்தது.'

சிந்தனையின் கூர்மை அவன் களைப்பை அதிகப் படுத்திற்று. எதைப் பற்றியும் யோசிக்காமல் வெறுமையான மனத்துடன் இருப்பது எப்படி? கிழிந்த தோரணம்போல் அலையும் உள்ளத்தைக் கட்டுப்படுத்துவது எப்படி?

மெதுவாய்க் காலை நகர்த்தி, சுற்று வட்டாரத்தை ஆராய்ந்தான். ஒரு ஜன்னல் தட்டுப்பட்டது. ஒரு பலத்த பிரயத்தனத்துடன் எழுந்து உட்கார்ந்தான் படுக்கையில். சாளரத்தின் கீழ்க் கதவைத் திறந்தான். நிசப்தமும் இருட்டும் தழுவிக் கொண்டிருந்தன. சாம்பலில் புரட்டியெடுத்த



குன்றிமணிகளைப் போலத் தாரகைகள் பனியில் நனைந்து மங்கலாய் மினு மினுத்தன.

தெப்பக்குளம் எங்கே? கோபுரம் எங்கே? கண்ணை வலித்து ஆராய்ந்தான். வெறும் பொட்டல் காடான பிரதேசமே தெரிந்தது.

நிச்சயம் இது மயிலாப்பூர் அல்ல. சக்கரவர்த்தியின் வீடல்ல. வேற்றிடம்.

யார் தனக்கு இவ்வளவு உபசாரமாக, பந்தோபஸ்தாக இடம் கொடுத்துப் படுக்க வைத்திருக்கிறார்கள்?

உடம்பில் தெம்பு ஏற்பட ஏற்பட, இந்த இடத்தை விட்டு வெளியேற வேண்டுமென்ற துடிப்பும் அதிகரித்தது. படுக்கையிலிருந்து இறங்கி நின்றான். தரையின் சிலுசிலுப்பு உள்ளங்காலைக் குத்தியெடுத்தது. தடுமாறியபடி நடந்தான்.

கதவு எதிர்ப்பட்டது. இழுத்தான். திறக்க முடியவில்லை. வெளியே தாளிடப்பட்டிருக்கிறது போலும்.

குளிரில் உடம்பு மேலும் வெடவெடத்தது. திரும்பப் படுக்கையில் வந்து சாய்ந்தான்.

காலம் ஓடிற்று. நித்திரை வரவில்லை.

வெளியே தாள் திறக்கப்படும் ஓசை கேட்டது.

கண்ணைப் பாதி திறந்துகொண்டு உற்று நோக்கினான் மாலி.

கதவும் பாதி திறந்தது. வெகு தூரத்தில் எரியும் விளக்கின் வெளிச்சத்தில், வாசலின் குறுக்கே நிற்கும் உருவம் நிழல் படம்போல, வெளி வடிவம் மட்டுமே தெரிந்தது.

உடம்பின் திரட்சி, கேசத்தின் சுருள் — யார் என்பது புலப்பட்டு விட்டது.

மனோரமா.

ஓசையின்றி உள்ளே வந்து, ஓசையின்றிக் கதவைச் சாத்தினாள் அவள். விளக்கின் வெளிச்சம் தடைப்படவே அவளுடைய உருவமும் இருளில் கலந்தது.

காலடியோசை மாத்திரமே கேட்டது, கிட்டக் கிட்ட

மாலியின் உடம்பு ஒருமுறை சிலிர்த்தது. உஷ்ணத்துக்கு ஏங்கி, தலையணையை மார்போடு இறுக்கிக் கொண்டான்.

## 9

**த**க்காளிப் பழ அழுகல்கள்; மிதியுண்டு நசுங்கிய கீரைச் சிதறல்கள்; கசாப்புக் கடைகளிலிருந்து ஓயாது வரும் 'டக் டக்' வெட்டோசை; மூக்கைக் குமட்டும் நாற்றம்; பலசரக்குக் கடைகளில் புடைத்தெறிந்த கூளங்கள்; குறுக்கும் நெடுக்கும் ஓடும் கோழிகள்; ஈர மரத்தூள் உலர்த்திய கோணிகள்; இடிக்கும் கூடைகள்; துப்பும் மனிதர்கள்.

இவ்வளவையும் மிதித்துக் கொண்டும் தாண்டிக் கொண்டும் இடித்துக் கொண்டும் சகித்துக்கொண்டும் ஓடினாள் மேகலை. அவள் இதயத்துக்குள்ளே கொந்தளித்த இரைச்சலுக்கு முன்னே மந்தைவெளியின் சந்தடி ஒரு பொருட்டாகவே இல்லை.

இரண்டு விநாடிகளுக்கு முன்புவரைகூட அவளுக்கு இங்கே வரும் உத்தேசம் கிடையாது. தாண்ட வத்தால் விரட்டப்பட்டு, புத்தியும் சிந்தனையும் குழம்ப ஓடியவள், மேற்கு மாட வீதியில், கோபுரத்துக்கு நேர் எதிர்ப் புறத்தில் வந்த போதுதான் நின்றாள். திடுப்பென்று மப்புப்



போட்ட வானமும் வாடை சுமந்து வந்த தெப்பக் குளக் காற்றும் அவளை ஆசுவாசப்படுத்தின.

எண்ணங்களை ஒழுங்குபடுத்திக் கொள்ள வீண் முயற்சி செய்தவாறு மெல்ல நடந்தாள்.

"ஹோல்டான்! ஹோல்டான்!" என்று யாரோ கத்தினார்கள்.

"மூணாம் நம்பர் இங்கே நிற்காதய்யா! மந்தை வெளி பஸ் வரும். அங்கே போய் நில்லுங்கள்," என்று இன்னொரு குரல் பதிலளித்தது.

மந்தைவெளி!

மின்னலடித்தாற்போல் பளிச்சென்று உதயமான யோசனையுடன் மேகலை நின்றாள்.

மந்தைவெளியில்தானே அவருக்கு ஜாகை என்று சொன்னார்? எங்கோ விசாரித்தால்... ஆம். மாவு மில்லில் கேட்டால் வீட்டைக் காட்டுவார்கள் என்று சொன்னாரே!

அப்பாவோ அம்மாவோ உடன் பிறந்தவரோ உற்றாரோ யாருமில்லாதவர்தான். ஆனால் வேண்டிய நண்பர் என்றுகூடவா யாருமிருக்கமாட்டார்கள், அந்த வீட்டில்?

இரைச்சலைக்கொண்டு திசையறிந்து மாவு மில்லை அடையாளம் கண்டு கொண்டாள்.

உடைசல் மேஜையருகே உட்கார்ந்திருந்த தாடிக் காரர், "மாலி எங்கே இருக்கிறார்!" என்று மேகலை கேட்டதை உடனே புரிந்து கொள்ளவில்லை. பலகைத் தடுப்பைத் தாண்டி மறுபுறம் சென்றாள். யந்திரம் 'ஙொய்' என்று சுருதியைக் குறைத்துக் கொண்டது.

"என்ன மாவு?" என்று வினவினார் திரும்பி வந்ததும்.

"மாலி... காலேஜில் படிக்கிறாரே?"

தாடிக்காரர் தெருவில் இறங்கி, ஒரு சந்தைக் காட்டினார். "அங்கே திரும்பி வலப்புறத்தில் பச்சைக் கம்பி போட்ட வீட்டில் கேளுங்கள். வாசலில் ஒரு தையல்காரன் இருப்பான்," என்று அடையாளம் சொன்னார்.

"நன்றி," என்று கூறிவிட்டு விரைந்தாள் மேகலை. "ஹூம்! காலம் கெட்டுப் போச்சு!" என்று தாடிக்காரர் முணுமுணுத்தது அவள் காதில் விழவில்லை.

அவர் சுட்டிக் காட்டிய சந்து அந்தக் கோடைக் காலத்திலும் கூட ஈரம் கசிந்திருந்தது. நாகரிகம் மிகுந்த மயிலாப்பூரில்தான் இப்படி இருக்க நேரிட்டதை எண்ணி வெட்கப்பட்டது போல ஆயிரத்தெட்டுக் கோணலுடன் காணப்பட்ட அதன் வழியே நடந்த மேகலை, பச்சைக் கம்பி போட்ட வீட்டை எளிதாகக் கண்டுபிடித்தாள். அதை யடுத்து இரண்டு மூன்று குடிசைகள்தான் இருந்தன.

ஒடிசலான தையல்காரன் நூலின் நுனியை உதட்டால் உருவுவதை நிறுத்திக்கொண்டு, "வாங்கம்மா, என்ன வேணும்?" என்று விசாரித்தான் மரியாதையுடன், மேகலையின் ஆடை உயர்வைக் கண்டதும்.

"மாலி... மாலி..."

"அவரா?" தையல்காரனுக்குச் சப்பென்றாகி விட்டது. தன் முதுகுக்குப் பின்னால் செல்லும் குறுகலான மாடிப் படியில் பார்வையை ஓட்டிவிட்டு, "மாடி ரூம் பூட்டி யிருக்குது. காலேஜுக்குப் போயிருப்பாரு," என்றான்.

எப்படி ஆரம்பிப்பதென்றே மேகலைக்குத் தெரிய வில்லை. "இல்லை... வந்து... அவர் ஆபத்திலே அகப்பட்டுக் கொண்டிருக்கிறார். ஒரு ஆசாமி அவரை அடித்துப்போட்டு விட்டான். நான் கண்ணாலே பார்த்தேன். அவருக்கு வேண்டியவர்கள் யாராவது இருந்தால் உதவிக்கு அழைத்துப் போகலாமென்று வந்தேன்..."



மெஷின் மீதிருந்த துணியைச் சரேலெனத் தள்ளி விட்டு அவன் எழுந்து கொண்டதும் மேகலைக்கு ஆறுதலேற்பட்டது.

"அடிச்சுப் போட்டார்களா? மாலியையா? நீங்க பாத்தீங்களா?"

"ஆமாம், ஆமாம்," என்றாள் மேகலை பரபரப்புடன். "சீக்கிரம் வாருங்கள்."

தையல்காரன் திண்ணையிலிருந்து குதித்தான். பக்கத்துக் குடிசைக்கு ஓடிப்போய், "வாத்தியாரே! வாத்தியாரே! இப்படி வெளியே வாங்க!" என்று உரக்கக் குரல் கொடுத்தான்.

மேகலை தெம்பு பெற்றாள். நல்ல வேளை! மாலிக்கு நண்பர்கள் இல்லாமல் போகவில்லை...

லுங்கி வேட்டியும் முண்டா பனியனும் அணிந்த ஒரு மீசைக்காரன் வெளியே வந்து, "என்னாய்யா, பட்டணம் கொள்ளை போச்சுது?" என்றான்.

"மாலி இல்லே மாலி? அவன் நல்லா உதை தின்னிட்டுக் கிடக்கிறானாம் எங்கேயோ!" என்றான் தையல்காரன்.

அவன் பயன்படுத்திய சொற்கள் மேகலையைத் திடுக்கிட வைத்தன.

"ஐஸடா குட்டி!" என்று தொடையைத் தட்டினான் மீசைக்காரன். மறுவினாடி, "தூ!" என்று தெருவில் காறித் துப்பினான். "எந்தப் பொம்பளை மேலயாச்சும் கை வைச்சிருப்பாண்டா! சோதா! இந்த அம்மா அவனுக்கு..."

மேகலை காதைப் பொத்திக்கொண்டு ஓட்டமாய் வெளியேறினாள் சந்தைவிட்டு. மாலி! உலகமே உங்களுக்கு விரோதமாகச் சதி செய்கிறதா?...

"இந்தாங்கம்மா! நில்லுங்க!" என்று அவள் தாவணியைப் பிடித்திழுத்தார்கள் யாரோ.

பயத்துடன் திரும்பிய மேகலை, ஒட்டி உலர்ந்திருந்தாலும் எட்டு மாதத்துச் சுமையுடன் கூடிய ஒரு கர்ப்பிணிப் பெண்ணைக் கண்டாள்.

"எந்தப் பாவிம்மா அந்த மவராசனை அடிச்சான்? அவனைப் பாடையிலே வைக்க..." என்று ஆரம்பித்தாள், அவள் நடுத் தெருவிலேயே.

"நீ... நீ யாரம்மா?"

"அந்தக் குடிசையிலேதாம்மா நான் இருக்கிறேன். அந்த மீசைக்காரப் பாவி என் புருஷன்தான். திருட்டுத் தண்ணி ஊத்திட்டு வந்து என்னைக் கொலை பண்ணிக் கிட்டிருப்பான் எப்பப் பாத்தாலும். அந்த மாலிதான் — அவன் நல்லாயிருக்கணும் சாமி — ஒரு நாள் பொறுக்க மாட்டாமே குடிசைக்குள்ளே வந்து வுட்டாரு சரியா. இப்ப என் வம்புக்கே வர்றதில்லை. ஆனா அன்னைக்கி நான்கூட என் புருஷனை ஒருத்தன் அடிக்கிறானென்று அவரோடு சண்டைக்குப் போயி..."

"நான் வருகிறேன். எனக்கு வேறே வேலை இருக்கிறது," என்று புறப்பட்டு விட்டாள் மேகலை. ஒரு பெண்ணைத் துணைக்கழைத்துக் கொள்வதால் என்ன நன்மை ஏற்படப் போகிறது? அதிலும் கர்ப்பிணியை.

"சொல்லு தாயே, நான் வர்றேன் உதவிக்கு," என்று பின் தொடர்ந்தாள் அந்தப் பெண்மணி.

"வேண்டாம் வேண்டாம். நானே பார்த்துக் கொள்கிறேன்," என்று அவளைத் தடுத்து நிறுத்தி விட்டு, மேகலை நடந்தாள். மாலியின்பால் நன்றி பாராட்ட ஓர் ஆத்மா இருக்கிறது என்ற உண்மை அவள் நெஞ்சுக்குள் கண்ணீரை எழுப்பிற்று.

அவள் கால்கள் தள்ளாடின; தலை சுற்றிற்று. காலையிலிருந்து வெறுமையில் உலர்ந்து கொண்டிருக்கும் வயிறு சுருட்டி எடுத்தது.



எப்படி எப்படியோ சுற்றிக்கொண்டு கச்சேரி ரோடை அடைந்தாள். நடையிலே வேகம் வெகுவாகக் குறைந்து விட்டது. அந்தப் பெண்ணையாவது கூப்பிட்டிருக்கலாமோ? கூப்பிட்டு...?

'புர்'ரென்று கிளம்பிச் சென்ற ஒரு போலீஸ் லாரி அவள் சிந்தனையைத் தடுத்தது. வெய்யிலில் பளபளத்த சிவப்புப் போலீஸ் கட்டிடம், 'அநீதிகளைத் தடுக்க நானிருக்கிறேன். உள்ளே வா' என்று அழைத்தது. சுறுசுறுப்பாக இங்குமங்கும் ஓடும் ஜவான்கள் அவளுக்குத் தைரியம் கூறினார்கள்.

போலீஸ் ஸ்டேஷன் வாசலை மிதித்தவள் தயங்கினாள்.

தாண்டவத்தின் எச்சரிக்கை மட்டுமல்ல. தான் பார்த்துள்ள அமெரிக்கக் கொலைக் கதைகளும் மேகலையின் நினைவில் எழுந்தன.

மாடவீதி வீட்டைப் போலீஸ் பட்டாளம் சூழ்ந்து கொள்கிறது. ஒவ்வொரு போலீஸ்காரராக ஓசையின்றி உள்ளே நுழைந்து, ஒவ்வொரு முக்கிய இடத்தைப் பிடித்துக் கொள்கிறார்கள். மெல்ல அணுகிய இன்ஸ்பெக்டர், மூடியிருக்கும் கதவை ஒரே உதையில் திறந்து விட்டு, ஆகாயத்தை நோக்கி ஒருமுறை சுடுகிறார். 'உள்ளே யார் இருந்தாலும் மரியாதையுடன் வாருங்கள்! இரண்டு நிமிஷம்!' என்கிறார். 'ஹஹ்ஹா!' என்று கொடூரமாகச் சிரிக்கிறான் தாண்டவம். அந்தக் காட்சி! 'உள்ளே ஓரடி வைத்தாலும் செத்தான்!' என்று உறுமியபடி மாலியின் கழுத்தை நெருக்குகிறான். இன்ஸ்பெக்டரும் மற்றவர்களும் உள்ளே நுழைகிறார்கள். அவர்களுக்கு உயிரைவிடச் சட்டம் பெரிது. கருணையைவிடக் கடமை பெரிது. அவர்கள் யந்திரங்கள். மனித உணர்ச்சியற்றவர்கள். எச்சரிக்கையைப் பொருட்படுத்தாமல் நெருங்குகிறார்கள்.

மாலியின் விழிகள் தெறிக்கின்றன. நரம்புகள் புடைக்கின்றன. மூச்சுத் திணறத் திணற —

'வேண்டாம், வேண்டாம்!' என்று தனக்குத் தானே உத்தரவிட்டுக்கொண்டு போலீஸ் ஸ்டேஷனை விட்டு வெகு வேகமாக ஓடினாள் மேகலை.

ராமேசுவரத்தின் டிஸ்பென்சரி.

பழைய மதில் சுவர். புதிய போர்டு. ரிக்ஷாவில் வெளியேறிக் கொண்டிருக்கும் ஓர் அம்மாள். இருமிக் கொண்டே உள்ளே போகும் கிழவர்.

ஆனந்தியும் அம்மாவும் இங்கேதான் இருப்பார்கள். பின்கட்டு காலியாக இருக்கிறது. எலியட்ஸ் ரோடில் உள்ள வீட்டில் இடம் இருக்காது. டாக்டருக்குப் பெரிய குடும்பம்.

மேகலை பெருமூச்சு விட்டாள்.

அம்மாவுக்கும் ஆனந்திக்கும் கவலையில்லை. தற்போதைக்காவது தஞ்சம் கிடைத்து விட்டது. யாரையும் அவர்கள் கெஞ்சவேண்டாம்; உதவிக்கு அழைக்க வேண்டாம்; பதைக்க வேண்டாம்; ஓடி அலைய வேண்டாம். அவர்களுக்குப் போராட்டங்களே கிடையாது...

"சின்னம்மா!"

"சக்கு"

வேலைக்காரி என்பதையும் மறந்து, வந்தவளை வாரித் தழுவிக்கொண்டாள் மேகலை. அதே கணம் பயங்கரமான ஐயம் முளைத்தது. எதற்காகத் தன்னைத் தேடி வந்திருக்கிறாள் இவள்?

"சக்கு? அவருக்கு... மாலிக்கு..."

"ஒண்ணும் நேராது, சின்னம்மா. நீங்க கவலைப் படப்போறீங்களேன்னுதான் ஓடியாந்தேன். ஆத்திரத்திலே அண்ணன் செய்த காரியத்துக்காக அந்தச் சின்னவள் காச்சு மூச்சுண்ணு கத்திட்டா."

"அவர் எப்படி இருக்கிறார்... மாலி?"



"ஒண்ணும் நேராதம்மா. பெரிய ஐயாவுக்குத் தெரிஞ்சு போனால் வம்புன்னு அந்தப் பெண் பயப்படுது. தங்கள் வீட்டுக்கு எடுத்துப் போய், குணப்படுத்தி, கெஞ்சிக் கூத்தாடி மன்னிப்புக் கேட்டுக்கலாம்னு காரிலே தூக்கிப் போட்டுப் போயிருக்காங்க."

"ஐயையோ! அவரை என்ன வேண்டுமானாலும் பண்ணி விடுவார்களே!" என்று பதைத்தாள் மேகலை.

"ஆ! பண்ணிடுவாங்களோ? எசகு பிசகாய் அடிச்சிட்டோமேன்னு உசிரைக் கையிலே பிடிச்சுக்கிட்டு நடுங்குறாங்க. நாங்க அத்தனை பேர் சாட்சி இருந்திருக்கிறோம்னு தெரியாதா?"

"அவர்கள் வீடு எங்கேயிருக்கிறது?"

சக்கு தலையைச் சொறிந்தாள். "ராயப்பேட்டையிலேதான் எங்கியோ... அட அவருக்கு ஒண்ணும் ஆகாதம்மா. நாளைக்கே இங்கே வந்து சேருவார் பாருங்களேன்!"

மேகலை அவள் கைகளைப் பற்றிக் கொண்டாள். "எதற்கும் நாளைக் காலையில் வந்து எனக்குத் தகவல் சொல்லு, சக்கு. எனக்கு அவர்... அவர் உயிர் மாதிரி..."

"புரியுது அம்மா. கவலைப்படாமே இருங்க," என்று தைரியம் கூறிவிட்டு அகன்றாள் சக்கு.

மேகலையின் மனப் பாரம் சற்றுக் குறைந்தது. ஆயினும், மனோரமாவின் வீட்டில் மாலி இருப்பதை எண்ணும்போது வேதனை ஏற்பட்டது. டிஸ்பென்ஸரிக்குள் நுழைந்தாள். முன்புறத்தில் நோயாளிகளின் கூட்டம் இருந்தது. மாலைச் சிகிச்சை ஆரம்பமாகி விட்டது போலும். தோட்டத்தின் வழியாகச் செல்லும் இன்னொரு பாதை மூலம், பின் கட்டை அடைந்தாள்.

குடியில்லாவிட்டாலும் இடம் சுத்தமாயிருந்தது. ஹாலை அடுத்த அறை வாசலில் ஆனந்தி குப்புறப் படுத்தவாறு ஒரு காகிதத் துண்டில் ஏதோ எழுத முயன்று

கொண்டிருந்தாள். அவளது கவலையற்ற நிலை, மேகலையின் மனநிலைக்கு நேர் எதிராக இருந்தது. ஆனந்தியின் சிறிய உதடுகள் லேசான சிரிப்புடன் எதையோ முணுமுணுத்துக் கொண்டிருந்தன. தலை, மனத்தின் பேச்சுக்குச் சுவாரசியமாகச் செவி கொடுப்பது போல ஒருபுறமாய்ச் சாய்ந்திருந்தது.

தங்கையைக் காணவே வெறுப்புற்றாற்போல மேகலை திரும்ப வெளிப்புறம் வந்தாள். யாரும், துளி இன்பம் அனுபவிப்பதையும் பொறுக்க முடியாத நிலையில் அவள் உள்ளம் இருந்தது. அதிலும் ஆனந்திக்கு என்ன உல்லாசம் வந்தது திடீரென்று?

சில வினாடிகளில் மேகலை சாந்தமடைந்தாள். பிறர் சந்தோஷமாயிருக்கக்கூடாது என்றெண்ணிய தன் அற்பத்தனத்தை நினைத்து நாணியவளாக மீண்டும் அவள் உள்ளே பிரவேசித்தபோது ஆனந்தி இல்லை. எழுந்து போய் விட்டிருந்தாள்.

கசங்கிய காகிதம் மூலையில் கிடந்தது. கால் அதைத் தாண்டிற்று; குறுகுறுப்பெடுத்த மனம் தாண்ட மறுத்தது.

திரும்பி வந்தாள். குனிந்து அதைப் பொறுக்கி யெடுத்துப் பிரித்தாள்.

'அன்புள்ள' என்று ஒரு வரி இருந்தது.

அது அடிக்கப்பட்டு, அதன் கீழே 'என் அன்புள்ள' என்று இன்னொரு வரி இருந்தது. பிறகு அதுவும் அடிக்கப் பட்டிருந்தது. கீழே பல அர்த்தமற்ற வெறும் கிறுக்கல்கள்; கோடுகளுள்ள பூக்கள்; வளையங்கள்; பட்சிகள்; ஆண் பெண் தலைகள்.

ஒன்றுமில்லைதான். ஆனால் ஓராயிரம் உணர்ச்சி களை அவை மேகலைக்குத் தெரிவித்தன. ஒவ்வொரு கோடும் ஒவ்வொரு உள்ளார்த்தத்தை வெளிப்படுத்திற்று.



குபுக்கென்று மேகலையின் கண் இமைகளைச் சூடான நீர் நிறைத்தது.

'மாலிக்கு யாருமே இல்லை என்று நினைத்தேனே! இதோ இருக்கிறாள்!' என்று அவள் உள்ளம் துள்ளிற்று. தன் காதலனின் காதலி. அவள், தனக்குப் போட்டி அவள் என்பன போன்ற எண்ணங்களெல்லாம் நெருப்பில் நீராய் உலர்ந்தன.

"ஆனந்தி! ஆனந்தி!" என்று குரல் கரகரக்கக் கூவியவாறு உள்ளே ஓடினாள்.

ஆனந்தி அவள் பரபரப்பைக் கண்டு அச்ச மடைந்தவளாக, "என்ன அக்கா, என்ன?" என்று பதட்டப் பட்டாள்.

"மாலி... அடிபட்டுக் கிடக்கிறார் ஆனந்தி! நம் வீட்டில்".

ஆனந்தியின் கண்கள் அகல விரிந்தன. அக்காவை ஏதும் புரியாமல் ஏறிட்டு நோக்கினாள், சில வினாடிகள்.

கடைசியில், "மாலியா? யார் அவன்?" என்று கேட்டாள்.

**பீ**ங்கான் கிண்ணத்தின் வயிற்றில் இன்னொரு சிகரெட் இறங்கிச் சப்பையாயிற்று. நுனியிலிருந்த நெருப்பு கடைசி மூச்சுப் போல மெல்லிய புகையை வெளியனுப்பி விட்டு உயிரை மாய்த்துக் கொண்டது.

மாலி மௌபரீஸ் ரோடு வீட்டுக்குக் கொண்டு வரப்பட்டு அப்போது அரைமணி நேரமாயிருக்கும்.

மனோரமா பின் கையைக் கட்டியபடி, உதட்டைக் கடித்துக்கொண்டு ஹாலின் நீள அகலத்தை அளப்பது போல் நடந்து கொண்டிருந்தாள்.

மாடியிலிருந்து இறங்கி வந்து கொண்டிருந்தார் ஒரு டாக்டர். கையிலிருந்த ஸ்டெதஸ்கோப் அவருடைய வயதையும் தொழிலனுபவத்தையும் மட்டுமின்றி, அவரது

வறுமையையும் பறைசாற்றிக் கொண்டிருந்தது தனது அழுக்கேறிய பழுப்பு நிறத்தின் மூலம்.

மனோரமா கவலையுடன் நெருங்கி வந்தாள். "ஒன்றும் பயமில்லையே டாக்டர்?"

"நோ, நோ, நோ! ராத்திரிக்குள் எழுந்து உட்கார்ந்து விடமாட்டானா?"

"ரொம்பத் தாங்ஸ் டாக்டர்."

அந்த புன்னகையில் கிறுகிறுத்தபடி வெளி நடந்தார் அந்த வயோதிகர்.

சிகரெட்டைப் பற்ற வைத்தான் தாண்டவம். "நல்ல சந்தர்ப்பம்!" என்று பல்லிடுக்கால் சொன்னபோது அதரத்தில் ஒரு புன்னகை பிறந்தது.

"ஆமாம், நூறு ரூபாய் நோட்டை எங்கே பார்த்திருக்கப்போகிறார் அந்த டாக்டர், பாவம்?" என்றாள் மனோரமா.

"டாக்டருக்குச் சொல்லவில்லை. எனக்குச் சொன்னேன்."

திடுக்கிட்டாள் மனோரமா. "உனக்கா!"

"மயிலாப்பூர் வீட்டிலேயே இருந்திருந்தால் இன்னும் அருமையான சந்தர்ப்பமாகப் பண்ணியிருக்கலாம். உன்னால் கொஞ்சம் கெட்டது. பரவாயில்லை."

"அண்ணா! என்ன உளறிக்கொண்டே போகிறாய்?" என்று சினந்தாள் மனோரமா.

"தன்னுடைய வீட்டுக்குள்ளே அடிதடி கலாட்டா நடந்தது என்று தெரிந்தால் சக்கரவர்த்திக்கு உதைப்பு ஏற்படும். ஒன்று, உதைப்பு ஏற்பட்டால் அதிலிருந்து மீள வழி தேடுவார். இரண்டு, மீள வழி தேடுவதானால் என்னிடம் உதவிக்கு வருவார். மூன்று, என்னிடம் உதவிக்கு வந்தால் நான்..."



"நிறுத்து!" என்று கர்ஜித்தாள் மனோரமா. "அவருக்கு இந்த விஷயம் எட்டவே கூடாதென்று நான் சொன்னது மறந்து விட்டதா?"

"அது உன் நன்மைக்கு. என் நன்மைக்கு, அது எட்ட வேண்டியிருக்கிறதே!"

மனோரமாவின் குரல் மேலும் வலுத்தது. "உன் நன்மை வேறு, என் நன்மை வேறு என்று ஆகிவிட்டது? அப்படித்தானே?"

"சே, சே! அவரவர்கள் அவரவர்கள் பிழைப்பைப் பார்த்துக்கொள்ள வேண்டியதுதான். நீ என்னமோ திட்டம் திட்டம் என்று அடிக்கடி சொல்லுவதில்லையா? அந்த மாதிரி எனக்கும் ஒன்று இருப்பது தப்பா? எத்தனை நாளைக்கு, சின்னப் பையன் மாதிரி உன்னிடமும் அம்மாவிடமும் பிச்சைக் காசு வாங்கிக் கொண்டு நிற்பது? நீயே சொல்லு."

அண்ணனுடன் எதிர்த்து வாதாடுவதில் பயனில்லை என்பதை மனோரமா கண்டு கொண்டாள். நயந்த குரலில், "உன்னை நான் அப்படி என்ன கேவலமாக நடத்தி விட்டேன் அண்ணா?" என்றாள்.

"நாக்கு அழுகி விடாதா நான் அப்படிச் சொன்னால்? நான் ஆண்பிள்ளை இல்லையா? கொஞ்சம் தனியாகவே பிஸினஸ் செய்யலாமே என்று உத்தேசம். அவ்வளவுதான்."

"கொள்ளையடிக்கப் போகிறாயா சாமர்த்தியமாய்?"

"புத்தி இல்லாதவன், கற்பனை இல்லாதவன் பிழைப்பு அது! நான் உழைக்கப் போகிறேன் — உடம்பை வளைத்தில்லை, மூளையை வளைத்து! சம்பாதிக்கப் போகிறேன் — ஐந்து பத்தில்லை, ஆயிரப் பதினாயிரமாய்!"

சிகரெட்டைக் கிண்ணத்தில் அழுத்திவிட்டு வெளியே புறப்பட்டான் தாண்டவம்.

"மாடிக்கு மட்டும் போகாதே! பயல் பக்கா முரடன்!" என்று எச்சரித்துவிட்டுக் கிளம்பினாள்.

அன்று இரவு அவன் திரும்பி வரவில்லை. மறுநாள் காலையில் சிவந்த விழிகளும் கலைந்த கேசமுமாய் வீடு திரும்பினான்.

நாலு படிக்கு ஒரு காலாகத் தாவி ஏறி மாடி அறையை அடைந்தான்.

இடிந்து விழுந்தாற்போல் நின்றான் வாசலில்.

அறைக் கதவு திறந்து கிடந்தது. மாலியைக் கிடத்தி யிருந்த படுக்கை காலியாயிருந்தது.

"மனோரமா!" என்று வீடே அதிர்ந்து விடுவது போல் கர்ஜித்தான் தாண்டவம்.

## 10

சக்கரவர்த்தி இரண்டு தடவை போன் செய்து பார்த்தார் தன் வீட்டுக்கு.

முதல் தடவை மனோரமாவே பேசினாள், "இன்னும் அவர்கள் வாசலில்தான் நிற்கிறார்கள்," என்று.

இரண்டாம் தடவை போனை யாரும் எடுக்க வில்லையென்று டெலிபோன் குமாஸ்தா தெரிவித்தார். கொஞ்ச நேரம் ஆபீஸ் வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தபின், மறுபடியும் கூப்பிட்டுப் பார்க்கச் சொன்னார். வீட்டில் யாருமே இல்லையென்று வேலைக் காரன் சொல்லுவதாகத் தகவல் கிடைத்தது.

சக்கரவர்த்தி திகைத்தார். வந்தவர்கள் போகட்டும். சரிதான். ஆனால் தாண்டவமும் மனோரமா வும் எங்கே போனார்கள்? ஏன் போனார்கள்? சௌந்தரம் அண்டை அயலாரைக் கூட்டிக் கலாட்டா பண்ணி அவர்களைத் துரத்தி விட்டாளா என்ன? அப்புறம் எதற்காக அவளும் போய் விட்டாள்?



வீட்டுக் குழப்பங்களை அளவுக்கு மீறி டெலிபோன் குமாஸ்தாவிடம் வெளிப்படுத்திக்கொள்ள அவர் விரும்பவில்லை. அதிலும் இப்போது அந்த வேலையைச் செய்துவரும் ராமமூர்த்தி மகா வாயாடி என்று பிரசித்தம். சீக்கிரமே அவனை வேறு இலாகாவுக்குத் தூக்க வேண்டும்...

நேரில் வீட்டுக்குப் போய்ப் பார்க்க வேண்டியது தான். யாரையும் விட வேண்டாமென்று கட்டளையிட்டு விட்டாரே தவிர, அதன் விளைவுகளைக் கண்ணால் பார்க்கும் துணிச்சல் அவருக்கில்லை. வேண்டா வெறுப்பாக மேஜை டிராயர்களைப் பூட்டலானார்.

எழுந்து கொள்ளும்போது —

பியூன் உள்ளே நுழைந்து, வெள்ளை வெளேரென்ற விசிட்டிங் கார்டொன்றை அவர் மேஜைமீது வைத்து விட்டுப் பணிவாக ஒதுங்கி நின்றான்.

சக்கரவர்த்தி திரும்ப அமர்ந்தார் தன் ஆசனத்தில், மோவாயைத் தடவியபடி.

"எங்கே இருக்கிறார் இவர்?"

"விஸிட்டர்ஸ் ஹாலில், சார்."

"இருக்கச் சொல். கொஞ்ச நேரத்தில் கூப்பிடுகிறேன்."

மீண்டும் விஸிட்டிங் கார்டை முறைத்துப் பார்த்தார். குழப்பத்துடன் அதை இரண்டாக, நாலாக மடித்தார். எட்டாக மடிக்க முடியாதபோது கீழேயிருந்த பிளாஸ்டிக் குப்பைக் கூடையில் அதை விட்டெறிந்தார்.

டாக்டர் ராமேசுவரம்.

அவருக்கு என்ன காரியம் தன்னிடம்?

அவருடைய உறவுக்காரப் பையன் அல்லது சிநேகிதர் பிள்ளை எவனுக்காவது வேலை தேவைப் பட்டிருக்கும். நிச்சயம் அதுதான். சக்கரவர்த்தி முகம் சுளித்தார். சிபாரிசுக்காக வேலைக் கொடுத்துக் கொடுத்து, திறமையற்றவர்களைக் கட்டிக்கொண்டு மாரடித்த

அனுபவம் அவருக்கு நிறைய உண்டு. கடந்த ஐந்து வருடங்களாக எந்தச் சிபாரிசையும் அவர் மதிப்பதில்லை. இன்னோர் ஆபீசில் கை காட்டி விட்டு விட்டு கம்மென்றிருப்பதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தார்.

ஆனால், டாக்டர் ராமேசுவரத்திடம் அப்படிக் கண்டிப்புக் காட்ட முடியாது. ஏறக்குறையப் பதினெட்டு வருட சிநேகிதம். சௌந்தரத்துக்கு அதையும் விட அதிக காலப் பழக்கம். ஏதாவது செய்துதான் ஆக வேண்டும்... இல்லை, ஏதாவது உதவி நாடகத்துக்கு டிக்கெட் விற்பதற்காக வந்திருப்பாரோ? அப்படியிருந்தால் பரவாயில்லை. நூறு ரூபாய்க்கு வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளலாம்.

மேஜை மணியை அழுத்தப் போன சமயம் டெலிபோன் புஸ்ஸென்றது.

"மனோரமா தேவி கூப்பிடுகிறார் சார்," என்ற குமாஸ்தா 'போடட்டுமா?' என்று கூடக் கேட்காமல் உடனே லயனை மாற்றிக் கொடுத்தான்.

"போய் விட்டார்கள்," என்று சுருக்கமான ஒரே சொல்லில், எடுத்த எடுப்பிலேயே ஆறுதல் தந்தாள் மனோரமா. தன் கவலையை அவள் எவ்வளவு தூரம் மதிக்கிறாள் என்பதை எண்ணி மகிழ்ந்தார் சக்கரவர்த்தி.

"வம்பு கிம்பு ஒன்றுமில்லையே!"

"கிட்டத்தட்ட ஒன்றுமில்லை."

"அதென்ன கிட்டத்தட்ட?" என்று சிரித்தார் சக்கரவர்த்தி. "எங்கேயிருந்து பேசுகிறாய் இப்போது?"

"மௌபரீஸ் ரோடு வீட்டிலிருந்து."

"ஏன்? ஏன் மனோரமா?"

"ஒன்றுமில்லை. என்னமோ போலிருந்தது அங்கே. வந்த வேளையும் சரியில்லாமல்..."

"இதோ பார் மனோ. நீ யார் மிரட்டலுக்கும் பயப்பட வேண்டிய அவசியமில்லை..."

"சே, சே! நீங்கள் இருக்கிற வரையில் நான் எதற்காக ஒருவருக்குப் பயப்படுகிறேன்? இன்னும் இரண்டு



நாள் கழித்து வருகிறேனே? வேறே ஒரு முக்கியத் தகவலுக்காகக் கூப்பிட்டேன்."

"என்ன?" என்று கவலையுடன் கேட்டார் சக்கரவர்த்தி. பார்வை குப்பைக் கூடையில் சென்றது. ஓ! ராமேசுவரம் காத்துக் கொண்டிருக்கிறாரே?

"உங்கள் சம்சாரம் டாக்டர் ராமேசுவரத்தோடு போயிருக்கிறாள்."

"என்ன?"

"எனக்கு அவர் பெயர்கூடத் தெரியாது. அண்ணா தான் சொன்னான். ரொம்ப நாள் பழக்கமோ? வந்தார். நல்ல மனிதர். இப்படிக் கலாட்டா பண்ணுவதைப் பற்றிக் கோபித்துக் கொண்டார். தன் காரிலேயே ஏற்றிக் கொண்டு போய்விட்டார்... என்ன, பதிலே காணோம்? நான் ஏதாவது தப்பாகச் சொன்னேனா?"

"அந்த மனிதர் இங்கே வந்து காத்துக் கொண்டிருக்கிறார் என்னை பார்ப்பதற்காக." கை குட்டையால் நெற்றியைத் துடைத்துக் கொண்டார் சக்கரவர்த்தி.

"நினைத்தேன்," என்றாள் மனோரமா. "உங்கள் விஷயமாய்ப் பேசத்தான் வந்திருப்பார். இல்லையா?"

"வேறே?"

"என்ன சொல்லப் போகிறீர்கள்?"

சக்கரவர்த்திக்குக் கோபம் வந்தது. மனோரமா மீது அல்ல. காத்துக்கொண்டு உட்கார்ந்திருக்கும் டாக்டர் மீது.

"ஒன்றும் சொல்லப் போவதில்லை. முகத்தில் அறைந்து அனுப்பப் போகிறேன். 'என்னை எதிர்த்துக் கொண்டு பெண்டாட்டி வெளியே போனாள். அவளை உள்ளே விட மாட்டேனென்கிறேன். நீ யார் தலையிட?' என்று கேட்கப் போகிறேன்."

"அதுதான் வேண்டாம்." மனோரமா அழுத்தம் திருத்தமாகச் சொன்னாள்.

"பின்னே?"

"இந்த விஷயம் ரொம்ப முற்றிக்கொண்டு போகிறது. நான் வேறே யோசனை செய்து வைத்திருக்கிறேன். இரண்டொரு நாளில் விவரமாக வழி சொல்லுகிறேன்."

"நீ பயப்பட ஆரம்பித்து விட்டாய். இவ்வளவு தானா உன் தைரியம்?"

"நீங்கள் பதட்டப்பட ஆரம்பித்து விட்டீர்கள். இவ்வளவு தானா உங்கள் திறமை?"

"மனோ... இது விளையாடுகிற காரியமில்லை," என்று கொஞ்சலாகக் குழைந்தார் சக்கரவர்த்தி.

"நானும் அதையேதான் சொல்லுகிறேன்."

"இப்போது வெளியிலே நிற்கிற ஆளுக்கு வழி என்ன?"

"என்ன வேண்டுமானாலும் சொல்லுங்கள். என்னையே கன்னாபின்னாவென்று திட்டினாலும் சரிதான்."

"மனோ!"

"நெருப்பென்றால் வாய் வெந்து விடாது."

"சரி, இப்போதைக்குச் சமாளித்துக் கொள்கிறேன். அப்புறம் உன்னை..."

"பார்த்தீர்களா, மறந்தே போய் விட்டேன். ராத்திரி ஒரு டான்ஸ் நிகழ்ச்சி பார்க்கப் போகிறேன். நீங்கள் என்னைத் தேடிக்கொண்டு வராதீர்கள். நாளைக்குப் பார்க்கலாம்," என்றாள் மனோரமா.

"ஹூம்," என்ற பெருமூச்சுடன் டெலிபோனை வைத்தார் சக்கரவர்த்தி. மணியை அழுத்தி, "அவரை வரச் சொல்," என்றார் பியூனிடம்.

கதவு திறக்குமுன்னே ஆர்வத்துடனும் உற்சாகத்துடனும் எழுந்து கொண்டு, "ஹலோ! வாருங்கள். குண்டூரிலிருந்து ஒரு டிரங்க் கால். உங்களைக் காக்க வைக்கும்படி ஆகிவிட்டது. மன்னிக்கணும்," என்று வரவேற்றார்.



"பரவாயில்லை," என்று நாற்காலியில் உட்கார்ந்தார் ராமேசுவரம்.

மீண்டும் மேஜை மணி வெளியே ஒலித்ததும் பியூன் ஓடிவந்தான்.

"காப்பியா, ஓவலா டாக்டர்? கூல் ட்ரிங்க் ஏதாவது சாப்பிடுங்கள். ஒரே வெய்யில்! போடா சீக்கிரம்!"

"நோ, நோ!" என்று டாக்டர் மறுக்குமுன் பியூன் போய் விட்டான்.

"சபாவில் நாடகம் பிரமாதமாமே? மேகலை சொன்னாள்," என்றார் சக்கரவர்த்தி இயல்பாக. யாரை எப்படி வசியப்படுத்த வேண்டும் என்பது பிஸினஸில் அவர் கற்ற முதல் பாடம்.

ராமேசுவரம் கையைப் பிசைந்துகொண்டு, 'ஊம் ஊம்' என்று தலையாட்டினார். எப்படியெல்லாம் இங்கே சிறவேண்டும் என்று வசனம் உள்பட நெட்டுருப் போட்டுக் கொண்டு வந்தாரோ அவ்வளவும் மறந்து விட்டது. நாடகத்தில் தடுமாற்றமான இடங்களில் சாமர்த்தியமாகச் சமாளிப்பவர் என்ற பெயர் அவருக்கு உண்டு. ஒரு சமயம் அவர் அரசனாக நடித்துக் கொண்டிருந்த காட்சியில் நடனமாடிக் கொண்டிருந்த பெண்ணின் நெற்றிச்சுட்டி அவிழ்ந்து விழுந்துவிட்டது. அத்தனை பேரும் அதைக் கவனித்து விட்டார்கள். நாட்டிய முடிவில் ஒரு ரத்தின ஹாரம் பரிசளிப்பதோடு சரி. ஆனால் டாக்டர் ராமேசுவரம் சிம்மாசனத்திலிருந்து இறங்கி, 'ஆகா! என்ன மெய்ம் மறந்த நடனம் ஆடினாய்! உன் நெற்றிச் சுட்டி விழுந்தது கூடத் தெரியவில்லையே?' என்று வியந்து பாராட்டி, தன் கையாலேயே அதை மேடையிலிருந்து பொறுக்கித் தந்து அவளை அனுப்பினார். இந்த மாதிரிப் பல கதைகள். இந்தத் திறமைகளை அரங்கத்தில் செலவழித்து விடுவதாலோ என்னவோ, அசல் வாழ்க்கையில் அவர் அடிக்கடி தடுமாற்றமடைவார். இன்று சக்கரவர்த்தி தன்னை வரவேற்ற தோரணை, சம்பாஷணையின் சரளம் ஆகியவை அவரைத் திகைக்க வைத்தன.

கடைசியில் அவரையும் அறியாமல், "சௌந்தரமும் குழந்தைகளும் என் வீட்டில் — டிஸ்பென்ஸரியில் இருக்கிறார்கள்," என்று பீடிகையே இல்லாமல் விஷயத்தை உடைத்து விட்டார்.

"என்ன!" என்று திகைத்தார் சக்கரவர்த்தி. "சௌந்தரம் எப்போது பெங்களூரிலிருந்து வந்தாள்?"

ராமேசுவரத்தின் தடுமாற்றம் மேலும் அதிகரித்தாலும், சக்கரவர்த்தி ஓரளவு உண்மையை மறைக்க முயலுகிறார் என்பதை உணராமலில்லை. "சக்கரவர்த்தி! நான் உங்களுக்கும் வேண்டியவன், சௌந்தரத்துக்கும் வேண்டியவன். குடும்பத்தில் கொஞ்சம் புரைசல் இருந்தது என்பதை என்னிடம் ஒப்புக் கொள்வது ஒரு அவமானமா?" என்றார்.

உள்ளுக்குள் ஆத்திரம் எழுந்தது. ஆனால் சக்கரவர்த்தி அதை வெளியே காட்டிக்கொள்ளவில்லை. வருத்தப்பட்டவர் போலத் தலையைக் குனிந்து கொண்டு, தணிவான குரலில், "என்மீது தப்பில்லை. சௌந்தரம் என்னை ரொம்ப மோசமாக நினைத்து விட்டாள்," என்றார்.

"கோபிக்காமலிருந்தால் சொல்லுகிறேன். அந்த மனோரமாவுக்கு நீங்கள் ரொம்ப இடம் கொடுத்தது தப்புத்தானே?"

"மனோரமாவா? அவள் எங்கே இதில் வந்தாள்?" என்று சக்கரவர்த்தி இன்னும் அதிக வியப்புக் காட்டினார் முகத்தில்.

"அவள்தானே உங்கள் வீட்டிலிருந்து கொண்டு உள்ளே விடமாட்டேனென்றாளாம்? நீங்களே சொன்னீர்களாமே!"

"அயோக்கியத்தனம்!" என்று எழுந்து கொண்டார் சக்கரவர்த்தி. "பச்சைப் புளுகு! எனக்கென்ன பைத்தியம் என்று எல்லோரும் தீர்மானம் பண்ணி விட்டீர்களா?"

ராமேசுவரம் சற்று வெல வெலத்துப் போனார். "அப்படியானால்..."



சக்கரவர்த்தி நெற்றியைச் சுளுக்கிக் கொண்டு உதட்டைப் பிதுக்கினார், ஆழ்ந்த குழப்பத்தில் சிக்கியவர் போல. "ஊம்... எல்லாம் என் முட்டாள்தனம்! ஏதோ நாட்டியம், நாடகம் என்று சொல்கிறார்களே என்று இடம் கொடுத்தது தப்புத்தான். ஒத்திகை நடத்த இடம் வேண்டும் என்று கேட்டாள் இன்று காலையில். சௌந்தரம்கூட ஊரிலில்லையே என்று சம்மதித்தேன். அது..."

ராமேசுவரத்தால் நம்பாமல் இருக்க முடியவில்லை. சக்கரவர்த்தி தாறுமாறாக, மனம் போனபடி செல்வார் என்று அவர் என்றைக்குமே கருதியவரல்ல. ஆனால், எவளோ ஒரு நாட்டியக்காரப் பெண்ணுக்கு இவ்வளவு உரிமை எப்படி ஏற்பட்டிருக்க முடியும்?

குளிர் பானங்களைக் கொண்டு வந்து வைத்து விட்டுப் போனான் பியூன்.

எப்படியானாலும், சௌந்தரத்தை விரட்டியடிக்கக்கூடியவராக இவர் தோன்றவில்லை. மற்றது புருஷன் பெண்டாட்டி பாடு. "சரி, எல்லாம் நல்லபடியாய்த் தீர்ந்தால் சரிதான். நான் போய், சௌந்தரத்தையும் ஆனந்தியையும் மேகலையையும் அனுப்புகிறேன் வீட்டுக்கு," என்றார்.

"அதைப் பற்றித்தான் சொல்ல வந்தேன்," என்று கூறி விட்டு, சில நிமிடங்கள் மௌனமானார் சக்கரவர்த்தி. மனோரமா ஏதோ வழி சொல்வதாகத் தெரிவித்தாளே? அதைப்பற்றி விவரமாக அறிந்து கொள்ளுமுன் தலைதெறிக்க எல்லோருடனும் சமரசம் செய்துகொள்ள அவர் தயாராயில்லை. "இதிலே ஒரு பெரிய சங்கடம் இருக்கிறது. அதை இன்னொரு சமயம் விவரமாகச் சொல்லுகிறேன். அந்தப் பெண் இருக்கிறாளே மனோரமா, அவளிடம் நான் ஒருவகையில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறேன்..."

டாக்டரின் புருவங்கள் உயர்ந்தன.

"நீங்கள் நினைப்பதுபோல் தப்பாக எதுவுமில்லை.. வந்து.. தயவு பண்ணி என்னை நம்புங்கள். நம்புகிறேன் என்று சொல்லுங்கள்."

அவருடைய குழப்பத்தை உண்மையாகவே எடுத்துக் கொண்டார் ராமேசுவரம். "நம்புகிறேன் சக்கரவர்த்தி. கட்டாயம் நம்புகிறேன்," என்றார் பரிவுடன்.

"ராத்திரி நான் வந்து சொல்லுகிறேன்... ஓ! சனியன் பிடித்த அசோசியேஷனில் ஒரு மீட்டிங்கும் டின்னரும் இருக்கிறதே? சரி, நாளை சாயந்தரம் வருகிறேனே? சௌந்தரத்திடம் சொல்லுங்கள். ஒரு நாளும் நான் தப்பான வழிக்கெல்லாம் போக மாட்டேன்..."

"எனக்குத் தெரியாதா? இப்போது நான் என்ன பண்ண வேண்டும், சொல்லுங்கள்."

"நல்ல வேளை, வேறெங்கேயும் போய் நின்று, மானத்தை வாங்காமல் உங்களிடம் வந்து சேர்ந்தார்களே எல்லோரும்! என் வீட்டில் இருப்பது மாதிரிதான். டிஸ்பென்ஸரியை விட்டு நகரக்கூடாது என்று கண்டிப்பாய்ச் சொல்லி வையுங்கள்."

"நான் கவனித்துக் கொள்கிறேன். நாளை சாயந்தரம் கட்டாயமாய் வந்துவிட வேண்டும்," என்று சொல்லி விட்டு நிம்மதியாகப் புறப்பட்டு விட்டார் ராமேசுவரம். பிரசினைகள் தாமாகத் தீருவதில் அவர் அடையும் மகிழ்ச்சியே அலாதியானது.

கீழே, சாலையில் ஹாரன் ஓசைகளும் நடமாட்ட நெரிசல்களும் அதிகரித்தன. மாலை நெருங்கிக் கொண்டிருந்தது.

"காரை எடுக்கச்சொல்லு," என்று பியூனை அனுப்பினார் சக்கரவர்த்தி. வீட்டுக்குப் போய் அலுப்புத் தீரக் குளித்துச் சாப்பிட்டுவிட்டுத் தூங்கவேண்டும் என்று அவர் உடம்பும் உள்ளமும் கெஞ்சின. குழப்பங்களை மறக்க அது ஒன்றுதான் வழி.



கடைசி ஆளாகப் புறப்படுகிற முதலாளி, அன்று முதல் ஆளாகக் கிளம்பிவிட்டதைக் கண்டு சிப்பந்திகள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

கார் சென்டிரல் முனையில் திரும்பும்போது, எதிரில் வந்த டாக்ஸியொன்று கிரீச்சிட்டு நின்றது, பாதையோரத்தில்.

"தாண்டவம் வறார் சார்," என்றான் டிரைவர் தனிகாசலம்.

"நிறுத்திக்கொள்," என்றார்.

தாண்டவம் டாக்ஸிக்காரனை அனுப்பிவிட்டு வந்து சக்கரவர்த்தியின் பக்கத்தில் அமர்ந்து கொண்டதும் கார் புறப்பட்டது.

"உங்களைப் பார்க்கத்தான் வந்து கொண்டிருந்தேன். ஒரு பெரிய சமாசாரம்..." என்று தொடங்கினான் தாண்டவம்.

"வீட்டுக்குப்போய்,"... என்று சக்கரவர்த்தி சொன்னதும் டிரைவர் இருப்பதை உணர்ந்தவனாகப் பேச்சை நிறுத்திக் கொண்டான்!

மவுண்ட் ரோடில் போக்குவரத்து நெருக்கடியால் கார் இரண்டு நிமிடங்கள் தாமதித்தன.

சக்கரவர்த்தி வெளியே பார்த்த வண்ணம், "ஹூம் இரண்டு மாடி கட்டுகிறானா? செருப்புக்கடை நடத்திக் கொண்டிருந்த பயலுக்கு அடிக்கிறது யோகம்!" என்று கசப்புடன் முனகினார்.

"யாரைச் சொல்லுகிறீர்கள்?"

"தமிழ் நாடு லெதர்ஸ்! பெயரே தனகோடியாச்சே! சேருகிறது தனம்!"

தாண்டவம் வியப்புடன் அவரைப் பார்த்தான். "தாம்பரத்திலே 'ஷூ மார்ட்!' வைத்திருந்தானே தனகோடி..."

"ஷூ மார்ட் என்ன பெத்த பெயர்! சாதாரண செருப்புக்கடை! இன்றைக்கு மார்க்கெட்டில் என்னோடு

போட்டி போடுகிறேன் என்கிறான். மாம்பலத்தில் மூன்று வீடு, ஒரு ஸ்டுடிபேக்கர், இரண்டு பியட், கம்பெனிக்குச் சொந்தக் கட்டிடம்..."

கார் கிளம்பியது மீண்டும். ஆனால் அதற்குள் தாண்டவம் சக்கரவர்த்தியின் பார்வையோடிய கட்டிடத்தை மனத்தில் பதிய வைத்துக் கொண்டான். அவன் உதட்டில் ஒரு புன்னகை தவழ்ந்து விளையாடிற்று.

அண்ணனின் கூச்சலைக் கேட்டுத் தடதட வென்று படியேறி வந்த மனோரமா, திறந்து கிடந்த அறையைக் கண்டதுமே, "ஓ தப்பிவிட்டானா? கெட்டிக் காரன்தான்!" என்றாள்.

"மாலி போனது உனக்குத் தெரியாது?" என்று தாண்டவம் உறுமினான்.

"உஸ்! ஏன் இப்படிக் குடி முழுகிவிட்டாற் போல் கத்துகிறாய் அண்ணா?" என்று அவனுக்குச் சிறிதும் பயப்படாமல் பதிலளித்தாள் மனோரமா. "காலைச் சுற்றிய பாம்பு கடிக்காமல் விட்டதே என்று சந்தோஷப்படு. காயம்பட்டு அடிபட்டுக் கிடப்பவனை வீட்டில் வைத் திருப்பது ரொம்பப் பந்தோபஸ்தோ? மேகலையும் மற்றவர் களும் எத்தனை நேரத்துக்கு வாயை மூடிக் கொண்டிருப் பார்கள் என்று நினைக்கிறாய்?"

"அதற்காக அவனை அவிழ்த்து விட்டு விட்டாயா?"

"எனக்குத் தெரியாது, தெரியாது, தெரியாது! ராத்திரி வருகிறேன் என்று சொன்னவன் வந்து காவல் இருப்பது தானே? குஷாலாய் ஊர் சுற்றப் போய் விட்டாய்?"

"உன் பணம் ஒன்றையும் கொட்டிக் கொடுத்து விடவில்லையே?"

"என் பணமானால் என்ன? சக்கரவர்த்தியின் பணமானால் என்ன? அவரிடம் தானே போயிருந்தாய் நேற்று?"



"சும்மா இருக்க மாட்டாய் மனோரமா?" என்றபடி இறங்கினான் அவன்.

"இன்னொருதரம் அவரிடம் நீ பணம் வாங்கிய தாகத் தெரிந்ததோ, உனக்கும் அவருக்கும் ஒரு உறவும் இல்லாமல் கத்தரித்து விடுவேன். நினைவு வைத்துக் கொள்," என்று தங்கை எச்சரித்தது அவனுக்கு அரைகுறை யாகத்தான் கேட்டது.

முகத்தைக் கழுவிக் கொண்டான். உடைகளை மாற்றிக் கொண்டான்.

"பலகாரம் ரெடியாயிருக்கிறதுடா, தம்பி," என்ற தாயாரிடம், "நீயே சேர்த்துச் சாப்பிட்டுக் கொள் தம்பி!" என்று நக்கல் காட்டி விட்டு முன்புறம் வந்தான்.

மனோரமா சிந்தனையிலாழ்ந்திருந்தாள்.

கைக்கடியாரத்தை நோக்கினான் தாண்டவம். எட்டேகால்.

எட்டரைக்குத் திறந்து விடுவார்கள். இப்போது கிளம்பினால் சரியாயிருக்கும்.

மௌபரீஸ் சாலையில் நடந்தவாறே ஆழ்வார் பேட்டையை அடைந்து, ஒரு பிரபல பாங்கின் கிளை அலுவலகத்தை அடைந்தான். "கௌண்டர்'கள் திறக்கப் பட்டுக் கொண்டிருந்தன.

பணம் பெறும் இடத்தருகே சென்றதும் டிரௌசர் பையில் கைவிட்டு எடுத்தான்.

செக்கை இன்னொரு முறை திருப்தியுடன் பார்த்தான். தாண்டவம் — ஆயிரம் ரூபாய் மட்டும் — ரூ.1000 — சக்கரவர்த்தி, கிராஸ் செய்யாத செக், எல்லாம் சரியாக இருக்கிறது.

பிறைச் சந்திர வடிவிலிருந்த ஜன்னலருகே அதை அவன் நீட்டிய அதே கணம் —

ஒரு வளைக்கரம் அவன் கையைக் கெட்டியாகப் பற்றித் தடுத்தது.

## 11

தடுத்த கரத்தை விலக்கி விட்டுவிட்டு, "மனோரமா! நீ எதற்கு இங்கே வந்தாய்?" என்றான் தாண்டவம் கோபத்துடன்.

"செக்கை மாற்றாமல் உன்னைத் தடுப்பதற்குத் தான்," என்று பதட்டமில்லாமல் பதிலளித்தாள் தங்கை. "பேசாமல் வெளியே வா. பாங்க்கில் தகராறு பண்ணினால் பலர் விபரீதமாக நினைப்பார்கள்."

தாண்டவம் தடுமாறிப் போனான். அந்த ஆத்திரத்தில், "நான் வாங்கிய பணத்தை நான் மாற்றுகிறேன், நான் செலவழிக்கிறேன், நீ என்ன தடுப்பது?" என்றவாறு செக்கை மீண்டும் ஜன்னலுக்குள் செலுத்த முயன்றான்.

இருவரும் தாழ்ந்த குரலில்தான் பேசிக் கொண்டார்கள் என்றாலும், பாங்கிக் குமாஸ்தாவின் சந்தேகத்தைக் கிளப்ப அது போதுமானதாயிருந்தது. நீட்டப்படும் செக்கை அவர் வாங்கிக்கொள்ளச் சிறிது தயங்கியதை மனோரமா கவனித்தாள். உடனே துணிச்சலுடன், "அதை வாங்காதீர்கள், போர்ஜரி செக்! பொய்க் கையெழுத்திட்டது," என்றாள்.

"ஆ!" என்று குமாஸ்தா நாற்காலியில் பின்னடைந்த அதே சமயம், தாண்டவம் கடுஞ்சினத்துடன், "கிடையாது! அசல் செக்! சக்கரவர்த்தியே எனக்காகக் கையெழுத்துப் போட்டு என்னிடம் கொடுத்தார்!" என்றான்.

"சரி, டெலிபோனில் கூப்பிட்டு அவரை இங்கே வரச் சொல்லட்டும். நானே கேட்கிறேன் உனக்கு எதற்காகக் கொடுத்தார் என்று," என்றாள் மனோரமா.

தாண்டவம் கையைப் பிசைந்து கொண்டு தவித்தான். அதற்குள் பல கண்கள் தன்னை உற்று நோக்குவதை அவனால் உணர முடிந்தது. நிலைமையை முற்றவிட



அவன் இஷ்டப்படவில்லை. "சட்!" என்ற சீறலுடன் செக்கைப் பாண்ட் பையில் அடைத்துக்கொண்டு விடுவிடுவென வெளியேறினான்.

திகைத்து வாயடைத்திருந்த குமாஸ்தா மனோரமாவின் மயக்கப் புன்னகையில் சிறிது சொக்கிப் போனார். அவரை அந்த நிலையிலேயே விட்டுவிட்டு மனோரமா அண்ணனைப் பின் தொடர்ந்தாள்.

எரிச்சலுடன் வாசலில் நின்றிருந்த தாண்டவம் தங்கையைக் கண்டதும் புலிபோல் பாய்ந்தான். "மனோரமா, என் விஷயத்தில் நீ அளவுக்கு மீறி தலையிடுகிறாய்!"

"அப்படியா? வேடிக்கைதான். அதே வார்த்தையை நான் உன்னிடம் சொல்லவிருந்தேன்," என்றாள் மனோரமா. "உன் ஆதரவில் நான் இருப்பதாக நினைத்திருக்கிறாய். தப்பு. என் ஆதரவில் நீ இருக்கிறாய். மறக்காதே. என் இஷ்டத்துக்கும் திட்டத்துக்கும் விரோதமாக எது செய்யவும் உன்னை விடமாட்டேன்."

தங்கையின் முகத்தை ஊடுருவிப் பார்த்தான் தாண்டவம். கண்களில் தெரிந்த உறுதி அவனைத் தளர வைத்தது. "ஏன், இப்போது உன் இஷ்டத்துக்கு விரோதமாக என்ன பண்ணிவிட்டேன்?" என்று கேட்டான் அடங்கிய குரலில்.

"என் பெயரைச் சொல்லி சக்கரவர்த்தியிடம் காலணா கூட வாங்கக் கூடாதென்று எத்தனை தடவை சொல்லியிருக்கிறேன்? ஆயிரம் ரூபாய் வாங்கியிருக்கிறாயே, யாரைக் கேட்டு? உன் உல்லாசத்தைப் பார்த்துச் சந்தேகப்பட்டுத்தான் பின்னாலேயே வந்தேன்," என்றாள் மனோரமா.

"இந்த ஆயிரம் ரூபாயை வாங்க உன் பெயரை உபயோகிக்கவேயில்லை. நானாகவே யோசனை பண்ணி என்னவோ சொல்லிச் சம்பாதித்தேன்."

"என்ன யோசனை? சொல்லேன்! அதையும்தான் கேட்கிறேன்."

"நீ என்னிடம் எத்தனை விஷயங்களைச் சொல்லாமல் மறைக்கிறாய்? நான் மட்டும் உன்னிடம் எல்லாவற்றையும் ஒப்பிக்க வேண்டுமா?"

"சரி, வேண்டாம்."

மௌபரீஸ் ரோடு வீட்டை நோக்கிச் செல்லும் பாதையில் இருவரும் சிறிது தூரம் மௌனமாக நடந்தார்கள்.

"நேற்று ராத்திரி அந்த மாலியை என்ன பண்ணினாய் என்று என்னிடம் சொன்னாயா?" என்று தாண்டவம் மறுபடியும் குடைந்து பார்த்தான்.

மனோரமா சிரித்தாள்: "ஒவ்வொருத்தர் ஒவ்வொரு விதத்தில் எனக்கு உபயோகமாயிருப்பார்கள். அதையெல்லாம் உன்னிடம் சொல்லிக் கொண்டிருக்க முடியுமா?"

"அதேபோல்தான் எனக்கும்," என்றான் தாண்டவம். "அடிபட்டுக் கிடந்த ஆளை வைத்துக்கொண்டு நாலு காசு புரட்டலாமே என்று தோன்றியது. செய்தேன்."

"சக்கரவர்த்தியை ஏமாற்ற உனக்குச் சாமர்த்தியம் போதாது."

"ஏன் போதாது?" என்று தங்கை விரித்த வலையில் தன்னையுமறியாமல் விழுந்தான் தாண்டவம். "விஷயம் போலீஸ் வரையில் போய்விடும் போலிருக்கிறது என்று காபராப் படுத்தினேன். ஆசாமி மிரண்டு போய் விட்டாராக்கும்! சப் இன்ஸ்பெக்டர் வாயை அடைப்பதற்காக இந்த ரூபாயைக் கொடுத்தார்."

"ஓகோ!" என்று மனோரமா உறுமினாள். திடீரென அவள் முகத்தில் ஏற்பட்ட கடுமை அண்ணனை அஞ்ச வைத்தது. "இந்த மாதிரி பித்தலாட்ட வேலைதான் வேண்டாமென்று சொல்லுகிறேன். கேள். மத்தியான்னம் சக்கரவர்த்தி வருவார். செக்கைத் திருப்பிக் கொடுத்து அவரிடம் நீ மன்னிப்பும் கேட்க வேண்டும்!"

"மனோரமா!" என்று பல்லைக் கடித்தான் தாண்டவம், நடுத்தெருவில் நிற்கிறோம் என்பதையும்



மறந்தவனாக. "பித்தலாட்டம் இல்லாமல் பத்தினித்தனமாகவே நீ எல்லாம் செய்து வருவதாக எண்ணமா உனக்கு? நான் சின்னப்பித்தலாட்டக்காரனென்றால் நீ பெரிய பித்தலாட்டக்காரி!"

"சக்கரவர்த்தியிடம் நீ சொல்லாவிட்டால் நான் சொல்லிவிடப் போகிறேன். அவ்வளவுதான் எனக்குத் தெரியும்," என்று சாந்தமாகப் பதிலளித்த வண்ணம் மேலே நடந்தாள் மனோரமா. "நானும் சொல்லாவிட்டால், இருக்கவே இருக்கிறான் மாலி. அவனே சக்கரவர்த்தியிடம் உன் குட்டை உடைத்துவிடுவான். அது இரண்டு பேருக்கும் வேட்டு வைத்துவிடும். அப்படி நடக்க நான் விடப் போவதில்லை!"

வீடு வந்துவிட்டது. கொந்தளித்துக் கொண்டிருந்த ஆத்திரத்தை அடக்கிக் கொள்ள அரும்பாடு பட்டான் தாண்டவம். ஆத்திரத்தை வெளிப்படுத்தியும் பயனில்லை என்பது தெரிந்துவிட்டது. தங்கையின் கைப்பிடியில் தான் சிக்கியுள்ள ஈன நிலையை எண்ண எண்ண அவனுக்கு அவமானம் மேலிட்டது.

பிற்பகல் மூன்று மணியைத் தாண்டிவிட்டது.

பரந்த மௌபரீஸ் சாலையில் ஆலமரங்களின் நிழல்கள், கசிந்து பரவும் தண்ணீரைப்போல மெல்ல மெல்ல நீண்டு ஓடின. முன்னதாகவே அலுவலகத்தை விட்டு வெளியேறும் உரிமை படைத்த பெரிய ஆபீசர்களின் கார்கள் இங்குமங்கும் பறக்கத் தொடங்கின.

மனோரமாவின் வீட்டு வாசலில் சக்கரவர்த்தியின் கார் வந்து நின்றது.

புன்னகையுடன் வாசலுக்கு வந்து வரவேற்றாள் மனோரமா.

அவள் தோளை மெதுவேபற்றி, "என்னென்ன கலாட்டாவெல்லாமோ நடந்துவிட்டது போலிருக்கிறதே அந்தக் கழுதைகளால்? பாவம், ரொம்ப வேதனைப் பட்டிருப்பாய்," என்று ஆறுதலாகப் பேசிக்கொண்டே உள்ளே நுழைந்தார் சக்கரவர்த்தி.

ஹாலில் ஒரு சோபாவின் குறுக்காகப் படுத்திருந்த தாண்டவம், அவள் உள்ளே வருமுன் வேறு அறைக்குச் சென்று விட்டான்.

மாடிப் படியில் ஏறப்போன சக்கரவர்த்தியை, "இருங்கள்," என்று தடுத்து நிறுத்தினாள் மனோரமா.

"அண்ணா உங்களிடம் ஏதோ பேச வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருந்தான்... அண்ணா, அண்ணா! சார் வந்திருக்கிறார் பார்!"

"தாண்டவம் இங்கேதான் இருக்கிறானா? நானே அவனைப் பார்க்க நினைத்திருந்தேன். அந்த இன்ஸ்பெக்டர் விஷயம் என்ன ஆயிற்றென்று கேட்க வேண்டும்" என்று சக்கரவர்த்தி சொல்லிக் கொண்டிருந்தபோது வேண்டா வெறுப்பாக அலுப்புடன் தாண்டவம் வெளியே வந்தான்.

"இன்ஸ்பெக்டர் விஷயம்தான் அவனும் சொல்ல வேண்டுமென்றான்," என்று கூறிவிட்டு, ஸ்லிப்பர் ஓசையிட ஒயிலாக மாடியில் மறைந்து விட்டாள் மனோரமா.

ஏதும் செய்யத் தெரியாதவனாகத் தாண்டவம் சக்கரவர்த்தியின் முன்னே நின்றான். தன்னை இப்படிச் சிக்கிவிட்ட தங்கையின்பால் கடுந்தீயெனக் குரோதம் மூண்டது அவன் உள்ளத்தில். திடுப்பென்று எழுந்த கோபத்துடன் பாண்ட்டில் கைவிட்டுச் செக்கை வெளியே எடுத்தான். "இந்தாருங்கள் உங்கள் பணம்," என்று அலட்சியமாக நீட்டினான்.

விழித்தார் சக்கரவர்த்தி. "ஏன்? இது போதாதாமா அந்த இன்ஸ்பெக்டரின் வாயை அடைக்க? நீதானே நேற்று சொன்னாய் ஆயிரம் ரூபாய் கொடுத்தால் போதுமென்று?" என வினவியபோது அவர் குரலில் வியப்புப் படர்ந்தது.

மேல்படியில் மீண்டும் தோன்றினாள் மனோரமா. "இன்ஸ்பெக்டருமில்லை, யாருமில்லை. சும்மா விளையாட்டுக்குச் சொல்லியிருக்கிறான்," என்றாள் முறுவலுடன்.



"என்ன!" என்று அவளையும் தாண்டவத்தையும் மாறிமாறிப் பார்த்தார் சக்கரவர்த்தி.

"விடுங்கள், ஏதோ அவசரச் செலவு அண்ணாவுக்கு. உங்களிடம் நேரில் கேட்க வெட்கப்பட்டுக் கொண்டு என்ன என்னவோ சொல்லி விட்டான். அப்படியெல்லாம் பண்ணக் கூடாது என்று நான் சொன்னேன். நியாயம்தான் என்று ஒப்புக்கொண்டான்."

"இதெல்லாம் நிஜம்தானா தாண்டவம்?" என்று கனல் உமிழும் பார்வையுடன் கேட்டார் சக்கரவர்த்தி.

"அதுதான் சொல்கிறாளே!" என்று முரண்டு பிடிக்கும் குழந்தையைப்போலத் தாண்டவம் பதிலளித்தான்.

ஏமாற்று வேலை செய்யத் தனக்கு மட்டுமே உரிமை உண்டு என்றெண்ணும் பிஸினெஸ்காரராகையால் சக்கரவர்த்தியின் சினம் அளவு கடந்ததாயிற்று. "சீ! நீ கூட இது மாதிரியெல்லாம் செய்வாய் என்று சொப்பனத்திலும் நான் நினைக்கவில்லை தாண்டவம்" என்று அவர் தொடங்கியதுமே தாண்டவம் இடைமறித்து "அதுதான் செக்கைத் திருப்பிக் கொடுத்து விட்டேனே! அப்புறம் ஏன் அனாவசியப் பேச்சு" என்று முணுமுணுத்தான்.

வெடுக்கென்று அந்தச் செக்கை அந்த அறையின் மூலையில் எறிந்தார் சக்கரவர்த்தி. "இதைப்போலப் பதினாயிரம் செக் செலவழிந்தாலும் எனக்குப் பெரிதில்லை. நாணயமாக நடக்கும் மனிதர்கள்தான் வேண்டும். எடுத்துக்கொள். அதை! செலவழித்துக்கொள் தாராளமாய்! ஆனால் பொய் சொல்லி ஏமாற்ற மட்டும் இன்னொரு தரம் பார்க்காதே! நினைத்தால் உன்னைப் போலீசில் பிடித்துக்கொடுக்க இரண்டு நிமிஷமாகாது. மனோரமாவின் அண்ணன் என்பதற்காக விடுகிறேன் இந்தத் தடவை!"

சக்கரவர்த்தி விடுவிடுவென்று படியேறிப் போய் விட்டார் மேலே. அறை மூலையில் கசங்கிக் கிடக்கும் ஆயிரம் ரூபாய் செக்கை வெறித்துப் பார்த்தபடி சிறிது

நேரம் நிலை குத்தி நின்றான் தாண்டவம். ஜாக்கியிடம் அடி வாங்கிய பந்தயக் குதிரை போல் அவன் உள்ளம் மிரண்டு திமிறிற்று. எண்சாண் உடம்பும் குறுகியவனாக அதைப் பொறுக்கி எடுத்துக் கொண்டான். வேற வழியில்லை. முந்தின இரவு இந்தச் செக்கைக் காட்டிப் பல தோழர்களிடம் வாங்கிய கைமாற்றுகளைத் திருப்பித் தந்தாக வேண்டுமே?

அதை மடித்துப் பையில் பத்திரப்படுத்திக் கொண்டபோது, 'இந்த ஒருமுறை, ஓரேமுறைதான் இந்த அவமானம்!" என்று இதயம் பல்லைக் கடித்தது.

தன் விரோதிகள் பட்டியலில் தங்கை மனோரமா முதலிடம் பெற்று விட்டாள் என்பதை அவன் கண்டு கொண்டான்.

நேரே மாடியறையிலிருந்த கட்டிலில் வந்து விழுந்த சக்கரவர்த்தி பல நிமிடங்கள் வரையில் தலை நிமிரக்கூட இல்லை. தாண்டவத்தின் சூதினால் அவரது உள்ளத்தில் ஏற்பட்டிருந்த சூடும் தணியக் காணோம்.

சற்று சாந்தமடைந்தவராக அறையை நோட்டம் விட்டபோது மனோரமா அங்கில்லை என்பதைக் கண்டார். வியப்புடன் சுற்றுமுற்றும் பார்த்தபோது, வராந்தாவில் கண்ட காட்சி அவரை மின்சாரப் பரவசத்துக்குள்ளாக்கியது.

கைப்பிடிச் சுவர் ஓரமாக மனோரமா ஒய்யார மாய் நின்றுகொண்டிருந்தாள். உடம்பை இறுகப் பிடித்துக் கொண்டிருந்த அந்த ஆனுடை அவளுடைய சரீரத்தின் வளைவுகளையும் வாளிப்புக்களையும் எடுத்துக் காட்டிற்று. தேகத்தின் ஒரு பகுதியைத் தொட்டு விளையாடிய சூரிய வெளிச்சம் அவள் நின்றிருந்த நிலைக்கு அசாதாரணக் கவர்ச்சி கூட்டிற்று.

சக்கரவர்த்தி வழக்கம்போல் உன்மத்தம் பிடித்தவ ரானார். ஒரே எட்டில் அவளை நெருங்கி, "மனோ! எனக்காகச் செய்துகொண்ட அலங்காரம் தானே இது!



பிரமாதம், பிரமாதம்!'' என்று உற்சாகத்துடன் பாராட்டினார்.

மனோரமா தலையைச் சிறிது குனிந்து கொண்டாள். "மகிழ்விப்பதற்கு உங்களைத் தவிர வேறு யார் இருக்கிறார்கள்? இந்தப் பாக்கியம் என்றைக்கும் நீடிக்க வேண்டும் என்பதுதான் என் ஒரே பிரார்த்தனை" என்றாள் தணிந்த குரலில்.

அந்தச் சொற்களில் தொனித்த சோகம் சக்கர வர்த்தியின் மனத்தைக் கலக்கியது. "மனோ! எதை நினைத்து வருத்தப்படுகிறாய் நீ? அந்தக் கழுதைகள் பண்ணின கலாட்டாவுக்காகவா? பார்த்துக்கொண்டேயிரு. அவர்களுக்குச் சரியான பாடம் கற்பிக்கிறேன்!"

"வேண்டாம். வேண்டாம்!'' என்று அவர் கைகளை இறுகப் பற்றிக் கொண்டாள் மனோரமா. "அந்த மாதிரி நீங்கள் ஏதாவது செய்துவிடாமலிருக்க வேண்டுமே என்றுதான் நான் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறேன்."

"மனோரமா, உனக்கு ரொம்பப் பரந்த மனம். அந்த அருமை தெரியாமல் எல்லோரும் உன்னைத் தூற்றுகிறார்கள்" என்றார் சக்கரவர்த்தி.

"பரவாயில்லை, நீங்கள் ஒருவர் என்னைப் புரிந்து கொண்டால் போதும்,'' என்ற மனோரமா அவரை இன்னும் நெருங்கி வந்து நின்றாள். "ஒரு முக்கிய விஷயம் சொல்ல வேண்டும் உங்களிடம். தப்பாக நினைக்க மாட்டீர்களே?"

"ஒருநாளும் மாட்டேன். சொல்லு."

"மயிலாப்பூரில் பொறுக்கி யெடுத்த பத்துப் பெரிய மனிதரில் ஒருவராக விளங்குகிறீர்கள். தொழிலிலும், சமூகத்திலும் உங்கள் அந்தஸ்துக்கோ, கௌரவத்துக்கோ குறைவு ஏற்படக்கூடாது. அதுவும் என்னால் உங்கள் பெயருக்கு மாசு ஏற்படுவதை நான் அனுமதிக்கவே மாட்டேன்."

சக்கரவர்த்தி திகைத்தார். "என்ன மனோ இதெல்லாம்? உன்னை மறந்துவிடச் சொல்கிறாயா?"

"இல்லை, இல்லை" என்று சிரித்தாள் மனோரமா. "என் தற்கொலைக்கு நானே திட்டம் வகுத்துத் தருவேனா? உங்கள் குடும்பம் சீர்குலைந்து அவமானப்படுவது கூடவே கூடாது. இவ்வளவு பகிரங்கமாக எல்லோரையும் நீங்கள் விரோதித்துக் கொள்வதில் என்ன லாபம்?"

"வேறே வழி?"

"இல்லாமலில்லை" என்று கூறிவிட்டு நாற்புறமும் ஒருமுறை பார்த்துக்கொண்டாள் மனோரமா.

"ஆனந்தி, இத்தனை நாள் மறைத்ததே போதும். இனிமேலும் என்னிடம் மறைக்காதே. எனக்கு எல்லாம் தெரியும்" என்றாள் மேகலை கடுமையாக. மாலிக்கு ஆபத்து என்று சொன்ன பிறகும் தங்கை ஒளிவு மறைவாகப் பேசுவது அவள் கோபத்தையே கிளறியது.

ஆனந்தியின் முகம் பீதியைக் காட்டிற்று. விவரிக்க இயலாத சஞ்சலங்கள் அந்த அழகிய கண்களைச் சுற்றி ஓடின. "ஐயையோ! சத்தியமாக எனக்கு எதுவுமே புரியவில்லை, அக்கா! நிஜமாய்க் கேட்கிறேன், மாலி யார்?" என்றாள்.

மேகலையின் தொண்டை அடைத்தது. விழியில் கண்ணீர் வந்து முட்டிக் கொண்டது. "வேண்டாம் ஆனந்தி! அவர் உனக்குத் துரோகமிழைத்ததற்காக இவ்வளவு குரூரமாகப் பழி வாங்காதே. உயிருக்கு மன்றாடிக் கொண்டு கிடக்கிறான் உன் காதலன்! அன்பை அவ்வளவு துச்சமாகத் தூக்கி எறியாதே!..."

"அக்கா!" என்று ஓங்கி அதட்டி மேகலையை நிறுத்தினாள் ஆனந்தி. "கண்டபடி பேசிக்கொண்டே போகாதே. உன் மேல் ஆணை. அம்மா மேல் ஆணை. எனக்கு மாலி என்ற பெயரில் யாரையுமே தெரியாது. நம்பினால் நம்பு, நம்பாவிட்டால் போ!"



தங்கையின் சொற்களில் காணப்பட்ட வேகம் மேகலையை அதிர வைத்தது.

"ஆனந்தி! எனக்குப் புத்தி தடுமாறுகிறது. நானே குழம்புகிறேனா அல்லது நீ என்னைக் குழப்புகிறாயா?... வந்து... பெங்களூருக்குப் போகும்போது, நீ அவருக்கு — மாலிக்கு — கடிதம் எழுதி அனுப்பவில்லை?"

"கடிதமா? என்ன கடிதம்?"

"என்ன கடிதமா?" என்று நினைவு படுத்திக் கொண்டாள் மேகலை. "சரியான வாசகம் ஞாபகத்தி லில்லை. மெயிலில் பெங்களூருக்குப் போகிறோம் என்று இரண்டு வரி..."

"உஸ்! அப்பாடா? அதுவா?" என்று ஆனந்தி புன்னகை புரிந்தாள். "அது டாக்டருக்கு எழுதி வைத்த தல்லவா!"

"டாக்டருக்கா!"

"ஆமாம். வீட்டை விட்டுப் போவதை டாக்டரிடம் தெரியப்படுத்திவிட்டு வரும்படி அம்மா என்னை அனுப்பினாள். டாக்டர் இல்லை. ஒரு காகிதத் துண்டில் இரண்டு வார்த்தை அவசரமாக எழுதி வைத்து விட்டுப் போய்விட்டேன்... அதை எப்படி எங்கே நீ பார்த்தாய்?"

மேகலையின் மூளையில் சோர்வு கண்டு விட்டது. ஆனால் உண்மையின் ஒளிக்கீற்று அவள் உள்ளத்தில் படரத் தவறவில்லை.

டாக்டர் அந்த காகிதத் துண்டைப் பார்க்குமுன் மாலி இங்கே வந்திருக்கிறான். அதை எடுத்து வைத்திருக்க வேண்டும், டாக்டரிடம் தர எண்ணி. அதற்குள் தான் வரவே, தன்னிடம் குறும்பு பண்ணியிருக்கலாம். ஆனால், இதெல்லாம் வாஸ்தவம் தானா? அப்படியானால் —

"ஆனந்தி! இப்போது நான் கேட்கும் கேள்விக்கு நேர்மையாகப் பதில் சொல்லு. கொஞ்சம் முந்தி யாருக்குக்

கடிதம் எழுதிக் கொண்டிருந்தாய்? 'என் அன்புள்ள' என்று அழைக்கும் அளவுக்கு உனக்கு யார் இருக்கிறார்கள்? சொல்லு."

வினாடி நேரம் ஆனந்தி திகைத்து நின்றாள். மறுகணம் அவளுடைய நீண்ட பெரிய கண்கள் விஷமத் தனமாகச் சிரித்தன. நாணத்தின் அழகுக் குழி அவள் கன்னத்தைக் கிள்ளிவிட்டு ஓடிற்று. முத்துப் பற்கள் மலர்ந்து ஒளி வீசின.

அவள், சிரிப்பையும் மலர்ச்சியையும் அந்த அறைக்குள்ளே நிரப்பிவிட்டு ஓடிவிட்டாள் வெளியே. சோகத்தைத் தவிர வேறு காட்டியிராத அவள் முகத்தில் இத்தனை குதூகலம் எங்கிருந்து வந்தது?

மேகலையால் கண்டுகொள்ள இயலவில்லை. மாலிக்கும் அவளுக்கும் யாதொரு உறவுமில்லை என்பதையும் இப்போது நம்புவது கடினமாயிருந்தது. காதல் நிரம்பியிருந்த அந்தப் பெண்ணுள்ளம், இன்னொரு காதல் உள்ளத்தைக் கண்டுகொண்டது எளிதாக.

இரவு அவள் தூங்காததற்குக் காரணம் டிஸ்பென் ஸரியின் மருந்து நாற்றம் மட்டுமல்ல.

வெகு வெகு நாட்களுக்குப் பிறகு, தாயின் இதமான சுகமான அரவணைப்பில் படுத்திருந்தும்கூட அவள் நரக வேதனையையே அனுபவித்தாள்.

ஆனந்தி சொன்னது உண்மையானால், மாலி தன்னிடம் ஆனந்தியைப் பற்றிச் சொன்னதெல்லாம் விளையாட்டுத்தான் என்றால் —

தன்னுடைய காதலின் ஆழத்தைப் பற்றியே அவளுக்கு ஐயம் ஏற்பட்டது. நிலையான அஸ்திவாரம் இல்லாமல், வெறும் பொறாமையால் ஏற்பட்ட மாயை தானோ அது என்று சந்தேகித்தாள். தூண்டில் போடுவது போல தங்கையைக் காட்டித் தன்னை வசப்படுத்த மாலிக்கு என்ன உரிமை? பச்சைக் குழந்தை மாதிரி தன் உணர்ச்சி



களுடன் அவன் சீண்டி விளையாடியதை நினைத்துப் பார்த்தபோது, சிறுமையால் அவள் உள்ளம் வேதனைப் பட்டது.

மறுநாள் பகல் பொழுது. வேலைக்காரி சக்கு மீண்டும் வந்து, மாலி மௌபரீஸ் வீட்டை விட்டு வெளியேறி விட்டதையும், அவனை அனுப்பிய விஷயமாக அண்ணனுக்கும் தங்கைக்கும் சண்டை ஏற்பட்டதையும் தெரிவித்து விட்டுச் சென்றாள்.

இந்த நிமிடத்தில் மாலி எங்கே இருக்கிறான், அவன் உடல்நிலை எப்படி இருக்கும் என்பதில்கூட மேகலைக்கு அக்கறை ஏற்படவில்லை. ஆனால் முந்தின நாள் இரவு முழுதும் மனோரமாவின் வீட்டில் இருந்தான் என்ற தகவல் ஏனோ அவளை வாட்டி வதைத்தது.

பொய்க்கு அஞ்சாதவன், விளையாட்டு என்கிற பெயரில் பெண் மனத்தைப் பித்தாக்கத் தயங்காதவன் —

மனோரமாவிடம் எப்படி நடந்து கொண் டிருப்பான்?

இருட்டி வெகு நேரமாகி விட்டது.

தெருவைப் பார்த்தபடி நின்றிருந்தாள் மேகலை.

வந்து நிற்பது யாருடைய கார்?

"அம்மா எங்கே?" என்று பரபரப்புடன் கேட்டுக் கொண்டே உள்ளே ஓடி வந்தார் சக்கரவர்த்தி.

கார் சப்தம் கேட்டு வெளிப்பட்ட அம்மா மரமாய் நின்றாள் — இல்லை, மரத்துக்கு உணர்ச்சி ஏது? கண்ணீர் ஏது?

"சௌந்தரம்! என்னை ரொம்ப மன்னித்துவிடு. நான் என்னென்னவோ பைத்தியக்காரத்தனம் பண்ணி விட்டேன்!" என்று அவர் உதடுகள் முணுமுணுத்த அதே கணம், பெருத்த விசும்பலுடன் அம்மா அவர் மார்பில் சாய்ந்து கொண்டாள்.

மேகலை வெளியேறினாள். ஆனால் அறைக்கு வெளியே ஒரு நிமிடம் தயங்கியபோது —

அப்பாவின் பேச்சு கணீரென்று கேட்டது:

"எனக்குப் புத்தி வந்தது, சௌந்தரம்!... அந்தக் கழுதை தன் பிறவிப் புத்தியைக் காட்டிவிட்டது கடைசியில்! எவனோ ஒரு அயோக்கியப் பயல் — மாலியோ காலியோ அவனோடு... தூ! தூ! அதெல்லாம் உன் காதில்கூடப் படக்கூடாது..."

மேகலையின் இதயம் நின்றது.

21067
3742581
12.99

தெப்பக் குளம் சிரித்தது — மகா அமர்க்களத்துடன் தாறுமாறாகப் பிரிந்து சிதறிய குடும்பம், ஓசைப்படாமல் கப்சிப்பென்று ஒன்று சேர்ந்துவிட்ட வேடிக்கையைக் கண்டு அதன் தெள்ளிய நீர் தத்துவம் பேசிற்று, 'இதெல்லாம் சகஜம். இந்த நாலு கரையில் எத்தனையோ இந்த மாதிரிப் பார்த்துவிட்டேன் ஆயுளில்' என்று.

அக்கம்பக்கத்து வீடுகளில் இரண்டொரு புருவங்கள் உயர்ந்தன. சிற்சில விழிகள் கூர்ந்து கவனித்தன. பல செவிகள் புதிய புயலிரைச்சலைக் கேட்க நிமிர்ந்தன.

சக்கரவர்த்தியின் வீடு எல்லோர் ஆசையையும் கெடுத்துக் கொண்டு அமைதியில் ஆழ்ந்தது.

அல்ஜீப்ரா புத்தகம் அகப்படாமல் அலமாரி மொத்தத்தையும் காலடியிலே கொட்டிக் குவித்துக் கொண்டிருந்த மேகலை சலிப்புடன் பெருமூச்செறிந்தாள். கல்லூரிக்குப் போய் மாதக் கணக்காகி விட்டாற் போலிருந்தது. இன்றைக்காவது போனால் தேவலை.

'என் மேல்தான் தப்பு,' 'இல்லவே இல்லை', என் மீதுதான் தப்பு, "நான் உன்னை அனுப்பியிருக்கக் கூடாது," 'நான் உங்களை அவமதித்துப் போயிருக்கக் கூடாது' — இப்படிப் பைத்தியக்காரத்தனமான பிதற்றலுக்குப் பிறகு டாக்டரின் டிஸ்பென்ஸரியிலிருந்து அன்றிரவே புறப்பட்டு விட்டார்கள் அம்மாவும் அப்பாவும். பயணத்தில் எடுத்துச் செல்லப்படும் மூட்டையைப் போல யாராவது ஒருவருடன் தானும் ஒட்டிக்கொண்டு ஓட வேண்டியிருக்கும் அவல நிலை மேகலையின் உள்ளத்துக்கு வேதனை தந்தது. ஆனால் வேறு வழி இல்லையே?



இதோ, அம்மா இரும்புப் பெட்டகத்தைக் கிரீச் சென்ற ஒலியுடன் திறந்து மூடும் சப்தம் கேட்கிறது.

இதோ, 'வெண்டைக்காய் வேண்டாம். அப்பாவுக்குப் பிடிக்காது' என்று ஆனந்தி புதுச் சமையல்காரருக்குச் சொல்லித்தரும் பேச்சுக் கேட்கிறது.

இதோ, அப்பா டெலிபோன் டைரக்டரியையோ பைலையோ சலிப்புடன் எறியும் ஓசை கேட்கிறது.

எல்லோருக்கும் பழைய வாழ்க்கை திரும்பி விட்டது. எனக்குத் திரும்பாது. மாலி என்ற ஒருவனோடு அது போய் விட்டது. அவன் திரும்பக் கொண்டு வந்தால் உண்டு...

அல்ஜீப்ரா புத்தகத்தைத் தேடும் முயற்சியை நிறுத்திக்கொண்டாள் மேகலை. முன் நெற்றியில் குறுகுறுக்கும் ஒற்றைக் கூந்தலை ஒதுக்கித் தள்ளிக் கொண்டு, ஜன்னலின் வழியே வெளிப்புறம் நோக்கினாள்.

புதிய தோட்டக்காரன் ஒரு பழைய தீக்குச்சியால் பல்லைக் குத்திக் கொண்டிருந்தான். காலை வெய்யில் கதகதப்புடன் தெருவில் மினுமினுத்தது.

அம்மா உள்ளேயிருந்து வந்து வாசலுக்கும் தெருவுக்குமிடையே இருந்த சிறு தோட்டத்தைப் பார்த்தபடி நின்றாள். அவள் முகத்தில் திருப்தி நிறைந்திருந்தது. தண்ணீர்த் தொட்டிக்குப் பக்கத்தில் போனமாதம் வைத்த கனகாம்பரம் லேசாக வாடிக் கொண்டிருப்பதைக் கவனித்த போது மட்டும் அவள் வதனத்தில் லேசான மாறுதல் ஏற்பட்டது.

தனக்கு மிக அருகில் எஜமானியம்மாள் வந்து நிற்கும்போதுகூடத் தோட்டக்காரன் எழுந்திருக்காமல் அலட்சியமாகவே உட்கார்ந்திருப்பதை மேகலை கவனித்தாள்.

"ஏனப்பா, கனகாம்பரம் வாடுகிறதே, பார்க்க வில்லையா? கொஞ்சம் தண்ணீர் ஊற்றுவது தானே?" என்றாள் அம்மா.

இப்போதும் அவன் எழுந்திருக்கவில்லை. பதிலையும் வேறெங்கோ திரும்பின பார்வையுடன் சொன்னான், "எல்லாம் ஊத்தித்தான் இருக்கும்," என்று.

குரலின் அந்த அலட்சியம் அம்மாவை அதிர வைத்துவிட்டதை மேகலை பார்த்தாள். இந்த அனுபவம் அம்மாவுக்கு ஏற்பட்டது கிடையாது — குறைந்த பட்சம் இந்த வீட்டுக்குள்.

மரமாகச் சில நிமிடங்கள் நின்றபின் அம்மா உள்ளே போய்விட்டாள்.

"பெரியம்மா! பெரியம்மா!" என்ற குரல் வாசல் புறத்திலிருந்து வந்தது.

கந்தல் உடையில் காணப்பட்ட அந்த உருவம், தங்கள் வீட்டில் வேலைக்கிருந்த சமையற்காரருடையது என்பதைக் கண்டுகொள்ள மேகலைக்குப் பல வினாடிகள் பிடித்தன. அட பாவமே! கிழவர் எவ்வளவு மோசமாக உருமாறி விட்டார்.

அம்மா மறுபடியும் வாசலுக்கு வந்தவள், கூப்பிட்டவரை அடையாளம் தெரிந்ததும், திகைத்துப் போனாள். "நீங்களா?... திடீரென்று ஏன் வேலையை விட்டுப் போனீர்கள்? உடம்புக்கென்ன?" என்று விசாரித்த போது பரிவும் அக்கறையும் தொனித்தன.

கிழவர் கையைக் கட்டியவண்ணம் வாயையும் ஒரு கையால் மேலோடு பொத்திக்கொண்டு, "நானாகப் போகப் பைத்தியமா அம்மா பிடித்திருக்கிறது? நீங்கள் ஊருக்குப் போன பிறகு இங்கே எத்தனை கலாட்டா நடந்ததென்று மேகலையைக் கேளுங்கள்..."



அம்மா பழைய சம்பவங்களைக் கேட்க விரும்ப வில்லை போலும். பொறுமையற்ற குரலில், "அதெல்லாம் எதற்கு? விஷயத்தைச் சொல்லுங்கள்," என்றாள்.

"என்னவென்றம்மா சொல்லுவது? ஒருமாதச் சம்பளம்கூடக் கையிலே கொடுக்காமல் எஜமான் அனுப்பி விட்டார். வீட்டிலே மூத்த பெண் பிரசவத்துக்கு வந்திருக்கிறாள். அவள் தாயார் படுத்த படுக்கை. தள்ளாத வயதில் நான் பிச்சையெடுக்கக்கூட முடியாது... நீங்கள் வந்து விட்டீர்களென்று சக்கு சொன்னாள் கடைத் தெருவில்..."

உதட்டைக் கடித்துக்கொண்டு அம்மா சிறிது நேரம் யோசனையில் ஆழ்ந்தாள். பிறகு, "இருங்கள் வருகிறேன்," என்று சொல்லிவிட்டுத் திரும்பினாள் உள்ளே.

விதியற்றுக் கதியற்று வாசலில் மெய்நடுங்க நிற்கும் அந்த முதியவரை வைத்த கண் வாங்காமல் பார்த்தாள் மேகலை. அதே சமயம் ஹாலில் பேச்சுக்குரல் கேட்டது.

"... உனக்குத் தெரியாது சௌந்தரம்! திருட்டுப் பசங்கள் அத்தனை பேரும்! நீ இல்லாதபோது என்ன கொட்டமடித்தார்கள் தெரியுமா?" என்று சக்கரவர்த்தி உறுமிக் கொண்டிருந்தார்.

"புது வேலைக்காரர்களுக்கு மரியாதையாய் நடந்து கொள்ளவே தெரியவில்லை. அந்தத் தோட்டக்காரன்..."

அம்மாவை இடைமறித்தார் அப்பா. "எல்லாம் நாம் கொடுக்கிற மரியாதையில் இருக்கிறது!... சரி, அந்தக் கிழவனை விரட்டிவிட்டு வந்தாயா, இல்லை, வாசலில் தான் நிற்கிறானா?"

"பாவம், தள்ளாத வயது... நான் ஏதாவது சொல்லி அனுப்பி விடுகிறேன்..."

மேகலை மீண்டும் சாளரத்தின் வழியாகவே எட்டிப் பார்த்தாள்.

அம்மா இடுப்பிலிருந்து இரண்டு பத்து ரூபாய் நோட்டை... எடுத்துக் கொடுத்தாள் கிழவரிடம். "எஜமான்

ஏதோ கோபமாயிருக்கிறார். பக்குவமாய்ப் பேசி ஏற்பாடு பண்ணி, சக்குவிடம் சொல்லி அனுப்புகிறேன்."

கண்களில் நீர் துளிக்கப் பெரியவர் போய் விட்டார்.

அகப்பட்ட நாலு புத்தகத்தையும் ஒரு நோட்டை யும் சுருட்டி எடுத்துக்கொண்டு வெளியே வந்தாள் மேகலை. இந்தச் சுவர்களை விட்டு வெளியேறினால் போதும் என்ற வெறுப்பு அவள் மனத்தைப் பிழிந்து கொண்டிருந்தது.

சக்கரவர்த்தி அலுவலகத்துக்குப் புறப்பட ஆயத்தமாக, தோல் பையில் காகிதங்களைத் திணித்துக் கொண்டிருந்தார்.

ஆங்கிலத் தினசரியில் படம் பார்த்துக் கொண் டிருந்த அம்மா தலை நிமிர்ந்து, "காலேஜுக்குப் புறப்பட்டு விட்டாயா? மணி ஒன்பதுதானே ஆகிறது?" என்றாள்.

"படிப்பதற்குப் போனால்தானே நேரம் கால மெல்லாம்? என்னவோ கூத்து!" என்றார் சக்கரவர்த்தி குத்தலாக. ஆனந்தியையும் அம்மாவையும் பழைய இடத்தில் ஏற்றுக் கொண்டவர், தன்னிடம் மட்டும் ஒருவித குரோதத்துடனேயே இருப்பதை மேகலை கவனித் திருந்தாள்.

"இஷ்டமில்லையென்றால் நிறுத்தி விடுங்களேன்! எதற்கு வீண் திட்டு!" என்று அவள் ரோஷமாகப் பதிலளித்தபோது —

"ஹல்லோ மேகலை!" என்ற உற்சாகக் கூப்பாட்டு டன் மூன்று யுவதிகள் உள்ளே நுழைந்தார்கள்.

ஷீலாவும் பத்மினியும் கல்பனாவும் அவளைக் கட்டியணைத்துச் சூழ்ந்து கொண்ட கலாட்டாவில் மேகலை மூச்சுத் திணறினாள்.

"இப்படி மட்டம் போட்டு விட்டாயே ஒரேயடியாய்!" என்று ஷீலா தன் ஆர்மோனியக் குரலில் கூவினாள்.



"நீ இல்லாமல் கிளாஸ் சுவாரசியமே இல்லை!. 'பல்லி'க்குக் கல்யாணமாகி விட்டது தெரியுமோ இல்லையோ!" என்று 'நியூஸ்' வாசிக்கத் தொடங்கினாள் கல்பனா.

அப்பா சொல்லி வாய் மூடு முன்பே, அவர் எதிரிலேயே இப்படி அரட்டைக் கூத்து ஆரம்பமாகி விட்டதே என்று மேகலை வருந்தினாள். தோழிகளின் உற்சாகத்தைத் தடுக்க வழி தெரியாமல், "காலேஜுக்குத் தான் கிளம்பிக் கொண்டிருந்தேன் போகலாமா?" என்றாள்.

"ஹஹ்ஹா! அதுதான் இல்லை!" என்று கல்பனா கை தட்டினாள். "இன்றைக்கு நாங்கள் மட்டம்! உனக்கும் சேர்த்து லீவு வாங்கிக்கொண்டு வந்து விட்டோம்?"

"கொஞ்சம் உட்கார்ந்துதான் பேசுங்களேன் அம்மா!" என்றார் சக்கரவர்த்தி.

அப்போதுதான் அவரைக் கவனித்தவர்களாக அவர்கள் எதிர் சோபாக்களில் அமர்ந்துகொண்டு, "தாங்க் யூ!" என்றார்கள் ஒரே குரலில்.

"காலேஜுக்குப் போகாமல் வேறே என்ன புரோகிராம்?" என்று சக்கரவர்த்தி விசாரித்தார்.

"பார்த்தீர்களா? மறந்தே விட்டேன்," என்று பரபரத்தாள் ஷீலா. "பப்பி! நோட்டை எடு, நோட்டை எடு! சார்கிட்டே முதல் வசூல் பண்ண வேண்டாமோ?"

பத்மினி டம்பப் பையிலிருந்து ரசீதுப் புத்தகத்தை எடுக்க, அதைக் 'கபக்' கென்று பிடுங்கிப் பிரித்து, "எவ்வளவு எழுதட்டும்? நூறு போடலாமா?" என்றாள் கல்பனா குஷாலாக.

"இருக்கட்டும், இருக்கட்டும். என்ன விஷயம்? அதைச் சொல்லுங்கள் முதலில்," என்றார் சக்கரவர்த்தி.

"தமிழ்ச் சங்கத்தின் சார்பில் டிராமா போடு கிறோம். டிக்கட் விற்பதற்காகத்தான் இப்போது புறப்பட்டோம்," என்று ஷீலா விளக்கினாள்.

"நீ ஹாஸ்டலிலே தங்கியிருக்கிறாயா அம்மா?" என்று இதமாக விசாரித்தார் சக்கரவர்த்தி.

"ஆமாம். அம்மாவும் அப்பாவும் கிராமத்திலே இருக்கிறார்கள். ஏன் சார்?"

ஷீலாவுக்குப் பதில் சொல்லாமல், "நீ? உன் அப்பா அம்மா...?" என்று கல்பனாவைக் கேட்டார்.

"யாருமில்லை. ஒன்றுவிட்ட மாமா வீட்டிலே இருக்கிறேன்," என்று திகைப்புடன் கல்பனா பதிலளித்தாள்.

"உனக்கு?"

பத்மினி இன்னும் திகைப்புடன், "நானும் ஹாஸ்டல்தான்," என்றாள்.

"அதனால்தான் இப்படிக் கேள்வி முறையில்லாமல் ஊர் சுற்றுகிறீர்கள்!" என்றார் சக்கரவர்த்தி.

"அப்பா!" என்று மேகலை குறுக்கிட்டாள். சக்கரவர்த்தி லட்சியம் செய்யவில்லை. "மேகலைக்கு அப்பா அம்மா இருக்கிறார்கள். குடும்பம் இருக்கிறது. உங்களைப் போலத் தெரு சுற்ற அவள் வர மாட்டாள்! போய் வாருங்கள்! டிராமாவாம் டிராமா! உதைக்கிறதுக் கில்லாமல்" என்று சீறிக் கொண்டே சக்கரவர்த்தி புறப்பட்டார்.

கன்னத்தில் அறைந்திருந்தால் கூட மூன்று பேரும் அப்படிப் பிரமை பிடித்துப் போயிருக்க மாட்டார்கள். ஒரு முழு நிமிடம் பேந்தப் பேந்த விழித்து விட்டு, சடாரென்று வெளியேறி விட்டார்கள்.

"பொறுப்பில்லாத கழுதைகள்!... நான் வருகிறேன் சௌந்தரம்!"

சக்கரவர்த்தியும் போய் விட்டார்.

கலகலவென்றிருந்த ஹாலில் மயான அமைதி குடி கொண்டது. வாசலையே வெறித்து நோக்கியபடி நின்று கொண்டிருந்தாள் அம்மா.

"கேட்டாயா அம்மா? எல்லாவற்றையும் பார்த்தாயா?" என்று அவள் மீது திடீரெனப் பாய்ந்தாள் மேகலை. "இதெல்லாம் நியாயமாயிருக்கிறதா? என்னைத் தேடி வந்த சிநேகிதிகளை இப்படித்தான் அவமானப் படுத்துவதா?"



அம்மா மெதுவாகப் பதில் சொன்னாள்: "அவமானப் படுத்துவதாவது ஒன்றாவது, மேகலை! வயதில் பெரியவர் தானே உன் அப்பா! சிறிசுகள் இப்படியெல்லாம் இருக்கக்கூடாது என்று நல்ல புத்தி சொன்னார். அது தப்பா?"

"அம்மா!" என்று பல்லைக் கடித்தாள் மேகலை. "வெட்கம் மானம் சூடு சுரணை எல்லாவற்றையும் துடைத்து விட்டாய் நீ! இல்லாவிட்டால் அந்தத் தோட்டக்காரனின் அவமதிப்பைச் சகித்துக்கொண்டு வந்திருப்பாயா? சமையல்காரக் கிழவர் அவ்வளவு கெஞ்சினாரே, அவருக்காக ஒரு வார்த்தை அப்பாவிடம் துணிச்சலாகப் பேசாமலிருப்பாயா? அப்பா உன்னிடம் சரணாகதி அடையவில்லை. நீதான் அவர் காலிலே விழுந்து சுயமரியாதையைக் கூடத் தூக்கி எறிந்து விட்டாய்! அப்பாவின் அடிமையாகி விட்டாய்!"

"இருந்துவிட்டுப் போகட்டும். இப்படி இருப்பதில் தான் ஒரு மனைவியின் லட்சணம் இருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள எனக்கு இத்தனை நாளாயிற்று. நான் ஆத்திரப்பட்டு, சண்டை போட்டு, குடும்பத்தின் கௌரவத்தைக் குலைத்ததெல்லாம் போதாதா?"

மேகலை செயலற்று நின்றாள். வெறுப்பின் அந்தக் கோடியிலிருந்து அன்பின் இந்தக் கோடிக்கு அம்மா வந்து விட்டதை உணர்ந்தபோது, அவள் நம்பிக்கையத்தனையும் அழிந்தொழிந்தது. ஒருமாத காலம் தனி வாழ்க்கை நடத்தித் திண்டாடிய காரணத்தால், அப்பா 'என்னை மன்னித்து விடு' என்று சொன்ன ஒரே சொல்லின் விளைவாக அடிமைச்சீட்டு எழுதித் தந்துவிட்ட அம்மாவைப் பார்க்கும்போது அவளுக்குத் துயரம் அழுகையாக வந்து நெஞ்சை அடைத்தது.

அம்மா இனி முதுகு ஒடிந்த வில்; அதில் முறுக்குக் கொடுக்க முடியாது. நாணேற்ற முடியாது.

இந்த ஒடிந்த வில் இனி எந்த அநீதியையும் எதிர்த்துக் கணை எய்யாது.

எவர்சில்வர் டபரா டம்ளரில் பியூன் கொண்டு வந்து வைத்த டீயை உறிஞ்சினார் சக்கரவர்த்தி. மேஜை மீதிருந்த நாட்குறிப்புப் புத்தகத்தின் மேலட்டைமீது அவர் பார்வை பதிந்திருந்தது. தொழிற்சாலையின் புகைப்படம் அது. குரோம்பேட்டைக்கும் பல்லாவரத்துக்கும் இடையே ஒரு சிறு இடம் வாங்கி, தோல் பதனிடும் சொந்தத் தொழிற் சாலையை அவர் நிறுவி ஐந்து ஆண்டுகள் ஆகின்றன.

டெலிபோன் புஸ்ஸென்றது.

"யாரோ சிவதாணுவாம். உங்களுடன் அவசரமாகப் பேசவேண்டுமென்கிறார்," என்று குமாஸ்தா அறிவித்தார்.

"சிவதாணுவா?" என்று உதட்டைச் சுழித்தார் சக்கரவர்த்தி. "போட்டுத் தொலை!"

"வீட்டிலே எல்லாம் சௌகரியமாகி விட்டதா?" என்ற இனிமையான குரல் வந்தது.

"மனோரமா! நீயா! சிவதாணு என்று..." மகிழ்ச்சி யுடன் திகைத்தார் சக்கரவர்த்தி.

"வேலைக்காரனை விட்டுக் கூப்பிடச் சொன்னேன். இனிமேல் மனோரமாதேவி உங்களை டெலிபோனில் நேரிடக் கூப்பிட மாட்டாள். ஆபீசிலும் நாலுபேர் நம்பவேண்டுமில்லையா உங்கள் மாற்றத்தை!" என்று மனோரமா கலகலவென்று சிரித்தாள்.

"பொல்லாத பெண்!"

"என்ன பண்ணுவது! நல்லவர்களுக்கு இது காலமில்லை என்று சும்மாவா சொல்லுகிறார்கள்!... கேட்டேனே, எல்லாம் சரியாயிருக்கிறதா என்று..."

"ஓ! இப்போது நீ வந்து வீட்டைப் பார்க்க வேண்டுமே!"

"சரியாய்ப் போச்சு! மறுபடியும் கலாட்டா ஆரம்பிக்க வேண்டுமென்கிறீர்களா?" மனோரமாவின் குரல் இப்போது தாழ்ந்து தழுதழுத்தது. "இதோ பாருங்கள், இப்போதுதான் எனக்கு நிம்மதி. இதைத்தான் நான் வேண்டினேன். இதுதான் உங்களுக்குக் கௌரவம்..."



"ஏது, நிஜமாகவே உன்னைக் கத்தரித்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லிவிடுவாய் போலிருக்கிறதே!"

"மாட்டேன், மாட்டேன்! அது மட்டும் இல்லை.. இப்படியே இருங்கள், போதும். நாலு பேருக்கெதிரில் பகிரங்கமாகக் காட்டிக் கொண்டால்தான் அன்பா?"

"போகட்டும் மனோ. இன்று சாயந்திரம் ஒரு சினிமாவுக்கு..."

"நோ, நோ, நோ! இனிமேல் அந்த உல்லாசம் மட்டும் அடியாளுக்குக் கிடையாது. பிற்பகல் இரண்டு மணிக்கு வாருங்கள். நாலுமணிக்கு உங்கள் வீட்டுக்குத் திரும்பி விடுங்கள், ஆபீசிலிருந்து நேரே வருகிற மாதிரி. யாருக்கும் சந்தேகம் இல்லை, யாருடனும் சண்டை இல்லை."

"மனோ, மனோரமா..." என்று சக்கரவர்த்தி குழைந்து கொண்டிருந்தபோது மறுமுனையில் அவள் டெலிபோனை வைத்து விட்டாள்.

தலைமைக் குமாஸ்தா ஐந்தாறு கடிதங்களுடன் உள்ளே நுழைந்து, "இதற்கெல்லாம் பதில் எழுதினால் தேவலை. ஒரு வாரமாய் நிற்கிறது," என்றார்.

"அட சரிதானையா! பெரிய தலைபோகிற விஷயம். நாளைக்குக் கொண்டு வாரும்," என்று அலுத்துக் கொண்டார் சக்கரவர்த்தி.

தலைமைக் குமாஸ்தா சத்தமின்றிப் பின் வாங்கினார்.

எஜமானர் எவ்வளவு மாறிவிட்டார் இப்போது!

'நாலு பிரிட்டிஷ் கம்பெனி, ஒரு ஜெர்மன் கம்பெனி. இரண்டு நார்வே கம்பெனி — ஆக ஏழு கம்பெனிகள் தோலுக்காகக் கொடுத்திருந்த ஆர்டர்களை ரத்து செய்திருக்கின்றன! எஜமானர் கண்ணை மூடிக் கொண்டு சொப்பனம் காணுகிறார்!' என்று நினைக்க நினைக்க அவருக்கு வியப்பு மேலிட்டது.

ஒன்றுக்கு இரண்டாக விலை கொடுத்து வாங்கிய தோல்கள் ஒரு பக்கம் கிடங்கிலே முடங்கிக் கிடக்கின்றன. ஆர்டர்கள் ரத்தாகின்றன இன்னொரு பக்கம்.

கடைசி வகுப்புக்குப் போக்குக் காட்டிவிட்டு வெளியே வந்தாள் மேகலை. அன்று முழுதும் அவளுக்குக் கல்லூரியில் இருப்புக் கொள்ளவில்லை. முன்னைப் போல் கல்லூரி வாழ்க்கையில் ஒன்றுவதற்கு மனம் மறுத்தது. காதல் அனுபவத்தில் சிக்கிய பிறகு தான் எத்தனை தூரம் மாறிவிட்டோம் என்பதை அவள் உணர்ந்தே இருந்தாள். தன்னைப் பைத்தியமாக்கி, தன் இயல்புகளை அடியோடு மாற்றிவிட்ட இந்தப் புதிய அனுபவங்களை அவள் மனமார வெறுத்தாள். எல்லாம் ஒரு கனவாகி, திடீரென்று விழித்துக் கொண்டு, பழைய மேகலையாக விளங்குகின்ற நிலை வராதா என்ற நடவாத எண்ணங்களை உள்ளம் கற்பனை செய்தது.

"கார் வரவில்லை, மேகலை?" என்று ஒரு தோழி விசாரித்தாள். தினம் ஓசியில் வந்து திருவல்லிக்கேணி ஹைரோடில் இறங்கிக் கொள்பவள் அவள்.

"கார் சர்வீசுக்குப் போயிருக்கிறது," என்று பொய் சொல்லும்போது மேகலைக்குத் தன்னிடமே வெறுப்பு மூண்டது.

சாலையில் வந்துநின்ற பஸ்ஸில் ஏறிக் கொண்டாள். மவுண்ட்ரோடுக்கு மட்டுமே போகிற வண்டி அது என்று அப்புறம்தான் தெரிந்தது. நியூ குளோப் தியேட்டருக்கருகில் இறங்கிக் கொண்டு மனம்போன வாக்கில் நடந்தாள்.

அட்டகாசச் சிரிப்புடன் நாலைந்து இளைஞர்கள் செல்வதைக் கவனித்த பிறகுதான் மாலியின் கல்லூரிக்கு அருகில் வந்திருக்கிறோம் என்பதை அறிந்தாள்.

மாலி! அவனைப் பார்க்கவும் பிடிக்கவில்லை. இனிப் பார்க்கவே போவதில்லை. அனாவசியமாகத் தன் வாழ்க்கையில் குறுக்கிட்டவன்; காரணமின்றித் தன்னைத்



துன்புறுத்தியவன்; கும்மாளமாயிருந்த உள்ளத்தில் குழப்பங்களை ஏற்படுத்தியவன்...

என்ன வெறுப்பாக நினைத்துப் பார்த்தும், அந்தக் கல்லூரி வாசலை விட்டு அவள் கால்கள் நகர மறுத்தன. கும்பல் கும்பலாக வெளிப்படும் மாணவர் பட்டாளத்தின் நடுவே அந்த ஆசை முகம்...

"மேகலை!"

அவன்தான்.

சிரித்த முகத்துடன், ஆர்வம் ததும்ப, குறுகுறுப்புக்களை சொட்ட, விரைந்து வந்து அவள் பக்கலில் நின்று, "மேகலை! மேகலை!" என்று ஆசையுடன் ஜபித்தான்.

"சௌக்கியமாயிருக்கிறீர்களா?"

"மேகலை! இது மட்டும் மௌண்ட் ரோடாயில்லாமல் சகாரா பாலைவனமாயிருக்கக் கூடாதா? உன்னை அப்படியே குண்டுக் கட்டாய்த் தூக்கித் தலைமீது வைத்துக்கொண்டு ஒரு ராக் அண்ட் ரோல் ஆடிக் காட்டுவேன்!"

மேகலை குமுறினாள்... வேண்டாம், வேண்டாம். என்னை மீண்டும் பேதையாக்காதீர்கள். என்னால் தாள முடியாது.

வலுக்கட்டாயமாகக் கோபத்தை வரவழைத்துக் கொண்டு, "இங்கே எனக்குப் பதிலாக ஆனந்தி இருந்தால்?" என்று மேகலை கேட்டாள் முறைத்த பார்வையுடன்.

"அவள்... அவள்..." மாலியின் முகபாவம் மாறிற்று. "அவளிடம் கேட்டுவிட்டாயா?"

"ஆமாம். உங்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளக் காத்திருக்கவில்லை."

"அம்மாடி!" என்று பெருமூச்சு விட்டான் மாலி ஆறுதலுடன். "நம் காதல் முற்ற முற்ற, என் விளையாட்டை உன்னிடம் சொல்லத் தயக்கம் அதிகமாகி விட்டது. நல்ல வேளை, நீயாகவே தெரிந்து கொண்டு விட்டாய் மேகலை, அதெல்லாம் விளையாட்டு..."

"விளையாடுவதற்கு நான் பொம்மையுமில்லை; நீங்கள் குழந்தையுமில்லை!" என்று சீறினாள் மேகலை. 'வேண்டாம் வேண்டாம்' என்று அறிவு இதம் கூறிற்று. 'உன் ஆசைக் காதலன் வந்திருக்கிறான். இன்ப உலகம் திறந்து கிடக்கிறது. இதைக் கெடுத்துக்கொள்ளாதே' என்று உள் மனம் எடுத்துச் சொல்லியது. மேகலை காதில் வாங்கிக் கொள்ளவில்லை. தன் சினத்தைக் கொட்ட ஒருவன் அகப்பட்ட சந்தோஷத்தில் இருந்தாள் அவள்.

"என்னிடம் விளையாடியாகி விட்டது. இப்போது மனோரமாவிடம் விளையாடுகிறாற் போலிருக்கிறது?" என்று மேலும் சீண்டினாள்.

"மேகலை!"

"என்னை அதட்டியும் நிறுத்த முடியாது. பசப்பியும் வாயடைக்க முடியாது. மனோரமாவிடம் உங்களுக்குள்ள உறவு என்ன?"

"நான் சொல்லத் தயாராயில்லை," என்று அழுத்தந் திருத்தமாகப் பதிலளித்தான் மாலி. இத்தனை நாளில் முதல் முறையாக அவன் கண்களில் கோபத்தின் கடுமையைக் கண்டாள் மேகலை.

"நான் சொல்ல மறுப்பதை நீ தப்பாக எடுத்துக் கொண்டாலும் பரவாயில்லை!" என்று தொடர்ந்தான் மாலி. "விஷயத்தைத் தெரிந்து கொள்ளும் ஆவலுடன், என்னை நம்புகிற உள்ளத்துடன் நீ கேட்டிருந்தால் நான் சொல்லியிருப்பேன். பித்துக்கொள்ளித் தனமான சந்தேகத்துடன் நீ கேட்கிறாய். உனக்குச் சமாதானம் சொல்லுவது என் சுயமரியாதைக்கே இழுக்கு!"

"உங்களுக்கு இப்படிக்கூட ஒரு சாக்குக் கிடைக்குமென்று நான் நினைக்கவில்லை!" என்று கூறிவிட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டாள் மேகலை. கூடாது. தன் கண்கள் கலங்குவதை அவன் காணக்கூடாது.

மாலி அமைதியாகப் பேசினான்:

"நீ என்னோடு பேச விருப்பப்படாததால் நானும் இங்கே நிற்க இஷ்டப்படவில்லை. ஆனால் போவதற்கு



முன்னால் ஒரு விஷயம் சொல்லிவிடுகிறேன். நான் இன்றைய வாலிபன். பத்தாம்பசலிக் கிழவன் அல்ல. எனக்குப் புதுக் கொள்கைகள் இருக்கிறது. எதை மிக மேலானதென்று எண்ணுகிறேனோ, அதை அடைய, எந்தக் கீழான மார்க்கத்தையும் கையாளத் தயங்காதவன்தான் நான். ஆனால் அதிலும் ஒரு வரையறை வைத்துக் கொண்டிருக்கிறேன். கவலைப்படாதே. எனக்கு நீதான் மேல்; உன் சுகம்தான் பெரிது. அதைப் பாதுகாப்பதற்காக எந்த வழியிலும் இறங்குவேன். நான் பயப்பட வேண்டியது உனக்கல்ல, என் மனச்சாட்சிக்கு..."

"மாலி!"

கூப்பிட்டது மேகலை அல்ல.

நடைபாதை ஓரமாக வந்துநின்ற காரிலிருந்த மனோரமா.

அரை வினாடிகூடத் தயங்காமல் காருக்கருகே சென்றான் மாலி.

"வீட்டுக்குத்தானே? வாருங்கள்," என்றாள் மனோரமா.

திறந்து கொண்ட முன் கதவு வழியே காரில் ஏறி அமர்ந்தான் மாலி. திரும்பியும் பார்க்கவில்லை மேகலையை.

மவுண்ட் ரோட்டில் பறக்கும் நூற்றுக்கணக்கான கார்களில் அதுவும் ஒன்றாகக் கலந்து மறைந்தது. இடி விழுந்தது போல் நின்றாள் அவள். "நாடகம் பிரமாதம், இல்லையா மேகலை?"

வெடுக்கென்று திரும்பினாள். தோளுக்குப் பின்னேயிருந்து வந்த குரல் கேட்டு.

சிகரெட் புகையுடன் தாண்டவம்!

"பிரமாதமான நாடகம்! யாருடைய கண்ணில் யார் மண்ணைத் தூவிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைக் கூடப் புரிந்து கொள்ள முடியாத அற்புத நாடகம்!"

"உன் அபிப்பிராயத்தை நான் கேட்கவில்லை" என்று சொல்லிவிட்டு நடக்க முயன்றாள் மேகலை. நடை தள்ளாடிற்று.

தாண்டவம் பல்லைக் கடித்துக்கொண்டு சிரித்தான். "மண் தூவுவதற்குச் சௌகரிமாக எல்லோரும் கண்ணைத் திறந்து கொண்டிருக்கிறார்கள். நான் ஒருவன் தான் கண்ணை மூடிக்கொண்டு, அறிவைத் திறந்து வைத்துக் கொண்டிருக்கிறேன். அதனால்தான் மற்றவர் களுக்குப் புரியாததெல்லாம் எனக்குப் புரிகிறது."

"சந்தோஷம்," என்று சொல்லிவிட்டு மேகலை வேகமாக நடந்தாள்.

## 13

**கை**யிலிருந்த சிகரெட்டை உதறி எறிந்து பூட்ஸ் காலால் அதை மாவாய்த் தேய்த்துத் துவைத்துவிட்டுக் கட்டிடத்தை ஏறிட்டு நோக்கினான் தாண்டவம்.

பலகை தென்பட்டது, புத்தம் புதிய எழுத்துக் களின் மீது நீல வெளிச்சம் வீச.

"தமிழ் நாடு லெதர்ஸ்."

இதுதான்.

பக்கத்துக் கட்டிடங்கள், இட அமைப்பு எல்லா வற்றையும் இன்னொரு தரம் சரிபார்த்துக் கொண்டான். சந்தேகமில்லை. அன்றைக்குச் சக்கரவர்த்தி சுட்டிக் காட்டிய இடம்தான்.

ஹாலிலிருந்த பெரும்பாலான மேசைகள் காலியா யிருந்தன. சிப்பந்திகள் வீட்டுக்குப் போய்விட்டார்கள். இடது ஓரத்தில், ஒன்றரை ஆள் உயரமுள்ள எஃகு அடுக்கு அலமாரியை இரண்டு மூன்று பேர் பொருத்தி நிறுத்திக்



கொண்டிருந்தார்கள். சக்கரவர்த்தியின் கம்பெனியில் ஒருவிதப் பழமை மணம் வீசுவதுண்டு. இங்கே அத்துடன் ஓரளவு புதுமை மணமும் வீசிற்று. கர்னாடகமான நாற்காலி களுக்குப் பக்கத்தில் நவீன நாகரிக 'கேள்விக்குறி' நாற்காலிகளும் தென்பட்டன. மரப் பீரோக்களை இடித்துக்கொண்டு மரத்தின் நிறம் கொண்ட இரும்பு அலமாரிகள் நின்றன. பழைய மின்சார விசிறிகளும் புதிய 'ஸ்டாண்ட்' விசிறிகளும் அருகருகே காட்சியளித்தன.

ஸ்தாபனம் வெகு வேகமாக முன்னேறிக் கொண்டிருப்பதன் அடையாளம்...

ஹாலை அடுத்த சிறிய அறை சற்று இருட்டாக இருந்ததால் விளக்குப் போடப்பட்டிருந்தது. தள்ளு கதவின் கீழே ஒரு பையன் உட்கார்ந்திருந்தான். பின்னால் மின்சார விசிறி சுழலுவது மட்டுமே தெரிந்தது.

"தனகோடி இருக்கிறாரா?" என்று தாண்டவம் பையனின் தோளைத் தட்டி விசாரித்தான்.

"முதலாளி வேலையாயிருக்கிறார்," என்றான் பையன் மிடுக்காக. முதலாளியின் பேரைத் தாண்டவம் கூறியது அவனுக்குப் பிடிக்கவில்லை என்பதும் அந்தப் பதிலில் தொனித்தது.

தாண்டவம் பையில் கைவிட்டான். இரண்டு ரூபாய் நோட்டாகத்தான் வந்தது. "காப்பி சாப்பிட்டு விட்டு, சினிமாவுக்கும் போ!" என்றவன், "போவதற்கு முன்னால் முதலாளிகிட்டே தாண்டவம் வந்திருக்கிறார் என்று சொல்லி விட்டுப் போ," என்றான்.

திகைப்பு அடங்கியதும் பையன் உள்ளே போனான்.

தாண்டவம் எதிர்பார்த்ததுபோல், தள்ளுகதவுக் கப்பால் தனகோடி காணப்படவில்லை. வேறு யாரோ ஒரு வயதான கிழவர், மூக்குக் கண்ணாடியை வைத்த இடம் தெரியாமல் மேஜையைத் தடவிக் கொண்டிருந்தார். பையன் தள்ளிச் சென்ற ஸ்பிரிங் கதவு முன்னும் பின்னுமாக விசிறிக் கொண்டிருந்தபோது, அந்த அறைக்கு

அப்பால் இன்னோர் அறை இருப்பதையும், பையன் அங்கே நுழைவதையும் தாண்டவம் கண்டான்.

இரண்டு நிமிடத்தில் பையன் வந்தான். அவன் முகம் பீதியில் தோய்ந்திருந்தது.

"நீங்க உடனே இந்த இடத்தைவிட்டுப் போறீங்களா இல்லையா என்று ஐயா கேட்கிறார்," என்றான் பரபரப்புடன்.

"அட சீ மக்கு! என்னை யாரென்று ஞாபகம் வராமல் எஜமான் அப்படிச் சொல்லியிருக்கிறார்!" என்று சொல்லிவிட்டு, பையனின் கெஞ்சலைக்கூட லட்சியம் செய்யாமல் உள்ளே புகுந்தான். குமாஸ்தா கிழவர், காலடி யோசையைக் கொண்டு யாராயிருக்கும் என்று நிதானிக்க முயன்று கொண்டிருந்தபோதே அடுத்த அறைக்குள் பிரவேசித்து, "குட் ஈவினிங்!" என்றான் உல்லாசமான குரலில்.

ஒரு தோல் துண்டை மேஜை விளக்கருகே நீட்டிக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த தனகோடி சடக்கென்று நிமிர்ந்து, "பையன் வந்து சொல்லவில்லை?" என்று கடுமையாக வினவினான்.

"சொன்னானே? அதுதான் அந்த இடத்தைவிட்டு இந்த இடத்துக்கு வந்துவிட்டேன் உடனே!" என்று நிதானமாகப் பதிலளித்துவிட்டு, தானே ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டு அமர்ந்தான் தாண்டவம்.

"உன்னுடன் விளையாடிக் கொண்டிருக்க எனக்கு நேரமில்லை."

"ஆமாம். பிஸினஸ் பிரமாதமாக வளர்ந்து கொண்டிருக்கிறது என்று நானும் கேள்விப்பட்டேன். மூச்சு விடக் கூட நேரமிருப்பதில்லையாமே, உனக்கு?"

தனகோடி பதிலளிக்கவில்லை. முகத்தைத் திருப்பிக் கொண்டு, கையிலிருந்த தோல் துண்டைப் பரிசீலனை செய்வதில் மீண்டும் முனைந்தான். ஆனால் அதில் அவன் மனம் செல்லவில்லை என்பதை முகத்தின் அலுப்புக் காட்டிற்று.



"பணம் காசு சேர்ந்தால் பழைய சிநேகிதமெல்லாம் எப்படிப் பறந்துவிடுகிறது!" என்று வேண்டுமென்றே வாய்விட்டுச் சொன்னான் தாண்டவம்.

"ஆமாம். உன் தங்கையிடம் கற்றுக்கொண்ட பழக்கம்!" என்று தனகோடியிடமிருந்து பதில் வந்தது.

"ஓ, அப்படியா! எனக்குத் தெரியாதே?"

"தெரியாதென்று இப்போது சொல்லிக் கொள்ளுவதற்குத்தானே நீ அப்போது வெளியூருக்கு நழுவி விட்டாய்! தாம்பரம் மனோரமாவுக்கு நாட்டியக் கச்சேரிகள் அமர்த்திக் கொடுக்கவும் கூஜாவைத் தூக்கிக் கொண்டு பின்னாலே ஓடவும் இந்தத் தனகோடி வேண்டியிருந்தான் ஆரம்பத்தில். கொஞ்சம் பெயர் புகழ் ஏற்பட்டதும்? உதறு தனகோடியை! கடற்கரை மணல், உட்கார்ந்திருக்கிற வரையில் வேண்டும். எழுந்திருக்கும் போது தட்டிவிட வேண்டியதுதானே!"

சீறிக்கொண்டே போனவன், களைப்பு மிகுதியால் தானாகவே நிறுத்துவான் என்று தாண்டவம் எதிர் பார்த்தான். அப்படி நேராது போகவே, "நிறுத்து, நிறுத்து! அப்படி அந்தக் காலத்தில் தப்புப் பண்ணியிருந்தாலும், இப்போது அதற்கெல்லாம் வட்டியும் முதலுமாக மனோரமா பரிகாரம் செய்து கொண்டிருக்கிறாளே, போதாதா?" என்றான்.

"அடடே! அப்படி என்னப்பா செய்கிறாள், பாவம்?"

தாண்டவம் உடனே பதில் தராமல், மேஜை மீதிருந்த தங்க சிகரெட் கேஸை உரிமையுடன் எடுத்து, ஒரு சிகரெட்டை லைட்டரால் பற்ற வைத்துக் கொண்டான். பிறகே, "இங்ஸலி கம்பெனியைப் பற்றி என்ன நினைக்கிறாய்?" என்று கேட்டான்.

தனகோடி திகைத்தான். "சம்பந்தமில்லாத கேள்வி!"

"பரவாயில்லை. பதில் சொல்லு. அந்தக் கம்பெனியுடன் உனக்கு பலத்த போட்டி உண்டா இல்லையா?"

"கிங்ஸ்லி கம்பெனியுடனா!" தனகோடி கடகட வென்று நகைத்தான். "அதை என் போட்டி என்று இன்றைக்குச் சொன்னால் எனக்குத்தான் அவமானம்! மார்க்கெட்டில் அதன் பெயரில் காலணா பெயராது. அந்த மடையன் சக்கரவர்த்தி என்னதான் பண்ணிக் கொண்டிருக்கிறானோ!"

"நான் சொல்லட்டுமா! மனோரமாவின் மையலில் சிக்கிக் கிடக்கிறார்."

"தாண்டவம்!"

தாண்டவம் தனகோடியின் முகத்துக் கருகாகக் குனிந்து புகையை வெளிப்படுத்திய வண்ணம் பேசினான். "ஆமாம் தனகோடி! நம்பிக்கையில்லாவிட்டால் வீட்டுக்கே வந்து பார்! ஒரு காலத்தில் சக்கரவர்த்தியின் சுண்டு விரலைக்கூட நீ அசைக்க முடியாதிருந்தது. இன்று அதே மனிதர் பிஸினஸை அடியோடு மறந்து, மார்க்கெட் வாசலை உனக்குத் திறந்து விட்டிருக்கிறார் என்றால் அதற்குக் காரணம் முதலாவது நான். இரண்டாவது மனோரமா. மறக்காதே!"

"ஏது, என்னுடைய தொழில் திறமை இதிலே கடுகத்தனையும் கிடையாதென்று சொல்லிவிடுவாய் போலிருக்கிறதே!"

"சே, சே! அதுதான் இருக்கவே இருக்கிறதே! என்ன, நாங்கள் செய்த உதவிக்கு நன்றிகூடச் சொல்ல மாட்டாயா?"

"வெறும் நன்றி வாங்கிக் கொள்வது உனக்கு வழக்கமில்லையே! வெள்ளிக் காசுடனல்லவா அது வர வேண்டுமென்பாய்?"

"ஆமாம். ஆனால் அதை அப்புறம் பார்த்துக் கொள்ளலாம். இப்போது எங்களால் இன்னும் ஏதாவது ஆக வேண்டுமா சொல்லு. அதைக் கேட்கத்தான் வந்தேன். நம்முடைய பழைய சினேகிதத்தை நீ மறந்தாலும் நான் மறக்கத் தயாராயில்லை."



"ஆனால் நான் உன்னை நம்பத் தயாராயில்லையே தாண்டவம்!" என்றான் தனகோடி.

தாண்டவம் அவன் கைகளைப் பிடித்துக் கொண்டான். "தனகோடி! அந்த ஆளைக் கவிழ்ப்பதில் எனக்கு ஒரு சொந்த நோக்கம் இருக்கிறது. இரண்டு பேரும் கல்லடிப்போம். ஒரு மாங்காய் விழட்டும்!"

தனகோடி உதட்டைக் கடித்துக்கொண்டு சிறிது நேரம் யோசனையிலாழ்ந்தான். வெளியே குமாஸ்தா கிழவரின் மேஜையடியில் காகிதங்களின் சலசலப்புக் கேட்டது.

"வந்து..." என்று ஆரம்பித்த தனகோடி, வெளிப் பக்கம் பார்த்து, "ராமாமிர்தம்! நீங்கள் வீட்டுக்குப் போகலாமே?" என்று குரல் கொடுத்தான்.

"யெஸ் ஸார்!" என்ற பதிலும், டிராயர்கள் இழுத்து மூடப்படும் ஓசையும், செருப்பொலியும் அடுத்த சில நிமிடங்களுக்கு வெளிப்பட்டு மறைந்தன.

தனகோடி ஒரு சிகரெட்டை உதட்டின் நுனியில் ஒட்ட வைத்துக் கொண்டான். "ஒவ்வொரு தொழிலிலும் ஒவ்வொரு உற்பத்தி ரகசியம் இருக்கிறது. ஒரு ஸ்தாபனத்தின் தயாரிப்புக்கும் இன்னொரு ஸ்தாபனத்தின் தயாரிப்புக்கும் தரத்தில் வித்தியாசம் இருக்கிறதே, அதற்கு அந்த ரகசியம்தான் காரணம். தமிழ்நாடு லெதர்ஸ் என்ன தான் ஆயிரம் மடங்கு உற்பத்தியளவில் சிறப்புப் பெற்றாலும், கிங்ஸ்லி தோலுக்கு உள்ள தரத்தை எட்டிப் பிடிக்க முடியாது. காரணம் – கவனமாகக் கேட்கிறாயா?"

"சொல்லு," என்றான் தாண்டவம்.

**ல**ஸ் முனையின் மாலை நேரக் கோலா கலங்களைப் பார்த்தவாறு தன்னை மறந்து நின்றிருந்தாள் ஆனந்தி. அந்தக் கும்பலும், கும்பல் எழுப்பிய மணமும் அவள் இதயத்துக்கு இதம் தந்தன.

மாம்பலம் பஸ்ஸிலிருந்து இறங்கி வந்த வக்கீல் வீட்டுப் பெரியநாயகி, அவள் தனியாக நிற்பதைப் பார்த்து

விட்டு, "என்ன ஆனந்தி, சௌக்கியமா!" என்று வினவிய படி அருகில் வந்தாள்.

"இந்தத் தோடு எப்போது பண்ணிக் கொண்டீர்கள் மாமி?" என்று முகத்தில் அதிசயத்தை வரவழைத்துக் கொண்டு ஆனந்தி கேட்டாள். பெரியநாயகி அம்மாளுக்கு, அவளுடைய புது நகைகளைப் பற்றி விசாரித்தால் போதும். வேறு பாராட்டு வேண்டியதில்லை; அதே போல் விசாரிக்காமலிருந்து விட்டால் போதும், வேறு பகைமையும் வேண்டியதில்லை.

ஆனந்தியின் கேள்வியில் உடம்பு பூரித்தவளாய், தோட்டைப் பற்றிப் பத்து நிமிடம் மூச்சு விடாமல் பேசிய பிறகு பெரியநாயகி, "ஆமாம் ஆனந்தி... என்னென்னவோ கேள்விப்பட்டேனே வீட்டு நிலைமை பற்றி?" என்று ரொம்ப ரகசியமாகக் கேட்டாள்.

"ஆயிரம் பேர் ஆயிரம் சொல்லுவார்கள், மாமி. அதையெல்லாம் உங்களைப் போல பெரியவர்கள் காதிலே வாங்கிக் கொள்ளலாமா?"

"நன்றாய்ச் சொன்னாயடி குழந்தை," என்று பெரியநாயகி ஆமோதித்தாள். "வரவர மயிலாப்பூர் சுத்த வம்புச் சாவடியாய் ஆகிக்கொண்டு வருகிறது. நான் எதற்குக் கேட்டேனென்றால், அன்றைக்கு உன் அப்பா நம் வீட்டுக்கு வந்து ரொம்ப நேரம் இவரோடு பேசிக் கொண்டிருந்தார். என்னமோ வியாபார விஷயம் என்றார் மாமா... கிடக்கட்டும். நீ ஏன் இங்கே நிற்கிறாய்?"

"அம்மாவுக்கு மலேரியா மாத்திரை எப்போதும் கைவசம் வைத்திருப்பேன். அது தீர்ந்து விட்டது. நீங்கள் போங்கள், நான் வாங்கிக்கொண்டு வருகிறேன்" என்று விடை பெற்றுக் கொண்டு ஆனந்தி அகன்றாள்.

மாத்திரையுடன் மருந்துக் கடையிலிருந்து வெளிப்பட்டபோதுகூட வக்கீல் சம்சாரம் தெரிவித்த தகவலைப் பற்றியே ஆனந்தியின் மனம் எண்ணமிட்டுக் கொண்டிருந்தது. வக்கீலைக் கலந்தாலோசிக்கும்படி அப்பாவுக்குத் தொழிலில் என்ன நெருக்கடி வந்தது?



அம்மாவிடம் சொல்ல வேண்டும் என்று நினைத்த வண்ணம் தெருவைக் கடந்தவள், மேகலை முன்னே நடந்து சென்று கொண்டிருப்பதைக் கவனித்தாள்.

"அக்கா! அக்கா!" என்று கூவியவாறு இரண்டெட்டில் தமக்கையுடன் சேர்ந்து கொண்டாள்.

"சூ!" என்று அதட்டினாள் மேகலை:

"அக்கா, என்ன அக்கா? நடுத்தெருவில் இப்படிக் கூப்பிடாதே என்று எத்தனை தடவை சொல்லுவது? நீயே குதிர் மாதிரி வளர்ந்து கிடக்கிறாய். அக்கா என்றால் யாரோ தொண்டு கிழம் என்று எல்லோரும் என்னை முறைக்கிறார்கள். மேகலை என்று பெயரைச் சொல்லிக் கூப்பிடேன்."

ஆனந்திக்கு வியப்பில் வாயடைத்து விட்டது. தமக்கையின் திடீர்க் கோபங்கள் அவளுக்குப் பழக்கம் தானென்றாலும் இப்போது ஒரு காரணமில்லாமல் அவளுக்கு வந்த சினம் சற்று அதிகப்படிதான்.

கூம்பிய முகத்துடன் நாலடி பின் தள்ளியே நடந்தாளே தவிர வழியில் வாயைத் திறக்கவில்லை.

வீட்டுக்குள் நுழைந்து, மாடியில் ஏறினார்கள் இருவரும்.

ஆனந்தியின் அறையிலிருந்து அவசரமாக வெளிப்பட்டான் ஒரு வேலைக்காரன்.

"ஏடய்!" என்று அதட்டி நிறுத்தினாள் மேகலை. "ஆனந்தியின் அறையில் உனக்கென்ன வேலை?"

"படுக்கையைத் தட்டிப் போட்டேன் அம்மா," என்றான் வேலைக்காரன்.

"ஆறு மணிக்கே படுக்கையைப் போட்டாயோ? வேலையில் மகா அக்கறை பார்! இந்த மாதிரி இன்னொரு தரம் திருட்டுத்தனம் பண்ணினாயோ உன்னைத் தொலைத்து விட்டுத்தான் மறு வேலை பார்ப்பேன்?" என்று மேகலை சீறினாள்.

"இதிலே என்னம்மா திருட்டுத்தனம்?..." என்று வேலைக்காரன் முனகியபோது ஆனந்தி குறுக்கிட்டு,

"கிடக்கிறான் விடு, அக்கா. படுக்கையைப் போட வந்தேன் என்றுதான் சொல்லுகிறானே!" என்று பரிந்து பேசினாள்.

"என்ன விஷயம் மேகலை?" என்று கேட்டபடி அம்மாவும் வந்து சேர்ந்தாள் அங்கே.

"இந்த பாருங்கம்மா," என்று ரோசத்துடன் முன்னே வந்த வேலைக்காரனை அடக்கி, "நீ போடா கீழே!" என்று அனுப்பி வைத்தாள் அம்மா.

மேகலையிடம் ஆதரவான குரலில், "வேலைக் காரர்களிடம் நாம் தகராறு பண்ணவேண்டாம் என்று அப்பா சொல்லியிருக்கிறார். அந்த வார்த்தைக்கு மதிப்புக் கொடுப்போமே?" என்றாள்.

"ஆமாம், அப்பா சொல்லுவார். ஏன் சொல்ல மாட்டார்? இத்தனை அயோக்கியன்களும் அந்தக் கழுதை மனோரமா கொண்டு வந்து வைத்தவர்களாயிற்றே? அவர்களை அதட்டி ஒரு வார்த்தை பேலசாமோ? சே, சே!" என்று கிண்டலாக மேகலை பதிலளித்தாள்.

அன்னையின் சங்கட உணர்ச்சியைக் கவனித்தாள் ஆனந்தி. மேகலையின் மீது சினம் பொங்கிக் கொண்டு வந்தது.

தாயின் மௌனம் மேகலையின் கோபத்தை மேலும் வளர்த்தது. "மொத்தக் குடும்பத்துக்கும் ரோச மில்லாமல் போய்விட்டது! இந்த மாதிரி மானங்கெட்ட பிழைப்புக்கு, நாக்கைப் பிடுங்கிக்கொண்டு ஒட்டு மொத்த மாய்ச் சாகலாம்!" என்று பொரிந்து தள்ளிவிட்டுப் படி யிறங்கிச் சென்று விட்டாள்.

அம்மா தலை குனிந்தவாறு நின்றிருந்தாள். தயங்கித் தயங்கி அவளை நெருங்கிய ஆனந்தி மெதுவாக அவள் தோள்களைப் பற்றினாள்.

"உன்னை வேலைக்காரர்கள் அவமானப் படுத்து வதும், அப்பா அவமானப்படுத்துவதும் தெரிகிறதே தவிர, தானே உன்னை அவமானப் படுத்துவது தெரியவில்லை பாரம்மா அவளுக்கு?"



"இதையெல்லாம் நான் அவமானம் என்று எடுத்துக் கொண்டால்தானே? என் மனம் நோகிறாற்போல் நீ எதுவும் செய்யாமலிரு. அது போதும் எனக்கு."

"நானா? ஒரு நாளும் நான் அப்படி நடந்து கொள்ள மாட்டேன் அம்மா!" என்று அன்னையை இறுக்கி அணைத்துக் கொண்டு சொன்னாள் ஆனந்தி. "நீயும் அப்படித்தானே அம்மா?"

"எப்படி?"

"என் மனம் நோகும்படி எதுவும் செய்ய மாட்டாயே?"

"கட்டாயம் மாட்டேன்."

"சத்தியமாய்?"

மகளை விலக்கி விட்டுக்கொண்டு அவள் முகத்தை உற்றுப் பார்த்தாள் அம்மா.

"சத்தியம் எதற்கு ஆனந்தி? மனத்தில் என்ன நினைத்துக் கொண்டு கேட்கிறாய்?"

"எதுவாயிருந்தாலென்ன? சத்தியமாய் என்று சொல்லேன்."

"சரி, சத்தியமாய்!"

"அம்மா! என் அம்மா!" என்று சிறு குழந்தை போல அம்மாவை ஆனந்தத்துடன் கட்டிக்கொண்டு தன் அறைக்குள் ஓடிவிட்டாள் ஆனந்தி.

'இந்தச் சின்னப் பெண்ணுக்கு என்ன நேர்ந் திருக்கிறது?' என்ற வித்தையால் ஒரு நிமிடம் அயர்ந்து நின்ற சௌந்தரம், ஏதும் புரியாமல் தலையை ஓர் அசைப்பு அசைத்துவிட்டுக் கீழே சென்றாள்.

அறைக்கு ஓடிய ஆனந்தி கதவை உள்புறம் தாளிட்டுக் கொண்டாள். சில வினாடிகள் அங்கேயே நின்று யாரும் வருகிறார்களா என்று உற்றுக் கேட்டாள். எவரும் வரவில்லை என்ற உறுதி ஏற்பட்டதும் ஓடினாள் தன் படுக்கையை நோக்கி. தலையணையை அகற்றித் தூக்கி யெறிந்துவிட்டு நோக்கினாள். அவள் முகத்தில் மகிழ்ச்சி பரவியது.

தலையணையின் கீழே ஒரு கடித உறை இருந்தது.

"தனகோடியையா! அவனை எதற்காகப் போய்ப் பார்த்தாய்?" என்று கண்களில் கனல் பறக்கக் கேட்டாள் மனோரமா.

"நம்முடைய நன்மைக்காகத்தான். இன்றைக்குத் தோல் மார்க்கெட்டிலே தனகோடிதான் சக்கரவர்த்தி! உன்னுடைய சக்கரவர்த்தி குப்பைத் தொட்டிக்குப் போய்க் கொண்டிருக்கிறார்!" என்று தாண்டவம் சிரித்தான்.

"போனால் போகட்டும். அவரைப் பற்றிக் கவலைப்பட வேண்டியவள் நான். நீயல்ல!" என்று தூக்கி எறிந்தாற்போல் பதில் சொல்லிவிட்டு ஓரடி எடுத்து வைத்தாள் மனோரமா.

சரேலென்று அவளைச் சுவரோடு மறித்துக் கொண்டு முறைத்தான் தாண்டவம்.

"தனகோடி முன்னைப்போல் சாதாரணச் செருப்புக் கடைக்காரனல்ல! லட்சாதிபதி! அன்னக் காவடியாகப் போகிற சக்கரவர்த்தியிடம் இனிமேல் உனக்கென்ன வேலை?"

"ஆயிரம் இருக்கும்! எடு கையை!" என்று தன்னைச் சிறைப்படுத்திய அந்த இரும்புக் கரங்களை விலக்கப் பார்த்தாள் மனோரமா. முடியவில்லை.

"கேள்!" என்று உறுமினான் தாண்டவம். "சக்கர வர்த்தியின் பிஸினஸ் சாம்பலாகும் வரையில் அவரை உன் கையில் பிடித்துக் கொண்டிரு. ஆட்சேபமில்லை. அதைத் தான் தனகோடியும் கேட்டுக் கொண்டான்."

"எவன் கேட்டுக் கொள்வதற்காகவும் நான் சக்கர வர்த்தியுடன் தொடர்பு வைத்துக்கொள்ளவில்லை. இது என் சொந்த விவகாரம்!"

"நாலு வருடத்திற்கு முன்னால் தனகோடியுடன் நட்பாயிருந்ததுகூட உன் சொந்த விவகாரம்தான். அதைச் சக்கரவர்த்தியிடம் சொன்னால் ஒப்புக் கொள்வாரா?"



"பயமுறுத்துகிறாயா?"

"சே, சே! உன் நிலைமையை உணர்ந்துகொண்டு பேசு என்கிறேன். தனகோடி இன்னொரு பெரிய திட்டம் வைத்திருக்கிறான். அதை முடித்துக் கொடுத்தோமானால் பிரமாதமான லாபம் உண்டு!"

மனோரமா பதில் சொல்லுமுன் டெலிபோன் அழைத்தது.

பாய்ந்து சென்ற தாண்டவம் சட்டெனத் திரும்பி னான். "நீயே எடு போனை!" என்றவன் அவளை டெலிபோனுக்கருகே இழுத்துச் சென்று ரிஸீவரை அவள் கையில் கொடுத்து, 'கேள்' என்று சாடை காட்டினான்.

மறு முனையிலிருந்து என்ன பேச்சு வந்ததோ? மனோரமா 'ஆமாம்... ஊம்' என்ற முனகலைத் தவிர வேறு பதில் தரவில்லை.

சடக்கென்று ரிஸீவரின் வாயைப் பொத்திக் கொண்டு, "யார் பேசுவது?" என்று தாண்டவம் வினவினான்.

"தனகோடி பேசுகிறான். நீ எல்லா விஷயத்தையும் என்னிடம் சொன்னாயா என்று கேட்கிறான்."

"அண்ணா சொன்னான் என்று சொல்லு! முடித்துத் தருகிறேன் என்று சொல்லு! ஊம்!" — டெலிபோனை அவள் மோவாயில் இடித்தபடி தாண்டவம் சட்டளையிட்டான்.

மனோரமா தயங்கினாள். 'ஊம்!...' என்று தாண்டவம் இரண்டாம் முறை விரட்டியபோது —

வேறொரு கை டெலிபோனை அவனிடமிருந்து பறித்தது.

"பயப்படாதே மனோரமா! முடியாது என்று சொல்லு. உனக்கும் தாண்டவத்துக்கும் எந்தவித உறவும் கிடையாது என்று அடித்துச் சொல்லு!" என்று டெலிபோனை நீட்டினான் மாலி.

## 14

"மரியாதையாகப் போய்விடு வெளியே!" என்று பல்லைக் கடித்தான் தாண்டவம். "அந்நியர்கள் வீட்டுக்குள் நீ கால் வைத்தது முதல் தப்பு. அந்நியர்கள் விவகாரத்தில் தலையிடுவது அதைவிடப் பெரிய தப்பு. கெட் அவுட்!"

பாண்ட் பையில் கைவிட்டபடி அலட்சியமாக நின்றிருந்த மாலி சிரித்தான். "நீ விஷயம் தெரிந்தவனென்று நான் நினைத்திருந்தேனே, அதுதான் என் மாபெரும் தப்பு! மனோரமாவின் வீடும் விவகாரமும் எனக்கு அந்நியமே இல்லை, தாண்டவம்! சந்தேகமிருந்தால் அவளையே கேட்டுப் பார்!"

டெலிபோனைக் கையில் பிடித்துக்கொண்டு செய்வதறியாமல் நின்றிருந்தாள் மனோரமா. மாலியின் எதிர்பாராத வருகையால் ஏற்பட்ட ஆறுதல், வருகை விளைவித்த பூசலால் எழுந்த பீதி இரண்டும் அவளுடைய செழுமையான வதனத்தில் கண்ணாம்பூச்சி ஆடின.

"மனோரமா!" என்று அவளை நோக்கி உறுமினான் தாண்டவம். "இவனை இந்த இடத்தை விட்டுப் போகச் சொல்லப் போகிறாயா இல்லையா இப்போது?"

"முடியாது!" என்று தீர்மானமாகத் தெரிவித்தவள் மாலிக்கு அருகாக வந்து நின்று கொண்டாள். "நீங்கள் போகாதீர்கள். இருங்கள். இந்த வீட்டில் இவனைக் கேட்பதற்கு வேறோர் ஆண்பிள்ளை இல்லாமல்தான் இவ்வளவு ஆட்டம் போடுகிறான்!" என்றாள்.

"கழுதை!" என்ற சீறலுடன் ஆத்திரமாக அவள் கன்னத்தில் பாய வந்த தாண்டவத்தின் கரத்தைச் சரேலெனத் தடுத்துப் பிடித்ததோடு, அவன் மோவாயில் வெகு லாகவமாக ஒரு குத்தையும் இறக்கினான் மாலி, "பேடி! பெண் பிள்ளையிடம் காட்டாதே உன் சூரத்தனத்தை! என்னிடம் காட்டு!" என்றவாறு.



எதிர்பாராத சமயத்தில் எதிர்பாராத இடத்தில் விழுந்த அடியினால் ஒரு வினாடி தடுமாறிப்போன தாண்டவம், மறு வினாடியே வேங்கையெனச் சிலிர்த்து, மாலியின் தலையைப் பற்ற முயன்றான்.

அதற்குள் இரண்டாவது குத்தும் அவன் நெஞ்சுக்குச் சற்று மேலாக விழுந்து, அறை மூலையில் நிலை குலைந்து அவனை விழப் பண்ணிற்று. ஒரே தாவலில் அவனை அமுக்கிக் கொண்ட மாலி, "மனோரமா! முதலில் டெலிபோனுக்கு நான் சொன்னபடி பதில் சொல்லு" என்றான்.

இந்த அமர்க்களத்தின் நடுவே, டெலிபோனின் வாயைக் கூட மறந்து திறந்து வைத்துக் கொண்டிருந்ததை உணர்ந்து திடுக்கிட்ட மனோரமா, "ஹலோ" என்று அழைத்தாள். பதிலில்லை. "ஹலோ ஹலோ!" என்று மீண்டும் கூப்பிட்டாள். 'டிர்ர்ர்' என்ற ஓசையைத் தவிர சலனம் எழவில்லை.

"போனை வைத்து விட்டார்கள்," என்று அவள் தெரிவித்ததும், "ரொம்ப நல்லது!" என்று தாண்டவத்தின் மீதிருந்த பிடியைத் தளர்த்தினான் மாலி.

குபுக்கென்று எழுந்து கொண்ட தாண்டவம், ஆவேசத்துடன் டெலிபோனைப் பறித்தெடுத்து "ஹலோ! ஹலோ!" என்று பதறினான். மறுமொழி கிடைக்காது போகவே, டயலைக் கடகடவென்று சுழற்றி, "தனகோடி தனகோடி!" என்று கத்தினான். "என்ன! பேசமாட்டாரா?" என்று கேட்டபடி வியப்புடன் போனைத் திரும்ப வைத்து விட்டு, தங்கையைச் சுக்கு நூறாகக் கிழித்துப் போட வெறி கொண்டவனைப் போல முறைத்தான்.

இரண்டு ஜோடிக் கண்கள் தன் ஒவ்வொரு செயலையும் கூர்ந்து கவனிப்பதைக் கண்டபோது அவனுக்குச் சிறிது தடுமாற்றம் ஏற்பட்டது. ஆத்திர மிகுதி யுடன், "மனோரமா! அண்ணனைத் திண்டாட வைத்து விட்டதாக எண்ணி மகிழாதே! உன் மூலம் நிறைவேறாத

இதே திட்டத்தை வேறு யார் மூலம் நிறைவேற்ற முடியும் என்பது எனக்குத் தெரியும்! இறுதி வெற்றி எனக்குத்தான் என்பதை விரைவிலேயே காட்டுகிறேன் பார்! இந்த அயோக்கியனை நம்பி நீ என்ன கதியாகிறாய் என்றும் பார்!" என வீறாப்புப் பேசிவிட்டு விடுவிடுவென்று வெளியேறித் தெருவில் இறங்கினான்.

ஒரு நிமிடம் பிரமை பிடித்தவளாக நின்றிருந்த மனோரமா 'உஸ்!' என்ற பெருமூச்சுடன் சோபாவில் சாய்ந்து கொண்டாள். அவளது மை தீட்டிய விழிகள் மாலியின் மீது பாய்ந்து நிலைத்தன சில வினாடிகளுக்கு. சற்று முன் நிகழ்ந்த ரகளையில் அவன் கேசம் கலைந்து, முகம் வெளிறியிருப்பதைக் கண்டு, "உள்ளே போய் முகம் கழுவிக்கொண்டு வாருங்கள்," என்றாள் மெதுவான குரலில்.

"நீயும்தான் ரொம்ப அலங்கோலமாயிருக்கிறாய்," என்றான் மாலி.

"என் வாழ்க்கையே அலங்கோலமாகிக் கொண்டு வருகிறது. வெறும் முகத்தைப் பற்றி விசாரப்படுவானேன்!" என்று விரக்தியுடன் சிரித்தாள் மனோரமா.

"பத்து நாளாய் என்ன ஐயா பண்ணிக் கொண்டிருந்தீர் என்னிடம் சொல்லாமல்! ஈ ஓட்டவா மாசம் முன்னூறு ரூபாய் சம்பளம் வாங்குகிறீர்?" என்று இரைந்தார் சக்கரவர்த்தி.

சேல்ஸ் மானேஜர் கையைப் பிசைந்தார். "இல்லை... அன்றைக்குக்கூட உங்களிடம் சொல்ல வேண்டுமென்றுதான் பார்த்தேன். நீங்கள் அவர்களோடு... யாரோடோ ரொம்ப முக்கியமாய் டெலிபோனில் பேசிக் கொண்டிருந்ததால்..."

"உஸ்!" என்று வீட்டின் உள்பக்கம் ஒரு முறை பார்த்துவிட்டு அதட்டினார் சக்கரவர்த்தி. "ரொம்ப



விஷயம் தெரிந்தவர் என்று காட்டிக் கொள்ள வேண்டாம். உம்முடைய சாமர்த்தியம் தெரிந்துதானிருக்கிறது!"

கையிலிருந்த கற்றைக் காகிதங்களின் மீது பார்வை விழுந்தது. "என்ன சனியனோ! இந்தத் தொல்லையெல்லாம் ஆபீசிலே வைத்துக் கொண்டு அழாமல் வீட்டுக்கு ஏன் ஐயா எடுத்து வருகிறீர்?" என்று மறுபடியும் சிப்பந்தியின் மீது எரிந்து விழவே தோன்றிற்று அவருக்கு.

"இருபதாயிரம் ரூபாய் ஆர்டர் ரத்தாயிருக்கிறது. கப்பலில் ஏற்றுவதற்காகக் கிடங்கில் வைத்திருக்கிற ஸ்டாக்கை உள்ளூர் மார்க்கெட்டிலேயே ஐயாயிரம் குறைத்து விற்றுவிடலாம்... அந்தப் பட்சத்தில் பன்னிரண்டு மணிக்குள் ஏற்பாடு பண்ண வேண்டும். யோசனை கேட்கத்தான் வந்தேன்..." என்று தயங்கித் தயங்கித் தெரிவித்தார் சேல்ஸ் மானேஜர்.

"அடாடாடா! எப்பேர்ப்பட்ட நிபுணர்கள் என் கம்பெனியில் இருக்கிறார்கள்! நஷ்ட வியாபாரம் செய்ய நாலாயிரம் யோசனைகள்!" என்று கிண்டலாகப் பேசினார் சக்கரவர்த்தி. "என்னவோ பண்ணித் தொலையும்! யாரிடமிருந்தாவது கிராக்கி வந்திருக்கிறதா?"

"இருப்பதற்குள் அதிகமாய்க் கேட்பவன்..." சேல்ஸ் மானேஜர் தயங்கினார். "தமிழ்நாடு லெதர்ஸ்தான்!"

"ஓய்!" என்று ஆத்திரத்துடன் எழுந்து நின்றார் சக்கரவர்த்தி. "இதைச் சொல்ல உமக்கு நாக்குக் கூசவில்லை? கிங்ஸ்லி முகத்தில் கரி பூசக் காத்துக் கொண்டிருக்கிறான் அந்தக் கழுதை! அவனிடமேயா விற்கலாம் என்கிறீர்!... நிஜத்தைச் சொல்லும், அவனிடம் ஏதாவது கமிஷனா உமக்கு?"

"சார்!" என்று தீனமாக அலறினார் சேல்ஸ் மானேஜர். "அந்த மாதிரி துரோகம் நினைத்தால் என் குடும்பமே நாசமாய்ப் போகட்டும்! நிலைமையைச் சொன்னேனே தவிர..."

"சரி, சரி. புலம்பாதிர். அவனைத் தவிர வேறு யாரிடம் வேண்டுமானாலும் விற்றுத் தொலையும்! இரண்டு மூன்று நஷ்டமானாலும் பரவாயில்லை."

"சரி, சார்," என்று கூறிவிட்டு அவர் போய் விட்டார்.

சக்கரவர்த்தி குறுக்கும் நெடுக்கும் உலவிக் கொண்டிருந்தபோது டெலிபோன் மணியடித்தது.

"யார்?" என்று அலுப்புடன் கையிலெடுத்தவர், குரலைக் கேட்டதும் "தாண்டவமா! என்ன?" என்றார் எரிச்சலுடன்.

மறு முனையிலிருந்து வந்த பேச்சு அவருடைய பதட்டத்தை அதிகரித்தது. அவரது விழிகள் குறுகின. "சீ! என்னடா உளறுகிறாய்?" என்றார்.

கிராப்பைப் படியப் படியச் சீவி விட்டுக் கொண்ட பின், கடியாரத்தைப் பார்த்தான் மாலி. குளியலறைக்குள் நுழைந்து கொண்ட மனோரமா இன்னும் ஏன் திரும்பவில்லை?

சிறிது தயங்கிவிட்டு, ஹாலைக் கடந்து குளிய லறையின் வாசலில் நின்றான். வீட்டின் நிசப்தத்தில், அறைக்குள்ளே குழாயிலிருந்து நீர் கொட்டும் ஓசை துல்லிய மாய்க் கேட்டது.

நிம்மதியுடன் திரும்ப எண்ணிய வேளையில் சடக்கென்று தாழ்ப்பாள் விலக, பொன்மேனியில் பாதியை வெளிப்படுத்தும் உடலுடன் அவன் மீது மோதாத குறையாக வெளியே வந்தாள் மனோரமா.

மாலிக்குத் தன்னைச் சமாளித்துக் கொள்ளச் சிறிது நேரம் பிடித்தது. "வெறுப்புடன் உள்ளே நுழைந்தவள் இன்னும் வரவில்லையே என்று கவலைப்பட்டு விட்டேன," என்றான்.

மனோரமா தன் திரண்ட தோள்களைக் கைகளால் அழுத்தி மறைத்துக்கொண்டு "யார் செய்த



புண்ணியத்தாலோ, கல்லைப் போன்ற இதயத்தைப் பெற்றிருக்கிறேன் நான். எதுவும் செய்துகொள்ள மாட்டேன். கவலைப்படாதீர்கள்!" என்று கூறிவிட்டு, உடை மாற்றிக்கொள்ள அடுத்த அறைக்குள் புகுந்து கொண்டாள்.

சாத்திக்கொண்ட கதவுகளைப் பார்த்தபடி நின்றான் மாலி. உள்ளத்தில் ஏற்பட்ட விசித்திரமான கிளர்ச்சிகளை அவன் முகம் எடுத்துக் காட்டிற்று. தன்மீதே அடங்காச் சினம் கொண்டு, தன்னைத்தானே சாட்டை யால் அடித்துக் கொண்டாற்போன்ற வேதனையுடன் ஒரு முடிவுக்கு வந்தவனாக, "மனோரமா! நான் போய் வருகிறேன்!" என்று குரல் கொடுத்தான்.

"அதற்குள்ளாகவா!" என்று அதேகணம் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள் மனோரமா. உரிமை யுடன் மாலியின் தோளைப் பற்றி, அருகிலிருந்த சோபாவில் அவனை அழுத்தி அமர்த்திவிட்டு, தானும் அமர்ந்து கொண்டாள்.

"வீட்டில் யாருமில்லை போல் இருக்கிறதே? உன் அம்மா எங்கே?" என்று மாலி சங்கடத்துடன் வினவினான்.

"மதுரைக்குப் போய்விட்டாள், எனக்கும் தாண்ட வத்துக்கும் அடிக்கடி நேருகிற சண்டையைப் பார்க்கச் சகிக்காமல். மதுரையில் எங்களுக்குப் பழைய வீடு ஒன்று இருக்கிறது," என்று, தன் மெல்லிய விரல் நுனியை உதட்டில் குறும்புத் தனமாகக் கீறியவாறே பதிலளித்தாள் மனோரமா. அவள் பார்வை தரையில் பதிந்திருந்தது.

மாலி தன் இதயம் அடித்துக்கொள்ளும் ஓசை எப்போது நிற்கும் என்று ஏங்கினான்.

"பெண்ணைப் போல எவ்வளவு சிவப்பான, மென்மையான பாதங்கள்!" என்று வியப்புத் தெரிவித்தாள் மனோரமா திடுப்பென.

"யாருக்கு?"

"உங்களுக்குத்தான்! இதோ!"

நரம்புகளனைத்தும் மின்னல் கொடிகளாக மாறினாற் போல மாலியின் தேக முற்றும் ஒரு பரவசம் வெட்டிக் கொண்டு ஓடிற்று. அந்த ஸ்பரிசத்தால், காலைத் தொட்ட அந்தக் கைகளை அழுந்தப் பற்றிக்கொண்டு, "மனோரமா!" என்றான் உணர்ச்சிப் பெருக்குடன்.

அமர்ந்திருந்த சோபாவும், எதிரிலிருந்த சுவர்களும் 'கிர் கிர்' ரென்று சுழல, ரத்தம் தலையிலே குப்பெனப் பரவி விண் விண்ணென்று தெறிக்க, மூச்சில் உஷ்ணம் கலக்க, அவனுடைய வாலிபத்தின் திமிர் அத்தனையும் உடம்பின் ஒவ்வோர் அணுவிலும் பரவிய அதே கணத்தில்—

அவன் அறிவு விழித்துக் கொண்டது.

மிகமிக நெருக்கமாக வந்துவிட்ட அந்த முகத்தைக் கையால் விலக்கி ஏந்திக்கொண்டு, "மனோரமா! என்னை உண்மையாகவே காதலிக்கிறாயா நீ!" என்றான்.

பளிச்சென்று "இல்லை!" எனப் பதில் வந்தது அவளிடமிருந்து. எல்லா மனித உணர்ச்சிகளும் துடைத்து உலர்ந்த குரலில், "இல்லை! இல்லவே இல்லை! அதேபோல், நீங்கள் என்னைக் காதலிக்கவில்லை என்பதும் எனக்குத் தெரியும்!" என்றாள்.

வெறித்த அந்த விழிகளை உற்று நோக்கினான் மாலி. ஒரு கணத்துக்கு முன்னால் இருந்த பரபரப்பு இப்போது முற்றிலும் அடங்கி ஓய்ந்துவிடவே, தன் வசத்துக்கு வந்தவனாக, "ரொம்பப் பயங்கரமாக விளையாடி விட்டேன்," என முனகினான்.

"எந்த விளையாட்டைச் சொல்லுகிறீர்கள்?"

"இதோ, இருவரும் பக்கத்தில் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு, கணம் தவறினால் பாதாளத்தில் தள்ளக்கூடிய விளையாட்டு விளையாடுகிறோமே, இதைத் தான்!" என்றான் மாலி. "இவ்வளவுக்கும் என்னுடைய



அகங்காரம் காரணம். என் மனோதிடத்தைப் பற்றி நான் போட்டுக் கொண்ட தப்புக் கணக்குக் காரணம். போதும், போதும்! சத்தியமாக இனி ஒருநாளும் இந்தச் சோதனையில் என்னை உட்படுத்திக் கொள்ள மாட்டேன்!"

மனோரமாவின் விழிகளில் இன்னும் உயிர் வரவில்லை. பொம்மையின் கண்களைப் போல அவை அசைவற்று நோக்கின மாலியை.

"அன்றைக்கு இரவு காயம்பட்டு, இதே வீட்டின் மாடியறையில் நான் கிடந்தபோது நீ கதவைச் சாத்திக் கொண்டு என் முகத்தருகே குனிந்தாயே, அந்தக் கணத்தில் எனக்குள் ஒரு யோசனை தோன்றியது. என் மேகலையின் குடும்பத்தைக் காப்பாற்ற ஒரே வழி, உன்னையும் சக்கரவர்த்தியையும் பிரிப்பதற்கு ஒரே மார்க்கம், உன்னுடைய சரசத்தில் மயங்கியவனாக நடிப்பதுதான் என்று முடிவு பண்ணிக் கொண்டேன். தகுந்த தருணத்தில் சக்கரவர்த்தியை வரவழைத்து நீயும் நானும் நெருங்கியுள்ள காட்சியைக் காண வைத்துவிட்டால் உங்கள் நட்பு முறிந்து விடும் என்று எண்ணியிருந்தேன். மேகலை நம்பா விட்டாலும் பரவாயில்லை, என் மனச்சாட்சிக்கு நான் உண்மையாக இருந்தால் போதும் என்று பிடிவாதமாக இந்த விஷப் பரீட்சையில் இறங்கினேன். என் பலவீனத்தையும் நான் உணரவில்லை; உன் சக்தியையும் நான் அறியவில்லை. இப்போது தெரிகின்றன இரண்டும்! நான் வருகிறேன்!"

எழுந்தவனைத் திரும்ப அமர்த்தினாள் மனோரமா. "இருங்கள் கொஞ்சம்! நாடகத்தில் உங்கள் பங்கைச் சொல்லி விட்டீர்கள். என் பங்கைக் கேட்க வேண்டாமா? எனக்கு எதிரி நீங்களல்ல; மேகலை. அவளுக்குப் பலம் கொடுப்பது நீங்கள். உங்களையும் மேகலையையும் பிரித்து விட்டால் எனக்கும் சக்கரவர்த்திக்கும் இடையே நிற்க வேறு யாரும் வரமாட்டார்கள்

என்பது என் கணக்கு. அதற்காகவே நானும் நடித்தேன். உங்கள் முயற்சி பலிக்கவில்லை. ஆனால் என் திட்டம் அநேகமாய்ப் பலித்து விட்டது... சொல்லுங்கள். மேகலை இன்னும் உங்களை நம்புகிறாளா?"

"இல்லை, உன் எண்ணம் ஓரளவு நிறைவேறி விட்டது உண்மைதான்." மாலியின் தழுதழுத்த குரல் உடனே சூடேறியது. "ஆனால் இதை இப்படியே நான் விடப் போவதில்லை. என் தோல்வியை ஒப்புக்கொண்டு மன்னிப்புக் கேட்பேன் மேகலையிடம். நீ பிளந்து விட்ட விரிசலைத் தூர்ப்பதுதான் என் அடுத்த வேலை! உன்னை நினைத்தால்தான் பரிதாபமாயிருக்கிறது..."

"ஏனோ?"

"ஏனென்றா கேட்கிறாய்? இருக்கும் நிலைமையை உணராத அளவுக்கு அசடா நீ! நான் நினைக்கவேயில்லை. அண்ணனை முறித்துக் கொண்டாகிவிட்டது. இனி சக்கர வர்த்தியுடன் எத்தனை நாள் வாழ்வு உனக்கு இருக்கப் போகிறது?" என்று நகைத்தான் மாலி.

"ஐயோ! அப்படிச் சொல்லாதீர்கள். எனக்கு அவர் வேண்டும். அவர் ஆதரவு வேண்டும்... நான்... நான்..."

படீரென்று கதவு திறந்து கொண்டது.

"சண்டாளி! மானங்கெட்ட துரோகி!" என்று பாய்ந்து உள்ளே வந்தார் சக்கரவர்த்தி.

மனோரமா அப்போதுதான் தன்னையும் தான் அமர்ந்துள்ள விதத்தையும் உணர்ந்தாள். மாலியை உதறித் தள்ளிக்கொண்டு, "இல்லை, இல்லை! நான் தப்பாக எதுவும் செய்யவில்லை!" என்று ஓடிவந்த நிமிடமே அவள் கன்னத்தில் அறையொன்று விழுந்தது.

"அடி பாவி! சௌந்தரத்திடம் நீ சொல்லச் சொன்னதெல்லாம் வெறும் ஏமாற்றுக்கு என்று எண்ணி யிருந்தேனே! நிஜமாகவே உன் மனசில் இந்தத் திட்டம் இருக்கிறது என்று தெரிந்திருந்தால் அன்றைக்கே உனக்குத்



தலை முழுகிவிட்டுப் போயிருப்பேனே! ஓழி! ஓழி! வெட்க மில்லாமல் என் முன்னே இன்னுமா நிற்கிறாய்?" — அவள் கூந்தலைப் பிடித்துத் தள்ளச் சக்கரவர்த்தி ஓரடி முன்னே எடுத்து வைத்தார்.

"நிறுத்தும்!" என்று அந்தக் கையை வளைத்துப் பிடித்து அப்பால் தள்ளினான் மாலி. "என்னவோ தாலி கட்டின பெண்சாதி கெட்டுவிட்டாற் போல் குதிக்கிறீர்களே! நீர் உம் மனைவிக்குச் செய்த துரோகத்துக்குப் பேசக்கூட வாய் இருக்கிறதே! விலகி நில்லும்! அவள் மேல் கை வைத்தீர்களோ எலும்பை எண்ணப் பண்ணி விடுவேன்!"

"மாலி! வேண்டாம், வேண்டாம்!" என்று அவனைத் தடுக்க முயன்று மனோரமா தோல்வியுற்றாள்.

சக்கரவர்த்தி தூணாகிப் போனார். தன் வயதும் மாலியின் இளமையும் அவருக்கு நிதரிசனமாகத் தெரியவே, ஆத்திரத்தால் அவர் உள்ளம் குமைந்தது. கட்டுக்கடங்காத அவமானத்தால் வார்த்தைகள் தட்டுக்கெட, "ஓ... ஓ! உனக்கு அவ்வளவு உரிமை வந்து விட்டதா இவளிடம்?" என்று தள்ளாடினார்.

"ஆமாம் அப்பா!" என்று வாசற்புறத்திலிருந்து ஒரு குரல் வந்தது. "இந்த உரிமையைப்பற்றித் தெரிந்து கொள்ள உங்களுக்கும் இத்தனை நாளாயிற்று! எனக்கும் இத்தனை நாளாயிற்று!"

"மேகலை!" என்று வியப்பும் திகைப்புமாக ஓடி வந்தான் மாலி.

"எட்டி நின்று பேசுங்கள்!" என்று நெருப்பைக் கண்ணால் கொட்டினாள் மேகலை. "வரையறை வைத்துக் கொண்டிருப்பதாக அன்றைக்கு அளந்தீர்களே, அது எத்தனை தூரத்தில் இருக்கிறது என்பதைப் பார்க்கத்தான் வந்தேன். பார்த்தாயிற்று!"

"மேகலை!" என்று பதட்டத்துடன் அவளை நெருங்கினான் மாலி.

"சே! கிட்ட வராதீர்கள்! உங்கள் காற்றுப் பட்டால் கூட உடம்பைக் கழுவ வேண்டும்!" என்று சரேலென்று நகர்ந்து கொண்டாள் மேகலை. அழுகையும் வெறுப்பும் சோகமும் விரக்தியும் அவள் பேச்சிலே முட்டிக் கொந்தளித்தன.

"மேகலை! என்னைத் தவறாகப் புரிந்து கொண்டு விட்டாய்!"

"ஆமாம் — இத்தனை நாள்வரை! இப்போது சரியாக, உள்ளபடி புரிந்து கொண்டு விட்டேன்! அந்தச் சந்தர்ப்பத்தை அளித்த உங்களுக்கும் மனோரமா தேவி யாருக்கும் மெத்த நன்றி!" என்றவள், தந்தையின் கையைப் பற்றிக் கொண்டாள். "வாருங்கள் அப்பா! பாவத்தால் சுவரெழுப்பி ஆபாசத்தால் கூரையிட்ட வீடு இது! இங்கு நிற்பதே நமக்கு அவமானம்! வாருங்கள்!"

"மேகலை!"

மாலியின் கூப்பாட்டுக்குப் பதிலாக, வாயிற் கதவு படீரென்று அறைந்து சாத்திக் கொண்டது.

தன் காதலி நின்றிருந்த இடத்தையே வெகு நேரம் வரை பார்த்தவாறிருந்தான் மாலி.

சோபாவிலிருந்து குமுறிக் குமுறி அடங்கிக் கொண்டிருந்தது விசும்பல் ஒலி.

"மனோரமா!" என்று அவளிடம் நெருங்கினான் மாலி.

"போங்கள்! நீங்கள் போய் விடுங்கள் இந்த இடத்திலிருந்து!" என்று தலையை நிமிர்த்தாமலே விம்மினாள் மனோரமா.

"போகிறேன். ஆனால் நான சொல்வதைக் கேள். இனி உனக்குப் பட்டண வாசம் சரியில்லை. இத்தனை பேரை விரோதித்துக்கொண்டு நீ இங்கே தனியாக இருப்பது நல்லதல்ல. இன்று ராத்திரியே மதுரைக்குப் புறப்பட்டுவிடு.



அம்மாவிடம் திரும்பிச் சென்று உன் எதிர்க்காலத்தைச் சீர் செய்துகொள். உன் வாழ்க்கையில் இன்னோர் அத்தியாயம் முடிந்து விட்டது. அதை மறுபடி புரட்டலாம் என்று மட்டும் எண்ணாதே. வருகிறேன்."

இரண்டு நிமிடங்கள் கழித்து மனோரமா கண்களை உயர்த்திப் பார்த்தாள். சொகுசும் படாடோபமும் நிறைந்த அந்த அறை, பயங்கரமான பாதாளச் சிறையாக மௌனத்தை உமிழ்ந்து கொண்டு அச்சுறுத்தும் வண்ணம் காட்சி தந்தது. அடைத்து வைத்த துயரம் மீண்டும் பொங்கி வர ஒரு பெருத்த விம்மலுடன், சோபாவின் கையில் மடேல் மடேலென நெற்றியை முட்டிக் கொண்டாள்.

"ஹலோ!" என்று உல்லாசமாகக் கூவிக் கொண்டே உள்ளே வந்தான் தாண்டவம். தங்கையின் நிலை கண்டதும் அவன் தொண்டையிலிருந்து பெருத்த சிரிப்பு வெடித்தது. "ஓகோ கோகோ! சோகக் காட்சியா! பலே! சக்கரவர்த்தியும் மேகலையும் உடனே வந்து விட்டார்கள் போலிருக்கிறதே!"

"அண்ணா!" என்று துயரம் நெஞ்சை அடைக்கக் கூப்பிட்டாள் மனோரமா. "அவர்களை இங்கே வரவழைத்தது நீதானா?"

"சே! சே! நான் வரவழைத்தேனாவது? 'மாலியும் மனோரமாவும் ஆனந்தமாயிருப்பதைப் பார்த்து ஆசிர்வாதம் பண்ணிவிட்டுப் போங்கள்' என்று ஐயாவுக்கு முதலில் சொன்னேன். பிறகு சின்னம்மாவும் இருந்தால் விழா சம்பூர்ணமாக நடக்குமே என்று அவளுக்கும் தெரிவித்தேன்?"

தாண்டவம் உள்ளே சென்று விட்டான். சில நிமிடங்களில் அந்த அறையிலிருந்து படுக்கை உதறப்படும் ஓசையும் பெட்டி மூடப்படும் ஒலியும் கேட்டன. வியப்புடன் எழுந்து சென்று கவனித்த மனோரமா திகைத்தாள்.

"எங்கே புறப்படுகிறாய் அண்ணா?"

ஹோல்டாலின் பட்டையை இறுக்கிக் கொண்டு இகழ்ச்சியாகப் பதிலளித்தான் தாண்டவம். "இவ்வளவு ஆன பிறகும் நான் இங்கே இருந்தால் எருமை மாடு என்று நீயே சொல்லுவாய், தங்கச்சி!"

"நீ எங்கும் போக வேண்டாம். இங்கேயே இரு. நான் மதுரைக்குப் போகிறேன் அம்மாவிடம்."

"ஹாஹ்ஹா!" என்று ஹோல்டால் பிரிந்து தெறித்து விழ கைகளைக் கொண்டினான் தாண்டவம். "அம்மாவிடமா? அம்மா மதுரையில் இருப்பதாக யார் தாயே உனக்குச் சொன்னது? க்ஷேத்ராடனம் போகிறேன் என்றவளுக்கு, காசிக்கு டிக்கெட் வாங்கிக் கொடுத்து ரயிலேற்றி அனுப்பிப் பத்து நாளாகிறதே! இங்கேயே இரு, கண்ணு! மாலி வருவான் அடிக்கடி! கவனித்துக் கொள்வான்?"

"அண்ணா!" என்று அவன் காலடியில் விழுந்தாள் மனோரமா. "என்னைப் பார்! தயவு பண்ணு. என்னைத் தனியே விட்டு விட்டுப் போகாதே. உன் தங்கை நான்!"

வினாடிக்கும் சற்றுக் குறைவாக அவன் பார்வை அவள் மீது விழுந்தது. கண்ணிமைக்கும் நேரம் அவன் கண்ணில் இரக்கத்தின் நிழல் விழுந்து உடனே மறைந்தது. காலை உதறி விடுவித்துக் கொண்டான்.

"தங்கையா! அந்த உறவு, சக்கரவர்த்தியிடம் என்னை மண்டியிடப் பண்ணினாயே, அன்றோடு போய் விட்டது!"

ஹோல்டாலைத் தோளில் வீசிப் போட்டுக் கொண்டு, கையில் பெட்டியுடன் வெளியேறினான் தாண்டவம்.



## 15

பருவங்கள் வந்தன; பருவங்கள் போயின. பூமி காய்ந்தது; நனைந்தது; வெடித்தது; விளைந்தது; புரண்டது; வானம் வெளிறியது; கறுத்தது; சிவந்தது; வெளுத்தது. விண்ணின் நகைப்பில் மண் சூலுற்றது. வண்ணச் செப்புக்களைக் கொட்டி இறைத்துக் குதூகலித்தது இயற்கைக் குழந்தை. நகையணிந்த நங்கை தன்னை நோக்கிக் கொள்வது போல், மேனிக்குமேனி முகிழ்த்துவரும் மொட்டுக் கொள்ளையைக் கர்வத்துடன் நோக்கிக் கொண்டது செடி. பறந்து வரும் வண்டுக் கூட்டம் பார்த்துக் கொண்டிருக்கும்போதே நாணமற்ற மொட்டு தன் இதழாடையைப் பிரித்தது; இன்னும் இன்னும், பின்னும் பிரித்தது. இனிப் பிரிக்க முடியாது என்ற நிலை வந்ததும், தன் அந்தரங்கங்களையெல்லாம் காட்டி விட்டோமே என்ற அச்சம் அப்போதுதான் ஏற்பட்டாற்போல, திகைத்துத் திடுக்கிட்டு நின்றது.

மாதங்கள் நழுவின.

தனிக் குடும்பத்தின் அதிர்ச்சிகள் சமூகத்தின் ஓட்டத்தை நிறுத்துவதில்லை. வடக்கு மாட வீதியில் ஓர் ஒற்றைத் தனி வீட்டின் நிகழ்ச்சிகள் மயிலாப்பூரின் களிப்பைக் குறைக்கவில்லை. தெப்ப உற்சவம், சங்கீத சீசன், அறுபத்து மூவர், சாயிபாபா ஆராதனை என்று நகரத்தின் வாழ்வு இயங்கிற்று வழக்கம் போல்.

சடக்கென்று படுக்கையில் எழுந்து உட்கார்ந்து கொண்டாள் அம்மா. ஏதோ ஓசை கேட்டாற்போலிருந்தது. 'என்னைப் போலவே நிம்மதியில்லாத ஆத்மா இன்னொன்றும் இந்த வீட்டில் இருக்கிறதா?' என்று எண்ணிக் கொண்டாள். சூடேறிக் கசகசத்திருந்த தலையணையைத் திருப்பிப் போட்டுக்கொண்டு மறுபடி நித்திரையில் ஆழ முயன்றாள்.

லேசான சந்தடி தொடருவது போலவே பிரமை ஏற்பட்டது. சிறிது சலிப்புடன் எழுந்துகொண்டு ஸ்விட்சைத் தட்டினாள்.

விளக்கு எரியவில்லை.

'கரண்ட்' நின்று விட்டதா என்ன? படுக்கும் போதுகூட விளக்கு எரிந்து கொண்டிருந்ததே?

மின்சார விசிறியின் விசையைத் திருகிவிட்டுச் சிறிது நேரம் நின்றாள். காற்றின் ஸ்பரிசம் உடம்பில் உராயாததிலிருந்து அதற்கும் மின்சாரம் வரவில்லை என்பதைக் கண்டு கொண்டாள். சாத்தியிருந்த சாளரக் கதவுகளைத் திறந்து விட்டபோது வெளியிலிருந்து வந்த மங்கலான வெளிச்சம், மின்சார விசிறி கை காலைப் பரப்பிக் கொண்டு அந்தரத்தில் வெறித்தபடி தொங்கும் வினோத நிலையை வெளிப்படுத்திற்று.

வழக்கமாகப் பக்கத்தில் தட்டுப்படும் ஆனந்தியின் காலோ இடுப்போ இப்போது படவில்லை. கொஞ்ச நாளாகத் தன் இளையமகள் வேறு அறையில் தனியே படுத்துக் கொள்வது குறித்துக் கொஞ்சம் வருத்தம் ஏற்பட்டது. 'வளர்ந்து பெரியவளாகிறாள். குழந்தை மனப் பான்மையில் ஏற்படாத கூச்சங்கள் இப்போது அவளுக் குள்ளே வளர்கின்றன' என்பதை நினைக்கும்போது சிறிது மகிழ்ச்சியும் ஓரளவு கவலையும் ஏற்பட்டன.

அலமாரியிலிருந்த டார்ச் விளக்கை எடுத்துக் கொண்டு வெளியே வந்தாள். தாழ்வாரத்தில், முற்றத் திலிருந்து வந்த சரக்காற்று இருட்டோடு கைகோர்த்து நடமாடிக் கொண்டிருந்தது.

ஆனந்தியின் அறைக் கதவு திறந்திருந்தது. மெதுவே எட்டிப் பார்த்தபோது, ஜன்னல் விளிம்பில் தோட்டத்தைப் பார்த்தாற்போல் முழங்காலைக் கட்டிய வண்ணம் அமர்ந்திருக்கும் ஆனந்தியின் நிழலுருவம் வெளி வெளிச்சத்தைக் கத்தரித்த காகிதத்தால் அடைத்திருப்பது போல் வளைவுகளுடன் தென்பட்டது.



"அம்மா! நீ இன்னும் தூங்கவில்லை?" என்று கேட்டபடி எழுந்து வந்தாள் ஆனந்தி.

"நான் கேட்கவேண்டிய கேள்வி அது. இந்த நேரத்தில் இப்படித் தனியாக உட்கார்ந்திருக்கலாமா நீ?" என்று மகளின் தலையை வருடினாள் தாய்.

"புழுக்கமாயிருந்தது அம்மா. நீ போய் படுத்துக் கொள். அப்புறம் குளிருகிறது என்பாய்!" என்று உரிமை யுடன் சொன்னாள் ஆனந்தி.

'என்னை அதட்டுகிற அளவுக்குப் பெரியவளாகி விட்டாள்' என்று எண்ணியவாறே அம்மா கதவைச் சாத்திக் கொண்டு வெளியேறினாள்.

மாடிப் படியை அடைந்தபோது —

என்ன சப்தம் அது? உற்றுக் கேட்டாள்.

மெல்லிய மூச்சொலி.

குப்பென்று வியர்த்தது. பழைய சம்பவங்கள் பலவும் நினைவுக்கு வந்தன ஒரே விநாடியில். இருக்காது. அந்த உறவையெல்லாம் முறித்துக்கொண்டு விட்டார். அப்படியே கொஞ்ச நஞ்சம் இருந்தாலும், தான் வீட்டி லிருக்கும்போதே அதை மீண்டும் இங்கே நடத்த அவருக்குத் துணிச்சல் வராது இனிமேல்.

தைரியத்தை வரவழைத்துக்கொண்டு படி யேறினாள். டார்ச் விளக்கின் பொத்தானை அழுத்தியும் அது எரியவில்லை.

கண்ணைவிடக் காது கூர்மையாயிற்று.

இப்போது, ஒரு முதுகு சுவரோடு உரசும் சர சரப்பு... ஒரு காலை மெல்ல எடுத்து வைக்கும்போது ஏற்பட்ட நெட்டி முறிவு...

"யாரது?" என்ற அதட்டலுடன் தலையை நிமிர்த்திய அதே வேளையில், பளிச்சென்று டார்ச் விளக்கும் ஒளி பாய்ச்சிற்று.

"நான் மாலி! சப்தம் போடாதீர்கள்!"

மாலி! பிரமிப்பால் மூச்சடைத்திருந்த அம்மா, சுவரோடு சுவராக ஒட்டிக்கொண்டு நின்றிருந்த அந்த வாலிபனை வைத்த கண் வாங்காமல் பார்த்தாள். அவனைப்பற்றிக் கேள்விப்பட்டிருந்த பல கதைகளுக்கும் இந்தத் தோற்றத்துக்கும் சம்பந்தம் இருப்பதாகத் தோன்ற வில்லையே!

நல்லவனாகவே இருக்கட்டும். இந்த நேரத்தில் இந்த இடத்தில் இவனுக்கென்ன வேலை?

"நீ யாரானாலும் சரி, போய்விடு வெளியே!" என்றாள் கடுமையாக.

"மேகலையைப் பார்க்க வந்தேன். ஐந்து நிமிஷம் அவளோடு தனியே பேச வேண்டும். அனுமதியுங்கள். உடனே போய் விடுகிறேன்," என்றான் மாலி தாழ்ந்த குரலில்.

விளக்கை அவன் முகத்துக்கு நேரே நீட்டினாள் அம்மா. "படித்த பிள்ளைதானா நீ? கல்யாணமாகாத ஒரு கன்னிப்பெண்ணை ராத்திரி வேளையில் பார்க்க வந்தேன் என்று சொல்ல உனக்குக் கூசவில்லை?"

"தவறாக நினைக்காதீர்கள். அவள் என்னைப் பற்றி..."

"போகிறாயா? இல்லை, கூச்சல் போட்டு மேகலை யின் அப்பாவைக் கூப்பிடட்டுமா?"

"என்னம்மா அங்கே சந்தடி?"

படிக்கட்டின் கீழேயிருந்து குரல் கொடுத்த மேகலை, விளக்கு வெளிச்சத்தையும், அதிலே தெரியும் முகங்களையும் கண்டதும் விடுவிடு வென்று படியேறி வந்தாள்.

"மேகலை!" என்று முன்னே வந்தான் மாலி.



"உம்!" என்ற அதட்டலுடன் அவனைத் தடுக்கிறாற்போல் நின்று கொண்டாள் அம்மா.

மேகலை அருகில் வரவில்லை. நாலு படிகளுக்குக் கீழாகவே நின்றுகொண்டு முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

"அம்மா! நான் யாரையும் பார்க்கவோ பேசவோ தயாராயில்லையென்று சொல்லிவிடு! வீணாக என் பெயருக்கு அபவாதம் விளைவிக்க வேண்டாம் எவரும்!" என்றாள் உறுதியுடன்.

"மேகலை! ஒரு நிமிஷம் கேள்..."

டார்ச் விளக்கால் அவன் முதுகைத் தட்டினாள் அம்மா. "உன்னிடமில்லாத பண்பாடு, என் பெண்ணிடம் இருக்கிறது. நகரு!"

படுக்கையிலிருந்து எழுந்து வந்ததால் கலைந் திருந்த மேகலையின் கேசத்தையும் செருகியிருந்த விழி களையும் நோக்கியவாறு ஒருகணம் நின்றான் மாலி. பிறகு, "நல்லது," என்று ஒரே வார்த்தையில் கூறிவிட்டுப் படிகளில் இறங்கி நடந்தான். மேகலையைச் சமீபித்தபோது அவன கால்கள் தயங்கின. கைகள் துடித்தன. உதடுகள் திறந்தன. ஆனால் அவளிடம் எவ்வித மாறுதலையும் காணாத ஏமாற்றத்துடன் மிச்சப் படிகளையும் கடந்து இருளில் மறைந்தான்.

எங்கோ ஒரு கதவு சாத்திக் கொள்ளும் ஓசை கேட்டது.

அம்மா மெதுவாக வந்து மேகலையின் தோளை அணைத்துத் தழுவிக் கொண்டாள். அவள் கன்னத்தைத் தொட்டபோது கையில் ஈரம் படுவது தெரிந்தது. பெண்ணின் உணர்ச்சிகளைப் புரிந்துகொண்ட சங்கடத்தில் சிறிது நேரம் மௌனமாயிருந்தாள்.

பிறகு தொண்டையைக் கனைத்துக் கொண்டு "வா மேகலை. நான் உன் பக்கத்திலேயே படுத்துக்

கொள்கிறேன்," என்று கூறி அவளைக் கைத் தாங்கலாக அழைத்துச் சென்றாள்.

படுக்கையில் வெகு நேரம்வரை சவம் போலக் கிடந்தாள் மேகலை. அதற்கு மேல் தன்னை அடக்கிக் கொள்ள முடியாதவளாக, "அம்மா!" என்ற விம்மலுடன் பக்கத்தில் படுத்திருந்த தாயை இறுகக் கட்டிக் கொண்டாள்.

"தூங்கு, தூங்கு," என்று அம்மா அவள் முதுகில் மெல்லத் தட்டிக் கொடுக்கலானாள்.

படக்கென்று குறிப்புப் புத்தகத்தை வெறுப்புடன் மூடிப் பையில் போட்டுக் கொண்டார் சக்கரவர்த்தி. ரத்தம் வருமளவுக்கு அவரது உதடுகள் பல்லின் கீழ் அழுந்தின.

தொழிலில் புகுந்த இத்தனை வருடங்களில் இது மாதிரியான நெருக்கடியை அவர் கண்டதில்லை. முன் பணத்தில் ஒரு பகுதியை வாங்கிக் கொண்டவர்கள் மிச்சப் பகுதியைக் கொடுத்துவிட்டுச் சரக்கைப் பெறும்படி நிர்ப்பந்தம் செய்தார்கள்; முழுப்பகுதியும் கொடுத்து வாங்கிக் கொண்ட சரக்கை எங்கே விற்பது என்று தெரிய வில்லை. வெளி நாட்டு வாடிக்கைக்காரர்கள், 'வரவரத் தரம் குறைந்து விட்டது' என்ற புகாருடன் ஆர்டர்களை நிறுத்திக் கொண்டார்கள். தொழிற்சாலைப் பக்கமே போகாமல் மனோரமாவிடம் மயங்கிக் கிடந்த தன் முட்டாள்தனத்தை உணர உணர அவருக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது.

கையிலுள்ள 'ஸ்டாக்'கைத் தீர்ப்பதுதான், முக்கிய மான பிரச்சினையாக இருந்தது சக்கரவர்த்திக்கு. ரூபாய்க்கு நாலணா கூடத் தேறாமல் அதை விற்க அவர் விரும்ப வில்லை. பண நஷ்டத்தோடு, அப்புறம் மார்க்கெட்டில் இழந்த பெயரை ஒரு நாளும் திரும்பப் பெற முடியாது என்று அவர் அஞ்சினார்.

இந்த நிலையில்தான் இன்னொரு சேதியும் அவர் காதில் விழுந்தது. "கூடிய சீக்கிரம் கிங்ஸ்லி தோல்



மாதிரியே நம்முடையதும் இருக்கப் போகிறது, பாருங்கள்!" என்று சங்கக் கூட்டமொன்றில் தனகோடி பல பேரிடம் பீற்றிக் கொண்டானாம். எந்தத் தைரியத்தில் அப்படிச் சொல்லுகிறான்? வெளி நாட்டு நிபுணர் யாரையும் அவன் வேலைக்கு அமர்த்திக் கொள்ளவில்லையே?...

'கிங்ஸ்லி தரத்தை மட்டும் அவன் பிடிக்க முடியாது — என்னிடம் அது இருக்கும் வரையில்!' என்று திருப்தியுடன் நினைத்துக்கொண்டு சோபாவில் சாய்ந்தவர் மறு வினாடியே திடுக்கிட்டு எழுந்து கொண்டார்.

பரபரவென்று பீரோவைத் திறந்து டிராயரை இழுத்தார். கம்பெனி சம்பந்தமான பல அனாவசியக் கணக்குப் புத்தகங்கள் அங்கே குவிந்திருந்தன. போதாதற்கு, சௌந்தரமோ மேகலையோ துணிமணிகளை வேறு கொண்டுவந்து அடைத்திருந்தார்கள் அதில். எத்தனை நாளாயிற்று இங்கே கவனம் செலுத்தி!

பரபரவென்று பீரோவை அடைத்துக் கொண் டிருந்த குப்பைகளைக் கீழே தள்ளினார். காகிதங்களைப் பிரித்துப் பிரித்துப் பார்த்துவிட்டு எறிந்தார். வினாடிக்கு வினாடி அவர் பதட்டம் அதிகரித்தது. செருகு அறையின் அடிப்பலகையே கையில் தட்டுப்பட்டதும் பீதி வசப்பட்டுப் போனார். மீண்டும் கீழே எறிந்தவற்றைப் பார்த்தார். மறுபடியும் பீரோவின் மற்றப் பகுதிகளைத் தேடினார்.

இல்லை. அந்தக் காகிதத்தை மட்டும் காணவில்லை.

"சௌந்தரம்! சௌந்தரம்! வா இங்கே!" என்று அவர் போட்ட கூச்சலைக் கேட்டு ஓடிவந்தாள் அம்மா.

"குடி கெட்டது!..." என்று உரத்த குரலில் பதட்டத்துடன் ஆரம்பித்தவர் சரேலெனத் தாழ்த்திக் கொண்டார். "ரொம்ப வருஷமாய் இங்கே ஒரு பழுப்பு நிறக் காகிதம் வைத்திருந்தேனே, எங்கே?"

"என்ன காகிதம்? ஏன் இப்படிப் பதறுகிறீர்கள்?" என்று அம்மா அவருக்கு மேல் பதறினாள்.

"அட தெய்வமே! என்ன கொள்ளை போனாலும் அது போய்விடக் கூடாது என்றுதானே இரும்பு சேபிலேகூட வைக்காமல் இங்கே வைத்திருந்தேன்! தூக்கி எறிந்து விட்டாயா எங்காவது!"

"எனக்குப் புரியவேயில்லை. விளக்கமாய்ச் சொல்லுங்கள். இங்கே நீங்கள் வைத்திருப்பதில் கால் துண்டுக் காகிதம்கூட நான் நகர்த்தினது கிடையாது. எதைக் காணோம் இப்போது?"

சக்கரவர்த்தி தலையில் கை வைத்துக் கொண்டு உட்கார்ந்து விட்டார். விவரிக்க இயலாத சோகமும் பீதியும் அவர் முகத்தைக் கப்பிக் கொண்டன.

"இதோ பாருங்கள்!" என்று அவர் கையைப் பிடித்துக் கொண்டு கெஞ்சினாள் அம்மா. "எனக்கு வயிற்றை என்னவோ செய்கிறது. இப்படிப் பதறினால் என்ன பண்ண முடியும்? கொஞ்சம் நிதானியுங்கள். எதுவும் எங்கும் போய்விடாது. அலட்டிக் கொள்ளாமல் சொல்லுங்கள்."

சக்கரவர்த்தியால் என்ன முயன்றும் தன்னைக் கட்டுப்படுத்திக்கொள்ள முடியவில்லை. அரையும் காலுமாக அவர் சொன்னதிலிருந்து அம்மா புரிந்து கொண்டது இதுதான்:

கிங்ஸ்லி தொழிற்சாலையில் பதனிடப்படும் தோல்கள் சிறப்பான மென்மையும் பளபளப்பும் உழைப்பும் கொண்டிருப்பதற்குக் காரணம், ஒரு பிரத்தியேகமான பதனீட்டு முறைதான். ஒரு விசேடமான ரசாயனப் பொருளைக் குறிப்பிட்ட கட்டத்தில் அவர்கள் சேர்ப்பது உண்டு. கம்பெனியை விற்ற பெரிய துரை அதைச் சக்கர வர்த்திக்குக் கூறி, ஒரு காகிதத்திலும் குறித்துக் கொடுத் திருந்தார். தொழிற்சாலையிலிருந்த ஒரு நம்பகமான நிபுணருக்கும் சக்கரவர்த்திக்கும் மட்டுமே அந்த முறை



தெரியும். பதனிடுதலில் குறிப்பிட்ட கட்டம் வரும்போது இருவரில் ஒருவர் இருந்து அதைச் செய்வது வழக்கம். நாளா வட்டத்தில் அந்தச் சேர்க்கை முறைகள் அவர்களுக்கு மனப் பாடமாகி விட்டதால், காகிதத்தை நாடவேண்டிய அவசிய மிருக்கவில்லை.

"கிங்ஸ்லி தோலைப்போல வேறு யாராலும் தயாரிக்க முடியாது என்று இறுமாந்திருந்தேனே சௌந்தரம்? என்ன பண்ணுவேன்? போலீசுக்குத் தெரிவிக்க வேண்டாமே என்று பார்க்கிறேன்," என்று குழந்தை போலத் தேம்பியழாத குறையாகச் சக்கரவர்த்தி புலம்பினார்.

"காகிதம் எங்கே போய்விடும் நமக்குத் தெரியாமல்? இருங்கள், மேகலையைக் கூப்பிட்டுக் கேட்கிறேன், அவள் எங்காவது பார்த்தாளா என்று..." என அம்மா சொல்லிக் கொண்டிருந்த போதே மேகலை உள்ளே வந்தாள்.

"போலீசும் வேண்டாம், ஒன்றும் வேண்டாமப்பா! எனக்குத் தெரியும் அதை யார் களவாடியிருப்பார்கள் என்று!"

"மேகலை!" என்று வியப்புடன் கூவிக்கொண்டே எழுந்தார் சக்கரவர்த்தி விருட்டென.

"என்ன மேகலை என்ன சொல்லுகிறாய்?" என்று அம்மாவும் எழுந்தாள் பரபரப்புடன்.

"அப்பா சொன்னதையெல்லாம் கேட்டுக் கொண்டுதானிருந்தேன். இந்தக் குடும்பத்தைக் குட்டிச் சுவரடித்து, நம் மானத்தை வாங்கக் கங்கணம் கட்டிக் கொண்டிருப்பவர் ஒரே ஒருவர்தான்! அவர் வேலைதான் இது!" என்று ஆத்திரத்துடன் இரைந்தாள் மேகலை.

"யார் மேகலை? யார்?" என்று அம்மா வியப்புடன் அவள் தோளைக் குலுக்கினாள்.

"வேறு யாரம்மா? உனக்கு இன்னுமா புரியவில்லை? நேற்று ராத்திரியில் வந்தானே திருடன்? எதற்காக வந்தானென்று புரிந்து விட்டதா உனக்கு?"

"மேகலை!"

"சந்தேகமேயில்லை அம்மா! அவன்தான்! நீங்கள் இருங்கள் அப்பா! நானே போய்க் கேட்டு விடுகிறேன்!"

வெகு வேகமாகத் தெருவில் இறங்கினாள் மேகலை.

கதவைத் திறந்துகொண்டு ஆமை போலத் தலையை மெதுவாக நீட்டினார் காஷியர்.

"என்ன வேண்டும்?" என்ற எஜமானரின் குரல் அவரைத் தூக்கி வாரிப்போட்டது. கணக்குப் புத்தகத்திலோ அல்லது கடிதங்களிலோ அவர் ஆழ்ந்து கிடப்பார் என்று எதிர்பார்த்தது போக, வாசலைப் பார்த்தாற்போல் வெறித்த நோக்குடன் சக்கரவர்த்தி வெறுமே உட்கார்ந்திருந்தது அவரைத் தடுமாற வைத்து விட்டது.

"ஒன்றுமில்லை.... வீட்டுக்குப் போகிறேன்... நாங்கள்..." என்று இழுத்தார்.

"நான் புறப்பட நேரமாகும்," என்று நறுக்கெனப் பதிலளித்தார் சக்கரவர்த்தி. "எல்லோருடைய சாவிகளுக்கும் டூப்ளிகேட் ஆபீசில் இருக்கிறதல்லவா?"

"ஆமாம் சார். பெட்டகத்தில் வைத்திருக்கிறோம்," என்றார் காஷியர் திகைப்புடன்.

"சரி, நீர் போகலாம். எனக்கு இங்கே வேலை இருக்கிறது. வேறு யாரும் ஆபீசில் இல்லையே?"

"இல்லை சார். நான்தான் கடைசியாகப் போகிறேன்."

"போய் வாரும்."

விரல்களைச் சொடுக்கிவிட்டுக் கொண்டு மன அமைதியின்மையை அப்புறப்படுத்த முயன்றார் சக்கர வர்த்தி. இயலவில்லை. அலுவலகத்திலுள்ள எல்லோருடைய மேஜை, பீரோக்களையும் குடைந்து பார்த்து விடுவது என்ற தீர்மானத்துடன் தங்கியிருந்தார் அவர். மாலியின்மீது மேகலை சாட்டிய குற்றச்சாட்டு அவருக்குத்



தைரியம் தரவில்லை. காரியாலயத்துக்குள்ளேயேகூட ஒரு கள்ளன் இருக்கலாம் என்று கணக்குப் போட்டார். அப்படி இல்லாவிட்டாலும், ஒருவேளை தானே எப்போதாவது மறதியாக இங்கே எங்காவது கொண்டு வந்து வைத்திருக்கக் கூடும் என்ற நப்பாசையும் இருந்தது.

கைக் கடியாரம், மணி பதினொன்று என்பதைக் காட்டிற்று. சில்லென்ற காற்றைக் குறைக்க, மின்சார விசிறியை நிறுத்திவிட்டு, சாளரக் கதவுகளைச் சாத்தத் திரும்பினார்.

வாசல் கதவு மடேலென்று திறந்து கொண்டது.

"வணக்கம், வணக்கம்! சௌக்கியமா!" என்று உற்சாகமாகக் கேட்ட வண்ணம் உள்ளே வந்தான் தாண்டவம்.

இத்தகைய சந்தர்ப்பத்தில் அவனைச் சக்கரவர்த்தி எதிர்பார்க்கவுமில்லை. விரும்பவுமில்லை. கோபத்துடன், "இருக்கிற இடத்தில் இருந்தால் எல்லோரும் சௌக்கியம் தான். போ வெளியே!" என்று எரிந்து விழுந்தார்.

"சாருக்கு என்ன இன்று அசாத்திய கோபம்?" என்றபடி நாற்காலியில் உட்கார்ந்தான் தாண்டவம்.

"கூர்க்கா! ஏய் கூர்க்கா!" என்று உரக்கக் குரல் கொடுத்தார் சக்கரவர்த்தி.

"டீ குடிக்கப் போயிருக்கிறான் சார். நான்தான் காசு கொடுத்து அனுப்பினேன். எத்தனை தடவை உங்களுடனேயே நான் வந்திருக்கிறேன் இங்கே? எஜமானுக்கு ரொம்ப ரொம்ப வேண்டியவனான என்னைத் தெரியாதா கூர்க்காவுக்கு?" என்று தாண்டவம் சிரித்தான்.

"இது டவுன், சைனா பஜார், நான்கு மாடிக் கட்டிடம், நினைவிருக்கட்டும். நீ புழங்குகிற சூதாட்டக் கிடங்கு மாதிரி கேள்வி முறையில்லாத அத்துவானம் இல்லை!" என்று உறுமினார் சக்கரவர்த்தி.

"படா படா பெரிய மனிதர்களின் வாசஸ்தலங்கள் கூட சூதாட்டக் கிடங்காக மாறுவதுண்டு சக்கரவர்த்தி சார்! இந்த மாடி, மேல் மாடி இரண்டும் இப்போது காலி! உங்களைக் கழுத்தை நெரித்து நான் கொலை பண்ணி பிணத்தை இழுத்து வராந்தாவில் போட்டால்கூடக் கேட்பதற்கு ஆள் இல்லை."

"தாண்டவம்!"

"ஹஹ்ஹா! பயந்து போய்விட்டீர்கள் இல்லை? கவலைப் படாதீர்கள். அந்த மாதிரி எதுவும் செய்ய நான் வரவில்லை." தாண்டவம் இருக்கையை விட்டு அவருக்குப் பக்கத்தில் வந்து நின்றான். "சக்கரவர்த்தி சார்! ஆறேழு மாதங்களுக்கு முன்னால் என் மூஞ்சியிலே ஆயிரம் ரூபாயை வீசியடித்தீர்களே, நினைவிருக்கிறதா?"

"அதெற்கென்ன இப்போது?"

"சொல்லுகிறேன்." கால்சட்டைப் பையிலிருந்து நோட்டுக் கற்றையை உருவினான் தாண்டவம். "அதே பணத்தை இப்போது உங்கள் மூஞ்சியிலே வீசியடிக்கத் தான் வந்தேன்."

"எனக்குத் தேவையில்லை அந்தப் பணம்," என்றார் சக்கரவர்த்தி ரோஷமாக.

"அட சீ! தேவையில்லாதவன் முகரையைப் பார்! உம்முடைய நிலைமை எனக்கா தெரியாது?" கற்றையிலிருந்து ஓர் ஆயிர ரூபாய் நோட்டைத் தூக்கி அறையின் மூலையில் எறிந்தான் தாண்டவம். "நீர் அதைப் பொறுக்கி எடுக்கும் காட்சியை என் கண் குளிரப் பார்க்க வேண்டும்! ஊம்! பொறுக்கும்!"

"முடியாது!"

"வேண்டாம் சக்கரவர்த்தி சார்! பிஸ்தாப் பருப்பிலே வளர்ந்த அழகான எலும்பெல்லாம் அநியாயமாய் முறிந்து போகும். ஊம்! பொறுக்கும். நான் பார்க்க வேண்டும்!"



சக்கரவர்த்தி தன்னுடைய திக்கற்ற நிலைமையை உணர்ந்து கொண்டு, பல்லைக் கடித்தவாறே குனிந்து நோட்டை எடுத்துக்கொண்டார்.

"கணக்கு சரியாகிவிட்டதா?"

"ஆகி விட்டது."

"கொடும் இப்படி!" என்று வெடுக்கென அதைப் பறித்தான் தாண்டவம். "இது இப்போது உம்முடைய பணம்! இல்லையா?"

"ஆமாம்."

"கொஞ்சம் இரும். ஒரு வேடிக்கை காட்டுகிறேன்!" சட்டைப் பையிலிருந்து அவன் வெளியே எடுத்தது எதை என்று சக்கரவர்த்தி கவனிக்குமுன் சரக்கென்று தீக்குச்சியொன்று கிழிக்கப்பட்டது. "பாரும்!" என்று குச்சியின் எரிமுனையை நோட்டிலே பொருத்தினான் தாண்டவம்.

"வேண்டாம். வே—"

"நகராமல் உட்கார்ந்து வேடிக்கை பாரும் ஐயா! பணம் தண்ணீராய்ப் புரண்டு கொண்டிருந்த காலத்தில் என்ன அட்டகாசம் போட்டீர்? தேவையுள்ளவனைப் பார்த்தால் எத்தனை பரிகாசமாயிருந்தது. வட்டியும் முதலுமாய்ப் பாரும் இப்போது — காலணாவுக்கு நீர் லாட்டரி அடிக்கும் வேளையில் ஆயிரம் ரூபாய், உம்முடைய ஆயிரம் ரூபாய் சாம்பலாவதை! எப்படி ஜோராய் எரிகிறது பார்த்தீரா, உம்முடைய வயிற்றைப் போலவே!"

காகிதம் கருகிச் சுருண்டு விழுந்தது.

"சாம்பலை எடுத்து நெற்றியில் பூசிக் கொள்ளுங்கள் சக்கரவர்த்தி சார்! மூளைக்கு ரொம்ப நல்லது! குட் பை! வரட்டுமா!"

தெருவில் அவன் இறங்கியபோது கூர்க்கா எதிர்ப்பட்டு ஒரு சலாம் வைத்தான் நன்றியுடன். ஐயாகிட்டே போய்ச சலாம் அடி! ரொம்பக் குஷாலாயிருக்கிறார். நாஸ்தாவுக்கு ரூபாய் வீசுவார் போ! ஹாஹ்ஹா!" என்று சிரித்துக் கொண்டே நடந்தான்.

சிரித்துக்கொண்டே ராயப்பேட்டையை அடைந்து, நடமாட்டமில்லாத ஒரு தெருவிலேயிருந்த தன் வீட்டுக்குள் புகுந்து, அறைக் கதவைத் திறந்தான்.

அவன் சிரிப்பு சடக்கென்று நின்றது.

கால்மேல் கால் போட்டபடி, அறை மத்தியில் நாற்காலியில் வீற்றிருந்த மாலி, "வாப்பா தாண்டவம்!" என்று அவனை வரவேற்றான்.

## 16

அரை வினாடிதான்.

தாண்டவம் சமாளித்துக்கொண்டு விட்டான். எக்காளமான குரலில், "அடேடே! என்ன பாக்கியம் பண்ணியிருக்கிறேன், இந்த ஏழையின் குடிலில் தங்கள் பாதம் பட" என்றவாறே உள்ளே நுழைந்தான்.

"பாக்கியம் பண்ணவில்லை தாண்டவம், அக்கிரமம் பண்ணியிருக்கிறாய்!" என்றான் மாலி சிறிதும் அயராமல்.

"அக்கிரமமா? நானா? சே, சே! அப்படி ஏதாவது பண்ணியிருந்தால்கூட அவ்விடத்தில் கற்றுக் கொண்டதா யிருக்குமே தவிர, எனக்கேது அவ்வளவு சாமர்த்தியம்?"

"தாண்டவம்! உனக்கா சாமர்த்தியம் கிடையாது?" நாற்காலியை விட்டு எழுந்திராமல், வாசலை மறித்துக் கொண்டு நிற்கும் தாண்டவத்தின் மீது வைத்த பார்வையை விலக்காமல், மாலி பேசினான்: "எங்கே கன்னம் வைத்தால் எவ்வளவு சுருட்டலாம் என்ற விஷயத்தில் உனக்குள்ள சாமர்த்தியத்தை உலகம் பூராவுக்கும் வழங்கினாலும் மிச்ச மிருக்குமே! தாண்டவம்! விளையாடிக் கொண்டிருக்க எனக்கு நேரமில்லை. சக்கரவர்த்தியின் வீட்டிலிருந்து



திருடிக் கொண்டு வந்த 'குறிப்புக் காகிதத்'தை எங்கே வைத்திருக்கிறாய் சொல்லு?"

"ஓ! அதை வாங்கிக் கொண்டு போக வந்திருக் கிறீர்களா? கொஞ்சம் இரு, காட்டுகிறேன்," என்ற தாண்டவம், அறைக் கதவைச் சாத்தி விட்டு, மாலிக்கு அருகிலிருந்த மேஜையின் டிராயரை இழுத்தான். மறு கணம் —

அவன் கையில் பளபளவென்று மின்னியது ஒரு குத்துக் கத்தி!

விருட்டென மாலி எழுந்திருக்கு முன்னே, கத்தி அவன் நெஞ்சுக்கு நேரே வந்து நின்றது.

"நகராதே! அங்குலம் நகர்ந்தாலும் சரி, பென்சில் சீவுகிறாற்போல் சீவிப் போட்டு விடுவேன்!" என்று உறுமினான் தாண்டவம். பழுக்கக் காய்ச்சிய இரும்பு முனைகளாக அவன் விழிகள் தகதகத்தன. "இப்போதுதான் என் இரண்டு எதிரிகளில் ஒருவனுக்குப் பாடம் கற்பித்து விட்டு வருகிறேன். இரண்டாமவனும் இவ்வளவு சீக்கிரத் தில் இவ்வளவு சுலபமாகப் பாடம் கேட்க என்னைத் தேடி வருவானென்று நான் எதிர்பார்க்கவேயில்லை!"

"நீ எதிர்பார்க்காதது இன்னும் எவ்வளவு நடக்க விருக்கிறது; கவலைப்படாதே!"

இடத்தை விட்டு நகராமல், கத்தி முனையை நகர்த்தாமல், காலாலேயே மேஜையை அருகே இழுத்துப் போட்டுக் கொண்டு, மாலியின் முன்னே அமர்ந்து கொண்டான் தாண்டவம். அவன் உதடு குரூரமான புன்னகையைக் காட்டிற்று. "ஓ! எதிர்பார்க்காதது நிறைய நடக்கப் போகிறதா? உதாரணத்துக்கு ஒன்று சொல்லேன், கண்ணா! தூக்கமே வரவில்லை! கொஞ்ச நேரம் கதை தான் கேட்கிறேனே!"

"என்னைக் கொலை செய்துவிட்டுச் சுலபமாகத் தப்பி விடலாம் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறாய்!" என்று மாலி சிரித்தான்.

"உன்னைக் கொலை செய்வதா? சீ!" சிரிப்பைச் சிந்திய உதடு திடீரென அருவருப்பை உமிழ்ந்தது. "சிங்கத்தைக் கொன்றால் சூரத்தனம். நாயை அடிப்பதிலே என்னடா வீரம்? வேட்டைக்காரச் சாதி வேறே; நாய் அடிக்கிற வர்க்கம் வேறே! தெரிந்து கொள். உன்னை எலும்பு வேறு தோல் வேறாகப் பிரித்தெடுக்க இன்னும் கொஞ்ச நேரத்தில் ஆள்வரும். பார்த்துக்கொண்டேயிரு."

"கெட்டிக்காரன்தான்," என்று மாலி இகழ்ச்சியாகப் பாராட்டினான் அவனை. "எனக்காக முன்னேற்பாடு செய்து வைத்திருக்கிறாயே?"

"நோ, நோ! அந்தப் பாராட்டுக்கு நான் உரியவனல்ல. உன் போதாத வேளை, நான் வேறொருவரை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிற சமயத்தில் நீ வந்திருக்கிறாய்! தனகோடியின் ஆட்கள், சரியாக இரண்டு மணிக்கு இங்கே வருவார்கள். உனக்குத் தனகோடியைத் தெரியாதே ராஜா? இல்லை, தெரியுமோ ஒரு வேளை? நீதான் நாரதர் மாதிரி முக்காலமும் மூன்று உலகமும் தெரிந்து வைத்திருக்கிறாயே?"

"சொல்லேன், தெரிந்து கொள்கிறேன்."

"அப்படிக் கேள் சுவாரஸ்யமாய். தமிழ்நாடு லெதர்ஸ் என்று ஒரு தரித்திரம் பிடித்த கம்பெனி. அதற்குச் சொந்தக்காரன் தனகோடி என்று ஒருத்தன். உன் சக்கரவர்த்தியை விடப் பெரிய அற்பன். ஏதோ காலில் விழுந்து கேட்டானே என்று அவனுக்காக அந்தக் காகிதத்தைக் கிளப்பிக் கொண்டு வந்து தருவதாகச் சொல்லி விட்டேன். பிச்சைக்காசு நாலாயிரமோ, ஐந்தாயிரமோ கொடுத்து விட்டானாம் முன்பணமாக! உயிரை எடுத்து விட்டான் பிசுனாரிப் பயல். இன்று ராத்திரி இரண்டு மணிக்குள் தராவிட்டால் ஆள் வைத்து என்னை உதைப்பானாம். இவ்வளவு புலம்புகிறானே என்று நேற்று இரவோடிரவாய் மெனக்கெட்டு எடுத்து வந்தால், அதைக் கொடுக்கும்படி நீங்கள் வந்து கேட்கிறீர்களே மாலி சார், இது நியாயமா?"



"நியாயமில்லைதான்" என்று மாலி ஒப்புக் கொண்டான். "ஆனால் என்ன பண்ணுவது பாவம்! இரண்டு மணிக்குத் தனகோடியின் ஆட்கள் வந்து பார்த்து ஏமாறத்தான் போகிறார்கள்."

"அடடே! ஏன் சார்? காகிதம் இருக்காதா?"

"காகிதமும் இருக்காது. நீயும் இருக்க மாட்டாய் இங்கே."

தாண்டவத்தின் கத்தி மாலியின் நெஞ்சு நரம்புகளை மெல்ல நெருடிற்று. எனக்குப் புதிரே பிடிக்காது, மாலி!"

"எனக்கு அசட்டுத் துணிச்சலே பிடிக்காது, தாண்டவம்!" என்று மாலி பதிலளித்தான். "எந்தக் காரியத்தையும் முன் யோசனையுடன் செய்ய வேண்டும் என்பதுதான் என் கொள்கை. அப்படிப்பட்டவன் பாதுகாப்புச் செய்து கொள்ளாமல் தனியே வந்து உன்னிடம் சிக்குவேனா?"

"பின்னே?"

"தாண்டவம்! வெளியே தெருக்கோடியில் காத்துக் கொண்டிருக்கிறாள் மேகலை, ஒரு டெலிபோன் கூண்டுக்குள்! பன்னிரண்டரை மணிக்குள் நான் இந்த வீட்டை விட்டுப் பத்திரமாகத் தெருவில் இறங்காவிட்டால் அவள் கை டயலை எடுத்துச் சுழற்றும் — போலீசுக்கு! இன்னும் சில நிமிட... அதோ! அவளே வந்தாயிற்று!"

தாண்டவம் விழியை அசைத்த மின்வெட்டு நேரத்துக்குள்ளாக, மாலியின் கால் விண்ணென்று கிளம்பி, கத்தி பிடித்திருந்த கையை எகிறித் தட்டி விட்டது! டணாலென்ற ஓசையுடன் விழுந்த கத்தியைப் பாய்ந்து எடுத்துக்கொண்ட மாலி, ஒரே உந்தலில் தாண்டவத்தைத் தான் அமர்ந்திருந்த அதே நாற்காலியில் தள்ளி உட்கார்த்தினான்.

கத்திமுனை இப்போது தாண்டவத்தின் கழுத்துக்கு நேரே ஊஞ்சலாடிற்று.

மாலி சிரித்தான். "மேகலையை நிஜமாகவே அழைத்து வந்திருந்தால்கூட இப்படி உதவியிருக்க மாட்டான்! இல்லையா தாண்டவம்?"

தாண்டவம் பதில் தரவில்லை. இமைப் பொழுதில் நிலைமை தலைகீழாக மாறிவிட்ட அதிர்ச்சியில் வாயடைத்துப் போய்விட்டான்.

மாலி சுறுசுறுப்பானான். தாண்டவம் மேஜையை இழுத்தது போலவே, மூலையில் கிடந்த ஒரு கயிற்றுச் சுருளைக் காலாலேயே அருகில் இழுத்து, ஐந்து நிமிடத்தில் தாண்டவத்தை இப்படி அப்படி அசைய வொட்டாமல் நாற்காலியோடு கட்டிப் போட்டான்.

"ரொம்ப நன்றி, தாண்டவம்! அந்தக் குறிப்புக் காகிதத்தை எங்கே வைத்திருக்கிறாயோ என்று கவலைப் பட்டுக் கொண்டிருந்தேன். இந்த அறையில்தான் வைத்திருக்கிறாய் என்று தெரிந்து விட்டது. நேரமும் நிறைய இருக்கிறது, தனகோடியின் ஆட்கள் வர. அப்படி உட்கார்ந்த வாக்கிலேயே சௌகரியமாய்த் தூங்கப்பா!" என்று கூறிவிட்டு, அறையின் மூலை முடுக்குகளை யெல்லாம் குடையத் தொடங்கினான் மாலி.

இரவின் மடியில் துயின்று கொண்டிருந்தது மயிலாப்பூர். வானத்தில் வரைந்த சித்திரங்களாக ஓங்கி உயர்ந்திருந்த மரங்களின் கிளைகள், நிலவின் நீராட்டலால் ஏற்பட்ட ஈரத்தை உதற விரும்பினாற் போல் மெல்லச் சிலிர்த்து வெட வெடத்தன. பிழிந்து உலர்த்தி எடுத்த மாதிரித் தெருக்கள் உயிரற்று வெறிச்சிட்டுக் கிடந்தன.

வாசற்படியில் அமர்ந்து, ஒரு கையால் முழங்காலைக் கட்டிக்கொண்டு இன்னொரு கையால் பக்கத்திலிருந்த கனகாம்பரச் செடியில் ஒவ்வொரு இலையாகக் கிள்ளியெறிந்து கொண்டிருந்தாள் மேகலை. அவள் பார்வை நிமிர்ந்திராமல், கால் கட்டை விரலில் பதிந்திருந்தது. சிந்தனை ஓரிடத்திலும் நிலைக்காமல் எதையோ துரத்திப் பிடிக்க ஓடிக் கொண்டிருந்தது.



எதிரில் கார் வந்து நின்றதுகூட அவளுக்குத் தெரியாது. காரின் கதவு மெதுவாய்க் கிளிக்கிட்டு மூடிக் கொள்ளும் ஓசை கேட்ட பின்னரே தலை நிமிர்ந்தாள்.

ஐயோ! ஒரே நாளைக்குள் அப்பா எவ்வளவு ஆடிப்போய் விட்டார்?

தூக்கத்தில் நடப்பவர் போலச் சக்கரவர்த்தி ஆடி ஆடி வந்து மகளின் பக்கத்திலேயே அமர்ந்து கொண்டார். லேசான நடுக்கத்துடன் அவரது விரல்கள் பெண்ணின் காதோரக் கேசத்தைத் தடவிக் கொடுத்தன. "மேகலை! நீ தூங்கப் போவதற்கென்னம்மா?" என்று பரிவுடன் கேட்டார்.

"உங்களுக்காகத்தான் காத்திருந்தேன். சாப்பிட வாருங்கள்."

"மேகலை! சாப்பாடு ஒன்றுதான் பாக்கி எனக்கு!" என்று வெறுப்புடன் சிரித்தார் சக்கரவர்த்தி.

"அப்படியெல்லாம் பேசாதீர்கள் அப்பா! எல்லாம் சரியாகிவிடும். பார்த்துக்கொண்டேயிருங்கள். அந்த மாலியைச் சக்கை சக்கையாய் கேட்டுவிட்டு வந்திருக்கிறேன்."

"மேகலை!" என்று அவள் முகத்தை நிமிர்த்தி, அளவற்ற ஏக்கத்துடன் கேட்டார் சக்கரவர்த்தி: "கடைசியில் அவன்தான் எடுத்தானாமா? ஒப்புக் கொண்டானா?"

"அவரா ஒப்புக் கொள்ளுவார்? பழியை வேறிடத்தில் போடுகிறார். பொழுது விடிவதற்குள் தன் நாணயத்தை நிரூபித்துக் காட்டி விடுவதாகச் சொல்லி விட்டு ஓடி விட்டார்!" என்று வெறுப்புடன் பதிலளித்தாள் மேகலை.

"என்ன சொல்கிறான்?"

"தாண்டவம் எடுத்திருக்கிறானாம்!"

"இருக்கும், இருக்கும்!" என்று பல்லை [illegible]தார் சக்கரவர்த்தி.

21069
3742581

"அப்பா! அவர் சொல்லுவதில் உண்மை இருக்குமா?" என்று மேகலை கேட்டது வெறும் கேள்வியாக இருக்கவில்லை. 'இருக்கும் என்று தயவு செய்து சொல்லுங்கள்!' என்ற மன்றாடலாக இருந்தது.

"எனக்கு நிச்சயமாய்த் தெரியாது மேகலை. ஆனால் தாண்டவம் எப்படிப்பட்ட கொடியவன் என்பதைக் கொஞ்ச முன்னால் தெரிந்து கொண்டேன்," என்று சக்கரவர்த்தி சிறிது சிறிதாக ஆபீசில் நடந்ததை விவரித்தார்.

மேகலையின் இதயத்தில் ஒரு பகுதி அவருடைய பேச்சில் ஈடுபட்டிருந்தது. இன்னொரு பகுதி 'மாலி! நீங்கள் குற்றமற்றவர் என்பதை நிரூபித்து விடுங்கள். இந்த மேகலையின் பொய்யான கற்பனைகளையெல்லாம் புதையுங்கள்!' என்று இறைஞ்சிற்று.

'மேகலை! நான் உன்னிடம் கொண்டிருக்கும் காதலையும், உன் குடும்பத்தின் நலத்தில் கொண்டிருக்கும் அக்கறையையும் மெய்ப்பிக்கச் சந்தர்ப்பம் கொடுத்திருக்கிறாய். நன்றி!' என்று கூறிவிட்டு வெளியே விரைந்தானே, அந்த வாலிபனின் ஆண்மைத் திருவுருவம் அவள் கண் முன்னாலே நின்று கொண்டிருந்தது.

"நன்றாய்ப் போச்சு!" என்று கடிந்தபடி அம்மா பின்னால் வந்து நின்றாள். "அப்பாவும் பெண்ணும் அரட்டையடிக்க நேரமும் இடமும் பார்த்தீர்களே! பனி கொட்டுகிறது. உள்ளே வாருங்கள்."

சக்கரவர்த்தி எழுந்து உள்ளே சென்றார், மனைவி பின் தொடர.

மேகலை வாயிற் கதவைச் சாத்தப் போன சமயம் வெளி 'கேட்'டைத் தடாலென்று திறந்து கொண்டு ஓடி வந்தான் மாலி.

அவனது நீட்டிய கரத்தில் ஒரு காகித உறை இருந்தது.

"மாலி!" என்று வியப்புடன் கூவியவாறு எதிர்கொண்ட மேகலையை ஒரே எட்டில் தாண்டிக்கொண்டு சக்கரவர்த்தியை நெருங்கினான் அவன்.



வீடு முழுவதிலுமே மின்சார அதிர்ச்சி ஏற்பட்டாற் போன்ற குலுக்கல்.

"கொண்டு வந்து விட்டாயா? நிஜமாகவா?" என்று சக்கரவர்த்தி மார்பைப் பிடித்துக்கொண்டு வினவினார். அம்மா கண்களை மூடிக்கொண்டு நன்றியுடன் வானத்தை நோக்கினாள். மேகலை, விவரிக்க இயலா உணர்ச்சிகளால் இதழ்கள் துடிக்க அருகில் வந்து நின்றாள்.

"பத்திரம், பத்திரம்!" என்ற இரண்டே வார்த்தைகளுடன் உறையைச் சக்கரவர்த்தியிடம் சோப்பித்தான மாலி.

சக்கரவர்த்திக்கு உணர்ச்சிப் பெருக்கில் பேச்சு வரவில்லை. உறையை மேலோடு திறந்து பார்த்துத் திருப்திப்பட்டவராக, மாலியின் கரங்களைச் சேர்த்துப் பிடித்துக்கொண்டு திணறினார்.

"தாண்டவத்திடம்தான் இருந்தது. தனகோடிக்காகக் களவாடிச் சென்றானாம்," என்றான் மாலி.

"தனகோடியா! அவனுக்கு இதிலே..." சக்கரவர்த்தியின் தடுமாற்றம் மேலும் அதிகரித்தது.

"உட்கார்ந்து பேசப்பா, மூச்சு இரைக்கிறதே?" என்று அம்மா பரிய, மேகலை பரபரவென்று ஒரு நாற்காலியை இழுத்து வந்து அவனருகில் போட்டாள்.

ஆனால் மாலி உட்காரவில்லை. "அதெல்லாம் பெரிய கதை. இன்னொரு நாள் சாவகாசமாகச் சொல்லுகிறேன்," என்று கூறிவிட்டு, கால் சட்டைப் பையிலிருந்து ஒரு விசிட்டிங் கார்டை எடுத்துக் கொடுத்தான்.

விளக்கொளியில் அதை வாசித்த சக்கரவர்த்தி, "யார் இவர்? எனக்குத் தெரிந்தவரல்லவே?" என்றார்.

"தெரிந்திருக்காதுதான். என் பெரியம்மாவின் மைத்துனர் ஆக்ராவில் தோல் பொருள் தயாரிப்பில் ஈடுபட்டிருக்கிறார். நேற்றுத்தான் சென்னை வந்தார். உங்களைப் பார்க்க வேண்டுமென்று சொல்லியிருந்தார். அதற்குள் இந்த விவகாரங்கள் குறுக்கிட்டு விட்டன,"

என்றான் மாலி, கைக்குட்டையால் நெற்றியைத் துடைத்துக் கொண்டு.

சக்கரவர்த்தி மறுபடியும் ஒருமுறை விசிட்டிங் கார்டைப் பார்த்தார்.

மாலி நிதானமாகப் பேசினான்: "சரக்கு முடங்கிக் கிடக்கும் சங்கடத்திலிருந்து உங்களை மீட்க இவர் உதவி தேவைப்படும். நீங்கள் வெளி நாட்டுக்கு அனுப்பும் பச்சைத்தோல், திரும்பி இங்கேயே பர்சாகவும் பையாகவும் பெட்டியாகவும் வந்து, ஒன்றுக்கு நாலாக விற்கிறதே? இப்போது இறக்குமதிக் கட்டுப்பாட்டினால் அவை முன்போல வருவதுமில்லை. இவர் அதே பொருள்களை இங்கேயே தயாரித்து, குறைந்த விலையில் விற்கத் திட்டமிட்டிருக்கிறார். நாளைக்கு அவரையே இங்கே அனுப்புகிறேன். விவரமாகப் பேசிக் கொள்ளுங்கள். வருகிறேன்."

"இரப்பா," என்று சக்கரவர்த்தியும் அம்மாவும் சொல்லிக் கொண்டிருந்தபோதே விடுவிடுவென்று மாலி வெளியேறி விட்டான். திகைத்துநின்ற மேகலையருகே தயங்கக்கூட இல்லை.

தெருக்கோடியை அடையுமுன் அவன் நடையின் வேகம் குறைந்தது. எடுத்த காரியத்தை முடிக்க வேண்டும் என்ற வெறியில் பிறந்த தெம்பு விடைபெற்றுக் கொண்டு விட்டதால், உறுப்புகள் அனைத்தும் தளர்ந்தன. எல்லையற்ற சலிப்பும் களைப்பும் அடைந்தவனாக, தெப்பக் குளத்தின் மதிலருகே நின்றான் சிறிது நேரம். பிறகு, மெல்ல ஒவ்வொரு படியாக இறங்கி, தண்ணீருக்கு நாலாவது படியில் உட்கார்ந்து கொண்டான்.

வெண்ணெயை உருட்டிப் போட்டாற் போல, சலனமற்ற நீரில் முழு நிலவின் பிரதிபிம்பம் மிதந்து கொண்டிருந்தது. அந்தக் காட்சி அவன் இதயத்தில் வேதனையை விளைவித்தது. பக்கத்தில் கிடந்த சிறு கற்களை ஒவ்வொன்றாகத் தண்ணீரில் வீசலானான். நீரின் மோனத் தியானம் கலைந்து, அவனது உள்ளத்தைப் போலவே அதுவும் அமைதியற்றுச் சிணுங்கியது.



இன்னொரு கல்லை எறியப் போனான். அதற்கு முன் வேறொரு கல் தண்ணீரில் விழுந்தது — பின்னாலிருந்து.

மாலி தலையை நிமிர்த்தவில்லை. தரையை உற்று நோக்கினான்.

நிலவினால் ஏற்பட்டிருந்த அவனுடைய நிழலை இன்னொரு நிழல் தழுவிக் கொண்டிருந்தது.

"நீங்கள் மிகுந்த தைரியசாலி என்று நினைத்திருந்தேன். உண்மையில் கோழை," என்று சொன்னபடி அவன் அருகில் அமர்ந்து கொண்டாள் மேகலை.

மாலி பேசவில்லை. மேலும் மேலும் கற்களை வீசினான் குளத்தில். வீசும் வேகம் சிறிது சிறிதாக அதிகப்பட்டது.

"மரணத்தைத் துரும்பாக எண்ணிப் போராடுவதிலா வீரம் இருக்கிறது? இல்லை. வெற்றி கிட்டிய வேளையில் எதிராளியை மன்னிக்கும் பெருந்தன்மையில் இருக்கிறது," என்று மேகலை தாழ்ந்த குரலில் தொடர்ந்தாள். "பெண் புத்தியால் தவறிழைத்து விட்ட ஒரு பேதையிடம் கோபிப்பது சூரத்தனமில்லை. வடிகட்டிய கோழைத்தனம்!"

"மேகலை!" என்று உள்ளம் வெடிக்கும் ஆர்வத்துடன் சரேலென்று அவளை அணைத்துக் கொண்டான் மாலி. "மேகலை! என்மீது உனக்குக் கோபம் இல்லாதிருந்தால் போதும். உன்னுடைய மென்மையான உணர்ச்சிகளைப் புரிந்து கொள்ளாமல் பயங்கரமாகப் பல விளையாட்டு நடத்தி விட்டேன்."

"பாதகமில்லை. இனிமேல் அப்படி விளையாடுவதில்லை என்று சத்தியம் செய்யுங்கள்," என்று கைகளை நீட்டினாள் மேகலை.

அந்தக் கையை இறுகப் பிடித்தபடி மெய்மறந்தான் மாலி. பச்சைப் புல் தரையில் படர்ந்தோடும் பசுங்கொடிகளைப்போல் சிவந்த அந்த உள்ளங்கையில் குறுக்கும் நெடுக்குமாக இருந்த ரேகைகள், அவனது எண்ணற்ற இன்ப

நினைவுகளைப் போலக் கிளைத்தோடின எதிரெதிர்த் திசைகளில்.

"மேகலை! உன் வாழ்க்கையில் ஒரு பொல்லாத போக்கிரி குறுக்கிட்டு, ஆயுளுக்கும் உன்னை அடிமைப் படுத்திக்கொள்வான் என்று இந்த ரேகைகள் சொல்லுகிறதே? அதுகூடப் பரவாயில்லையா?" என்று குளிர்ந்த அக் கருவிழிகளை நோக்கிக் கேட்டான் மாலி. கடைக் கண்ணால் அவனைப் பார்த்து, "ஊம்?" என்று கொஞ்சலாகக் கழுத்தை வளைத்தாள் மேகலை.

"அப்படியா சொல்லுகிறது? 'நான் உன் கையில் பிணைந்திருப்பது போலவே, ஓர் ஆணழகன் உன் இதயத்திலே பின்னிப் பிணைந்து கிடப்பான்' என்று சொல்லுவதாக அல்லவா எனக்குத் தோன்றுகிறது?"

தெளிந்த நீர் சிரித்தது; தண்ணிலா சிரித்தது; கடினமான படிக்கட்டுகளும், நிமிர்ந்த மதில் சுவர்களும், உயர்ந்த மண்டபங்களும், கம்பீரமான கோபுரமும், நீண்டகன்ற மாட வீதியும் சிரித்தன.

மேகலையையும் மாலியையும் சுற்றியிருந்த உலகம் அந்த மனோகரமான இரவுக் காலத்தில் நாணமற்றுச் சிரித்துக் கொண்டேயிருந்தது.

கீழ்வானம் நித்திரை நீங்கி மெல்ல இமையை உயர்த்திக் கொண்டிருந்த நேரத்தில், மேகலையும் மாலியும் வீட்டை அடைந்தார்கள் திரும்ப.

ஏன் இந்தப் பரபரப்பு வீட்டுக்குள்? அறைக்கு அறை, கூடத்துக்குக்கூடம் இப்படி விளக்குகள் எரிவானேன்? எதற்காக எல்லோரும் இப்படிக் குறுக்கும் நெடுக்கும் ஓடுகிறார்கள்?

அம்மா ஓடிவந்தாள் உள்ளேயிருந்து.

"மேகலை! ஆனந்தியைப் பார்த்தாயா? எங்கே அவள்?" என்று திகிலுடன் விசாரித்தாள்.

"ஆனந்தியா? நான் பார்க்கவில்லையே?" என்று மேகலை திகைத்தாள்.



"கொல்லைக் கிணற்றில் பார்த்து விட்டேனம்மா!" என்று சொல்லிக்கொண்டே வேலைக்காரன் வர, "என்ன வேடிக்கையாயிருக்கிறது!" என்று மனம் நொந்தவராக முணு முணுத்துக்கொண்டு சக்கரவர்த்தி பின்னால் வந்தார்.

"ஐயோ! இப்படிப் பேசாமலிருக்கிறீர்களே எல்லோரும்? போலீசுக்காவது போன் பண்ணுங்களேன்" என்று கையைப் பிசைந்தாள் அம்மா.

டெலிபோனுக்கருகே விரைந்த மேகலையைத் தடுத்தான் மாலி.

"தாண்டவத்திடமிருந்து நான் அந்தக் காகிதத்தைப் பிடுங்கிக் கொண்டு வந்ததாகச் சொன்னேனே, அப்போது ஆனந்தி இருந்தாளா?" என்று அம்மாவைக் கேட்டான்.

"ஆமாம். அவள் அறை வாசலில் நின்று கேட்டுக் கொண்டிருந்தாளே எல்லாவற்றையும்? நான் பார்த்தேன். நீ வெளியில் போனபோதுதான் அவளைக் காணோம்," என்றாள் அம்மா.

"நான் நினைத்தபடிதான் நடந்திருக்கிறது," என்றான் மாலி நிதானமாக.

"மாலி! என்ன சொல்லுகிறாய்?" என்று அருகில் வந்தார் சக்கரவர்த்தி.

மாலி உணர்ச்சியற்ற குரலில், "ஆனந்தி தாண்டவத்தைச் சந்திக்கப் போயிருக்கிறாள்," என்றான்.

"மாலி!" என்று ஆவேசத்துடன் அவன் தோளை உலுக்கினார் சக்கரவர்த்தி.

"ஆனந்தியா? என் பெண்ணா?" என்று பதறிக் கொண்டு முன்னே வந்தாள் அம்மா.

"ஆமாம்," என்று தொடர்ந்தான் மாலி. "வீட்டுக் குள்ளிருக்கும் உங்களுக்குத் தெரியாது. வெளியிலிருந்து நான் வெகு நாளாய்க் கவனித்துக் கொண்டு வருகிறேன். ஆனந்தி தாண்டவனிடம் மனத்தைப் பறிகொடுத்து மாதக் கணக்காகிறது, அம்மா!"

மாட வீதிகள் நான்கும் கிடுகிடுக்கும்படி அம்மா, "ஆனந்தி! என் கண்ணே ஆனந்தி!" என்று அலறினாள்.

மறுகணம் அவள் உடல் தடாலென்று தரையில் சாய்ந்தது.

# 17

இரண்டு நாள் கழித்து அம்மா கண் விழித்தாள்.

விடிவிளக்கின் மெல்லிய நீல வெளிச்சத்தில், சுவர்க் கடிகாரம் அவள் பார்வைக்குக் கோணல் மாணலாகப் பட்டது. இரண்டு முட்களுக்குப் பதிலாக இருபது முட்கள் வெவ்வேறு திசைகளில் தெரிந்தன. புலன்களை இழுத்து ஒருங்கு கூட்டி நிதானித்தபோது சிறிய முள் பதினொன்றிலும் பெரிய முள் இரண்டிலும் இருப்பதை உணர்ந்தாள். தெளிவிழந்த புகைப்படம் போல அவை ஒரு முறை கலங்கிச் சுருண்ட பிறகு நேரான போது, தான் ஒரு கட்டிலில் படுத்திருப்பதையும் அருகில் ஒரு முக்காலியில் மருந்துப் புட்டிகள் வைக்கப்பட்டிருப்பதையும் கண்டாள்.

இந்த இரண்டு நாளும், அவள் வாழ்வுக்கும் சாவுக்குமிடையேயுள்ள அந்த நலிந்த கயிற்றில் தொத்தியிருந்தாள். அவள் நினைவுகள் விசித்திர விசித்திரமான பாதைகளிலே செல்லுவதும் திரும்புவதுமாயிருந்தன. தண்ணீரில் முழுகுபவனின் மனக்கண் முன் அவன் வாழ்க்கை நிகழ்ச்சிகளனைத்தும் மின்னலடிப்பது போல, அம்மாவுக்கும், அவளுடைய சிறுமிப் பிராயமும், யுவதிப் பருவமும், மணக் கோலமும், தாய்மை வேளையும் நினைவில் எழுந்து எழுந்து மறைந்தன.

'பிழைத்துவிட்டேன்! ஆனால் எதற்காக!' என்று விரக்தியடைந்தவளாக தலையணையில் முழங்கையை



ஊன்றி லேசாகச் சாய்ந்தாற்போல் எழுந்து உட்கார்ந்து கொண்டாள். இரண்டே நாளில் கையும் காலும் குச்சி குச்சியாக மெலிந்துவிட்டிருப்பது தெரிந்தது. ஆனால், அவற்றை அசைப்பதுகூட, ஐயோ, எவ்வளவு சிரமமாயிருக்கிறது!

முக்காலியின் நடுவே, தபால் உறையொன்று இருப்பது அப்போதுதான் அவள் கண்ணில் பட்டது. அவள் பெயருக்கு வந்திருந்ததால் யாரும் உடைக்கவில்லை போலும். ஆனால், முகவரியில் தெரிந்த கையெழுத்து —

ஒரு பெருத்த முனகலுடன் படுக்கையில் சாய்ந்து அமர்ந்து, உறையின் வாயைக் கிழித்தாள்.

அவள் எதிர்பார்த்ததுதான்.

"என் அன்புள்ள அம்மாவுக்கு' என்று தொடங்கி ஆனந்தி எழுதியிருந்தாள்.

கடிதத்தின் வலது தலைப்பில், 'பம்பாய் செல்லும் ரயிலிலிருந்து' என்றிருந்தது.

வெளிச்சம் போதவில்லை. தள்ளாடி எழுந்து கொண்டாள். சுவரில் சாய்ந்தபடி விடிவிளக்கின் அருகே கடிதத்தை நீட்டி வைத்துக்கொண்டு படிக்கலானாள். மீனினங்கள் தண்ணீரில் நீந்துவதும் தலை காட்டுவதும் அமிழ்வதுமாக விளையாடுவது போல், எழுத்துக்கள் கடிதத்தோடு அமிழ்வதும் மீண்டும் வெளிப்படுவதுமாக இருந்தன.

என் அன்புள்ள அம்மாவுக்கு,

> உன் திருவடித் தாமரையில் பணிந்து வணங்குகிறேன். எனக்கு ஆசி கூறு. பூவும் மஞ்சளுமாய்ப் புருஷனோடு பதினாறும் பெற்று வாழ எனக்கு ஆசி அளி.
>
> உற்றார் உறவினர் நிறைந்திருக்க, மேளதாளம் முழங்க, அலங்கார மணப் பந்தலில் ஆனந்தக் கண்ணீருடன் நீ என்னை என் கணவரிடம் கைப் பிடித்துக் கொடுக்கும் பாக்கியத்தை நான்

பெறவில்லை. என் வாழ்க்கையில் எனக்கு ஏதேனும் தீராத மனக்குறை இருக்குமானால் அது இதுதான் அம்மா.

சமீப காலத்தில் நீ அனுபவித்த துயரம் எதையும் விட இப்போது நான் செய்துள்ள காரியம்தான் மிகக் கொடியது. அதை நான் உணர்ந்திருக்கிறேன். நீ தொட்டுத் தடவி வளர்த்து ஆளாக்கிய இந்த மகள், உன் தலையில் பெரும் கல்லாகப் போடுவாள் என்று நீ கனவிலும் நினைத்திருக்க மாட்டாய். நீ தவிக்கும் காட்சியைப் பார்க்கும் திடம் எனக்கில்லாததால் நான் இப்படித் திருட்டுத்தனமாக ஓடுகிறேன். பதினெட்டு வருட காலத்தில் முதன் முறையாக, உன்னிடம் சொல்லிக் கொள்ளாமல் போகிறேன்.

அம்மா! நீ என்னை உன் இடுப்புக் குழந்தையாகவே நேற்றுவரை எண்ணியிருந்தாய். ஆனால் உன் தோளுக்கு மேலே வளர்ந்த யுவதியாகிவிட்டேன் நான். அம்மாவின் ஆசை மகள் என்ற பருவம் நீங்கி, ஓர் ஆணுக்கு உடையவள் என்ற அந்தஸ்தை நான் போன வருஷமே அடைந்து விட்டேன்.

ஆம் அம்மா, தாண்டவத்திடம் நான் மனத்தைப் பறிகொடுத்து ஓராண்டாகப் போகிறது.

உன் விரோதியின் அண்ணன் என்பது அறியாமலே அந்தக் காலத்தில் அவரை நான் காதலித்து விட்டேன். நம் வீட்டுக்குள் அவர் நுழையும் போதெல்லாம் என் இதயம் சிறகடித்துப் பறந்தது. அப்போது எனக்குத் தெரியாது அவர் யாரென்று. ஒன்றுதான் தெரியும் — உரிமையுடன் சமையலறை வரையில் வந்து, என்னிடம் சிரிக்கச் சிரிக்கப் பேசி என் சிந்தையில் நிறைபவர் என்று.



வெகுநாள் கழித்து, நீயும் நானும் திருவல்லிக்கேணியில் இருந்தபோது, மனோரமாவின் தாயாருடன் நகைகளை விற்றுவர என்னை அனுப்பினாயே, அப்போதுதான் எனக்குத் தெரிந்தது. கடையில் நாங்கள் நுழைந்தபோது, "அம்மா! இங்கே எங்கே வந்தாய்?" என்று கேட்டுக் கொண்டே தெருவிலிருந்து வந்தவர், என்னையும் கண்டதும் தடுமாறி விட்டார்.

என் அன்புள்ள அன்னையே! உண்மை தெரிந்ததும் நான் அடைந்த அதிர்ச்சியை உன் ஒருத்தியால்தான் உணர முடியும். உனக்கு மாபெரும் துரோகம் இழைத்து விட்டதாக என் மனச்சாட்சி என்னைக் கணுக் கணுவாகத் துளைத்தது. ஆனால் என்ன முயன்றும் என் காதலை மட்டும் மறக்க முடியவில்லை.

அறியாப்பெண், சின்னக் குழந்தை என்றெல்லாம் நீங்கள் என்னை எண்ணியிருந்த காலத்தில், என்னைப் பெண்ணாக மதித்து, யுவதியாக மயங்கி, காதலியாகப் பாராட்டி, மனைவியாக ஏற்று, என்னுள்ளே பெருமிதத்தையும் கர்வத்தையும் தன்மதிப்பையும் வளர்த்துவிட்ட அவரைத் துறக்க என்னால் எப்படியம்மா முடியும்?

புதுமை மணத்துடன் நான் மலர்ந்து நின்ற வேளையில், என்னைச் சுற்றி வந்து ரீங்காரமிட்ட முதல் வண்டு அவர். அவரை நான் எப்படி மறப்பேன்? எப்படித் துறப்பேன்? மறந்தும் துறந்தும் எப்படி உயிரோடு இருப்பேன்?

முடியாதம்மா, முடியாது. கல்லானாலும் என் கணவரெனத் தேர்ந்தெடுத்து விட்டேன். நயவஞ்சகர் என்று நீங்களெல்லோரும் கூப்பிடுங்கள்;

'என் நாயகர்' என்று உள்ளே உயிர் இருக்கும்வரை ஓயாமல் அழைப்பேன் நான்.

அவரைத் திருத்த முயலாமலில்லை நான்; நல் வழியிலே நாட்டம் கொள்ளும்படி அவரைத் தூண்டாத நேரமில்லை.

'ஒரே ஒருவர் மீது வஞ்சம் தீர்க்க வேண்டிய பாக்கி யிருக்கிறது. என்னை நாயிலும் கேவலமாக நடத்தி விட்டான் ஒருவன். அவனுக்குப் பாடம் கற்பித்த பிறகு, இந்த வழிக்கே முழுக்குப் போட்டுவிட்டு, உன்னோடு இருந்து விடுகிறேன். பொறு,' என்று அடிக்கடி சொல்லி வந்தார் அவர். அவருக்கு அந்த அளவுக்குச் சினம் மூட்டியவர் அப்பாதான் என்று எனக்கு அப்போது தெரியாது. இதோ இப்போதுதான், சற்று முன், ரயிலில் எனக்குச் சாத்துக்குடி பழச் சுளைகளை உரித்துக் கொடுத்த வாறே விவரித்தார் அதையெல்லாம். எதுவானால் என்ன? நான் அவர் வாக்கை நம்பி, அவரிடம் கொண்ட காதலை வளர்த்துக்கொண்டே வந்தேன்.

அன்று நான் தூங்காமல் கண் விழித்திருந்ததைப் பார்த்து, கடிந்துவிட்டுப் போனாயே, அந்தச் சமயம் நான் அவருக்காகத்தான் காத்திருந்தேன். அப்படி இரவு வேளைகளில் அவரைச் சந்திப்பது எனக்குப் பழக்கமாகி விட்டது. அன்று இரவு, அவர் என்னைச் சந்தித்ததோடு நிற்கவில்லை என்பதைக் காலையில் அப்பா அந்தக் 'குறிப்புக் காகிதத்'தைத் தேடிக் கொண்டிருந்தபோது உணர்ந்து விட்டேன். அவர்தான் அதை எடுத்துச் சென்று அப்பாவின் மீது பழி தீர்த்துக் கொண்டிருக்கிறார் என்று எனக்குத் தோன்றியது. ஆனால் நிச்சயம் செய்து கொள்ள முடியாமல் தவித்தேன். ராத்திரி அவர் வரும்போது கேட்க நினைத்திருந்தேன்.



அதற்குள் மாலி வந்து உறுதிப்படுத்தி விட்டார். என் பதட்டத்தையும் அதிகப்படுத்தி விட்டார்.

என்னை மன்னித்துவிடு, அம்மா. அந்த வினாடியில் நான் உங்கள் அனைவரையும் மறந்து விட்டேன். கருவிலிருந்து தொடர்ந்த பந்தமனைத் தையும் முறித்துக் கொண்டு விட்டேன்.

என் தாண்டவம், என் காதலர், ஆபத்தில் சிக்கியிருக்கிறார் என்ற ஒரே பீதியான நினைவுதான் என்னைக் காலோடு தலை கப்பிக் கொண்டது. நீங்கள் பேசிக் கொண்டிருந்தபோதே நான் மெதுவாக நழுவி, ஓட்டமாய் ஓடினேன் என் அன்புக் குரியவரைத் தேடி.

அம்மா! என் வாழ்வின் ஒளிவிளக்கு, இன்பத்தின் உறைவிடம், அங்கே எந்த நிலையில் இருந்தார் தெரியுமா? உன் மூத்த பெண்ணின் காதலர் அவரை நாற்காலியோடு கட்டிப்போட்டு, கூச்சலிட முடியாதபடி வாயில் துணியும் அடைத்து விட்டு வந்திருந்தாரம்மா. சூரர்!

ஓவென்று அழுதுகொண்டே அவரை விடு வித்தேன். நாக்கு விடுதலை பெற்றதும் அவர் முதல் பேச்சாக, "ஆனந்தி! நீ இங்கே ஏன் வந்தாய்? போய்விடு. பொல்லாத போக்கிரிகள் சிலா வருவார்கள். உன் மானத்தைப் போக்கி விடுவார்கள். ஓடிவிடு," என்று பதறினார். நான் அவர் கால்களைக் கட்டிக் கொண்டு கதறினேன். என்ன நேர்ந்தாலும் அவரை விட்டு விட்டுப் போக மறுத்துக் கொண்டிருந்தபோது —

இரண்டு முரடர்கள் பாய்ந்து வந்தார்கள். அவர்கள் தனகோடியின் ஆட்களாம். சாராயத்தின்

நெடி குப்பென்று என் தலையை அடைத்துக் கொண்டது.

எஜமானன் இட்ட கட்டளையைக்கூட மறந்தார்கள். அவர்கள் என்னைக் கண்டதும், ஒருவன் என்னைக் கெட்டியாக அமுக்கிப் பிடித்துக் கொள்ள, மற்றவன், 'டேய்! மரியாதையாய் ஓடிவிடு, இவளை இங்கேயே விட்டுவிட்டு' என்று அவரை மிரட்டினான், கழுத்தை நெறித்துத் தள்ளியபடி.

அம்மா! அவர் விரும்பியிருந்தால், நீங்கள் எல்லோரும் நினைக்கிறாற் போல் அரக்கமற்ற அரக்கராயிருந்தால், அப்போதே தன் உயிரைக் காத்துக் கொண்டிருக்க முடியும்.

அப்படிச் செய்யவில்லை அவர். திமிறி முரண்டிச் சண்டையிடத் தொடங்கினார். கள் வெறியிலிருக்கும் இரு முரடர்களின் முன் அவரால் தாக்குப் பிடிக்க முடியாதே என்று நான் அஞ்சினேன். 'வேண்டாம் எனக்காகப் பார்க்காதீர்கள். நீங்கள் போய்விடுங்கள். அப்புறம் நான் எப்படியாவது தப்பி வந்து சேருகிறேன்' என்று ஆனமட்டும் கெஞ்சினேன். அவர் கேட்கவில்லை.

பலத்த காயங்களையும் பொருட் படுத்தாமல் அந்த இருவரையும் வீழ்த்தி, என்னைக் காப்பாற்றித் தன்னுடன் இழுத்துக்கொண்டு ஓடினார்.

சொல்லம்மா. ஒரு பெண்ணுக்கு இதைவிட வேறென்ன பேறு வேண்டும்? எவனுக்குத் தன்னை அர்ப்பணம் செய்துகொண்டு விட்டாளோ, அவன் தனக்காக எத்தகைய தியாகமும் செய்யத் தயாராயிருக்கிறான் என்பதை அறியும்போது, ஓர் இளம் பெண்ணுக்கு ஏற்படுகிற ஆனந்த உணர்ச்சிக்கு



ஈடாக உலகத்தில் வேறென்ன இருக்க முடியும் என்று சொல்லம்மா.

ஒருநாள் தலைமறைவாக இருந்த பின், இருவருமாய்ப் பம்பாய்க்கு ரயிலேறியிருக்கிறோம்; அங்கே ஒரு சினிமாக் கம்பெனியில் வேலை தருவதாக ஒரு நண்பர் வெகு நாளாக இவரை அழைத்துக் கொண்டிருக்கிறாராம்.

வருந்தாதே அம்மா. நான் சௌக்கியமாக இருப்பேன் — நகையாலும், பணத்தாலும் அல்ல; என்மீது முழு அன்பு வைத்துள்ள ஒருவரைக் கைப்பிடித்தேன் என்ற திருப்தி நிறைவினால்.

உன்னை நினைத்தால்தான் எனக்குக் கவலையாக இருக்கிறது. அக்காவுக்கு மண வாழ்க்கை காத்திருக்கிறது; அப்பாவுக்குத் தொழில் வாழ்க்கை திறந்திருக்கிறது. உனக்குத்தான் வாழ்க்கையின் ஒரு பகுதி மூடிக் கொள்ளுகிறது — என் பிரிவினால்.

மீண்டும் கோருகிறேன்; என்னை மன்னித்து ஆசி கூறு.

உன் அன்புக்குரிய இளைய மகள்
**ஆனந்தி**

தலை சுழல, கடிதம் காலடியில் விழுந்தது தெரியாமல், சுவரோடு சுவராகச் சாய்ந்து நின்றாள் அம்மா.

அவள் கண்கள் நீரைச் சொரிந்தன. சொரியச் சொரிய அவற்றிலே சூடேறின. ஒவ்வொரு கண்ணீர்த் துளியும் ஓர் அக்கினித் திராவகச் சொட்டாக அவள் கன்னத்தை எரித்தது. அந்தத் தகிப்பு, அவள் உள்ளத்துக்குள் ஏறி, சிந்தனை முழுவதையும் கோர நெருப்பாக்கியது.

பற்களை நறநறவென்று கடித்தாள். விகாரமான சிரிப்பொன்று அவள் உதடுகளைக் கோண வைத்தது.

இரண்டு நாளாய் உடலோடு ஒட்டியிருந்த ஜன்னி மயக்கம் அவள் தலைக்குள் நஞ்சாகக் கிறுகிறுத்தது.

ஆனந்தியின் ஆயிரம் சமாதானங்கள் அவள் மனத்திலிருந்து மறைந்தன.

தன் கணவனின் நொடிந்த வாழ்க்கையும், மகளின் முறிந்த வாழ்க்கையும் அவள் நெஞ்சை நிரப்பின. பகுத்தறியும் சக்தியை முற்றிலும் இழந்தவளாக, வெறி பிடித்த பித்தியாக, ஓடினாள்.

இடுப்பிலிருந்து சேலை நழுவி விழுந்து விட்டாற் போன்ற ஆதாரமற்ற பிரமை ஏற்பட்டது; ஓட்ட நடையில் அம்மா முன்னேறினாள். பனிக் குளத்திலிருந்து மொண்டெடுத்த குளிர் நீரை உடம்பின் மேல்பகுதியில் கொட்டினாற் போலிருந்தது; தீச்சரங்கத்தில் வெட்டியெடுத்த கட்டிகளால் உடம்பின் கீழ்ப் பகுதியைக் கீறுவதைப் போலிருந்தது.

அம்மா நிற்கவில்லை; விரல்களை நெறித்துக் கொண்டு ஓடினாள் — 'இதுவே போதும் அவள் கழுத்தை முறிக்க' என்ற ஆவேச முணுமுணுப்புடன்.

'மனோரமா! அடிபாவி! நீ எங்கள் குடும்பத்திலே புகுந்தாய்; சின்னாபின்னமாக்கினாய். இத்தனை நாசத்துக்கும் காரணமான உன்னை அமைதியாக விட்டு வைத்தால் நான் பைத்தியம்! முட்டாள்!' என்று அவள் நெஞ்சு ஓயாமல் புலம்பிற்று.

இதுதான் மௌபரீஸ் சாலையா? நாற்சந்தி. ஓடு. ஓடு. தாண்டி ஓடு. இதோ வெற்று மைதானம். வேலைக்காரி சக்கு முன்பொரு முறை அடையாளம் சொன்ன அந்த ஒற்றைத் தனி வீடு அதோ தெரிகிறது. விளக்கில்லை. அரக்கி உனக்கு இனி வாழ்வுமில்லை. தூங்கு. தூங்கு. ஒரே தூக்கம் தான் இனியுனக்கு.

எட்டி உதைத்துக் கதவைப் பிளந்து திறந்து கொண்டு அம்மா நடந்தாள்.

ஹால்... அடுத்த அறை...

என்ன முனகல் ஓசை அது?

படுத்திருக்கிறாள் வெறும் தரையில். புரளுகிறாள் பெருமூச்சுடன்.



என்ன இது?

அம்மாவின் வேகம் தணிந்தது; மெல்ல மெல்ல அறிவின் குடைக்கீழ் அவள் வந்து நின்றாள்.

விளக்கைப் பெரிதாக்கினாள்.

தரையில் துடிக்கும் அந்த உருவம் — மனோரமா தான். ஆனால்... வெறும் வெளிவேடமோ?...

"இரும்படி இப்படி... துரோகி!" என்று கூச்சலிட்ட அம்மா, உடனே "என்ன!" என்று பிரமித்தாள்.

"நீங்களா... நீங்களா அக்கா?" என்ற பெரும் அலறலுடன் மனோரமா அவள் கால்களைக் கட்டிக் கொண்டு விம்மினாள்.

அவளது மார்பு மட்டுமல்ல, அடிவயிறும் ஒரு முறை விம்மித் தணிந்து வேதனையை வெளிப்படுத்திற்று.

எட்டுத் திசைகளில் சிதறியோடும் எண்ணங்களைக் கூட்டி ஒருமைப்படுத்தி, நழுவி நழுவி வளைந்தோடும் புலன்களைக் கட்டிப் பிடித்து கவனித்தாள் அம்மா.

கணத்தில் புரிந்துவிட்டது அவளுக்கு —

சில மணி நேரங்களில் தாயாகப் போகிறாள் இந்தத் துரதிருஷ்டக்காரி என்ற உண்மை.

"மனோரமா! யாருமில்லையா உனக்குத் துணையாக? தனியாகவா இந்தச் சந்தர்ப்பத்தில் இருக்கிறாய்? இரு, இரு. நான் போய் மருத்துவச்சி யாரையாவது..." என்று உடனே எழுந்தாள்.

"வேண்டாம்!" சரேலென்று அவள் கைகளைப் பிடித்து இழுத்துக் கொண்டாள் மனோரமா. "என்னை விட்டு விட்டு எங்கும் போகாதீர்கள்! எனக்குப் பயமும் நடுக்கமுமாயிருக்கிறது. திடீரென்று நோவு எடுத்து விட்டது... யாருமில்லை இங்கே... எந்தக் கணத்திலும் ஏதோ நேர்ந்துவிடப் போவதுபோல்... அம்மா!" துடித்துப் புரண்டு விழுந்தாள் அவள்.

அவளை மல்லாத்தி, கைகளை அழுத்திக் கொண்டாள் அம்மா.

"சீ, சீ! அசடு! எதுவும் நேராது. இதோ பார்... இதிலே பயப்படுவதற்கு எதுவுமில்லை... காலை இப்படி நீட்டிக்கொள்... நன்றாக மூச்சுவிடு. நான் இருக்கிறேன்... தைரியமாயிரு..."

"அக்கா! விதியின் விளையாட்டைப் பார்த்தீர்களா?... அம்மா! அம்மா! கடைசியில் இந்த மாதிரி சமயத்தில்... நீங்கள்... நீங்கள்! அம்மா! ஐயோ! என்னை மன்னித்து விடுங்கள் அக்கா!"

குபுக்கென்று குமட்டலைக் கொட்டி விட்டாள் மனோரமா அடக்கமுடியாமல். அம்மாவின் கையும் காலும் நனைந்துவிட்டபோதிலும், அருவருப்பால் அவள் முகம் சுளிக்கவில்லை. மனோரமாவை மார்பில் சாத்திக்கொண்டு அவள் தலையை இரு கைகளாலும் அழுத்திப் பிடித்தபடியே, அவள் குமட்டல் நிற்கும் வரை பொறுத்துக் கொண்டாள். பிறகு, அவளை மெல்லப் படுக்கையில் கிடத்திவிட்டு, பக்கத்து அறைக்கு ஓடி, கண்ணில் தென்பட்ட பழைய துணிமணிகளைக் கொண்டு வந்து, தன்னை அவசரமாகத் துடைத்துக் கொண்ட பின் தரையையும் சுத்தம் செய்தாள்.

"அக்கா!... இப்படி ஒரு நிலைமை... நீங்களும் நானும் இந்த மாதிரி சந்திக்க வேண்டியிருக்குமென்று... நீங்கள் வித்தியாசமாக... அம்மா!"

"ஊஹூம்! அதெல்லாம் இப்போது ஏன்? பெண்ணைப் பெண்ணால் புரிந்து கொள்ள முடியாமல் போயிற்று... தாயைத் தாயால் புரிந்து கொள்ளத் தெரியாதா?... இரு, சமையலறை எங்கே இருக்கிறது? அடுப்பு மூட்டு வெந்நீர் கொண்டு வருகிறேன்..."

"இடது பக்கம் திரும்பிப் போங்கள். ஆனால்... என்னைத் தனியே விடாதீர்கள்... அடுப்பை இங்கேயே கொண்டு வந்து வெந்நீர் வையுங்கள்..."

அம்மாவுக்கு, காய்ச்சலில் உலர்ந்துபோன உடல் நிலை மறந்துவிட்டது; தான்வந்த நோக்கம் மறந்து விட்டது!



யாருக்கு என்ன செய்யவிருக்கிறோம் என்ற நினைவு மறந்துவிட்டது.

தாய்மைத் துடிப்பில் திணறும் பேதைப் பெண் ஒருத்திதான் அவளுக்குத் தெரிந்தாள்.

அடுப்பைக் கொண்டு வந்து, தீ மூட்டி, வெந்நீர் தயாரிக்கும்போதே, இடையிடையே மனோரமாவின் நிலைமையும் கணக்கிட்டாள். ஒரு வலிக்கும் இன்னொரு வலிக்கும் இடையேயுள்ள நேரம் குறுகிக்கொண்டே வந்தது.

அறையின் மூலையிலிருந்த சிறு மேஜைமீது ஜப்பான் பொம்மையொன்று சிரித்துக்கொண்டு அமர்ந்திருந்தது. அதன் கழுத்திலே காணப்பட்ட நெக்லேஸ் —

பழைய நினைவுகளைப் புதைத்துவிட்டு, கைவேலையைக் கவனித்தாள் அம்மா.

"எனக்குப் பயமாயிருக்கிறது அக்கா, பயமாயிருக்கிறது" என்ற அவளுடைய கலக்கத்தைத் தன் கரத்தின் அணைப்பால் போக்கியவாறு "தைரியமாயிரு, ஒன்றுமில்லை" என்று கூறி அவள் ஆடைகளைத் தளர்த்தி விட்டாள். சரியான நிலையில் படுக்க வைத்து, இதம் கொடுத்தாள்.

"அம்மா! ஐயோ அம்மா!" என்று புழுவாய்த் துடித்தபோதிலும், மனோரமா தன் சூழ்நிலையை மறக்கவில்லை. நடுவே ஒரு முறை "அக்கா! பிறக்கப்போகும் குழந்தைக்குத் தகப்பனார் யார் என்று நீங்கள் கேட்கவில்லையே?" என்று வினவினாள்.

"இப்போதென்ன அதைப்பற்றி?" என்று பேச்சைத் திருப்ப முயன்றாள் அம்மா.

"இல்லை... உங்களுக்குத் தெரிந்தாக வேண்டும்... குழந்தையின் அப்பா... ஐயோ!"

"வேண்டாம் மனோரமா. அலட்டிக் கொள்ளாதே."

"இதன் அப்பா... உங்கள்... கணவர்... சக்கரவர்த்திதான்."

"மனோரமா!" என்று வெடுக்கெனத் திரும்பினாள் அம்மா. ஆனால், வேதனையின் உச்சத்தில் மனோரமா ஒரு முறை துள்ளிப் புரண்டதைப் பார்த்ததும் இவள் உணர்ச்சிகள் மீண்டும் மாறின.

"ஆமாம் அக்கா! வேண்டுமென்று நானாக வரவழைத்துக் கொண்டதுதான் இது... ஐயோ, ஐயோ! இந்த வேதனை இப்படிக் கொல்லுமென்று எனக்குத் தெரியாது அக்கா... நான் சொன்னது காதில் விழுந்ததா? என் குரல் ஏன் இப்படி... தாயானால்தான்... அக்கா, அக்கா!" மறுபடியும் திரும்பிக் கொண்டாள் அவள். "தாயானால் தான் அவரை என்னிடம் நிரந்தரமாகக் கட்டுப்படுத்தி வைத்துக்கொள்ள முடியுமென்று நினைத்தேன்... தாயானால்தான் எனக்கு உரிமை வரும், வாழ்வு வரும், சொத்தும் சுகமும் வருமென்று எண்ணினேன்..."

"எல்லாம் தானே வரும்... இப்போது எதற்கு அந்தப் புலம்பலெல்லாம்? மூக்கும் விழியுமாக, சொர்ண விக்கிரகம் போல குழந்தை பிறக்கப் போகிறது பார்..."

"பிறக்கட்டும் அக்கா, பிறக்கட்டும் அக்கா! முதலில சொத்துக்கு ஆசைப்பட்டேன்... அப்பா, அப்பா...!"

"பேசாமலிருக்க மாட்டாய்?" என்றவாறு, வெந்நீர்ப் பாத்திரத்தை மூடினாள் அம்மா. தள தளவென்ற ஓசையும் மெல்லிய புகைச் சுருள்களும் அறையில் நிறைந்தன. மனோரமாவின் விலாவிலே அம்மாவின் கை இதமாக ஓடியது.

"கேளுங்கள அக்கா! நாளாக நாளாக, எனக்குள்ளே வளர்ந்து வந்த இந்தச் சிசு, என்னுடைய மற்றெல்லா ஆசைகளையும் அழித்துவிட்டது. வயிற்றில் அது அசையும்போதெல்லாம், அக்கா, அக்கா! என் மெய் சிலிர்த்தது அக்கா!..."

மனோரமாவின் குரல் மெல்லத் தேய்ந்தது. நோவின் தீவிரம் அவளை அணைத்துக் கொண்டு அவளுடைய எண்ணத்தையும் பேச்சையும் விரட்டியது.



இரவு முற்ற முற்ற, அங்கே வெறும் முனகல் மட்டுமே கேட்டது; திமர் திமரென்ற அலறலும் கூச்சலும் சுவர்களில் மோதின.

தாயாகப் போகிறவளுக்கு, தாயாகியிருந்தவள், தாதியாகப் பணிவிடை செய்தாள் அந்த விடியாத நீளிரவு முழுதும்.

ஆபாசத்தின் பாதாளம் அந்த இடம்; ஆனால் தாய்மையின் சிகரமும் அதுவே; இறப்பின் கடைவாயில் அது; ஆனால் பிறப்பின் தலைவாயிலும் அதுவே; வெறியின் கீழ்நிலைக்கு அதுவே சாட்சி; ஆனால் உணர்ச்சியின் மென்மைக்கும் அதுவே சான்று; கன்னி வாழ்க்கை அங்கே முடிகிறது; தாய்மை வாழ்க்கை அங்கே தொடருகிறது; 'வாழ்வின்பத்தைச் சுவைப்பதில்லை இனி' என்ற வெறுப்பு உதயமாகும் இதே இடத்தில், வாழ்க்கையே அமுதக் கடலாகக் காட்சி தருகிறது. எல்லையற்ற வேதனையின் உலகமும், எல்லையற்ற பெருமிதத்தின் உலகமும் இங்கே அருகருகே வரம்பு கட்டி நிற்கின்றன. சாவு ஓலமிடுகின்ற இதே இடத்தில் ஜீவன் தவழ்கிறது. உடலுக்குள் உடலாக ஒட்டுமளவுக்குத் தோழமை எங்கே முளைத்ததோ, அங்கேயே, உடலிலிருந்து உடல் வெட்டிக் கொள்ளு மளவுக்குப் பகைமை வளர்கிறது.

பெருந்துயரமும் பேரின்பமும், மரணமும் ஜனனமும், பாவமும் புண்ணியமும், தோல்வியும் வெற்றியும் சந்தித்து உறவாடும் அந்தப் புனிதமான பிரசவ அறையில் —

இரண்டு உயிர்களைக் காப்பாற்றப் போராடினாள் அம்மா.

இருளிலிருந்து ஒளி பிறக்கும் நேரத்தில் உயிருக்குள் ளிருந்து உயிர் வந்தது.

வெந்நீரும் செந்நீரும் சகதியாக்கிய தரையிலே விழுந்த அந்தச் சிசுவை வாரியெடுத்துக் கொண்டாள் அம்மா.

"மனோரமா, மனோரமா! இதோ பார்! ஆண் குழந்தை!"

மனோரமா மெல்லக் கண் விழித்துப் பார்த்தாள்.

அம்மா உணர்ச்சிப் பெருக்குடன் சொன்னாள்: இனிப் பயமில்லை, மனோரமா! ஆண் குழந்தை பெற்றிருக்கிறாய். அதிருஷ்டக்காரி. ரொம்ப வருஷத்துக்கு முன்னே, மேகலை பிறப்பதற்கு முன்பாக, தலைச்சனாக ஆண் குழந்தைதான் பிறந்தது எனக்கு... ஆனால் தங்கவில்லை... அந்த ஏக்கம் தீரத்தான்... மனோரமா! மனோரமா! உனக்கு என்ன? என்னம்மா? இதோ பார்! என்னைப் பார்!... மனோரமா! மனோரமா!"

மனோரமாவின் தலை தொய்ந்துவிட்டது. அவள் இதழில் மட்டும் ஒரு புன்னகையின் நிழல் — திருப்தியின் ரேகை — படர்ந்திருந்தது.

பிறந்து இரண்டு நிமிடமான அந்தச் சிசு குரல் கொடுத்தது அம்மாவின் மடியிலிருந்து — இந்த அம்மா வேறொருத்தி என்பதை உணராமல்.

அம்மா அதை உற்றுக் கவனித்தாள். பாசமும் பரிதாபமும் பொங்கி எழுந்தன அவள் இதயத்தில்.

'உனக்குத்தான் வாழ்க்கையின் ஒரு பகுதி மூடிக் கொள்ளுகிறது' என்று ஆனந்தி எழுதியிருந்த வரிகள் அவள் நினைவுக்கு வந்தன.

'பரவாயில்லை; என் வாழ்க்கையின் இன்னொரு பகுதி ஆரம்பமாகிறது' என்று சொல்லிக் கொண்டு எழுந்தாள்.

சென்னை ... நூலகம்
21069
3742581
கொளத்தூர், சென்னை-99.